# பூந்துணர்

நறவம்
5
2015



வெளியீடு
கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம்
பூநகரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூந்துணர்

## நறவம் – 5

வெளியீடு

பூநகரி பிரதேச கலாசார பேரவை

பிரதேச செயலகம்

பூநகரி

2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல் தரவுகள்...**

| | | |
|---|---|---|
| சஞ்சிகையின் பெயர் | : | பூந்துணர் (நறவம் V) |
| அட்டைப்படம் | : | திரு பா.முகுந்தன் |
| | | பிரதேச செயலகம், பூநகரி. |
| பதிப்புரிமை | : | பூநகரி பிரதேச கலாசார பேரவை |
| | | பிரதேச செயலகம், பூநகரி. |
| பதிப்பு | : | முதற் பதிப்பு - 2015 |
| பிரதிகள் | : | 300 |
| பக்கங்கள் | : | 164 + 21 + xii |
| வெளியீடு | : | பூநகரி பிரதேச கலாசார பேரவை |
| | | பிரதேச செயலகம், பூநகரி |
| அச்சுப்பதிப்பு | : | கஜமுகன் பதிப்பகம், |
| | | 435/21, கோவில் வீதி, |
| | | நல்லூர், யாழ்ப்பாணம். |
| | | தொ.பே : 077-0347190. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா எழுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

ஆக்கம்

திருமதி மனோன்மணி சுந்தரம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச கீதம் – பூநகரி.

சந்தம் : தனனதன தனனதன தனன தான
தானதன தானதன தானா!

### பல்லவி

பசுமை பொங்கி பசிதுரத்தும் வயலும் - தெங்கு
பனைகள் அரண் அமைக்க நீளும் கடலும்
சிந்துநடை கலை மலியும் தலமும் - கொண்டு
சந்ததமும் பூநகரியில் புகழ் ஒளிரும்

### அனுபல்லவி

வாழிய பூநகரி வளமுடன் வாழிய
வையகம் போற்ற வளர்ந்தெம்மை ஆளுக!

### சரணங்கள்

சோழர்குலக் குறுநிலமாம் அன்று எங்கள்
தொல்பெருமை சொல்லும் கோட்டை இன்று!
வாழும் கல்வி... கேள்வி ஞானம் வென்று தமிழ்
வாசல் வயல் கடலில் இன்றும் உண்டு (வாழிய)

பரம்பரை மரபும் வழிபாடும் - பார்வை
பார்த்தல், கைமருந்து, கிராம வாழ்வும்
இறங்குதுறை கேந்திர முக்கியமும் - கொண்ட
இயற்கையோடு இணைந்தெம் வாழ்வும் நிமிரும்! (வாழிய)

பூநகரி மொட்டைக் கறுப்பன் என்றால் - இன்றும்
பொன்மலையாய்க் குவியும் மணல்கண்டால்
ஊரின் புகழ்... உலகறியும் தன்னால் - நாங்கள்
உயர முயன்றுழைத்திடுவோம் இந்நாள் (வாழிய)

ஆக்கம்
த.ஜெயசீலன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

1. திரு சி.ச.கிருஸ்ணேந்திரன்
பிரதேச செயலரும் கலாசார பேரவையின் தலைவரும்

2. திருமதி றஜனி நரேந்திரா
கலாசார உத்தியோகத்தரும் பேரவையின் செயலாளரும்

3. திரு வி.சொக்கநாதன்
உதவித் திட்டமிடல் பணிப்பாளர்

4. திரு பே.பிறேமச்சந்திரன்
கணக்காளர்

5. திருமதி ஜெயஸ்ரீ சிவானந்தராஜா
நிர்வாக உத்தியோகத்தர்

6. திரு ஞா.போல் அன்ரன்
கலாசார பேரவை உறுப்பினர்

7. திரு கோ.கோகிலரதன்
கலாசார பேரவை உறுப்பினர்

8. திரு.கு.குகேந்திரன்
கலாசார பேரவை உறுப்பினர்

9. திருமதி சந்தானலட்சுமி ரவீந்திரன்
கலாசார பேரவை உறுப்பினர்

10. திரு வீ.சந்திரமோகன்
கலாசார பேரவை உறுப்பினர்

11. திரு யோ.பகீரதன்
கலாசார பேரவை உறுப்பினர்

12. திருமதி ரேணுகா சக்திதாஸ்
கலாசார பேரவை உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்க்குழுவினரின் மனவெளிகளில்...

பூநகரி பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் கலாசாரவிழாவிலே சிறப்பம்சமாக வெளியீடு செய்யப்படுவது "பூந்துணர்" மலர் ஆகும். இப்பூந்துணரின் 5வது மலர்க்குழுவினராகிய நாம் மலராக்கத்தின் வெளியீட்டில் எம் மனங்களின் பதிலை உங்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு விளைகின்றோம்.

எமது பூநகரி கலாசாரப்பேரவையால் வெளியீடு செய்யப்படும் பூந்துணர் மலரானது பூநகரியின் பழமைவாய்ந்த வரலாறுகளை, நடைமுறைகளை ஆவணப்படுத்தும் செயற்றிட்டத்தில் சிறப்பாக செயற்பட்டு வருகின்றது. அதே வேளை பூநகரி பிரதேச எழுத்தாளர்களுக்கு சிறந்த ஒரு களமாகவும் மிளிர்கின்றது. அத்துடன் சிறந்த உயரிய கருத்துக்களை துறைசார்ந்தவர்களிடமிருந்து பெற்று வெளிப்படுத்துவதன் மூலம் அறிவியல் பண்புகள் பெருகுவதற்கும் களமாக செயற்படுகின்றது.

இந்தவகையிலே பல சவால்களுக்கு மத்தியிலே கருத்துக்களை, வரலாறுகளை உள்ளவாறு திரிபுபடுத்தாமல் வெளியிடும் பண்பும் எமது பூந்துணருக்கு உரித்தானது.

தொடர்ந்தும் பூந்துணர் புதிய புதிய கருத்துக்களுடன் திகழ்வதற்கு அனைவரதும் ஒத்துழைப்பு அவசியமானது.

இம்மலரின் அட்டைப்படம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கல்முனை வெளிச்சவீட்டினை குறித்து நிற்கின்றது.

இந்நூலில் வழங்கிய ஆக்கங்களின் கருத்துக்களுக்கு அவ்வாக்க கர்த்தாக்களே முழுப்பொறுப்பாளர்கள் ஆவார்கள்.

தொடர்ந்தும் இம்மலர் நறவம் சிந்தி வெளிவர அனைவரதும் விமர்சனங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படும்.

இறுதியாக இம்மலர்சிறக்க உழைத்த அனைவரும் என்றும் என்றும் நன்றிக்குரியவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க் குழுவினர்



அமர்ந்திருப்பவர்கள் : திருமதி றஜனி நரேந்திரா (கலாசார உத்தியோகத்தர்), திரு பே.பிறேமச்சந்திரன் (கணக்காளர்),
திரு வி.சொக்கநாதன் (உதவித் திட்டமிடல் பணிப்பாளர்), திரு சி.ச.கிருஸ்ணேந்திரன் (பிரதேச செயலரும்
கலாசார பேரவையின் தலைவரும்), திரு.கு.குகேந்திரன், திருமதி ஜெயஸ்ரீ சிவானந்தராஜா (நிர்வாக உத்தியோகத்தர்)
நிற்பவர்கள் : திருமதி சந்தானலட்சுமி ரவீந்திரன், திரு கோ.கோகிலரதன், திரு ஞா.போல் அன்ரன், திரு வீ.சந்திரமோகன்,
திரு யோ.பகீரதன், திருமதி ரேணுகா சக்திதாஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூந்துணர் – நறுவம் 5
# கலையுலகில் நறுமணம்
# பிரவாகிக்க வாழ்த்துக்கள்!

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவானது இயற்கை எழில் கொஞ்சும் அழகும் கடல்வளமும் நிலவளமும் ஒருங்கே அமையப்பெற்ற தொல்லியல் வரலாற்றினையும் சோழர்காலத்திற்கு முற்பட்ட பண்பாட்டு விழுமியங்களையும் கொண்ட வரலாற்றுப் பெருமையுடைய பிரதேசமாகும். கடின உழைப்பால் உயர்ந்த மக்கள் வாழும் இப்பூமியில் தங்கள் கலை கலாசாரங்களை மீட்டுருவாக்கம் செய்வதற்காகவும் ஆவணப்படுத்துவதற் காகவும் வருடந்தோறும் பண்பாட்டு விழாவெடுத்து வருவது வழக்கம். அதனொரு செயற்பாடாக கொள்ளப்படும் பூந்துணர் ஆவணச் சஞ்சிகையின் தொடர்வரவினைப் பாராட்டி வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்பிரதேச மக்களின் வாழ்வியலையும் அதனோடிணைந்த பண்பாட்டம்சங்களையும் ஆவணப்படுத்தி வெளியிட்டு வரும் பூந்துணர் நறுவம் ஐந்தாவது மலரினுள்ளே இலைமறைகாய்களாகவுள்ள கலைஞர்களது படைப்பாக்கத்திறன் வெளிப்பாட்டிற்கு பக்கபலமாக அமைந்திருக்கின்றது. பிரதேசத்தின் பல்வேறுபட்ட வரலாற்றியல்களை வெளிக்கொணர்ந்து பூநகரிப் பிரதேசத்தின் சிறப்பம்சங்களை எடுத்தியம்பி நிற்கும் பூந்துணர் வரலாற்றுப் பெட்டகமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. அந்த வகையில் பூந்துணர் சஞ்சிகை தொடர்ந்து பயணிப்பதற்கு முழுமூச்சுடன் உழைத்து வரும் பிரதேச செயலாளர், கலாச்சார உத்தியோகத்தர் மற்றும் மலர்குழுவினர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு பூந்துணர் ஐந்து மலர்ந்து கலை இலக்கியத்துறையின் ஆவணப்படுத்தல் என்ற வரலாற்றுப்பதிவினை ஏற்படுத்தி நிற்கும் என்பதில் ஐயமில்லை.

**திரு சுந்தரம் அருமைநாயகம்**
அரசாங்க அதிபர் / மாவட்ட செயலர்
கிளிநொச்சி மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மேலதிக அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி

பூநகரிப் பிரதேச செயலகமும், கலாசார பேரவையும் இணைந்து வெளியிடும் பூந்துணர் நறவம் – 05 இற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகவும் மகிழ்வடைகின்றேன்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றத்தின் பின்னர் முதன்முதலாக பூந்துணர் சஞ்சிகையினை தொடர்ச்சியாக வெளியிட்டு வருவதுடன் 2011ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இப் பிரதேசசெயலகம் கலாசார விழாவினையும் நடாத்தி வருவது பெருமைக்குரிய விடயம் ஆகும். இலங்கைத் தமிழர் வரலாற்றின் முக்கிய தொல்லியல் இடங்களை கொண்டிருப்பதுடன் மொட்டைக்கறுப்பன், பச்சைபெருமாள் நெல் வகைகள் மற்றும் கடல் உணவுகளுக்கு பிரசித்தி பெற்ற இடமாகவும் விளங்குகின்றது. அத்துடன் பூர்வீகக் குடிகள் இப்பிரதேசத்தில் வாழ்ந்துள்ளார்கள் என்பதனை வரலாற்று ஆசிரியர்களின் வரலாற்று ஏடுகள் வரைந்து நிற்கின்றன. அற்புதமான ஆலயங்களும், ஆதிகால வழிபாட்டு மரபுகளும், நோயற்ற வாழ்வியல் பண்பாடுகளும், மருத்துவரிடம் செல்ல வைக்காத உணவுப் பக்குவங்களும், கை வைத்திய முறைமைகளும் என்று சிந்தையை குளிர்விக்கும் குதூகலமான நடைமுறைகள் இப்பிரதேசத்தின் தனித்துவமாகும்.

இத்தகைய தனித்துவங்கள் நம்மிடமிருந்து நழுவிச் சென்றாலும் அடுத்த தலைமுறையினருக்கு அவற்றினை ஆவணப்படுத்தி கையளிப்புச் செய்வதில் பூந்துணரின் பங்களிப்பு பாராட்டுதற்குரியது. அத்துடன் எழுத்தாளர் களுக்கு களமாகவும் விளங்குகின்றது. இது மட்டுமல்லாது கருத்தரங்குகள், கலாசார செயற்பாடுகள், பண்பாட்டு விழாக்கள் முதலிய செயற்பாடுகளை இப்பேரவை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் இவ்வருடம் வெளியிடப்படவிருக்கும் பூந்துணர் நறவம் – 05 மலர் சிறப்பாக வெளி வருவதற்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் கலாசார பேரவையின் தலைவரான பிரதேச செயலர் மற்றும் மலர்க்குழுவினர் ஏனைய அங்கத்தவர் களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் இப்பிரதேச மக்களுக்கும் மனம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*திரு சி. சத்தியசீலன்*
மேலதிக அரசாங்க அதிபர்
கிளிநொச்சி மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமாகாண
# கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையினால் வருடந்தோறும் வெளியிடப்படும் "பூந்துணர்" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இம்மலரானது பூநகரி பிரதேசத்தின் கலை, கலாச்சாரம், பண்பாடு, நம்பிக்கைகள், சடங்குகள், இடப்பெயர்வுகள், பழமொழிகள், தொல்லியல் வரலாறுகள் உணவு நடைமுறைகள், கை வைத்திய முறைகள், நாட்டார் நடைமுறைகள், பிரதேச ஆலயங்களின் அற்புதத் தன்மைகள் ஆகிய விடயங்களை தாங்கி வெளிவருவதுடன் சான்றுப்படுத்தக்கூடிய ஆவணமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

காலத்தின் தேவையறிந்து முன்னெடுக்கப்படும் இம்முயற்சியானது எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதுடன் பிரதேச அபிவிருத்தியின் முக்கிய பதிவாகவும் இருக்கும். இம்மலரானது தொடர்ந்தும் வெளிவர வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இச்செயற்பாட்டினை முன்னெடுத்து வரும் பிரதேச செயலர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசார பேரவையினர் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு இ.இரவீந்திரன்
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர்
விவகார அமைச்சு
வடமாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளரின் வாழ்த்து

"கலைகள் பண்பாட்டு ரீதியாக மனிதனை வளப்படுத்துபவை" ஏனெனில் ஒவ்வொரு காலங்களிலும் கலைகளின் தேவைகள் நன்கு உணரப்பட்டுள்ளன. ஒவ்வொரு கலைகளையும் நாம் எடுத்து நோக்கினால், அந்தக் கலையின் இயல்புகள் அன்றைய காலவோட்டத்தின் தன்மையினையும், மக்களின் பண்பாட்டியல் முறைமைகளையும் நன்கு வெளிப்படுத்தக் கூடியதாக அமைகின்றது. அந்த வகையில் காலத்தின் தேவைக் கேற்ப குறிப்பிடத்தக்க கலை பண்பாட்டியல் முறைமைகளை மிளிரச் செய்யும் வகையில் பூநகரி பிரதேச கலாசார பேரவையினால் வருடந்தோறும் வருடாந்த கலாசார விழாவில் வெளியிடப்பட்டு வரும் **"பூந்துணர்"** மலர் இவ்வருடமும் **"நறவம் 5"** ஆக வெளிவருகின்றமை மிகவும் வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும்.

இம்மலரானது பூநகரி பிரதேசத்தின் கலை, கலாசாரம், பண்பாடு, நம்பிக்கைகள், சடங்குகள், இடப்பெயர்கள், பழமொழிகள், தொல்லியல் வரலாறுகள், உணவு நடைமுறைகள், கைவைத்திய முறைமைகள், நாட்டார் நடைமுறைகள், பிரதேச ஆலயங்களின் அற்புதத் தன்மைகள், முதலான பல்வேறு தகவல்களையும் வெளிப்படுத்தி ஆவணப்படுத்தும் நோக்குடனும் கலை, பண்பாட்டியல் ஆர்வலர்களுக்கு அவர்களது திறன்களை வெளிக் கொணரும் வளர்நிலைக் களமாகவும் அமைந்துள்ளமை மிகவும் சிறப்பான அம்சமாகும். அத்துடன் இது போன்ற ஆவணப்படுத்தல் என்பது எமது மூதாதையர்களால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ள இன்றைய இருப்புக்களை நாம் அடுத்து வரும் எமது சந்ததியினருக்கு கையளிப்புச் செய்ய வேண்டியவர்களாகவும் காணப்படுகின்றோம். அல்லது கடமைப்படுத்தப் பட்டுள்ளோம் என்றும் கூறலாம். ஏனெனில் அழிந்தும், மறைந்தும், மறைக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் பல சவால்களை எதிர் கொண்ட போதிலும் இன்று தனித்துவமாக உள்ள இருப்புகள் எம்மிடத்தில் மிளிர்ந்து ஒளிவீசுகின்றன. சிறப்புமிக்க கலை பண்பாட்டு அம்சங்களைக் கொண்டு இருப்புக்களை வெளிப்படுத்தும் வகையில் "பூந்துணர்" மலரானது வெளிவருதில் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், ஆசிகளையும் தெரிவித்துக் கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

திருமதி வனஜா செல்வரட்ணம்
உதவி பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
வடக்கு மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

பூநகரிப் பிரதேச கலாசார பேரவையால் வருடாந்தம் வெளியீடு செய்யப்படும் "பூந்துணர்" நூலின் நறவம் – 05 தேன் சொட்டி தித்திக்க முற்படும் வேளையில் இந்நூலிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

கிளிநொச்சி மாவட்டத்தின் தொன்மை மிக்க சிறப்புடைய பூநகரிப் பிரதேசத்தில் பாரம்பரிய வழக்காறுகளும், வரலாற்றுத் தடயங்களும் நிறைந்துள்ளன. இவை கால வெள்ளத்தில் கரைந்து போகாது ஆவணப்படுத்தி பாதுகாக்கும் செயற்பாட்டினை இப்பூந்துணர் மலர் முன்னெடுத்து வருகின்றது. அது மட்டுமல்லாது வளர்ந்து வரும் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதும் இப்பூந்துணரின் இன்னொரு சிறப்பம்சமாகும். பூநகரிப் பிரதேச ஆதிகால வரலாறுகளையும் மக்களின் வாழ்வியற் கோல நடைமுறைகளையும், மரபுசார் கூறுகளையும் பல்வேறு கோணங்களிலே பகுதி பகுதியாக வெளிபடுத்தி வருவது இப் பூந்துணரின் உயரிய பண்பாகும். இப்பூந்துணரினுள்ளே புகுந்து சுவைப்பது எளிதாகும். அந்த வகையில் சரித்திரத்தில் ஒரு பகுதியாகவும் படைப்பிலக்கிய களமாகும் வாசகனுக்கு சுவையூற்றாகவும், இந்நூல் அமைந்து வருகின்றமை வெளிப்படை. முறையான ஆவணப்படுத்தலின்றி ஆணிவேர் தெரியாத வரலாற்றோடு வாழும் நிலையினை சிறிது சிறிதாக மாற்றியமைப்பதில் இப்பூந்துணர் மலர் செயற்படுவது பாராட்டுதலுக்குரியது.

இந்நூலாக்கத்திற்கு அல்லும் பகலும் அயராது உழைத்து அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். தொடர்ந்தும் தடையின்றி இந்நூற் பணி வளர... தொடர... வாழ்த்துகின்றேன்.

*திரு சி.ச.கிருஸ்ணேந்திரன்*
பிரதேச செயலாளரும்
கலாசார பேரவையின் தலைவரும்
பிரதேச செயலகம், பூநகரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேரவையின் செயலாளரின் உள்ளத்திலிருந்து...

பூநகரிப்பிரதேச செயலகத்தின் பிரதேசகலாசாரப் பேரவையினால் வெளியீடு செய்யப்படும் பூந்துணர் "நறவம்" 5ற்கு வாழ்த்துரை வழங்குவதில் அளவிலா அகமகிழ்வு அடைகின்றேன். பூநகரிப் பிரதேச கலாசாரப் பேரவையின் செயலாளர் என்ற வகையிலே இப்பூந்துணர் மலரின் முகிழ்நிலை நினைவுகளை மீண்டும் ஒருகணம் தடம் பதிக்க அவாவுகின்றேன்.

2011ம் ஆண்டு எமது பேரவையில் எடுக்கப்பட்ட கலாசார விழாவிலே மலர் ஒன்றினை வெளியிட வேண்டும் என்று பேரவை தீர்மானித்தது. அதற்கான பெயரை பல்வழிகளிலே ஆராய்ந்த போது பிரதேசத்தின் பெயரும், தொன்மையும் புலப்படும் வண்ணம் பேராசிரியர் சிவலிங்கராயா அவர்களால் முன்மொழியப்பட்ட நாமமே "பூந்துணர்" என்ற பெயராகும். இதற்கு அவர் கூறிய விளக்கமும் ஈண்டுவியக்கத்தக்கது. மலரின் மலர்வோடு தொடர்புடைய கருத்தினையும் இப்புத்தகத்தினுள் உள்ள ஆக்கங்களை வெறுமனே படிக்காது அதனுள் புகுந்து உணர்தல் நிறைந்த தகவல்கள் பெற்றுக்கொள்ளலாம் என்ற கருத்துப் புலப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது புகுந்து உணர்ந்து பார் - பூந்துணர்.

அன்று தொட்டு இன்றுவரை பூந்துணர் மலர் நறவத்துளிகளாக அதாவது தேன்துளிகளாக வெளிப்பட்டு வருகின்றது. இன்று ஐந்தாவது நறவம் சொட்டுகின்றது. தேனிற்கு ஒரு மகத்துவம் உண்டு. அது தானும் கெடாது, தன்னைச் சார்ந்தவர்களையும் கெடவிடாது. அதேபோல் பூந்துணர் நறவமும் தானும் ஒவ்வொரு புதுப்பொலிவுடன் வளர்வதுடன் அதுசார்ந்து செயற்படுவோரையும் சிறப்படைய வைக்கின்றது. அத்துடன் இப்பூந்துணரின் அட்டைப்படங்கள் பூநகரியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை மட்டுமே வெளிப்படுத்தி நிற்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் தூரநோக்குடன் கூடிய சிந்தனையுடன் வரலாற்றுத் தகவல்களை உள்வாறு ஆவணப்படுத்துவதுடன் எழுத்தாளர்களையும் ஊக்குவித்து அவர்களுக்குரிய களமாகவும் செயற்பட்டு வருகின்றமை இதன் ஒரு சிறப்பம்சம் ஆகும்.

பூந்துணர் தனக்கென்ற நடையுடன் தனித்துவம் சிதறாமல் அவனியுள்ளவரைக்கும் இடையுறாது மலர்ந்து தேன் சொட்ட கடவுளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

*திருமதி றஜனி நரேந்திரா*
கலாசார உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்,
பூநகரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார பேரவை



அமர்ந்திருப்பவர்கள் :
திரு கா.கார்த்திகேசு, திரு பே.பிறேமச்சந்திரன் (கணக்காளர்), திரு வி.சொக்கநாதன் (உதவித் திட்டமிடல் பணிப்பாளர்),
திரு சி.ச.கிருஸ்ணேந்திரன் (பிரதேச செயலரும் கலாசார பேரவையின் தலைவரும்),
திருமதி ஜெயஸ்ரீ சிவானந்தராஜா (நிர்வாக உத்தியோகத்தர்), திரு சு.கணபதிப்பிள்ளை, திரு இரா.செல்வராசா
நிற்பவர்கள் :
திரு கி.கேதீஸ்வரன், திரு கா.குலசேகரம், திருமதி றஜனி நரேந்திரா (கலாசார உத்தியோகத்தரும் பேரவையின் செயலாளரும்)
திரு ச.தவராசா, திரு செ.சுரேந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | பூநகரி இடப் பெயர் ஆய்வு | 01 - 08 |
| 2. | மாதவி பிறப்புத் தொடர்பான சில குறிப்புக்கள் | 09 - 17 |
| 3. | மதுவற்ற உலகை மகிழ்வோடு ஏற்போம் | 18 - 20 |
| 4. | இறைவழி நடக்கும் எம் வலைநகர் | 21 - 25 |
| 5. | தாய் | 26 - 27 |
| 6. | ஈழப் பூமகள் | 28 - 29 |
| 7. | பூநகர் வாழ்க! பூந்துணர் வாழ்க. | 30 |
| 8. | முருகண்டியான் சித்த ஆயுர்வேத கால்நடைகள் வைத்தியர் திரு. புண்ணியர் நடராஜன் | 31 - 32 |
| 9. | பொன்னாவெளி - ஒரு பார்வை | 33 - 37 |
| 10. | பூநகரியின் அழிந்து வரும் அரங்கப் பாரம்பரியங்கள் | 38 - 41 |
| 11. | இன்றைய வணிகத்தில் வணிகச் சூழல் காரணிகளின் தாக்கம் | 42 - 46 |
| 12. | புற்றுநோய் பற்றிய ஒரு ஆழமான பார்வை | 47 - 51 |
| 13. | தொழிநுட்பக் கல்வியும் எமது சிறாார்களின் எதிர்காலமும் | 52 - 56 |
| 14. | பூநகரியும் விஷகடி வைத்தியமும் | 57 - 61 |
| 15. | சமய சகிப்பு தன்மை | 62 - 67 |
| 16. | வலைப்பாட்டு கிராமத் தோற்றமும் கிறிஸ்தவ சமய வழிபாடும். | 68 - 70 |
| 17. | கலையா விழிக் கணங்கள் | 71 - 73 |
| 18. | இரணைதீவும் கரையும் இதயத் துடிப்பும் | 74 - 78 |
| 19. | அன்னை தெராசாவுக்கு அஞ்சலி | 79 - 80 |
| 20. | வலைப்பாடு புனித அன்னாள் ஆலயத்தின் வரலாற்றுக் கட்டுரை | 81 - 84 |
| 21. | பாரம்பரிய நடைமுறைகளும் உளவளத்துணையும் | 85 - 91 |
| 22. | வட இலங்கையும் அயல்நாட்டு வணிகத் தொடர்புகளும் | 92 - 105 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


23. மனிதன் ஆயுளுடன் நோய் இன்றி வாழும் இயல்பான முறைமைகள் 106 - 110
24. பூநகரி சித்தன் குறிஞ்சிக் கிராமத்துக் கலைஞர்கள் 111 - 117
25. நிகழ்கால நிதர்சனம் 118 - 121
26. ஜெயபுரக் குடியேற்றமும் வாழ்க்கைப் படிமுறையும் 122 - 127
27. பிள்ளைகளும் பெரியோரர் கடமைகளும் 128 - 131
28. பட வரைகலையியலின் பரிணாம வளர்ச்சியில் புவியியல் தகவல் தொழில்நுட்பத்தின் (GIS) முக்கியத்துவமும்பிரயோகமும் 132 - 143
29. முதிரும் போது 144
30. சமூக சேவைகள் கிளையின் கீழ் பிரதேச செயலகங்களினால் ஆற்றப்படும் சமூக சேவை உதவிகள் 145 - 149
31. எம் தமிழ்க்குலம் வாழ! 150 - 151
32. தொன்மைமிகு பூநகரியும் இன்றுவரை வெளிச்சத்திற்குவராத கறுக்காய்த்தீவு ஆனைகட்டிமுனை 152 - 157
33. 03.12.2015 அன்று நடைபெற்ற கலாசாரா விழாவின் அங்க உரையின் ஆவணம் சுப்பிரமணியம் தம்பையா அண்ணாவியார் அரங்கு நினைவுரை 158 - 160
34. கலைநகரி விருது பெறுவோர் வீபரம் 161 - 163
35. விடைபெறும் தருணம் உங்களுடன்... 164


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி இடப் பெயர் ஆய்வு

கா.கார்த்திகேசு

பூநகரி

பூநகரியில் பெருங்கற் கால பண்பாட்டுக் காலம் தொடக்கம் மக்கள் வாழ்ந்து வந்ததாக தொல்லியல் சான்றுகளுடன் வரலாற்று ஆசிரியர்கள் நிறுவுகின்றனர். பண்டைய வர்த்தக தொடர்புகள் பூநகரியில் கடலோர மேற்கு பிரதேசங்களுடாக மாந்தை வரை நிலவிவந்தமையையும் சுட்டிக் காட்டுகின்றனர்.

பொன்னேரி என்ற பதமே மருவி பூநகரி என்றாயிற்று என்பர். ஆயினும் பூநகரி என்ற இடப்பெயர் தென்னிந்தியாவிலும், திருக்கோணமலையிலும் வழக்கில் இருக்கின்றது. ஒல்லாந்த தேசாதிபதி பான்கூன்ஸ் என்பவர் வன்னிபற்றிய தனது அறிக்கையில் *(1658 - 10 - 31)* பூநகரியை பூனெரி எனக் குறிப்பிடுகின்றான். முதலியார் இராசநாயகம் பூநகரியை வெளிநாடு என குறிக்கின்றார். (போர்த்துக்கீசர் பூனெறிம்) சோழர்களுடைய ஆட்சியும் செல்வாக்கும் இங்கு நிலவியாக வரலாற்று ஆசிரியர் ப.புஸ்பரட்ணம் தெரிவிக்கின்றார். பூநகரி வன்னி இராச்சியத்துடனும், யாழ்ப்பாண இராச்சியத்துடனும் தொடர்புபட்டு இருந்தமையை பேராசிரியர் சி.பத்மநாதனின் இலங்கையில் வன்னியல் என்ற நூலில் இருந்து அறியமுடிகின்றது. பழங்குடி மக்கள் வாழ்ந்த பூநகரியின் தொன்மை வரலாறு இன்று வெளிக்கொணரப்படுகின்றது.

முதலில் பூநகரியில் இடம்பெறும் இடங்களின் பெயர் கூறுகள் பற்றி கவனிப்போம்.

அடி - ஊரின் ஒரு பகுதியை சுட்டுவது அரசடி, ஆலடி, மதவடி,

புளியடி

ஆய், ஆயம் - வெளி

ஆயம் - கரை, பெருவெளியின் அருகே நீர்க்கரை உள்ள இடத்தைக் குறிக்கும்.

பல்லாய் (பல+ஆல் +ஆய்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமன்கிராய்

மடம் - அம்பலம் தங்கும் இடம்

(ஞானிமடம், ஞானிகள் தங்கும் மடம்)

மடத்துப்பிட்டி (பூநகரி)

**ஆறு - வழி நதி**

1 மண்டைக்கல்லாறு (பூநகரி)

2 குடமுருட்டி ஆறு (பூநகரி)

3 கோடலி ஆறு

4 முடக்கன் ஆறு

**ஊர் - மக்கள் இருப்பிடம்**

1 நல்லூர், ஈழவூர் (பூநகரி)

உ+ம் தோப்பூர், சம்பூர், புத்தூர் என்றபடி

ஊலி, சிப்பி - ஊரிக்காடு (தம்பிராய் பூநகரி)

களப்பு - கடல்நீர் தேங்கியஇடம்

**இராமன் களப்பு (பூநகரி)**

கரை - எல்லை நீர்நிலைகளில் ஓரமாக உள்ள இடம்

1 கட்டுக்கரை (பூநகரி)

2 தெளிகரை (பூநகரி)

**காடு - ஊரிக்காடு, விளாத்திக்காடு**

வெட்டுக்காடு, பத்தினியாகாடு, தட்டான்காடு,

நயினார்காடு (பூநகரி)

குடா - மூன்று பக்கங்களும் நீரால் சூழப்பட்ட

தரை பள்ளிக்குடா

குண்டு - தாழ்வு, நீர்நிலை செம்மண்குண்டு

**குளம் - பெரியநீர்நிலை**

வண்ணான்குளம், நல்லதண்ணீர்குளம், மாளாப்பூக்குளம், கிராஞ்சிக்குளம், மேளாய்க்குளம், நெடுங்குளம், திகிரிக்குளம், ஈநொச்சிக்குளம், செம்பன்குளம், பெரியதம்பிராய்க் குளம், மூலையடம்பன் குளம், கலிமாலை நாகபடுவான் குளம், கரிக்கோட்டன் குளம் (பூநகரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோட்டை - வலுவான மதில்களால் சூழப்பட்ட இடம்**

பூநகரிக்கோட்டை

**குறிச்சி - குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட ஊர்**

1. செட்டிய குறிச்சி
2. கொல்ல குறிச்சி
3. மறவ குறிச்சி
4. சித்தன் குறிச்சி

**வெளி**

1. பெரியவெளி
2. நாலாவெளி
3. தீவுவெளி
4. பொன்னாவெளி (பூநகரி)

**வேரல் - மூங்கில்**

1. வேரவில்

**பராய் - பரவு + ஆய் பரந்தவெளி**

1. தம்பராய் தம்பிராய் ஆக மருவிற்று (பூநகரி)

**வில் - வில் வளைவான குளம்**

அரைவட்டம் சிறுகுளம், நான்ஏற்றி எய்யும் பொறி சிறுகுளங்கள் வில் என்ற விகுதியுடன் முடிவுறுகின்றன.

1. திக்குவில்
2. தும்புருவில் (தூம்பு-மூங்கில்)
3. தாராவில்
4. பளுவில், சுண்ணாவில் (பூநகரி)
5. முழங்காவில் (பூநகரி)

**அத்து - உரிமை**

1. அத்தாய் (பூநகரி)

**கேணி - சிறுகுளம்**

1. ஆலங்கேணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய் - இருக்கை

பத்தினிப்பாய் (பூநகரி)

பத்தினி - கண்ணகிபாய் இருப்பிடம்

பத்தினிப்பாய் இது தாய் தெய்வ வழிபாட்டு தலமாக (கண்ணகி) இருந்ததாக சி. பத்மநாதன் பேராசிரியர் குறிப்பிடுகின்றார்.

**சோலை - பயன்படு மரங்கள் அடர்ந்த இடம்**

1 சோலை (பல்லவராயன் கட்டு)

**தீவு**

1. இரணைதீவு
2. செல்லியாதீவு
3. கறுக்காய்தீவு
4. பாலைதீவு
5. சின்னத்தீவு (பூநகரி)

**துறை - கம்மல், தோணி போக்குவரத்து தொடர்பான துறை**

1. நாகதேவன்துறை (பூநகரி)

**தோட்டம் - பயிர்செய் நிலம், வளமான இடம்**

1. அம்மாதோட்டம்
2. காக்காதோட்டம்
3. பிளாக்கர் தோட்டம்

**முனை முன் இடம் கடலுக்குள் முன்னிற்கும் தரை**

1. கல்முனை
2. கௌதாரிமுனை
3. சூரமுணங்கு

**மூலை - ஒதுக்கிடம்**

மூலையடம்பன்

**வாடி - சிலநாள் தரிப்பிடம்**

1. வாடியடி (பூநகரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெட்டுவான் - வெட்டித்திருத்தியஇடம்**

பள்ள வெட்டுவான் பூநகரி

**பிட்டி - பீடம், உயர்ந்த இடம்**

1. சங்குப்பிட்டி
2. குரக்கன்பிட்டி
3. தாழைப்பிட்டி
4. கள்ளிப்பிட்டி
5. பெரியபிட்டி
6. உயிலம்பிட்டி

**அளம் - உப்பு விளையும் இடம்**

1. உப்பளவன் (பூநகரி)

**புரம் - ஊர், நகரம், மன்னன் இருக்கை**

1. அரசபுரம்

**மிருகங்களின் பெயரிலான இடப்பெயர்கள்**

1. ஆனைகட்டி
2. முட்கொம்பன் (யானை) முன் + கொம்பன்
3. கரிக்கோட்டுக்குளம்

   கரிக்கோடு - ஆணைக் கொம்பு பண்டிவெட்டு

**மரங்களின் பெயரிலானவை**

1. ஈநொச்சி (நொச்சி - ஒருமரம்)
2. கறுக்காய்த்தீவு (கறுக்காய் - ஒருமுள்மரம்)
3. ஆலங்கேணி (ஆல் - மரம்)
4. மூலைஅடம்பன் - (அடம்பன் - மரம்)
5. திகிலிக்குளம் - (திகிலி மரம்)

**பறவைகளின் பெயரிலானவை**

1. கொக்குடையான்
2. கௌதாரிமுனை (கௌதாரி - பறவை)
3. தாராவில்
4. காகம் பீச்சின குளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டு என்பது எல்லையை குறிப்பதாகும்.

1. மட்டுவில் நாடு

பூநகரியில் காணப்படும் பதினெட்டு இடப்பெயர்கள் தமிழ்நாட்டு இடப்பெயர்களை ஒத்துக்காணப்படுவதாக பூநகரி தொல்லியல் ஆய்வு நூலில் ப.புஸ்பரட்ணம் குறிப்பிடுகின்றார். பூநகரியில் பல்லவராயன்கட்டு, சின்னப்பல்லவராயன் கட்டு கிராமங்கள் உள்ளன. இவை சோழராட்சி தொடர்பால் ஏற்பட்ட பெயர்கள் என ப.புஸ்பரட்ணம் குறிப்பிடுகின்றார். பல்லவராயன் என்ற பெயரில் சோழ அமைச்சர் அதிகாரிகள், படைத்தளபதிகள் இருந்ததாக இவர் விளக்குகின்றார்.

மண்ணித்தலை - காயல்பட்டினம் கொற்கை, தொண்டி மாந்தை ஆகிய இடங்களுக்கிடையே கம்பல வாணிபம் நடந்தது. பின்னர் கொற்கை, மாந்தை ஆகிய இடங்களில் மண்குவிப்பினாலும் பூம்புகார், சிங்கைநகர் (வல்லிபுரம்) கடற்கோளினாலும் அழிந்தன. அதனால் கடல் வாணிபம் தொண்டி, மண்ணித்தலை, ஊர்க்காவற்துறை, நாகபட்டினம் ஆகிய துறைகள் ஊடாக நடைபெற்றது.

## நல்லூர்

13ம் நூற்றாண்டு தொடக்கம் ஆரிய சக்கரவர்த்திகளின் தலைநகராக விளங்கியது. நல்லூர் கந்தசுவாமி கோயில் இவர்களால் வழிபடப்பெற்றது. கடையிற்சுவாமி, செல்லப்பா சுவாமி, யோகர்சுவாமி அருளாளர்கள் இங்குருபரம்பரையின் அருட்பூமியாக தேரடி விளங்கியது.

பூநகரி நாட்டார் பாடல்களில் நல்லூர்கந்தன் துதி இடம்பெறுகின்றது. பூநகரியிலும் நல்லூர் என்ற பெயரில் ஊர் இருக்கின்றது. இங்கும் முருகன் கோயில் உண்டு.

## மறவகுறிச்சி

சோழ நாட்டின் வடபகுதியில் இருந்து வந்த மறக்குடிகள் முதலில் குடியேறி நிலைத்த இடம் வடமராட்சி (வடமறவர் ஆட்சி) என்றும், தென் தமிழ்நாட்டில் இருந்து வந்த மறவர் குடியேறிய இடங்கள் தென்மராட்சி என்றும் (தென்மறவர் ஆட்சி) பெயர் பெற்றன. தென்மராட்சியில் கண்ணகி அம்மன் நாகவழிபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்றது. மறவன் புலவு (சாவகச்சேரி) மறவகுறிச்சி (பூநகரி) மறவகுறிச்சியை சேர்ந்தவர்களே செல்லியாத்தீவு கண்ணகை அம்மன் வழிபாட்டை செய்துவந்தனர் என்பது குறிப்பிடதக்கது.

## நெற்புலவு

புலம், புலவு - புல் + அம் நெய்தல்நிலம் புல்தரை மேய்ச்சல்நிலம், நெற்புலவு மட்டுவில்நாட்டிற்கு அணித்தான கிராமமாக விளங்குகிறது.

## செட்டியகுறிச்சி

செட்டி மக்கள் வாழ்ந்த இடமாதலால் இப்பெயர் பெற்றது. செட்டியார் குறிச்சி என்று யாழ்ப்பாணத்திலும் ஊர் உண்டு. இங்கு வாழ்ந்த செட்டிகளுக்கு நாட்டுக்கோட்டை செட்டிமாருக்கும் தொடர்பு இருந்ததா என்பது தெரியவில்லை.

## ஞானிமடம்

இங்கு ஒரு மடம் இருந்திருக்கிறது. முன்னர் ஞானிமடம் நாகதேவன் துறைக்கும் கொழும்புத்துறைக்கும் இடையே தோணிப் போக்குவரத்தே இடம் பெற்றது. கொழும்புத்துறை, நாகதேவன் துறையில் பயணிகள் தங்க பங்களாக்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதைவிட ஞானிமடத்தில் இருந்தமடம் சமய ஆராதனைக்குரிய மடமாக குருபூசைகள் இடம் பெற்ற மடமாக இருந்திருக்கிறது. நெடுந்தூரம் கால்நடையாக பயணித்தவர்களுக்கு இம்மடம் ஆறுதல் அளித்தது.

## நில உடைமை

பூநகரியில் வயல்நிலங்கள் தோட்டக்காணிகள் பெரும்பாலானவை யாழ்ப்பாணத்தவர்களுக்கே சொந்தமாக இருந்திருக்கின்றன. பிற்காலத்தில் இவை விலையாக கொள்ளப்பட்டு வருகின்றன. டச்சுக்காரரர் காலத்தில் யாழ் குடாநாட்டில் இருந்து பலர் முல்லைத்தீவு மாவட்டத்தில் குடியேறினர். அவ்வாறே பூநகரியிலும் வந்து குடியேறியுள்ளனர். பரவலாக தமிழ்நாட்டுப் பெயர்கள் வடஇலங்கையில் உள்ளமை தெரிந்ததே. யாழ்ப்பாணக்குடா நாட்டில் மலையாள கருநாடக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆந்திரமாநிலங்களில் காணப்படும் ஊர்பெயர்களும் உள்ளன. இவ்வாறே பூநகரியில் உள்ள இடப்பெயர்களும் அமைந்திருப்பதாக கொள்ளலாம்.

**உசாத்துணை நூல்கள்**

1. தமிழர் வரலாறும் இலங்கை
   இடப்பெயர் ஆய்வு- கதிர்- தணிகாசலம்
2. பூநகரி தொல்பொருள் ஆய்வு - ப.புஸ்பரட்ணம்
3. இலங்கையில் வன்னியர் - சி.பத்மநாதன்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

"ஒரு மிகச் சிறந்த புத்தகத்தை நீங்கள் படிக்க விரும்புகிறீர்கள் ஆனால் அது இன்னும் யாராலும் எழுதப்படவில்லை என்கிற நிலை இருந்தால் அதற்கு ஓரே தீர்வு அதை நீங்கள் எழுத வேண்டியது தான்" - டோனி மாரிஸன்-

"உலகிலுள்ள அனைத்து வகைத் துயரங்களின் விடுதலை ஒரு புத்தகத்தில் உள்ளது." -கூகிவா திவாங்கோ

"புத்தகத்தின் பயன் அதன் உள்ளே தேடப்படுவதை விட வெளியே ஏற்படுத்திய தாக்கத்தை வைத்தே உணரப்படுகின்றது"

-பிரடெரிக் எங்கெல்ஸ் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூநகரியின் பதிவுகள்...



இரணைதீவு வெளிச்சவீடு



உயிர்ப் பல்வகைமையைப் பாதுகாக்கும் கண்டல் காடுகளின் எழில்மிகு தோற்றம் – பரமன்கிராய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூநகரியின் பதிவுகள்...



கறுக்காய்தீவில் கண்டுபிடிக்கப்பட்ட கோரிகை



நாகமுனையில் அமைந்திருக்கும் பெருக்க மரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதவி பிறப்புத் தொடர்பான சில குறிப்புக்கள்

தென்புலோலியூர் பரா. ரதீஸ்
தமிழ்ப்புலம்
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.

சோழ நாட்டிலே பூம்புகாரிலே பிறந்தவள் மாதவி ஆடல், பாடல், அழகு ஆகிய மூன்றும் ஒருங்கே கைவரப்பெற்றவள். ஏழாண்டுகள் முறையாகக் கலை பயின்றவள். பிறப்பில் குறைவில்லாதவள். இவளது பன்னிரண்டாவது வயதிலே இவளை எமக்கு அறிமுகப்படுத்துகின்றார் இளங்கோ.

'பிறப்பில் குன்றாப் பெருந்தோள் மடந்தை
தாது அவிழ் புரிகுழல் மாதவி தன்னை
ஆடலும் பாடலும் அழகும் என்று இக்
கூறிய மூன்றின் ஒன்று குறைபடாமல்
ஏழ் ஆண்டு இயற்றி, ஓர் ஈர் ஆறு ஆண்டில்
சூழ் கழல் மன்னற்கு காட்டில் வேண்டி....'

இவற்றோடு மட்டும் நின்று விடாது, மாதவியின் மூலம் பற்றியும் இளங்கோ பேசுகின்றார். அதாவது எந்த மரபிலே வந்தவள் என்பது பற்றிக் குறிப்பிடுகின்றார். அகத்தியரின் சாபத்தின் விளைவாக ஊர்வசி, மாதவியாக இப்பூமியில் வந்து பிறந்தாள். இப்படிப்பிறந்த மாதவியின் மரபிலே வந்தவள் தான் இந்த மாதவி என்கின்றார். இது பற்றிய விரிவான செய்தியினைக் 'கடல் ஆடு காதை'யில் காண்கின்றோம். இந்திரன் சபையிலே ஊர்வசி நடனம் ஆடினாள். இந்திரனுடைய மகன் சயந்தன் ஊர்வசியை உற்று நோக்கினான். ஊர்வசியும் காதல் வசப்பட்டு சயந்தனைப் பார்க்கலானாள். இதனால் நடனத்தில் தாளம் தப்பியது. சீற்றம் கொண்ட அகத்தியர் ஊர்வசிக்குச் சாபமிடுகின்றார். இதனால் ஊர்வசி மாதவியாக வந்து பிறக்கிறாள். அவ்வாறு பிறந்த மாதவியின் மரபிலே வந்தவள் தான் இந்த மாதவி. இதனை இளங்கோ பின்வருமாறு பாடுவார்.

'நாரதன் வீணை நயம் தெரி பாடலும்
தோரிய மடந்தை வாரப் பாடலும்
ஆயிரம் கண்ணோணன் செவியகம் நிறைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம் உருப்பசி நல்காள் ஆகி,
மங்கலம் இழப்ப, வீணை, 'மண்மிசைத்
தங்குக இவள்' எனச் சாபம் பெற்ற
மங்கை மாதவி வழிமுதல் தோன்றிய
அங்கு அரவு அல்குல் ஆடலும் காண்குதும்...'

அகத்தியரது சாபத்தினால் வந்து பிறந்த மாதவி வேறு, சிலப்பதிகாரம் கூறும் மாதவி வேறு. அகத்தியரின் சாபத்தினால் வந்து பிறந்த மாதவியின் மரபிலே வந்தவள், சிலப்பதிகாரம் காட்டும் மாதவி 'மங்கை மாதவி வழிமுதல் தோன்றிய...', 'மாதவி மரபின் மாதவி இவள்...' போன்ற அடிகள் மேற்குறிப்பிடப்பிட்ட செய்தியினைத் தெளிவுபடுத்து கின்றன. இளங்கோ மாதவியின் மரபு பற்றிக் கூறினாரே ஒழிய, இவளது முற்பிறப்பு பற்றிக் கூறவில்லை. என்பதைச் சிலம்பைக் கற்போர் நன்கு உணர்வர்.

மாநாயகனுடைய மகள் கண்ணகி என்றும் மாசாத்துவானின் மகன் கோவலன் என்றும் கூறிய இளங்கோ, மாதவியின் தந்தை பெயரையோ தாயின் பெயரையோ கூறவில்லை. சிலம்பிற்கு உரையெழுதியவர்கள் மாதவியின் தாய் சித்திராபதி என்கின்றனர். சிலப்பதிகாரத்திலே இல்லாத இப்பெயரை இவர்கள் எங்கிருந்து பெற்றார்கள் என்ற கேள்வி எழுகின்றது. மணிமேகலையில் மாதவியின் தாய் சித்திராபதி என்று கூறப்படுகிறது. இதனை மணிமேகலை ஊரலருரைத்த காதையில் வரும் பின்வரும் அடிகளிலிருந்து அறிகின்றோம்.

'மணிமேகலையொடு மாதவி வாரத்
தணியாத் துன்பம் தலைத்தலை மேல்வரச்
சித்திராபதி தான் செல்லலுற்று இரங்கித்...'

எனவே சிலம்பில் இல்லாத 'சித்திராபதி' என்ற பெயரை உரையாசிரியர்கள் மணிமேகலையிலிருந்து பெற்றிருக்கிறார்கள் என்பது தெளிவு. தமிழகத்தில் தோன்றிய கோவலன் கதை, மாதவியின் தாய் வசந்தமாலை என்கிறது. சிலப்பதிகாரத்திலே மாதவியின் தோழியின் பெயர் வசந்தமாலை என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் தோன்றிய கோவலனார் கதை, கண்ணகி வழக்குரை, தமிழகத்தில் தோன்றிய கோவலன் கதை என்பன மாதவியின் முற்பிறப்புப் பற்றிப் பேசுகின்றன. இதில் கோவலனார் கதை, கண்ணகி வழக்குரை என்பன ஒரு விதமாகவும், கோவலன் கதை இன்னொரு விதமாகவும் மாதவியின் முற்பிறப்புப் பற்றிப் பேசுவதைக் காணலாம். தேவ லோகத்திலே இந்திரனுடைய சபையிலே ஊர்வசி நடனமாடுகின்றாள். நாரத முனிவர் வீணை வாசிக்கின்றார். இந்திரனுடைய மகனாகிய சயந்தன் ஊர்வசியைப் பார்க்கலானான். ஊர்வசியும் சயந்தன் மீது காதல் கொண்டாள். இதனால் நாரத முனிவரின் வாத்திய தாள இசையிலிருந்து ஊர்வசி விலகலானாள். கோபம் கொண்ட நாரதர் சாபமிடுகின்றார். நாரதர் சாபத்தின் படி ஊர்வசி திருக்கடை ஊரிலே கணிகை குலத்திலே சித்திராபதிக்கு மகளாக மாதவி என்ற பெயரிலே வந்து பிறக்கின்றாள். இந்திரனுடைய மகன் சயந்தன் பூம்புகார்ப் பட்டினத்திலே வணிக குலத்திலே மாசாத்துவானுக்கு மகனாக கோவலன் என்ற பெயரிலே வந்து பிறக்கின்றாள். இச் செய்தியினை கோவலனார் கதையிலே காண்கிறோம்.

**'மணி சிறந்த பரிபுரமும் வரு சதங்கை தண்டையுடன்**
**அணி சிறந்த பாதமதில் அணிந்த நல்ல ஊர்வசியும்**
**பணி திகழும் இயல் இசையும் நாரதரும் பண்பாடத்**
**தணி புகழும் இந்திரன் முன் சாரி பல ஆடுவளாம்'**

**'ஆடுகின்ற அளவு தன்னில் அமர்ந்து நின்ற மதகரியின்**
**கோடு கொண்ட முலையாளைக் குறித்து நல்ல வாசவனும்**
**நாடி மிகக் கொண்டாடி நலம் மிகுந்த களரி தன்னில்**
**ஈடுபடச் சயந்தனும் இவளையெட்டிப் பார்த்தனனே'**

**பார்த்தளவில் இருவர் தங்கள் பார்வையும் அங்கு ஒன்றாகி**
**ஆர்த்த திரை அது நீங்கி அங்கெழுந்த சந்திரன் போல்**
**ஏத்தியிரு கை குவித்து இலங்குவளை தாமரை போல்**
**வேர்த்திதயம் பொன்னிறமாய் மெய் மயங்கி விழுந்தனனே'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'விழுந்தளவில் யாழ்முனிவன் மிக்க தன்கை யாழ்பாட
ஒழுங்கு வழி ஆடாமல் ஊதாரித்தாள் என வெகுண்டு
செழுந்தரள நகையாளைச் செய்யிழையை ஊர்வசியை
அழுந்து புவி அதனிற் கணிகையாக நீ போய்ப் பிறவுமென்றார்'

'ஆக வென்று ஊர்வசியை அருள் முனிவன் தான் சபித்து
வாகு பெறு இந்திரன் தன் மதலை சயந்தன் தனையும்
ஏக முறப் புவிமீதே இனிப்பிறப்பாய் இவள் மீதே
மோக முற்று அங்கு இறந்திடன்று முனிவனுந் தான் சபித்தனனே'

'தான் முனிவனிடுஞ் சாபத்தால் அவனும் மாசாத்தார்க்
கான் மருவுமகனாகி அவதரித்துப் புவியிலொரு
மான் மதனனாய்க் கண்ணகையை மணஞ் சூட்ட வார்த்தையிட்டுத்
தான் மருவு கோவலராய் சரியொக்க வளர்ந்தனரே'

'தனமருவு முனிவனிடுஞ் சாபமதால் ஊர்வசியும்
இனமருவுத் திருக்கடையூர் என்னும் அந்த பட்டணத்தில்
மன மருவு கணிகையவள் மாது சித்திரபதி வயிற்றில்
என மருவு நாக மணியாமென உற்பவித்தனளே'

எனக் கோவலனார் கதை, கோவலன் மாதவி முற்பிறப்புத் பற்றிக் கூறுகின்றது.

கோவலனார் கதையின்படி, ஊர்வசிக்குச் சாபமிட்டவன் நாரதன், சிலம்பிலே அகத்தியன் சாபமிடுகின்றான்.

'தெய்வ மால்வரை திருமுனி அருள
எய்திய சாபத்து இந்திரச் சிறுவனொடு
தலைக் கோல் தானத்து சாபம் நீங்கிய...'

இவை சிலப்பதிகார வரிகள், தெய்வ மால்வரைத் திருமுனி என்பது அகத்தியனைக் குறிக்கின்றது. அகத்தியன் பொதிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையிலே வாழ்ந்தவன் என்று கூறும் மரபு எம்மிடத்தே உள்ளது. அகத்தியன் சாபமிடும் போது நாரதன் அங்கிருந்தான். ஊர்வசியின் நாட்டியத்திற்கு வீணை வாசித்தவன் நாரதன் தான். கடல் ஆடு காதையில் இதனைக் காணலாம். கோவலனார் கதையிலும் ஊர்வசியின் நாட்டியத்திற்கு நாரதனே வீணை வாசிக்கின்றான். அவனே சாபமிடுகின்றான். கோவலனார் கதையிலே வருகின்ற 'யாழ்முனிவன்' என்ற தொடர் நாரதனைக் குறிக்கிறது. வீணை வாசிப்பதில் நாரதன் வல்லவனாதலால் அவனை 'யாழ்முனிவன்' என்று அழைக்கும் மரபு உண்டு.

'கண்ணகி வழக்குரை'யும் மாதவியின் முற்பிறப்புப்பற்றிக் கோவலனார் கதையைப் போன்றே கூறுகின்றது. கோவலனார் கதையின் படி சயந்தன், கோவலனாகப் பிறக்கின்றான். கண்ணகி வழக்குரையின் படி மூங்கிலாகத் தோன்றுகின்றான். பாண்டியனின் குடைக் காம்பிற்காக அந்த மூங்கில் வெட்டப்படுகின்றது. இச் செய்தியினைக் கூறும் பாடல்கள் வருமாறு.

**'ஆக என்று அங்கு ஊர்வசியை அருள் முனிவனுஞ் சபித்து**
**வாகு பெற இந்திரன் தன் மதலை செயந்திரனையும்**
**ஏகியுடன் மண்மீதில் இனிய பசுங்கழையாக**
**மோகமுற முளைத்து எழு என்றே முயன்றவனையும் சபித்தார்'**

**தான் முனிவன் இடுஞ் சாபந் தப்பாமல் ஊர்வசியும்**
**மான் விழியாள் சித்திராபதி வயிற்றில் வந்நங்கவதரித்த**
**தேனவிழ்தார் செயந்திரனும் திகிரியென முளைத்தெழுந்தான்**
**மீனவன் முன் குடைக்காம்பாய் வெட்டி வந்தங்கு இட்டனரே'**

இங்கே கழை,திகிரி ஆகிய சொற்கள் மூங்கிலைக் குறித்து நிற்பதைக் காணலாம்.

பகையரசர்களை வெற்றி கொண்டு அவர்களிடத்திலே பெற்றுக்கொண்ட வெண்கொற்றக்குடையின் காம்பில் ஏழு சாண் வெட்டி எடுப்பர். இக்கோலை நன்கு அலங்கரிப்பார். இந்திரனுடைய மகன் சயந்தனெனக் கொண்டு வழிபாடு இயற்றுவர். இத்தலைக்கோலை வழிபாடு இயற்றிய பின்னர் உலாவாகக் கொண்டு சென்று பின்னர் நாட்டிய அரங்கிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னதாக வைப்பர். அதன் பின் நாட்டியமாடத் தொடங்குவார். இம் மரபினைச் சிலப்பதிகார அரங்கேற்றுக் காதையில் காண்கிறோம். இம் மரபினூடாகக் குடைக்காம்பைச் சயந்தனாகக் கொள்ளும் முறையைக் காண்கிறோம். இதனைப் பின்வரும் சிலப்பதிகார அடிகளில் காணலாம்.

**'காவல் வெண் குடை மன்னவன் கோயில்**
**இந்திரச் சிறுவன் சயந்தன் ஆக என**
**வந்தனை செய்து வழிபடு தலைக்கோல்...'**

சயந்தன் மூங்கிலாகத் தோன்றினான் என்றும் அம்மூங்கில் பாண்டியரது குடைக்காம்பிற்கு வெட்டப்பட்டது என்றும் கண்ணகி வழக்குரை கூறும் செய்தி சிலப்பதிகாரத்தில் கூறப்படும் இச்செய்தியில் இருந்து பெறப்பட்டிருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. கோவலனார் கதையும் கண்ணகி வழக்குரையும் மாதவியின் முற்பிறப்பு ஊர்வசி எனக்கூறி நிற்பதைக் காணலாம்.

கோவலன் கதை மாதவியின் முற்பிறப்புப்பற்றி பின்வருமாறு கூறுகின்றது. மதுரையிலே பாண்டியர்கள் தமக்குப் பிள்ளைப்பாக்கியம் இல்லாத காரணத்தினால் காளி மீது கோபம் கொண்டு காளி கோயிலைப் பூட்டினார்கள். இக்கோயிலுக்கு விளக்கு வைகக கூடாது என்று கட்டளையிட்டார்கள். இந்நிலையில் வாணிபனொருவன் எண்ணெய் விற்க வருகின்றான் யாருமே அவனிடம் எண்ணெய் வாங்கவில்லை இதனால் காளி கோயிலுக்குச் சென்று காளியை வேண்டலாயினான். காளியே! என்னுடைய எண்ணெய் எல்லாம் விற்று முடிந்தால் உனக்கு ஆயிரம் திருவிளக்கு ஏற்றுவேன் என்று கூறிச்சென்றான். காளி அருளால் எண்ணெய் விற்று முடிந்தது. வணிகனும் ஆயிரம் திருவிளக்கு ஏற்றி முடித்தான். எண்ணெய் வாணிபன் விளக்கு வைத்ததைப் பாண்டியர்கள் அறிந்தார்கள். அவனுக்கு மரணதண்டனை வழங்கினார்கள். மறுபிறப்பில் எண்ணெய் வாணிபன் கோவலனாகப் பிறக்கின்றான். இவனுடைய மனைவி மாதவியாகப் பிறக்கின்றாள்.காளி கண்ணகியாக பிறக்கின்றாள்.

மாதவி திருக்கடையூரிலே தேவதாசி மரபிலே வசந்தமாலைக்கு மகளாக வந்து பிறக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'கடையூர் வசந்தமாலை கன்னியொரு தேவதாசி**
**அவள்-பிள்ளையில்லையென்று பெருந்தபசு தானிருந்தாள்**
**அப்போது சொக்கலிங்கம் ஆண்டவனாரேது சொல்வார்**
**வாணிச்சி தன்னுயிரை மகாதேவர் தாமெடுத்து**
**எலுமிச்சங்கனியாக்கி இன்பமுடன் தான் கொடுத்தார்**
**வாங்கி மனமகிழ்ந்து வசந்தமாலை உண்டாளே**
**அதுவே தான் மாதமாக ஆரணங்கு கர்ப்பமதாய்**
**பத்து மாதஞ் சென்று பைங்கொடியும் பெற்றெடுத்தாள்'** என மாதவியின் பிறப்பு, முற்பிறப்புப் பற்றிக் கோவலன் கதை கூறும்.

**'...பூம்புகார்ப் பொன்தொடி மாதவி தன்**
**வாக்கினால் ஆடு அரங்கின் வந்து'**

என்ற சிலப்பதிகார அடிகளினூடாக மாதவி பூம்புகாரில் பிறந்தவள் என்பதை அறிகின்றோம். கண்ணகி வழக்குரையும் மாதவி பூம்புகாரில்பிறந்தவள் என்றே கூறுகின்றது. இதனைப் பின்வரும் அடிகளில் காணலாம்.

**'......... ஊர்வசியை**
**அழுந்து புகார்தனிற் சித்திராபதிக்கு மகளாகவென்றார்'**

அதே நேரம் கோவலன் கதை, கோவலனார் கதை என்பன மாதவி பிறந்த இடம் திருக்கடையூர் என்று கூறுகின்றன.

**'கடையூர் வசந்தமாலை கன்னியொரு தேவதாசி**
**அவள் - பிள்ளையில்லையென்று பெருந்தபசு தானிருந்தாள்'**
**என்ற கோவலன் கதை அடிகளினூடாகவும்,**
**'இன மருவுத் திருக்கடையூர் என்றும் அந்தப்பட்டணத்தில்**
**மனமருவு கணிகையவள் மாது சித்திரபதி வயிற்றில்'**

என்ற கோவலனார் கதை அடிகளினூடாகவும் மேலே கூறிய செய்தியினை அறிகின்றோம்.

பூம்புகார் காவிரிக்கரையில் அமைந்துள்ள கடற்கரைப்பட்டினம் சோழ நாட்டினுடைய தலை நகரமாக விளங்கியது. திருக்கடவூர் காவிரித் தென்கரையில் அமைந்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் மாயவரம் - தரங்கபாடி புகைவண்டிப்பாதையில் திருக்கடவூர் நிலையம் உள்ளது. திருக்கடவூரை திருக்கடையூர் என்றும் அழைப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நன் கடையூர் பற்பலவும் நன்றி மறவாது
ஏத்துத் தென்கடையூர் ஆனந்தத் தேறலே'

என்ற இராமலிங்க சுவாமிகளின் அடிகளினூடாக கடவூர், கடையூர் என்றும் அழைக்கப்படுவதைக் காண்கின்றோம்.

பூம்புக்கார் வேறு, திருக்கடையூர் வேறு ஆனால் இரண்டு இடங்களும் சோழ நாட்டில் தான் அமைந்துள்ளன. புகாரின் முதன்மையை அல்லது பிரபல்யத்தைக் கருத்திற் கொண்டு இளங்கோ, திருக்கடையூர் என்று குறிப்பிடாமல், பூம்புகார் என்று கூறினாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது. அல்லது சிலப்பதிகார காலத்தில் புகார் நகரத்தின் எல்லைக்கு உட்பட்ட ஊராக கடையூர் விளங்கியிருக்கலாம். எனவே பொதுமையைக் கருத்திற் கொண்டு இளங்கோ புகார் என்றிருக்கலாம். இளங்கோ திருக்கடையூர் பற்றிக் குறிப்பிடாத காரணத்தினால் கோவலன் கதை, கோவலனார் கதை ஆசிரியர்கள் வாய்மொழி மரபில் இருந்து இதனைப் பெற்றுக்கொண்டார்களோ என்றும் எண்ணலாம். இவ்வகையில் சிலப்பதிகாரம், கோவலன் கதை, கோவலனார் கதை, கண்ணகி வழக்குரை என்பவற்றின் வாயிலாக, மாதவியின் பிறப்புத் தொடர்பான செய்திகளை நாம் கண்டு கொள்ளலாம்.

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦

**போரில் கலந்து கொள்வதை விட கூடுதல் தைரியம் ஒரு சில புத்தகங்களை வாசிக்கத் தேவைப்படுகின்றது.**

**– எல்பர்ட்கிரிக்ஸ் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணை நின்ற நூல்கள்


- கந்தையா வீ.சி (1968) கண்ணகி வழக்குரை: மட்டக்களப்பு இந்து சமய விருத்திச் சங்கம்.
- சுப்பிரமணியன் ச.வே: பதிப்பாசிரியர், (2001) சிலப்பதிகாரம் (உரையாசிரியர்) சென்னை கங்கை புத்தக நிலையம்
- செல்லையா மா.சே (1962) கோவலனார் கதை (பதிப்பாசிரியர்)பருத்தித்துறை
- துரைச்சாமிப்பிள்ளை.சு (2002) மணிமேகலைச்சுருக்கம் சென்னை, கழக வெளியீடு
- புகழேந்திப்புலவர் (1949) கோவலன் கதை (இவர் பாடியதாகக் கூறப்படுகிறது) சென்னை – ஓ ஆதிமூலம் சன்
- புலியூர் கேசிகன் (2000) சிலப்பதிகாரம் (தெளிவுரை)சென்னை – பாரி நிலையம்
- வேங்கடசாமி நாட்டார் ந.மு (1963) சிலப்பதிகாரம் (உரையாசிரியர்) சென்னை கழக வெளியீடு
- வேங்கடசாமி நாட்டார் ந.மு துரைச்சாமிப்பிள்ளை. சு (1999) சென்னை – கழக வெளியீடு (பதவுரை, விளக்கவுரை)
- ஸ்ரீ சந்திரன்.ஜெ (1996) மணிமேகலை, வளையாபதி,குண்டலகேசி (தெளிவுரை) சென்னை – தமிழ் நிலையம்
- **கலைக்களஞ்சியங்கள்**

  பாலுச்சாமி.நா (1988) வாழ்வியற்களஞ்சியம்(முதன்மைப்பதிப்பாசிரியர்) (தொகுதி–10) தஞ்சாவூர் - தமிழ்ப்பல்கலைக்கழகம்

  பத்மநாதன்.சி (1996) இந்து கலைக்களஞ்சியம் (பிரதம பதிப்பாசிரியர்) (தொகுதி - 111)

  (1998) இந்து கலைக்களஞ்சியம் (தொகுதி - 4) கொழும்பு – இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுவற்ற உலகை மகிழ்வோடு ஏற்போம்

*ம. சீராளன்*
*தரம் - 10 A*
*கிளி பூநகரி மத்திய கல்லூரி*

**நாம்** இன்று 21ம் நூற்றாண்டில் காலடி பதித்துக் கொண்டு இருக்கின்றோம். அந்த வகையில் போதையை ஊட்டும் வஸ்த்துக்களால் மனிதனின் உடலுக்கு மட்டுமல்ல சமுதாயத்திற்கும் அச்சுறுத்த லிருப்பதை நாம் அறிவோம். போதைவஸ்த்துக்கள் தனிமனித வாழ்வுக்கு, உலக ஆரோக்கிய வளர்ச்சிக்கு கேடு விளைவிக்கின்றன. இதன் அடிப்படையில் புகைத்தல், மது அருந்துதல் பழக்கம் இன்றைய நவீன உலகில் அதிகமாகப் பாவணைசெய்யப்படுகின்றது.

விஞ்ஞான வளர்ச்சியுடைய இன்றைய நவீன காலத்தில் இளைய தலைமுறையினர் மது அருந்துதலையும் புகைத்தலையும் ஒரு நவநாகரிகமாக எண்ணி அதற்குள் அடிபணிகின்றனர் என்று கூறுவது ஒரு வியக்கத்தக்க விடயமாகும். 'இளங்கன்று பயமறியாது' என்பதற்கு இணங்க இன்றைய இளைய சமுதாயத்தினர் மது அருந்துவதாலும் புகைப்பதனாலும் தங்களுடைய ஆரோக்கிய வாழ்வைக் கெடுத்துக் கொள்வதுடன் சமூகத்திற்கும் கேடு விளைவிக்கின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு உலக சுகாதார ஸ்தாபத்தினர் வெளியிட்ட அறிக்கையின் படி ஆயிரத்து நூறு மில்லியன் மக்கள் போதைபொருட்களுக்கு அடிமையானவர்கள் என்றும் இதனால் வருடாந்தம் இக்கொடிய பழக்கத்தினால் 3 இலட்சம் பேர் நோய்வாய்ப்பட்டு இறந்து விடுகின்றனர் என்றும் அறிகின்றோம். இப்போக்கானது கவனிக்கப்படாது விடப்படுமானால் வருடாந்தம் இந்த எண்ணிக்கையானது மூன்று மடங்காக அதிகரிக்கப்படும்.

புகைப்பதனாலும், மது அருந்துவதாலும் மனிதன் ஒரு வகைப் போதை உணர்வைப் பெறுகின்றான். அது அவனிடத்து தற்காலிக இன்பத்தையும் கிளர்ச்சியையும் உண்டு பண்ணுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இப்பழக்கத்தை தொடர்ந்து பாவிக்கும் போது அவன் பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றான்.

ஆனால் இன்றைய சமுதாயத்தை எடுத்து நோக்குவாமானால் இன்றைய மக்கள் இன்றைய இளைய சமுதாயம், தங்களுடைய உல்லாசமான வாழ்க்கைக்கு மதுவும் சிகரெட்டும்தான் அவசியம் என்ற அறியாமைக் கருத்தை அதிகம் கொண்டுள்ளது.

தற்காலத்தில் அரசுக்குக் கூடுதலான வரியை தேடிக் கொடுப்பதற்கு மதுவும், சிகரெட்டும் மட்டுமல்லாது போதைப் பொருட்களும் காணப்படுகின்றன. போதைப்பொருட்களை உடலில் செலுத்துவது தற்காலத்தில் நன்மையை தருவது அல்ல தீமையைத் தருவது தான் அதிகம். இதனால் கொடிய நோய்கள் ஏற்படுவதுடன் அகால மரணங்களும் ஏற்படுகின்றது. தற்காலத்தில் உள்ள போதைவஸ்து கம்பனிகள் போதைபொருட்களை பல கவர்ச்சிகரமாக வடிவமைத்து விளம்பரங்கள் மூலம் அறிமுகப் படுத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

புகைத்தலை எடுத்து நோக்குவோமானால் புகைக்கும் போது 60 வீதமான வாயுக்கள் வெளிவிடப்படுவதுடன் நுரையீரல் புற்றுநோய், மார்புப் புற்றுநோய், மாரடைப்பு, உயர்குருதி அமுக்கம், என்புருக்கி நோய், பக்கவாதம் போன்ற நோய்களும் வாய், தொண்டை, களம், சதையி போன்ற உறுப்புக்களும் பாதிப்பு அடைக்கின்றது. போதைப் பொருட்களை பாவிக்கும் பழக்கமானது தற்காலத்தில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலே அதிகமாகக் காணப்படுகின்றது. நவீன தற்காலத்தில் ஆண்களுக்குச் சமனாகப் பெண்களும் குடிப்பவர் களாகவும், புகைப்பவர்களாகவும் காணப்படுகின்றனர். இதனால் கருச்சிதைவு, குறைமாதப்பிறப்பு, இறந்து பிறக்கும் குழந்தைகள் என்பன அதிகரித்துக் காணப்படுகின்றன. புகைத்தலானது புகைப்பவரை மட்டும் அல்லாது அவருக்கு அருகில் இருப்பவரையும் பாதிப்படையச் செய்கின்றது மட்டும் அல்லாது சுற்றுப்புறச் சூழலுக்கும் கேடு விளைவிக்கின்றது.

ஒரு குடும்பத்தை எடுத்து நோக்குவோமானால் அக்குடும்பத்தில் கணவன் குடிப்பவனாகக் காணப்பட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன்குடித்துவிட்டு வந்து மனைவியுடனும், பிள்ளைகளுடனும், அயலவர்களுடனும் சண்டையிடும் போது அக்குடும்பமும், அவரது பிள்ளைகளும் விரக்தியின் விளிம்பிற்கு தள்ளப்படுகின்றனர். இதனால் அப்பிள்ளைகளின் கல்வி உரிமை மறுக்கப்பட்டு பராமரிக்காது தெருவில் விடப்படுகின்றார்கள்.

இன்றைய மக்களை எடுத்து நோக்குவோமானால் இன்றையமக்கள் தம் வருமானத்தில் பெருந்தொகையான பணத்தை போதைப் பொருட்களுக்கு செலவழித்து தம் செல்வத்தை இழப்பதுடன் உயிருக்கு உலைவைக்க கூடிய நோய்களை வேதனம் இன்றி இலவசமாக வாங்குகின்றார்கள்.

இன்றைய சமுதாயத்தில் குடிக்கும் பழக்கத்தை உடையவர்களையெல்லாம் கருத்திற் கொண்டு எமது சமூகம் குடித்தலில் இருந்தும், புகைத்தலில் இருந்தும் இன்றைய சமுதாயத்தைப் பாதுகாக்க வேண்டும் முக்கியமாக வளர்ந்து வரும் இளைய சமுதாயத்தையும் குறிப்பாகக் கல்விகற்கும் பாடசாலை மாணவர்களையும் இப் போதைபொருட்களில் இருந்து பாதுகாத்து நல்ல வகையில் அவர்களை வழிப்படுத்த வேண்டும். போதைப் பொருட்களில் இருந்து பாதுகாப்புப்பெற விழிப்புணர்வு நடவடிக்கைகளை அனைத்து தரப்பினரும் மேற்கொள்ள வேண்டும்.

இதனையெல்லாம் நாம் கருத்தில் கொண்டு போதைப் பொருட்களை விற்பனை செய்பவர்களுக்கு எதிராக கடும் தண்டனையை வழங்கவேண்டும். நாம் அனைவரும் போதைவஸ்தான சாராயம்,கள், கஞ்சா போன்றவற்றையும் புகைத்தற் பொருட்களான சிகரெட், சுருட்டு, பீடி போன்ற போதைவஸ்தான அரக்கர் குடும்பத்தையும் எம் நாட்டில் இருந்து பூண்டோடு அழித்து 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதற்கு இணங்கி எம்நாட்டை வளமுடைய நாடாக மாற்றி ஆரோக்கியமாக வாழ்வோம்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூநகரியின் பதிவுகள்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவழி நடக்கும் எம் வலைநகர்

திரு அ.மதுரநாயகம்
வலைப்பாடு
வேரவில்.

**வா**டைக்காற்று, சோழகம் என்பன தென்னை, பனைகளுடே தவழ்ந்துவர ஆர்ப்பரிக்கும் கடலலை ஆசிபொழிய, புல்வெளிகளும், பசுமை நிறை புற்தரைகளும், கடல் வளமும் நிறைந்து பார்ப்பதற்கும், ரசிப்பதற்கும் ஈடு இணையற்றதாய் விளங்கும் வண்ண எழில் வலைப்பாடானது கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்கே சுமார் 64 கி.மீ தொலைவில், நெய்தல் நிலத்தில் அமையப்பெற்ற கிராமமே வலைப்பாடாகும். வடக்கே பொன்னாவெளி, கிழக்கே வேரவில், தெற்கே கிராஞ்சி, மேற்கே கடல் இவற்றை எல்லையாகக் கொண்ட அழகு மிக்க கிராமமாகும்.

சிறியதொரு கிராமமாக இருந்த போதும் மகிழ்ச்சியான நிறை வாழ்வை அள்ளித் தருகின்றது. இயற்கை அழகில் இறைவன் கருணையும், அன்பும் வெளிப்பாடாக உள்ளது. கடற்கரையானது வளைந்து நெளிந்து கடலின் அழகை மெருகுபடுத்தி நிற்கின்றது. அத்துடன் கூடவே கடற்கரையைச் சுற்றி இயந்திரப் படகுகள் வண்ணத்துக்கு வண்ணம் காட்சியளிப்பது கண்களுக்கு இதமாயுள்ளது. கரையோரத்தை அலங்கரிக்கும் வகையில் சிறுசிறு வாடிகள் இடையிடையே காணப்படும். இவையெல்லாம் இணைந்து வலைப்பாட்டுக் கிராமக் கடற்கரையை அழகுபடுத்தி நிற்பதோடு கடல்வளம் மிகுதியாக கொண்ட இயற்கைத் துறைமுகவாயிலுடன் அமையப்பெற்றிருப்பது கடற்கரையின் சிறப்பை எடுத்தியம்பி நிற்கின்றன எனலாம்.

மேலும் கடற்கரையை அண்மித்து கோபுரமாக நிமிர்ந்து நின்று தன்னை நாடி வருவோருக்கு தப்பாது அருள்பாலிக்கும் அன்னாளின் அழகியதொரு தேவாலயம் யாழ் / கிளி / முல்லை மறைமாவட்ட பகுதிகளுக்குள்ளாக மாபெரும் ஆலயமாக வலைநகர் தேவாலயம் அழகியதொரு இறை இல்லமாகக் காட்சியளிப்பது எமது கிராமத்துக்குப் பெருமையையும் புகழையும் சேர்த்துள்ளது. இந்த மாபெரும் தேவாலயத்தைக் கட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிப்பதற்கு கடல் சொத்து உதவியாக இருந்தது. கிராமத்தில் அனைவருமே கத்தோலிக்க கிறிஸ்தவர்கள், ஆகவே ஆலய கட்டிட வேலைகளுக்கெல்லாம் உடன் உழைப்பாளிகளாக கிராமத்து ஆண், பெண் பிள்ளைகள் என அனைவருமே ஒத்துழைத்தார்கள்.

தனித்தொழில் செய்பவர்களும் தங்கள் உழைப்பின் ஒரு பகுதியை ஆலயத்துக்கெனக் கொடுத்து உதவினர். கடலின் ஒரு பகுதியை குறிப்பாக 'ஆற்றுப்பகுதியை' ஆலயத்துக்காக விட்டுவைத்து அதில் இருக்கும் செல்வத்தை எல்லோருமாகக் கூடி கூட்டுழைப்பாக மாற்றி ஆலயத்துக்கு பணத்தை அள்ளி அள்ளி வழங்கினார்கள். எங்கள் தொழிலாளிகள் இத்தனைக்கும் ஊக்குவிப்பாளராகவும் மேற்பார்வை யாளராகவும் நின்று உழைத்தவர் பங்குத்தந்தை அதி வணக்கம் சில்வேஸ்ரர் இறை அடிகளாவார்.

மேலும் எங்கள் கிராமத்தின் மையப்பகுதி பச்சைப் பசேல் எனக் காட்சியளிக்கும் புற்தரையாகும். இந்தப் புற்தரையை சுற்றிவர குடிமக்கள், தேவாலயம், பாடசாலை, சிறுசிறு ஆலயங்களும் அமைந்துள்ளன. ஒவ்வொரு வீட்டு வளவுகளிலும் தென்னை மரங்கள் உயர்ந்து சோலையாகக் காட்சியளிக்கின்றன. பிரதான வீதிகளும் அதன் அருகாமையில் விற்பனைநிலையங்களும், ப.நோ.கூட்டுறவுச் சங்கம், விளையாட்டுக் கழக மண்டபமும், புதிதாக அமைக்கப்பட்டுள்ள சந்தை எனப்பல அமைப்புக்களின் கட்டிடங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

வீதிகள் புனரமைக்கப்பட்டு போக்குவரத்து வாகனங்களும், (பேருந்து) தனியார் வாகனங்களும், மோட்டார் வண்டிகளும், துவிச்சக்கரவண்டிகள் என பலதும் எம்கிராமத்தின் வீதிகளில் வலம்வரும். குறிப்பாக பிரதான வீதிகளும், குறுக்குப்பாதைகளும் செம்மையாக்கப்பட்டு வீதிகளின் நீளம், அகலம், மின்சாரவசதிகள் செய்யப்பட்டு அதிலிருந்து ஒவ்வொரு குறுக்குத் தெருக்கள் வழியாக ஒவ்வொரு வீதிகளுக்கும் ஒளி கொடுக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக பாடசாலை மாணவர்கள் நல்ல முறையில் கல்வி கற்கவும், மக்கள் அச்சமின்றிப் பயணம் செய்யவும் உதவியாக இருக்கின்றது. அன்று குப்பி விளக்குகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியோடு தங்கள் படிப்பை படித்து அறிவை வளர்த்து இன்று பலர் அரச உத்தியோகத்தர்களாக இருக்கின்றனர். இது எங்கள் கிராமத்துக்குப் பெருமையே!

அதே போன்று இன்று மின்சார ஒளியில் தங்கள் கல்வியை மேம்படுத்தி அறிவில் உயர்பவர்களாகிய எம்மாணவர்கள் எதிர்காலத்தில் பெரும் பட்டதாரிகளாக மாறுவர் என நம்புகின்றோம். அப்படியானால் எங்கள் கிராமம் மேலும் பல நன்மைகளை கண்டுகொள்ளும் என நினைக்கும் போது எங்கள் கிராமம் எதிர்காலத்தில் பெரிய பட்டணமாக மாற வாய்ப்புண்டு. எமது கிராமம் மேலும் அழகு வனப்புடன் காட்ச்சியளிக்க எதிர்கால மாணவர்களே பொறுப்பானவர்கள். கிளிநொச்சி மாவட்டத்தில் '100 கிறிஸ்தவ மாணவர்களைக் கொண்ட பாடசாலையாக எமது பாடசாலை விளங்குவது' கிராமத்தின் ஆன்மீக விசுவாச நிலையையே எடுத்துக்காட்டுகின்றது.

மேலும் எமது கிராமத்தின் விளையாட்டு நிலையை நோக்கும் போது எமது கிராமத்து இளையோர் பெரும் வெற்றி வீரர்கள். ஆண், பெண் என எல்லா இளையோரும் யுவதிகளும் விளையாட்டுத்துறையில் மேலானவர்கள். எமது வீரர்கள் பாடசாலை விளையாட்டுக்கள், கிராமத்து விளையாட்டுக்கள் எதிலும் சளைத்தவர்கள் அல்ல. பயிற்றுவிப்பதற்கு தகுந்த ஆசிரியர்கள் இல்லாதபோதும் தாங்களாகவே தங்கள் திறமைகளைக் கொண்டு எங்கு சென்றாலும் வெற்றி வீரர்களாகவே ஊருக்குத் திரும்புவாகள். விளையாட்டுத்துறையில் அக்கறையும், ஆர்வமும் கொண்டுள்ள எமது இளையோர் எல்லா விளையாட்டுக்களிலும் திறமைசாலிகளே! ஒரே ஒரு குறைபாடு எதுவெனில் இவர்களை சிறந்த முறையில்பயிற்றுவிக்க ஒரு சிறந்த பயிற்றுவிப்பாளர் இல்லை. இந்த நிலையிலும் வெளிநாட்டுக்குச் சென்று 'சிறந்த விளையாட்டு வீரன்' என சான்றிதழ்களும், வெற்றிக்கேடயங்களும் பெற்று எமது இளையோர்களில் இருவர் தெரிவாகியுள்ளனர். அத்தோடு 2013ம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய போட்டியில் இலங்கை அணியின் வீரர்களாக இவர்கள் விளையாடியிருப்பதும் எம் கிராமத்தையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைக்குரியதாய் உயர்த்தியுள்ளதோடு எமது கிராமத்தை வெளிச்சத்துக்கு கொண்டுவந்துள்ளனர்.

இதுவரைக்கும் வலைப்பாடு என்றால் எங்கே இருக்கிறது என்று அறியாமல், தெரியாமல் இருந்த பட்டணங்கள், கிராமங்கள் அறியக்கூடியதாக வெளிப்படக் காரணமானவர்கள் எமது கிராமத்து இளையோரே! எமது இளைஞர்கள் எங்கு சென்றாலும் வெற்றிக்கொடியுடன் வருவார்கள். இதற்கெல்லாம் அனுசரணையாளர் எம் பாதுகாவலி 'புனித அன்னம்மாள்' தான். இவளின் பரிந்துரையும், பாதுகாப்பும், வழிநடத்தலும் இறையருளை நாம் பெற்றுக்கொள்ள வழிசமைத்துத் தருகின்றது எனலாம்.

எமது கிராமத்தில் சமய வழிபாடுகளிலும், பொது வழிபாடு களிலும் முறையே கவனம் செலுத்தி கடைபிடித்தும் பின்பற்றியும் வருகின்றனர். எம் மூதாதையர்கள் இறை விசுவாசத்தில் முதிர்ச்சி பெற்று வாழ்ந்துள்ளார்கள் என்பதற்கு சான்றாக எம்முன்னோர்கள் விசேடமாக இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு பெருவிழாவை நினைவுகூறும் வகையில் அதாவது 'பெரிய வியாழன்' , 'புனித வெள்ளி' , 'உயிர்ப்பு ஞாயிறு' என்ற புனித வாரங்களின் வழிபாடுகளை அதே முறையில் நேர்த்தியாக அனைத்தையும் தொன்று தொட்டு நிறைவேற்றியது போல் எமது பங்கு இறை மக்களும் ஒன்றையும் தவறவிடாது இன்றும் அப்பாரம்பரிய முறைகளைக் கடைப்பிடித்து வழிபாடுகளை நேர்த்தியாக செய்துவருகின்றனர் எனலாம். இவ்வாறு முறையே கடைபிடித்து வரும் கத்தோலிக்க கிறிஸ்தவர்களாகிய எங்களுக்கு இறையருளும், ஆசியும் தினம் தினம் எமது பாதுகாவலி 'புனித அன்னம்மாள்' வழியாகவே கிடைக்கப்பெறுவது என்பதும் நிறைவுக்குரியதாகும்.

அன்று குட்டிக் கிராமமாக இருந்த வலைநகர் படிப்படியாக முன்னேற்றத்தில் வளர்ந்து சிறப்பாக ஆன்மீகத்திலும், அறிவிலும் வளர்ந்து இன்று ஒரு நகரமாகக் காட்சியளிக்கின்றது என்றால் அது முன்னோடிகளின் உழைப்புத்தான் எனக் கூறுவது முறையாகும். அதேபோன்று இன்றும் இருக்கின்ற தலைமுறையினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்வரும், வளர்ந்து வரும் சமுதாயத்துக்கு அனைத்திலும் முன்னுதாரணமாகவும், முன்னோடிகளாகவும் இருப்பார்களாயின் இறை ஆசியுடன் எமது வலைநகர் எதிர்காலத்தில் வனப்பும், வளமும், எழிலும் நிறைந்த ஓர் அழகிய நகரமாக மாறும் என்பதில் ஐயமில்லை.

'அன்னம்மாள் நாமம் இக்கிராமத்தில் ஓங்கிடும்
அவள் புகழ் பரவட்டும் உலகெங்கும்
வாழ்க! அன்னையின் நாமம்
வளர்க அவளது ஆசிர்வாதம் எம்
கிராமத்தில்' என வேண்டி அன்னையின் பாதுகாப்பும் பராமரிப்பும் என்றும் எம் கிராமத்தில் இருக்க அன்னையின் அருள் வேண்டி நிற்கின்றேன்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

நீங்கள் ஒரு புத்தகத்தை விற்கும் போது காகிதமும், மையும் விற்கவில்லை. ஒரு புதிய வாழ்வையே அவருக்கு விற்கிறீர்கள்

— கிறிஸ்டோபர் மார்லே —

ஒரு புத்தகத்தை இரவல் தருபவன் முட்டாள், அதைத் திருப்பித் தருபவன் அதைவிடப் பெரிய முட்டாள்.

— அரேபியப் பழமொழி —

புத்தகங்கள் இருந்தால் போதும் சிறைக் கம்பிகளும், கொட்டடி களும் ஒருவரை அடைத்து வைக்க முடியாது.

— மாவீரன் பகத்சிங் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்

செல்லத்துரை டனுஷா
கலைபிரிவு - 2016
கிளி/முழங்காவில் ம.வி

அன்று எனக்காய்த் தவமிருந்தாள் - அவள்
இன்று எனக்காயப் புலம்புகின்றாள்
இருட்டில் நான் இருந்த போது மகிழ்ந்தாள்
உலகைநான் கண்டபோது புரிந்தாள்
கருணையின் பிறப்பாய்க் கண்டாள்
காவலின் இருப்பாய் நின்றாள்
வேதனையில் நொந்தாள் சோதனையில் துவழ்ந்தாள்
இத்தனையும் காப்பவள் யார்? என் அன்னை

கண்டேன் பலகோடி இன்பம்
கொண்டேன் அதில் நூறு சுகங்கள்
தகர்த்தேன் என் தாயின் அன்பை
சென்றேன் அதர்ம அன்பில்
தேடுகின்றேன் இன்று என் தாய்மைக்காய்
வாடுகின்றேன் என் பூரிப்பிற்காய்
இத்தனையும் காண நான் தேடுவது தான் எது?
அதுதான் தாயின் அன்பு

ஈரைந்து மாதங்கள் இரவுபகல் காத்திருந்து
பெற்றெடுத்த அன்னை உன்னை - நான்
தேடுகின்றேன் தினமும் வாடுகின்றேன்
உன் பேரன்பைப் பெறுவதற்காய்
இத்தனை பேரன்பும் பெற்றிடவே
உன் திருவடியை நாடுகின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தில் உயர்ந்த பொருள் தானெது?
எனக் கேட்பவர்கள் பலர் இங்கு
பதில்கான பல நூல் தேடுவது தான் ஏனோ?
உன்னிடத்தில் தேடிப்பார்
விடை தனும் கிடைத்து விடும் பூரணமாய்
இதற்கான பதில்தனை சொல்லுகிறேன் நீ கேளு
பத்துமாதம் உன்னைச்சுமந்து உலகுதனைக்காட்டியவள்
யாரவளோ அவளே தான் உலகத்தில் உயர்ந்த பொருள்

நீ வாழ்வில் உயர்ந்திட வேண்டுமோ?
உன் தாயை மதி தலைதூக்கி வாழ்வாய்
உன் வழியின் விழிப்பில் தெரியும்
பார்வையும் உன் தாயே
உறவுகளின் உறுதிப் பாலமும் இவளே
உயர்வுடன் நீ வாழ்ந்திடவே
உன் தாயை தெய்வமாய் பேணிக்காத்திடுவாய்

உயிர் துடிப்பை அறிவாள் - அவள்
தன் உடலின் அசைவிலே
அசைவின் போது தொட்டு அசைப்பாள்
உணர்வின் மகிழ்விலே
நான் எண்ணக் காப்பாள் பிள்ளை
முகம் காணவே
உணவின்றிக் கிடந்திடுவாள்
பிள்ளைப்பசி போக்கவே

உருவெடுத்து ஒளிர்கின்ற ஒளிச்சுடரே
கண் அருகே வைத்து கதிர்மணியாக்
காலந்தோறும் காத்திடுவாள் என் அன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழப் பூமகள்

புவனராசா மோகனராஜ்
கிராம அலுவலர்
ஞானிமடம், பூநகரி

கடலாடிக் கரையொதுங்கும் கற்பகமே
கார்மேகம் குடைபிடிக்கும் சித்திரமே
விரலாடி விடையெழுதும் தீவுகளும்
வெண்மணலோடு விளையாடும் பாறைகளும்

விழியோடு மொழி எழுதும் காடுகளும்
குழியோடு குன்றுகளாய் சிறு வீதிகளும்
கற்பகதருவோடு கலந்ததாய் களனிகளும்
பெற்றதோர் வரலாறாய் பெருநாடும்

பூக்களாய் மண்ணிலே பூத்திருந்தாய்
பொன்னேரியாய் யாழினை சூழ்ந்திருந்தாய்
காற்றிலே கொடி அசைக்க கட்டுமரம் தானோட்ட
கலங்கரை விளக்கமாய் ஈழத் தீவின்
கடல்பாதை வழி நீ இருந்தாய்

தேரோடு நின்றதாய் சிற்றூரும்
போராடி வென்றதாய் கற்றோரும்
பொருள் வளம் கொண்டதாய் உற்றோரும்
அருள் நிறைந்துற்றதாய் அறிந்தோரும்
ஆற்றியுரைத்தனர் உன் வாழ்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதோர் ஊராய் நல்லூரும்
நலம் உரைக்கும் ஆலங்கேணியும்
வல்லமையாய் வளங்கொழிக்கும் கொல்ல குறிச்சியும்
வாணிபமாய் நெல்மணிக்கோர் செட்டிய குறிச்சி

ஞானமுறையும் ஞானிமடமும் நகையணி நாகதேவன்துறையும்
பக்குவமாய் பரமன்கிராயும்
பரந்ததாய் கிழக்கு மேற்காய் சோழவளநாடும்
பொன் அள்ளி வழங்கும் பள்ளிக்குடா

மாண்பு மிக்கதாய் கௌதாரி முனையும்
செழிப்புடன் தெற்கு, வடக்காய் ஜெயபுரமும்
பல்லவன் புகழாய் பல்லவராயன் கட்டும்
நறுமைமிக்கதாய் நாகபடுவானுடன்
கரம் நிறைந்ததாய் கிராஞ்சி

பெரும் வழியாய் புகழ்பாடும் பொன்னாவெளியும்
காட்சிக்கழகாய் நாச்சிக்குடாவும்
பழங்களால் மனங்கொண்ட முழங்காவிலும்
இனைந்ததாய் ஆங்கு இரணை தீவும்
இன்புற்றதாய் இங்கு கொண்டாய் ஈழத்தின் பூமகளே

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகர் வாழ்க!

## "பூந்துணர் வாழ்க"

பூநகர் கவிப்பிரியா

அபூர்வ மண்ணே பூநகர் வாழ்க!

ஆயிரம், ஆயிரம் ஆண்டுகள் வாழ்க!

அந்நிய நாடு சென்றாரே வருக!

அழகிய எம்மண்ணுக்கு பெருமைகள் தருக!

புதுமைகள் செய்திட இளைஞர்கள் திரள்க!

பூநகரி என்பது பூ நகர் என்க!

கணப்பொழுதேனும் கல்வியைக் கற்க!

கல்வியினாலே பூநகரி நிமிர்க!

ஊர்கள் தோறும் ஒழுக்கங்கள் நிறைக!

உயர்ந்த நற்பண்பால் உலகையே வெல்க!

பூவாலே நிறைந்தது பூநகரி என்று

பூர்வீக மக்களின் கதைவழி உண்டு

ஆழ்கடல் சூழ் நல் இலங்கையில்

அழகான ஓர் இடம் பூநகரி என்பேன்

புகழுடன் வாழ்க! பூநகர் வாழ்க!

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரியின் பதிவுகள்...



ஆவணப்பெட்டகத் திறப்புவிழா நிகழ்வுகளின் நிழல்கள் ...(27.01.2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரியின் பதிவுகள்...



சிறுவர் பாடல்கள் நூல் வெளியீட்டு விழா
நிகழ்வுகளின் நிழல்கள் ... (27.01.2015)




படைப்பிலக்கிய நிகழ்வுகளின் நிழல்கள் ... (27.01.2015)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகண்டியான் சித்த ஆயுர்வேத கால்நடைகள்

## வைத்தியர் திரு. புண்ணியர் நடராஜன்

# பாரம்பரிய வைத்திய விளம்பரபலகை

### ஈஸ்வரக்குளம்பு சரக்குகள்

சூதம், மனோசிலை, இந்துப்பூ, கடுக்காய், பெருங்காயம், வெண்காரம், கடுகுதாரம், கடுகுரோகினி, கரும்சீரகம், திப்பிலி, யீறாக்கு, நேர்வாளம்

இவற்றை சமனெடுத்து சுத்திசெய்து இளவறுப்பாய் வறுத்துக் கொண்டு சிரட்டைக்கரி விராகன் 5, பனைவெல்லம் விராகன் 5, விதம்விதமாய் தூள் செய்து வேலிப்பருத்தி சாற்றில் ஒரு நாள் விடாமல் ஆட்டி (உத்தமாகாணி) தேங்காய்பாலில் ஒரு நாள் ஆட்டி வாய்குவிந்த பீங்கானில் எடுத்து வைத்தல் வேண்டும் எந்சிதந்த 'விஷத்திற்கும்' இதுவே போதும்.

### செய்முறையை விளம்புகின்றேன்

நல்லபாம்புக்கடி, விருதலைநாகம் கடித்தாலும் மருந்து உள்ளுக்கு கொடுக்க குளம்பில் குன்றிமணி அளவு எடுத்து வெற்றிலையில் கொடுத்து விட்டு உழுந்தளவு குளம்பு எடுத்து உத்தமாகாணிசாற்றில் கண்ணுக்கு கலியம் போடவும். கலியமது போட்டவுடன் விஷமிறங்கும் காணாட்டால் குடோரியது சொல்லக் கேட்பாயாக சலிக்காமல் உச்சிதனைக் கீறி குளம்பை வைத்து அதன் மேல் சிறிய ஓட்டு வளையம் வைத்து அதற்கு மேல் ஒரு சிறு தட்டு வைத்து எருக்கலந்தடியை மூட்டி சிறு நெருப்பாய் எரிக்க விஷம் இறங்கும் சூரியனைக் கண்ட பனி போல் விஷம் இறங்கி விடும் நிச்சயமாக இம்முறையை செய்து போடே.

விரியனில் ஆறாக்கும் கண்ணுக்கு கலிங்கம், பயறளவு குளம்பெடுத்து, குமரிச்சாறு (பிள்ளைக்கற்றாழை) விட்டரைத்து கண்ணுக்கு கலிங்கம் போடவும் உள்ளுக்கு கொடுப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றிமணியளவு குளம்பெடுத்து சிறுநீரில் கொடுக்கும் (குழந்தைகளின் சிறுநீர்) விஷம் இறங்கும்.

புடையனில் நாலுக்கும் கண்ணுக்கு கலிங்கம் போட பயறளவு குளம்பெடுத்து முலைப்பாலில் அல்லது துளசிச்சாற்றில் கரைத்து விடவும் குன்றிமணியளவு குளம்பெடுத்து வெற்றிலைச்சாற்றில் கொடுக்கவும்.

மண்ணினிப் பாம்பு நாலுக்கும் பயறளவு குளம்பெடுத்து சிறுநீர் விட்டு கரைத்து கண்ணுக்கு கலிங்கம் விடவும் குன்றிமணியளவு குளம்பெடுத்து வெற்றிலைச்சாற்றில் கொடுக்கவும் சூரியனைக் கண்ட பனி போல் இறங்கி விடும்.

சுருட்டையில் நான்கிற்கும் பயறளவு குளம்பெடுத்து (காமப்பாலில் / அமுதப்பாலில்) முலைப்பாலில் கரைத்து அல்லது துளசிச்சாற்றில் கரைத்து கண்ணுக்கு விடவும். அல்லது வெங்காயச்சாற்றில் கரைத்து கண்ணுக்கு விடவும். உழுந்தளவு குளம்பெடுத்து துளசிச்சாற்றில் உள்ளுக்கு கொடுக்கவும் அடியற்ற மரம் போல் போகும் செய்து பார்ப்பாயாக.

## சஞ்சீவிக்குளம்பு

### சரக்குவகை

மகிழம்வித்து, அழிங்கில் வித்து, வெண்குன்றிபருப்பு, வாளம், உள்ளி, குக்கில், கௌரிதாரம், நமச்சாரம், திறிகடுகு, நாவி, நெறிவிஷம், வெண்காரம், மனோசிலை, லிங்கம், பொன் மெழுகு, தில்லைவித்து, சீனாக்காரம், துருசு, கெந்தி, இரசம் இவை ஒவ்வொரு களஞ்சு வீதம் இவை ஒவ்வொன்றும் தனித்தனியாக எலுமிச்சம்சாறு விட்டு 5 நாள் ஓயாது அரைக்கவும். பின் எல்லாத்தையும் ஒன்றாக (எலுமிச்சம்சாறு விட்டு) அரைத்து வெயிலில் காய வைத்து உலர்ந்த பின் வாய்குவிந்த பீங்கானில் போட்டு வைக்கவும். (குளிசையாகவும் உருட்டலாம்) பயறளவு குளிசை இரண்டை வெற்றிலைச்சாற்றில் கொடுக்கலாம் சகல விஷங்களும் விஷங்களினால் உண்டாகும் சில நோய்களும் இம்மருந்தை கொடுக்க சூரியனைக் கண்ட பனிபோல் போய்விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னாவெளி – ஒரு பார்வை

திருமதி றஜனி நரேந்திரா
கலாசார உத்தியோகத்தர், பூநகரி.

பூநகரின் பூர்வீகக் கிராமங்களுள் ஒன்றாகிய பொன்னாவெளி கிராமம் பற்றிய சில தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அக்கிராமத்தினைச் சேர்ந்த திரு.பொன்னம்பலம் தருமலிங்கம் வயது 75 என்பவரை நேரடியாகச் சந்திக்கும் வாய்ப்புக்கிடைத்தது. வயது முதிர்ந்திருந்தாலும் மனத்தால் முதிராத தோற்றமுடைய அவரை அணுகியபோது அவரால் வழங்கப்பட்ட தகவல்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

'ஓய்வு பெற்ற பதிவாளரும், சமாதான நீதாவானுமாகிய நான் ஏழு தலைமுறை கொண்ட சிறப்புடன் இக்கிராமத்தில் வாழ்ந்துள்ளேன்' என்று பெருமையுடன் குறிப்பிட்டார். சின்னத்தம்பி – கந்தையா – தில்லையர் - நீலகண்டர் - பொன்னம்பலம் - தருமலிங்கம் ... என்று எனது கொடி தொடர்கின்றது. எனக்கு மூன்று பிள்ளைகள். முதலாவது மகன் மகாபரன் கிராம அலுவலர், இரண்டாவது மகன் தயாபரன் விவசாயி, மூன்றாவது மகள் யசோதாதேவி ஆசிரியர் ஆக உள்ளனர்.

பொன்னாவெளி திண்ணைப்பள்ளிக்கூடமே கிளிநொச்சி மாவட்டத்தின் முதலாவது பள்ளிக்கூடம். 1890 அளவில் ஆரம்பிக்கப்பட்டது. இதுதான் சைவபிரகாச வித்தியாசாலை எனப்பட்டது. நாவலரின் சீடரான சின்னத்தம்பி உடையார் தான் இங்கு கற்பித்தார். அவரது சம்பளம் ஊரவர்களால் வழங்கப்பட்டது. நாவலர் பெருமானின் உண்மையான புகைப்படம் (Original Photo) இங்கிருந்தே எடுக்கப்பட்டது.

- 1505ம் ஆண்டுக்கு முன்னரே பொன்னாவெளிக்கிராமம் உள்ளது.
- பொன்னாவெளிப்பிள்ளையார் ஆலயம் கந்தஉடையார் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உடுக்குப்பாடல் பாடும் முறை, தீக்குளிக்கும் முறைமைகள் காணப்பட்டுள்ளன. பலியிடுதல் வழிபாடும் இருந்துள்ளது.
- 35, 40 வரையான குடும்பங்களே வாழ்ந்துள்ளன.
- மாட்டு வண்டில் மூலமே கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- மொட்டைக்கறுப்பன் நெல் அரிசி சமைக்கப்பட்டுள்ளது. மாரித் தோட்டம், கோடைத்தோட்டம் என்று இரண்டு தோட்டங்கள் காணப்பட்டுள்ளன.
- மரணவீட்டில் பிணத்திணை காவுவதற்கு 'பன்னாங்கு' பயன்படுத்தப் பட்டுள்ளது.
- இங்கு விளையாட்டுக்களாக கிளித்தட்டு, கெந்தி அடித்தல், மாங்கொட்டை அடித்தல் முதலியன வழக்கில் இருந்தன.
- போக்குவரத்து கீரிக்குடா, பாலாவி போன்ற துறை ஊடாகவே பாஷையூர் துறையால் யாழ்ப்பாணம் சென்று வந்துள்ளனர்.
- பொன்னாவெளியில் 'கோரிகை' என்ற பழைய வெளிச்சவீடு உள்ளது.

மேலதிக சில விபரங்களை தபாலில் அனுப்புவதாகக் குறிப்பிட்டுச் சென்றார். சுமார் ஒரு வாரத்திற்குள் அவரால் அனுப்பப்பட்ட தபாலில் அவர் குறிப்பிட்ட பொன்னாவெளி தொடர்பான விடயங்கள் தொடர்ந்து இடம்பெறுகின்றன.

வடமகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளது பூநகரிப்பிரதேசம். பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பூநகரி கிராமத்திற்கு தென் கடற்கரை ஒரமாக பொன்னாவெளிக்கிராமம் அமைந்துள்ளது. பொன் + ஆ + வெளி = பொன்னாவெளி என்பதால் அழகிய பசுமந்தைகள் நிற்கின்ற வெளி எனப் பொருள்படும். இக்கிராமத்தின் எல்லைகளாக வடகிழக்கில் பாலாவிக்கிராமம், தெற்கே வலைப்பாடுக்கிராமம், தென்கிழக்கே வேரவில் கிராமம், மேற்கில் வடபகுதி கடல் சூழ்ந்துள்ளது. எனவே இங்கு முல்லை, நெய்தல், மருதம் போன்ற நிலங்களில் இருந்து வரும் காற்று சுகவாழ்வுக்கு மிக அரியதாகும்.

**மக்கள் :**

இங்கு வாழ்ந்த மக்கள் செம்மொழியாம் தமிழையும், பழைய வைதீக சைவமதத்தையும் பின்பற்றி வாழ்ந்து வந்தனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூநகரியின் பதிவுகள்...



முழங்காவில் செல்வயோக சித்திவிநாயகர் ஆலயம்



பொன்னாவெளி சிவன் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் விவசாயம், கால்நடை போன்றவற்றை ஜீவாதாரமாகக் கொண்டனர். யாவரும் கார்காத்த வேளான் பரம்பரையினர்கள். மாரிகாலத்தில் ஒரு சிறிய தோட்டமும் கோடைகாலத்தில் ஒரு சிறிய தோட்டமும் வைத்திருந்தனர். இவற்றின் மூலம் பெறப்பட்ட பயன்கள் தங்கள் தங்கள் தேவைக்கு மட்டுமே காணக்கூடியதாக இருக்கும்.

## தொழில் :

இங்கு யாவரும் கமத்தை நம்பி வாழ்ந்தனர். புரட்டாதி மாதத்திற்குள் கிழக்கு வெளி, வடக்கு வெளி, கமங்களுக்குள் புளுதி விதைப்பாக முடித்து விடுவர். எருவுக்காக கால்நடைகள் கட்டுவார்கள். அத்துடன் காட்டில் உள்ள சருகுகளையும் ஏற்றிக் கமங்களுக்குள் பறித்துப் பரவி விடுவார்கள். பயிர்களுக்கு இயற்கைப் பசளைகளைப்போடுவதால் அவை செழித்து வளரும். பெரிய கறுப்பன், நாலு மொழிக்கறுப்பன், சின்னக்கறுப்பன், வெள்ளியின் நெற்கள் யாவும் நாலரை ஐந்துமாத நெற்களேயாகும். பொன்னாவெளி மேற்கு கமங்களான கற்கேணி, பறையகாடு போன்றவை ஈரவிதைப்பாக விதைப்பார்கள். மொறுங்கன், செப்பவளைச்சம்பா, சீனட்டி போன்றனவும் விதைக்கப்படும். அவையாவும் 3 ½ மாதத்திற்கு உட்பட்டவையாகும்.

ஏர் பூட்டுதல், வித்துநாள் செய்தல், புதிர் எடுத்தல் போன்றவை எல்லோரும் ஒருமித்து செய்யும் நிகழ்வுகள் ஆகும்.

பசுமாடுகளை தரவையில் பெரும்பட்டி அடைத்து இரவில் மாடுகளை அடைத்து கமத்துள் செல்லாது பாதுகாப்பார். பால் கறந்து வந்து பெரிய அண்டாக்களில் காய்ச்சி கடைந்து வெண்ணெய் எடுத்து நெய் ஆக்குவார்கள். இது அவர்களின் கறித்தேவையைப் பூர்த்தி செய்யும்.

தென்னம் சோலைகளையும், பனம்கூடல்களையும் உண்டாக்கினார்கள். மா, பலா, வாழை போன்றவற்றையும் வளர்த்து பயன் பெற்று வாழ்ந்தனர். குடிமனைகளில் உவர்த்தண்ணீர் ஆகையால் வயல்வெளிகளில் கிணறுகள் வெட்டித்தோட்டம் அமைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல் அறுவடைக்கு பெரும்பாலும் தீவகங்களில் உள்ளவர்கள் வந்து உதவினார்கள். பெரும் வத்தைகளைக் கொண்டு வந்து நெல்மூடைகளை விலைக்கு வாங்கிச் செல்வார்கள். நெய், புளி, தேன், பாலைப்பாணி போன்றவற்றையும் இங்கு வந்து பெற்றுச்செல்வார்கள். ஆதியில் சித்திவிநாயகரையும், கண்ணகை அம்மன், சிவன் முதலியோரை வைத்துப் பூசித்து வந்தனர். சித்தி விநாயகர் ஆலயத்தில் பங்குனி – ஐப்பசி வரையும் புராணப்படிப்பு இடம்பெறும். அனைவரும் புராணக் கல்வியில் வல்லுனர்களாக இருந்தனர்.

## கல்வி :

1890க்கு முன் இங்கு திண்ணைப்பள்ளிக்கூடங்கள் இடம்பெற்று வந்ததாக அறிகிறோம். ஊர்மக்கள் யாழ்ப்பாணத்திலுள்ள அறிஞர்களைக் கொண்டு வந்து சமயம், தமிழ், கணிதம் முதலியவற்றினைக் கற்றுள்ளனர். பின்பு சிறு கொட்டில் அமைத்து அதில் பாடங்கள் புகட்டப்பட்டன. அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு சபையை அமைத்து அதன் மூலம் பாடசாலையை நிருவகித்துள்ளனர். காலப்போக்கில் சுண்ணக்கல்லால் ஒரு பாடசாலைக் கட்டிடத்தை அமைத்து வகுப்புக்கள் ஐந்துவரை போதித்தனர். நாவலர் நூல்கள் முக்கிய இடம் பெற்றன.

காலங்கள் பல கடந்த பின்னர் புதிய ஒரு கட்டிடம் அமைக்கப்பட்டு ஓடுகளால் வேயப்பெற்ற சீமெந்துக் கட்டிடம் ஆனது, பாடசாலை, ஏற்கனவே 5ம் ஆண்டு மட்டும் இருந்த நிலை மாறி 6,7,8ம் வகுப்புவரை போதிக்கப்பட்டது. பின்பு அரசாங்கம் பாடசாலையைப் பொறுப்பேற்று இரு ஆசிரியர்கள் பணியாற்றினர். ஆங்கிலம் உட்பட எட்டு (08) பாடங்கள் வரை இடம்பெற்றன. இங்கு படித்த மாணவர்கள் மேல்வகுப்புக்களில் கற்று பல்கலைக்கழகம் வரை சென்று கற்றுள்ளனர். பல்லவராயன்கட்டு பிரிவில் பல்கலைக்கழகம் புகுந்த மாணவர் இப்பாடசாலையில் ஆரம்பகல்வி முதல் 8ம் வகுப்பு வரை கற்ற முதல் மாணவர் என்ற பெயரையும் பொன்னாவெளி பெற்றுக்கொண்டது குறிப்பிடதக்கதாகும். புராணப்படிப்பு சித்திவிநாயகர் ஆலயத்தில் நடக்கும் சமயங்களில் யோகர்சுவாமிகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து தங்குவார். யோகர்சுவாமி அவர்கள் வந்தபின் எல்லாவீடுகளிலும் ஒழுங்காகச் சமையல் செய்து வைப்பர். அவர் விரும்பிய வீட்டில் தான் உணவு உண்பார். எனவே எல்லோரும் ஆயத்தமாக இருக்க வேண்டும். இரவில் ஆண், பெண் எல்லோரும் சென்று அவர் இருக்கும் கோவிலில் பஜனை செய்ய வேண்டும். இங்கு அனைவரும் தாவர போசணிகளே மச்சமாமிசம் உண்பவர்கள் அரிது. நாவலர் பெருமானின் ஒரு சீடராக விளங்கிய சின்னத்தம்பி உடையார் யாவருக்கும் பொருள் சொல்லப் பழக்கினார். சின்னத்தம்பி உடையார் சிறந்த புராணகாரரும் சோதிடருமாவார். அவர் சொற்படி அனைவரும் நடக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பாடசாலையை 'சைவப்பிரகாச வித்தியாசாலை' எனப்பெயர் சூட்டியவர் நாவலர் பெருமான் அவர்கள். விநாயகர் கோவிலில் இரண்டு காலப் பூசைகள் இடம்பெற்றன. பூசகராக இந்தியாவில் திருச்செந்தூரில் உள்ள ஒரு பிராமணக் குடும்பத்தினைக் கொண்டு வந்து இருத்தினார்கள்.அவர்களும் பலகாலம் இருந்து பூசை செய்ததுடன் ஒரு புராணகாரராகவும் அவர் விளங்கினார்.

மேற்குக் கடற்கரைகள் தூண் போட்ட குடாத்துறை, கீரிக்குடாத்துறை, புளியன்துறை, நாகமுனை போன்ற துறைமுகங்கள் உள்ளன. புளியந்துறை பல்லவர் வந்திறங்கிய துறை. (புலியன்துறை புளியந்துறையாக மருவிற்று என்பர்) இத்துறைகள் வழியாக நெல், எரு, பூவரசங்குழை ஆகியன தீவகங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. மீனவர்கள் தொழில் செய்து கடல் உணவுகளை ஏற்றுமதி செய்துள்ளனர். கீரித்துறை - அக்காலத்தில் 'கீரி' என்ற முஸ்லீம் சம்மாட்டி 100 – 200 பேருடன் வந்து பெரிய வாடிகள் அமைத்து சங்குத் தொழில் நடத்தினார்கள். இத்தொழில் இங்கு இடம்பெறுவதால் கீரி என்ற சம்மபட்டியின் பெயரால் இக்குடாத்துறை வழங்கப்படுகின்றது.

தகவல் : திரு பொன்னம்பலம் தருமலிங்கம்
பொன்னாவெளி, பூநகரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரியின் அழிந்து வரும் அரங்கப் பாரம்பரியங்கள்

பரமானந்தசிவம் ஸ்ரீவனசா,
4ஆம் வருட மாணவி, நடனத்துறை
கிழக்கு பல்கலைக்கழகம்
கறுக்காய்தீவு.

**வ**ரலாற்றுத் தொன்மையும், பூர்வீகச் சிறப்பையும் தன்னகத்தே கொண்டதாக பூநகரிப் பிரதேசம் இருந்துள்ளதாக ஆராய்ச்சிகள் மூலமும், வாய்மொழி வரவாற்றின் ஊடாகவும் அறிய முடிகின்றது. இத்தகைய சிறப்புடைய பூநகரி 'பொன்னேரி', 'பொன்நகர்', 'பூநகர்' என அழைக்கப்பட்டு பின் பூநகரி என வந்ததாக எம் முன்னோர்கள் கூற்றின் ஊடாக அறிய முடிகின்றது.

'பொன் விளையும் பூமி' என பூநகரியின் வேளாண்மைச் சிறப்பும், மொட்டைக் கறுப்பனின் தனித்துவமும் மறுக்க முடியாதவை. பொருளாதார, அரசியல், சமூக நிலையில் தனித்துவத்தை உடைய பூநகரிப் பிரதேசம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் பகுதிகளை ஒன்றினைக்கும் போக்குவரத்து கேந்திர மையமாகவும் திகழ்கிறது.

சமூக ரீதியில் நோக்கல் என்பது இப்பிரதேச மக்களின் உணவு, உடை, உறையுள், பழக்கவழக்கங்கள், மதநம்பிக்கைகள், சடங்குகள், கல்வி, கலை, தொழில்கள் என பலவாறாக நோக்க முடியும். அந்த வகையிலே பூநகரி மக்களின் அரங்குசார் கலைகள் பற்றி நோக்குமிடத்து சோழர், ஒல்லாந்தர் என பல ஆட்சியாளர்களின் ஆளுகைக்குள் உட்பட்ட பூநகரியில் நாடகம் கூத்து என்றும் நாடகம் எனும் பெயரிலும் நிகழ்த்தப்பட்டுள்ளது. இவை மக்களின் மதவழிபாடுகளுடனும், வாழ்வியலுடனும் நெருங்கிய தொடர்புடையவையாகக் காணப்பட்டதோடு மக்கள் மனதில் அழியா இடம் பெற்றும் இருந்தது. இத்தகைய தனித்துவமுடைய இப்பிரதேச கூத்துக்கள் கால ஓட்டத்திற்கு ஏற்ப மண்ணோடு மண்ணாக போய்க் கொண்டிருக்கின்றது என்பது கவலைக்குரியதே.

இப்பிரதேசத்தில் பல்வேறு வகையான நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளது. மார்க்கண்டேயர், பாஞ்சாலிசபதம், பாதுகா பட்டாபிஷேகம், காலபரிஷி போன்ற முப்பதிற்கும் மேற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரித்திர நாடகங்கள் இப்பிரதேச அண்ணாவிமார்களால் 19ம் நூற்றாண்டில் முற்பகுதி தொடக்கப் பிற்பகுதி வரை மேடையேற்றப்பட்டுள்ளதை தற்போதுள்ள மூதாதையர்களின் ஊடாக அறியமுடிவதுடன் இவர்களுக்கு முன்னரும் நாடகம் பரம்பரை பரம்பரையாக நிகழ்த்தப்பட்டிருக்கலாம் என்பதை இவர்களின் கூற்றில் இருந்து ஊகிக்க முடிகின்றது. தற்போதுள்ள மூதாதையர் கூற்றுக்களின் படி 1950-1975 காலப்பகுதிகளில் நாடகம் / கூத்து முழு முனைப்புடன் பல்வேறு குழுக்களால் மாறிமாறி போட்டிகளுக்கும் தம் திறமையை வெளிக்காட்டவும் மேடையேற்றப்பட்டுள்ளதுடன் அண்ணாவிமார்கள் கல்வி அறிவு மிக்கவர்களாகவும் வாத்தியார் எனவும் அழைக்கப்பட்டு மதிக்கப்பட்டனர்.

சரித்திர நாடகங்கள் போன்றே காத்தவராஜன் கூத்து, கோவலன், கண்ணகி பாடல், பொம்மையாட்டம், இசை நாடகங்கள், கற்பனை சீர்திருத்த நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள், வரலாற்று நாடகங்கள், ஆட்டக்காவடி போன்றனவும் கிறிஸ்தவ மக்களிடையே (இரணை மாதா வலைப்பாடு) பாஸ்கா நாடகம், நொண்டி நாடகம், வரலாற்று நாடகம், நத்தார்தினவிழாநாடகம் மற்றும் கிறிஸ்தவசமயம்சார் கருத்துடைய பல நாடகங்களும் தனிச்சிறப்பு பெற்று காணப்பட்டுள்ளன. இன்றும் இப்பிரதேசங்களில் இவை வழக்கில் உள்ளமை குறிப்பிடதக்கது.

1950களிற்கு பின் இந்திய தொழில் முறை நாடகக்குழுக்கள் வருகை தந்து இசை நாடகங்கள், சரித்திர நாடகங்களை நிகழ்த்தியதோடு இப்பிரதேச அண்ணாவிமார் கலைஞர்களும் அவர்களுடன் இணைந்து நாடகங்களை நடித்துள்ளார். சுந்தராம்பாள், கிட்டப்பா போன்ற பிரபல இந்திய கலைஞர்கள் பூநகரிக்கு வந்து நாடகங்களை நிகழ்த்திச் சென்றதுடன் அவர்களுடன் அணைந்து தம்பையா அண்ணாவியாரும் இந்தியா சென்று அரங்க / நாடக உத்திகளை கற்று பூநகரிக்கு வந்து இப்பிரதேச கலைஞர்களுக்கு பழக்கியதுடன் அவரிடம் நாடகம் பயின்ற கலைஞர்கள் அவருக்கு பின் அண்ணாவிமார்களாக உருவாக வழிசமைத்துக் கொடுத்துள்ளார். இவர் பூநகரியில் இருந்து கொழும்புதுறை, கச்சாய் போன்ற பகுதிகளுக்கும் சென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகங்களைப் போட்டதாக இவருடைய மகன் தம்பையா சிவசம்பு மூலமாக அறிய முடிகின்றது.

பூநகரி தனித்தியங்கும் ஓர் பூர்வீகத்தளமாகவும் கிராமங்களைக் கொண்ட வேளான் பிரதேசமாகவும் கடல் வளமும், காட்டுவளமும் கொண்டதாக காணப்பட்டமையால் இப்பிரதேச மக்களின் பொழுது போக்காக விவசாயம் (வேளாண்மை) முடிந்த பிற்பாடு கூத்துக்களை பழக்குதல், மேடையேறுதல் என ஓய்வு நேரங்களை பயனுள்ள தாக்கியதுடன் ஆலய உற்சவங்கள் போன்றவற்றிற்கும் பயபக்தியுடன் கூத்துக்கள் விரதம் இருந்து ஆடப்பட்டுள்ளன.

இப்பிரதேச அண்ணாவிமார் அர்பணிப்புடனும், ஈடுபாட்டுடனும் கூத்துக்களை பழக்கியதுடன் தம் அறிவு, ஆற்றலை விருத்தி செய்யும் கற்றல் ஊடகமாகவும் இதனைக் கருதினர். ஞானிமடத்தை சேர்ந்த தம்பு இரத்தினம் அண்ணாவியார் கூறுமிடத்து 'பிள்ள கூத்துபாட்டு, கத எழுதிற தெண்டது அம்மா லேசுப்பட்ட காரியமல்ல அது கடவுள் தந்த கொடை இது எல்லாருக்கும் கிடைக்காது வரம்பு கட்ட போனா நாலு காசு வரும் தான் அதுக்காக இதை என்னால விட்டிட முடியுமே...' என்றார். எவ்வித வருமானமும் இன்றி நாடகங்களை பழக்கிய இவர் போன்ற பல அண்ணாவிமார்கள் இப்பிரதேசத்துக்கு சொந்தக்காரர்கள் என்பது மறுக்க முடியாது.

எந்தவித ஆவணப்படுத்தங்களும் இன்றி வாய் மொழியாகவும், ஏட்டுப்பிரதி மூலமும் கடத்தப்பட்டு வந்த இக்கலைகள் மெல்ல மெல்ல அழிந்து போக ஒரு சில கலைகளே எச்சமாக உள்ளன. மனிதர்களோடு மனிதர்கள் ஒன்றாக பொதுவிடத்தில் அமர்ந்து மகிழ்ந்த காலங்கள் போய் நவீனமயமாக்கங்களுக்குள் அடிமையாகிச் செல்லும் நம் இளம் தலைமுறையினர் விரக்தி, தனிமை,மனச்சோர்வு என தவிப்பதற்கு காரணம் என்ன? மக்களை ஒன்றிணைத்தல், மகிழ்வூட்டல், உறவுகள் ஒன்றித்து மகிழல், பொழுதுபோக்கு இவற்றை எல்லாம் இக்கலைகள் மக்களுக்கு அளித்தன. 'உறவுகளோடு வாழ்ந்த மனிதர்கள், பொருட்களோடு எப்போது நெருக்கம் கொண்டார்களோ அப்போதே கிராமியக் கலைகளும் அழியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கின என்ற அழகப்பெருமானின் கூற்று இப்பிரதேசத்திற்கும் பொருந்தி நிற்கின்றது.

இவ்வாறு அழிந்து போகும் இப்பிரதேச கூத்துக்களை ஆவணப்படுத்துவதோடு அடுத்த தலைமுறையினருக்கு கடத்தப்பட வேண்டியது அவசியமாகும். அந்த வகையில்தான் ச.யேசுதாசன் அவர்களின் 'பூநகரி கூத்துக்கலைக் காவலர்கள்' பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் கடந்த ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூல் கூத்து கலைஞர்கள் பற்றி முதல் நூல் மாத்திரமன்றி நாடகம் சார் பல்துணை ஆய்வுகளுக்கும் ஆதாரமாக அமைந்துள்ளது. இவ்வாறான பல்வேறு செயற்பாடுகள் மூலமாக எம் அழிந்து வரும் அரங்க பாரம்பரியங்களை பேணுவது இப்பிரதேசத்தை சார்ந்த ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

**காலக்கடலில் நமக்கு வழிகாட்ட, அமைக்கப்பட்ட கலங்கரை விளக்கு புத்தகம்.**

**- எட்வின் பி.விப்பிள் -**

**ஒரு நாட்டின் வருங்காலச் சந்ததியினர் தேடித் தேடி அடைய வேண்டிய அற்புதப் புதையல் புத்தகங்களே.**

**- ஹென்றிதொரோ வின்ஸ்டன் சர்ச்சில் -**

**பயங்கரமான போராட்ட ஆயுதங்கள் புத்தகங்கள் தான்**

**-மார்டின் லூதர்கிங்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய வணிகத்தில் வணிகச் சூழல் காரணிகளின் தாக்கம்

செல்வி அகல்யா நடேசமூர்த்தி
உயர்தரமாணவி (உயிரியல்)
முழங்காவில்.

**'எவ்வ துரைப்பது உலகம் உலகத்தோடு**
**அவ்வ துரைப்பது அறிவு'**

என்பது பொய்யா மொழிப்புலவர் வள்ளுவப் பெருந்தகையின் பொன்னான வாக்காகும். அதாவது உலகம் எவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருக்கிறதோ அதற்கேற்ற வகையில் நாமும் செயற்படுதல் நல்லறிவு படைத்த செயலாகும். இன்று நாம் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இக்காலத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய விரைவான வளர்ச்சி கண்டுவரும் துறையாக வணிகத்துறை மிளிர்கிறது. என்றால் மிகையாகாது எந்த துறையை எடுத்து நோக்கினாலும் அதில் வணிகம் கலக்காத துறைகளே இல்லை எனலாம். இமயத்தின் பெருமையை சிறுகல் செப்புமா? எல்லையில்லா தொழில்நுட்ப வளர்ச்சிதனிலே நவீன வணிகத்தின் பங்களிப்பு சொல்லினிலே சிக்குமா? எனக் கூறுமளவிற்கு நவீன வணிகம் மனிதனுடன் நெருப்போடு கலந்த சூடுபோல பின்னிப் பிணைந்து விட்டமை குறிப்பிடதக்கது.

தான் செய்த உற்பத்தியை தானே பயன்படுத்திய மனிதன் எஞ்சியதை அயலவனுடன் பகிர்ந்து கொன்டானல்லவா? அன்று பிறந்தது இந்த வணிகம், பண்டங்களை பரிமாறிக்கொண்ட மனிதன் பணத்தின் தேவையை உணர்ந்தானல்லவா. அன்று நிமிர்ந்தது இந்த வணிகம் பணத்தை அறிந்து கொண்ட மனிதன் விற்பனை மத்திய நிலையமான சந்தையை கண்டானல்லவா? அன்று ஏறுநடை போட்டது இந்த வணிகம் நாட்கள் செல்லச் செல்ல மனிதனின் தேவைகள் அதிகரித்தன. இத்தேவைகளை நிறைவு செய்ய சிந்திக்க ஆரம்பித்த மனிதன் பல சாதனைகளைச் சந்திக்க ஆரம்பித்தான். இவ்வாறே ஆங்காங்கே முயற்சியாளர்கள் உருவெடுக்க வணிகமும் தனது வளர்ச்சியில் வீறுநடை போட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தனது ஆரம்பக்கதையைக் கூறும் வணிகம் இன்று ஆலமர வேரைப்போன்று உலகமெங்கும் பரவி பல புதுமைகளை நமக்கு அளித்துள்ளது. சுருங்கக்கூறின் சூழலை நம்பிவாழ்ந்த மனிதனை சூழலையே மாற்றியமைக்கும் மனிதனாக மாற்றியது இந்த வணிகம் தான்.

இவ்வாறு துரித வளர்ச்சிகண்டு வரும் வணிகத்துறைக்கு வழிவகுக்கும் காரணியாக சமூகச்சூழல் காணப்படுகின்றது. அதாவது வணிக முயற்சி ஒன்றின் வெற்றிகரமான செயற்பாட்டை நிச்சயிக்கும் காரணிகள் வணிகங்களுக்கு சவால்களாகவோ அல்லது சந்தர்ப்பமாகவோ மாறக்கூடிய சக்திகளே வணிகச்சூழல் என வரையறுக்கலாம். வணிகச்சூழலை சிற்றினச்சூழல், பேரினச்சூழல் என இரு வகையாக பிரிக்கலாம். வணிகமுயற்சியினை எளிதாக கட்டுப்படுத்த முடிந்த அதன் வெற்றிக்கு பங்களிக்க கூடிய காரணிகள் சிற்றினச்சூழல் எனப்படும். அதாவது ஊழியர், உரிமையாளர், முகாமையாளர்,வழக்குனர் ஆகிய தொகுதியினரை கொண்டமைந்ததே சிற்றினச்சூழலாகும். நிறுவனங்களுக்கு வணிக சந்தர்ப்பங்களையும் சவால்களையும் ஏற்படுத்தக்கூடிய காரணிகள் பேரினச்சூழல் எனப்படும். அதாவது அரசியல் சூழல், பொருளாதாரச்சூழல், மக்கட்சூழல், இயற்கைச்சூழல், தொழில் நுட்பச்சூழல், பூகோளச்சூழல் என்பன அவற்றுட் சிலவாகும். ஒரு வணிகம் வெற்றிநடை போடுவதற்கு வணிகச்சூழல் எவ்வாறு பங்களிக்கிறதோ ஒரு வணிகம் வீழ்ச்சியடைவதற்கும் வணிகச் சூழலே காரணம் ஆகின்றது என்பதில் ஆச்சரியமில்லை.

வெற்றிகரமாக இயங்கும் வணிகங்கள் எப்பொழுதும் நிறுவனத்தின் உட்புற வெளிப்புற நிலைமைகளை ஆராய்ந்து பார்க்கும். அதன் மூலமாக சூழலில் உருவாகும் வணிக வாய்ப்புகளையும் சவால்களையும் இனங்கண்டு கொள்ளும் சூழலை அடிக்கடி ஆராய்ந்து அறியவேண்டியிருக்கும். மாறும் சூழலுக்கேற்ப மாற்ற வேண்டியமைக்கான காரணங்களை இந்நிறுவனம் நன்கறியும். சூழலில் ஏற்படும் மாற்றங்கள் சந்தர்ப்பங்களை உருவாக்கும் என்பதை அறிந்து கொள்ள முடியாத வணிகர்களும் உள்ளார்கள். அத்தகையவர்களே வணிகத்தில் தோல்வியை தழுவுகின்றனர். வணிகம் செயற்படும் சூழலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் ஏற்படும் வணிகச் சந்தர்ப்பங்களையும் வணிகத்துக்கான சவால்களையும் அறிந்து கொள்ள வணிகச் சூழலை ஆராய்தல் அவசியம்.

வணிகத்தின் அகச்சூழல் பற்றி ஆராய்வோமாயின் உரிமையாளர் முகாமையாளர், ஊழியர், சமயம், கலாசாரம் என்பன சிறப்பம்சமாக காணப்படுமாயின் வணிகத்தில் சிறந்த பெறுபேற்றை அடையமுடியும். அதாவது உரிமையாளர், முகாமையாளர், ஊழியர்களின் அறிவும் திறனும் அனுபவமும் பயிற்சியும் மனப்பாங்கு போன்ற காரணிகள் வணிகத்திற்கு பலத்தையோ அல்லது பலவீனத்தையோ தோற்று விக்கலாம் ஒரு கட்டிடம் சிறப்பானதாக அமைவதற்கு அதன் அத்திபாரம் எவ்வளவு பலமாக அமையவேண்டுமோ அதுபோலவே அகச்சூழல் காரணிகள் சிறப்பானதாக அமையும் சந்தர்ப்பத்தில் வணிகம் சிறந்த வளர்ச்சியை அ்டையும்.

வணிகத்தின் பேரினச்சூழல் பற்றி குறிப்பிடப்படும் போது வணிகத்தினால் இதனை கட்டுப்படுத்த முடியாது. ஆகையால் இச்சக்திகள் தொடர்பாக வணிகர்கள் எப்போதும் அவதானத்துடன் இருக்க வேண்டும். அவற்றில் ஏற்படும் மாற்றங்களுக்கு சரியான முறையில் துலங்குதல் வேண்டும். அல்லாவிடில் வணிகம் தோல்வியடைவதில் சந்தேகமில்லை. பேரினச்சூழல் காரணி பல இருந்த போதிலும் மக்கட்சூழல், தொழிநுட்பச்சூழல், இயற்கைச்சூழல், பூகோளச்சூழல், பொருளாதாரச்சூழல் என்பவையே முக்கியமானவை.

விளம்பரமின்றேல் விற்பனை இல்லை, நுகர்வோர் இன்றேல் வணிகம் இல்லை, ஆகவே மக்கட் சூழலுக்குள்ளே முதலில் குறிப்பிட வேண்டிய காரணி பணத்தொகையாகும். சனத்தொகையினால் சந்தை உருவாகிறது. விரைவாக அதிகரித்துச் செல்லும் உலக சனத்தொகை வணிகங்களை மோசமாகப் பாதிக்கிறது. சனத்தொகையிடம் கொள்வனவுச் சக்தியிருந்தால் மட்டுமே அதிகரிக்கும் சனத்தொகை முக்கியத்துவமுடையதாக இருக்கும். அவ்வாறில்லையெனில் சந்தை விரிவாக்கம் ஏற்படாது. இயற்கை சூழலும் வணிகத்தை வளர்ப்பதில் உதவுகிறது. அதாவது இப்போது இயற்கை வளங்கள் அருகி வருதல் முழு உலகமும் எதிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும் பிரச்சனையாக உள்ளது. இது வணிகச்சூழலை பெருமளவு பாதிக்கின்றது. எனவே தான் வணிகர்கள் சூழலைப் பாதுகாப்பதில் காட்ட வேண்டிய அக்கறையையும் அவர்களது சமூகப் பொறுப்பையும் உறுதிப்படுத்துவதில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

மனிதனின் வாழ்க்கைச் சாயலை கூர்மை செய்யும் சக்தி வாய்ந்த காரணியாக தொழில்நுட்பத்தை குறிப்பிடமுடியும். தொழில்நுட்பம் காரணமாக மனிதர்களின் வாழ்க்கைத் தரமும் சாயலும் ஆச்சரியப்படத்தக்க முறையில் மாறியுள்ளன. வணிகக்கருமங்களை துரிதமாக்கியுள்ளன. தொழிநுட்பச்சூழல் வணிகங்களுக்கான அச்சுறுத்தலாவதைக் காட்டிலும் வணிக வாய்ப்புக்களை தோற்றுவிப்பதில் பெருமளவில் உதவியுள்ளது. தொழிநுட்பம் சந்தையில் பல்வேறு புதுமைமிக்க ஆச்சரியப்படதக்க பொருட்களை சேர்ப்பதில் உதவியுள்ளது. கடந்த சில தசாப்தங்களாக தொழிநுட்பத்துறையில் ஏற்பட்டுவரும் இத்தகைய விரைவான மாற்றங்கள் காரணமாக எப்போதும் வணிகத்துறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. 'மாற்றம்' என்ற சொல்லை தவிர அனைத்தும் மாறும் என்பது தற்போதைய நவீன கருத்தென்பது யாவரும் அறிந்ததொன்றல்லவா?

சமூகக் கலாசரச் சூழல் பற்றி நோக்குவோமானால் தனிநபர் நம்பிக்கை,பெறுமதிகள், எதிர்பார்ப்புகள் போன்றவை சமூக கலாசாரச் சூழலால் மெருகூட்டப்படும். தொழில்நுட்ப முன்னேற்றத்தினால் உருவாகியுள்ள தொடர்பாடல் போக்குவரத்து என்பவற்றில் மேம்பாடுகள் நாடுகளுடையிலான தொடர்புகளை மிக நெருக்கமாக்குகின்றன. இதனால் சமூக கலாசாரம் பூகோளமயமாக்கலில் அகப்பட்டுள்ளது. இதனால் மனிதர்களின் எண்ணங்களும், கருத்துக்களும், சிந்தனைகளும், பழக்கவழக்கங்களும் மாறிக்கொண்டிருக்கின்றன. இந்நிலைமைகள் வணிகங்களுக்கு சிறந்த சிறந்த சந்தர்ப்பங்களையும் அதே நேரம் அச்சுறுத்தல்களையும் தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றன.

உலகமயமாக்கத்துடன் நாடுகளுக்கிடையில் பொருள்களும் சேவைகளும் தடையின்றி அசையும் வாய்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டுள்ளது. அத்துடன் பூகோளமயமான சந்தையும் கடுமையான போட்டிகளுடன் காணப்படுகிறது. அச்சந்தைகளில் ஏற்படும் மாற்றங்கள் ஆனந்தமானவை, புதுமையானவை ஆகையால் இப்பேரினச்சூழல், சிற்றினச்சூழல் பற்றி வணிகங்கள் அக்கறை செலுத்துவது அவசியமாகும். எனவே வணிகச்சூழல் காரணிகள் பற்றி ஆராந்து அதன்படி வணிகத்தை நடத்திச் சென்றால் வணிகங்களின் வளர்ச்சி வானத்தை முட்டும் என்பதில் ஆட்சேபனையில்லை.

'சில மாற்றங்கள் சில நேரங்களில் நியாயப்படுத்தும்
சில மாற்றங்கள் சில நேரங்களில் காயப்படுத்தும்'

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

**புத்தகம் என்பது பையில் சுமந்து செல்ல முடிந்த ஒரு பூந்தோட்டம்**

**– சீனப்பழமொழி –**

**ஒரு நல்ல புத்தகம் வாசித்து முடிக்கப்படுவதே இல்லை**

**– ஆர்.டி.கம்மிஸ் –**

**ஒரு புத்தகத்தை விடப் பொறுமையான ஆசிரியரை நான் பார்த்தது இல்லை.**

**– சார்லஸ் இலியட் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் பற்றிய ஒரு ஆழமான பார்வை

செல்வரத்தினம் கீர்த்திகா
1ம் வருடம், விஞ்ஞானப்பிரிவு
கொழும்பு பல்கலைக்கழகம்
பூநகரி.

சத்தமில்லாமல் நம் உடலில் உருவாகி கொஞ்சம் கொஞ்சமாக நம்மை இறப்பின் வாயிலிற்கு அழைத்துச் செல்லும் நோய்களுள் புற்றுநோயும் ஒன்று. இது வந்து விட்டாலே இறப்புத்தான் என்ற நிலை மாறி அதற்கான சிகிச்சை முறைகள் வந்து விட்டாலும் மக்களிடம் பயமும்,பாதிப்பும் அதிகம் தான். ஆனால் இந்த நோயிலிருந்தும், இதனால் ஏற்படும் பயத்திலிருந்தும் விடுபடும் வழியை தருகின்றது. இக்கட்டுரை.

## புற்று நோய் என்றால் என்ன?

உடலுக்கு அடிப்படையாக உள்ள உயிரணுக் கலங்கள் பாதிப்படையும் நோயைத்தான் புற்றுநோய் என்கின்றோம். இந்த நோய்பற்றி அறிந்து கொள்வதற்கு முன் இயல்பாக உள்ள உயிரணுக்கள் எவ்வாறு புற்றுநோய் அணுக்களாக மாறுகின்றன என பார்ப்போம்.

நமது உடல் பலவகையான உயிரணுக்களால் ஆனது. உடல் வளர, ஆரோக்கியமாக இருக்க இந்த உயிரணுக்கள் வளர்ந்து பெருகி மேலும் பல உயிரணுக்களை உருவாக்குகின்றன. இந்த சீரான பணியில் ஏதேனும் தவறு ஏற்படும் போது புதிய உயிரணுக்கள் அதிகமாக உருவாகிவிடுகின்றன. பழைய உயிரணுக்கள் அவற்றின் காலம் மீறி உயிர்வாழ்ந்து விடுகின்றன.இந்த அதிகப்படியான உயிரணுக்கள் உடலில் கட்டியாக தோன்றுகின்றன. எல்லாக் கட்டிகளுமே புற்று நோய்கள் அல்ல. புற்று நோய் அல்லாத கட்டிகளால் உயிருக்கு ஆபத்து இல்லை. இத்தகைய கட்டிகளை அறுவவைச் சிகைச்சையின் மூலம் அகற்றினால் மீண்டும் தோன்றுவதில்லை. அவை உடலின் மற்றப் பாகங்களுக்கு பரவுவதில்லை. சிகிச்சை அற்ற நிலையில் புற்றுநோய் உயிரணுக்கள் கட்டுப்பாடின்றி வளர்கின்றன. அவை சுற்றியுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்ற திசுக்களை ஆக்கிரமித்து அழிக்கின்றன. இரத்தம் மற்றும் நிணனீர் வழியாக உடலின் மற்றைய பகுதிகளுக்கும் பரவுகின்றன. இதனால் உடலின் பல உறுப்புக்கள் பாதிக்கப்பட்டு செயலிழந்து இறப்பு ஏற்படுகின்றது.

புற்று நோய் ஒரு தொற்றுநோய் அல்ல ஆண்களுக்கு நுரையீரல், வயிறு, குடல், உணவுக்கால்வாய், ப்பிளாஸ்ரேட் சுரப்பிகள் போன்றவற்றிலும் பெண்களுக்கு மார்பகம், நுரையீரல், வயிறு, குடல், கர்ப்பப்பை போன்றவற்றிலும் அதிகமாக புற்றுநோய் பரவுகின்றது. புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரிப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## புற்று நோய்க்கு காரணம் என்ன?

இதற்கு ஒரு குறிப்பிட்ட காரணி இல்லை. அடிப்படையாக உயிரணுக்களின் வளர்ச்சி மற்றும் இறப்பைக் கட்டுப்படுத்தும் மரபணுக்களில் மாற்றங்கள் ஏற்பட்டு புற்றுநோயாக தோன்றுகின்றது. புகையிலை உபயோகித்தல், உணவுமுறைகள் , சூரியக்கதிர்வீச்சு, மாசு மற்றும் நச்சுத்தன்மையுடைய வேலை, சுற்றுப்புறச்சூழ்நிலை, வாழ்க்கைமுறை ஆகியவை இம்மாற்றத்துக்கு காரணமாக இருக்கலாமென்று கருதப் படுகின்றது. இத்தகைய மரபணு மாற்றங்கள் பெற்றோர்களிடம் இருந்து பரம்பரையலகு மூலம் கடத்தப்படலாம்.

சில வைரசுக்கள் புற்று நோய் ஏற்படும் வாய்ப்பை தூண்டுகின்றது. உதாரணமாக எச்.ஐ.வி பெடைட்டின் போன்றவற்றை குறிப்பிடலாம்.

## புற்று நோயின் ஆரம்ப அறிகுறிகள்

உடலின் புற்றுநோய் ஏற்படும் பாகத்தை பொறுத்து அறிகுறிகள் மாறுபடும். கீழ்கண்ட அறிகுறிகள் புற்று நோய் தவிர மற்ற நோய்களிலும் புற்று நோய்களிலும் ஏற்படலாம். எனவே இந்த அறிகுறிகள் இருந்தால் மருத்துவரை அணுகி பரிசோதித்தல் நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குரலில் திடீர் மாற்றம், தொடர் இருமல், குரலில் கரகரப்பு
- முழங்குவதில் தொடர் சிரமம், தொண்டையில் அடைப்பு போல் தோன்றல்
- நாக்கை அசைப்பதில் சிரமம்
- மலம் / சிறுநீர் கழிப்பதில் மாற்றம் (உதாரணமாக தொடர் மலச்சிக்கல் / வயிற்றுப்போக்கு)
- சிறுநீர் / மலத்தில் இரத்தம்
- உடலில் கட்டி தோன்றுதல் புற்றுநோயின் ஆரம்ப கட்டத்தில் வலி ஏற்படுவதில்லை பரவிய பிறகு தான் வலி ஏற்படும்.
- உடலில் உள்ளமச்சங்கள் / பருக்களில் மாற்றம் ஏற்படுதல் / நிறம் மாறுதல்
- காரணமில்லாமல் எடைகுறைதல்
- பெண்களுக்கு மார்பகங்களில் கட்டி
- மாதவிடாயின் போது இயல்பைவிட அதிக இரத்தப்போக்கு
- இறுதிமாதவிடாய் நின்ற பிறகும் இரத்தப்போக்கு

## புற்றுநோய்க்கு நிலையை எவ்வாறு கண்டுகொள்வது

- வாயில் தோன்றும் புற்றுநோய்கள்
- புகை மற்றும் புகையிலை பழக்கம் உள்ளவர்கள் மாதத்துக்கு ஒருமுறையாவது தாங்களே கண்ணாடியின் உதவியுடன் தாங்களே வாயை பரிசோதித்துக் கொள்வது நல்லது.
- ஆறாத புண்
- கட்டி, தடிப்பு
- ஈறு, நாக்கு மற்றும் வாயின் பிறபகுதிகள் சிவப்புநிறமாக மாறல்
- மார்பகப் புற்றுநோய்

  பெண்கள் மார்பகங்களை சுயபரிசோதனை செய்துகொள்வதன் மூலமும், மருத்துவர் மூலம் பரிசோதனை செய்து கொள்வதன் மூலமோ அல்லது மெமோகிராபி செய்து கொள்வதன் மூலமோ மார்பகக் கட்டிகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் வாய்ப்பு அதிகரிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ கற்ப்பப்பை வாய் புற்று நோய்கள்

உடலுறவு ஆரம்பித்த 30 வருடங்களுக்கு பிறகு கர்ப்பப்பை வாயிலில் வரும் புற்று நோய்காக மருத்துவரை அணுகி Papsmear செய்து கொள்வது நல்லது.

## புற்றுநோயை தடுக்க முடியுமா?

புற்று நோயை தடுக்க முறை ஏதும் இல்லை ஆனால் சரியான வாழ்க்கை முறையின் மூலம் நோய் ஏற்படும் வாய்ப்பை பெருமளவில் குறைக்க முடியும்?

☞ புகையிலைப் பொருட்களை பயன்படுத்தாமை. மது மற்றும் புகைபிடிக்கும் பழக்கம் ஒரு சேர இருப்பது தொண்டைப் புண்களின் வாய்ப்பை அதிகரிப்பதாக ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

☞ குறைந்த கொழுப்பு, அதிக காய்கள், பழங்கள், முழுமையான தானியங்களை உட்கொள்ளுதல், மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகளை உட்கொள்ளுதலை தவிர்த்தல்.

☞ உடல்பருமன் அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளுதல்.

☞ சருமத்தை வெயிலில் இருந்து பாதுகாத்தல். சூரியக் கதிர் தடுக்கும் களிம்பு பயன்படுத்தல் மற்றும் இதற்காக தகுந்த உடையணிதல்.

☞ சுத்தமான சூழலில் இருத்தல்.

☞ வைரசுக்களால் ஏற்படும் குறிப்பிட்ட புற்றுநோய்களை தடுப்பூசி மூலம் தடுக்கலாம்.

## சிகிச்சை முறைகள்

உடலில் கட்டி உள்ள இடம், நோய் பரவியுள்ள நிலை, நோயாளிகளின் வயது, உடல்நிலை போன்றவற்றை பொறுத்து சிகிச்சைகள் வேறுபடும்.

மருத்துவர்கள் கீழ்க்குறிப்பிடபட்டுள்ளவற்றில் ஏதேனும் இரண்டு முறைகளைக் கலந்து சிகிச்சை அளிப்பார். நோயை குணப்படுத்தி வாழ்நாளை அதிகரிக்கவும் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தவும் சிகிச்சை மிகவும் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ அறுவைச்சிகிச்சை - இது கட்டியை அகற்றுவதற்காக செய்யப்படுவது

☞ கதிரியக்கச் சிகிச்சை - சக்தி வாய்ந்த கதிர்மூலம் உயிரணுக்களை கொல்லுதல்.

☞ கீமோதெரபி - மருந்துகள் மூலம் சிகிச்சை அளித்தல்

☞ நாளமில்லா சுரப்பிகள் சிகிச்சை - புற்று நோய் உயிரணுக்கள் நாளமில்லாசுரப்பிகளை கொண்டு வளர்வது தடுக்கப்படுகின்றது.

எனவே மக்களாகிய நாம் எமது வாழ்க்கையை சிறந்த முறையில் வாழ்வதற்காக உயிர்கொல்லி நோயான புற்றுநோயை இயன்றவரை இல்லாதொழிக்க இயலுமானவரை முயற்ச்சிப்போம்.

'புற்றுநோயை புதைத்து
புன்னகையுடன் வாழ்வோம்'

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

ஒரு நல்ல புத்தகத்தைப் படிக்காதவன், அந்தப் புத்தகத்தை படிக்கத் தெரியாதவனை விட எந்த விதத்திலும் உயர்ந்தவன் அல்லன்.

— மார்க் ட்வைன் ஜேம்ஸ்ரஸல் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்பக் கல்வியும் எமது சிறார்களின் எதிர்காலமும்

திரு வேல் நந்தகுமார் B.A (Hons) PGDE, M.A in tamil
ஆசிரியர்

வளரும் பயிரை முளையில் தெரியும் என்று கூறுவார்கள். அந்த வகையில் மனித வாழ்வியல் பருவங்களில் சிறுவர் பருவம் என்பது மிக முக்கியத்துவம் மிக்கதாக விளங்குகின்றது. நீண்ட வாழ்வுப் பயணத்தினுடைய பல்வேறுபட்ட அடிப்படைகளும் சிறுவர் பருவத்திலேயே இடப்படுகின்றன. இதனால் தான் சிறுவர்பாடல்கள், சிறுவர் இலக்கியங்கள், சிறுவர் விளையாட்டுக்கள், சிறார்கல்வி, சிறுவர் உளவியல், சிறுவர் உரிமைகள் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. இதனடியாகவே

'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்'

'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா'

'வாழும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்'

போன்ற பழமொழிகளும் உருவாகியுள்ளன. மறுவளமாய்

'சிறு பிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது' என்ற எதிர்மறைச் சிந்தனைகளும் கூட எம்மிடமே உள்ளன.

கல்வி உளவியலில் கூட எண்ணங்கள் கட்டமைக்கப்படும் பருவம், மனஎழுச்சி விருத்தியின், மொழிவிருத்தியின் ஆரம்பப்பருவம், தன்மயமாக்கம், தன்அமைவாக்கம் என்பன நிகழும் பருவம் என்ற அடிப்படைகளில் சிறுவர் பருவம் முதன்மைப்படுத்தப்படுகிறது. ஒரு காலத்தில் எமது சமூகம் சூழலில் சிறுவர்களின் உலகம் என்பது முற்று முழுதாய் எம் கிராமியப் பண்பாட்டு வாழ்வின் அடியான அம்சங்களையே கொண்டிருந்தது. கிட்டிப்புள், கிளித்தட்டு, எட்டுப்பெட்டி, நாயும் இறைச்சியும், குலகுலயாய் முந்திரிக்காய் போன்ற விளையாட்டுக்களையே சிறுவர்கள் விளையாடி மகிழ்ந்தனர். ஆலயவழிபாடு பண்பாட்டுவிழாக்கள், என அவர்களின் உலகம் இருந்தது.ஆனால் இன்றைய 21ம் நூற்றாண்டின் தகவல் தொழிநுட்ப கணணி, இணையயுகத்தில் உலகமயமாக்கற் சூழலில் இந்நிலை முற்றாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறியுள்ளது. ஒரு புறம் சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களும், வன்முறைகளும் அதிகரித்துவரும் அதேவேளை மறுபுறம் தொழிநுட்பத்தை மையப்படுத்திய இந்தக் கட்டற்ற வெளியில் சிறுவர்களது சிந்தனைகளும் மனப்பாங்குகளும், பொழுது போக்குகளும், விளையாட்டுக்களும் மாற்றமடைந்து வருவதைக் காணமுடிகின்றது.

இன்றைய சிறார்களது முன்பள்ளிக் கல்வியில் இருந்தே அவர்களுக்கானகணணி, இணையம்சம்சார் தொழிநுட்பக்கல்வி என்பது அறிமுகப்படுத்தப்படுகிறது. ஆங்கிலமொழிமூலக்கல்வி வழங்கப்படுகிறது. வு.ஏ கேம், இணையசிறுவர் விளையாட்டுக்கள் என்பன அவர்களது பொழுதுபோக்கு நேரத்தை ஆக்கிரமிக்கின்றன.அண்மைய ஆய்வொன்றின்படி இன்றைய சிறுவர்கள் சுமார் 8மணி நேரத்தை இத்தகைய கணணி, இணைய விளையாட்டுக்களில் செலவிடுவதாக கூறப்படுகிறது. இத்தகைய மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை ஏனெனில் நவீன அறிவியல் தொழிநுட்ப சவால்களுக்கு முகங்கொடுக்கும் தலைமுறையை உருவாக்கல், நாளைய வாழும் உலகை வெற்றி கொள்வதற்காக இன்றைய சிறார்களைத் தயார்ப்படுத்தல் என்ற அடிப்படை களிலேயே இவை மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றின் விளைவாக எமது சிறுவர்களிடம் நவீன தொழிநுட்ப தகவற் கருவிகளை கையாளும் ஆற்றல், பன்மொழி அறிவு, தொழிநுட்ப அறிவு, சுய படைப்பாக்கத்திறன், கண்டுபிடிக்கும் ஆற்றல், விஞ்ஞான மனப்பாங்கு, தேடல், தற்துணிவு, சவால்களுக்கு முகங்கொடுக்கும் திறன், செயற்பாட்டு அறிவு, உலகலாவிய நோக்கு, போன்ற பல விடயங்கள் வளர்த்தெடுக்கப்படுகின்றன. என்பதை நாம் மறுக்க முடியாது. கல்வியின் அறிவு, திறன்விருத்தி சார்ந்து இத் தொழிநுட்ப கல்வி சிறார்களுக்கு முக்கியமானதாகிறது.

இதன் நீட்சியாக சமகாலத்தில் எமது பாடசாலைகளது கலைத்திட்டத்திலும், கல்வித்திட்டத்திலும் பல்வேறுபட்ட தகவல் தொழிநுட்பம் சார்ந்த மாற்றங்கள் ஏற்பட்டு வருவதைக் காண முடிகிறது. அவ்வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆரம்ப வகுப்பில் இருந்து உயர்வகுப்பு வரை ICT என்ற பாட அறிமுகம்
- முன்பள்ளிகளில் கணணி, இணைய விளையாட்டுக்கல்வி வசதிகள்
- கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவருக்குமான அடிப்படை கணணிப் பயிற்சி வ லுவூட்டல்கள்
- க.பொ.த உயர்தரத்தில் GIT என்ற பொதுப்பாட அறிமுகம்
- தற்போது தொழிநுட்ப ஆய்வு கூடத்துடன் கூடிய க.பொ.த உயர்தர தொழிநுட்ப பிரிவின் அறிமுகம் போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

இவை பல்கலைக்கழக மட்டத்திலும் ஏனைய தொழில் இடங்களிலும் கூட முக்கியத்துவம் மிக்கதாக பிரதிபலிப்பதை காணமுடிகின்றது.

இத்தகைய தொழிநுட்பக்கல்வியில் சிறார்கள் பெற்றவை அதிகமா இழந்தவை அதிகமா என நாம் பட்டிமன்றத்தனமாய் சிந்தித்தாலும் கூட இவற்றால் சில இழப்புக்களையும், தீமைகளையும் எமது சிறார்கள் எமது சமூகம் சந்தித்துள்ளது என்பதையும் நாம் மறுக்க முடியாது. எங்கள் கைகளில் கட்டுப்படுத்தும் விசையில்லாத கட்டற்ற வெளியாக விளங்குகின்ற இதனை எமது பண்பாட்டு வாழ்வியலுக்கு ஏற்ப எவ்வாறு கட்டுப்படுத்தி வழி நடத்துவது என்பதுதான் இன்று இதில் நாம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய பிரச்சினைகள் சவாலாக விளங்குகிறது. இவ்வகையில் இத்தகைய தொழிநுட்பக் கல்வியால் எமது சிறார்கள் கருவிகளுக்கு அடிமையானவர்களாக மாற்றப்படு கிறார்கள். அவர்களது சுய சிந்தனை மழுங்கடிக்கப்படுகிறது. அவர்களது பண்பாட்டு வாழ்வியல் அம்சங்களை மதித்து நடக்கும் மனப்பாங்கை இழக்கிறார்கள். சோம்பேறிகளாகவும், நோயுற்றவர் களாகவும் மாறுகிறார்கள், மேலைத்தேச, உலகமயமாக்கற் சிந்தனை எழுச்சிக்கான விசுவாசிகளாக மாற்றப்படுகிறார்கள். பிஞ்சிலேயே பழுத்தவரா கிறார்கள். தேவையற்ற உளவியல் பாலியல் பிரச்சனைகளுக்கு முகங் கொடுக்கின்றனர். கணணியிலும் இணையத்திலும் பல திறன்களை வெளிக்காட்டும் அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது பாரம்பரியம் தெரியாது, பாரம்பரிய வியையாட்டுக்கள் தெரியாது, ஒரு தேவாரம் பாடத் தெரியாது, மனிதாய மனப்பாங்குகளின் விருத்தி தடைப்படுகிறது. இவ்வாறு பல்வேறுபட்ட தீய விளைவுகளையும் இத் தொழிநுட்பக் கல்வியானது கொண்டுள்ளது. அதற்காக இத் தொழிநுட்ப கல்வியே எமது சிறார்களுக்கு தேவையில்லை என்ற முடிவுக்கும் நாம் வந்துவிட முடியாது. எமது காலம் வேறு எமது பிள்ளைகளின் காலம் வேறு என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த விடயத்துக்கு என்னதான் தீர்வு என நாம் சிந்திக்கின்ற போது எமது சிறுவர்களுக்கான அறிவியில், தொழில்நுட்ப விடயங்களை நாம் பொறுப்புணர்வுடன் எமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க சில மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்வது பொருத்தமாக இருக்கும். முற்றுமுழுதாக உலகமய, மேலைத்தேயச் சிந்தனைகளுக்கு அடிமையாகாமல், எமக்கானதொரு தகவல் தொழிநுட்ப பண்பாட்டை உருவாக்க நாம் முயற்சிக்க வேண்டியது அவசியமாகும். அறிவியல் தொழிநுட்ப ரீதியில் எமது சிறுவர்களை நாம் வளர்த்தெடுக்கும் அதேவேளை மனப்பாங்கு ரீதியாக எமது சமூகத்திற்கு பயன்தரக்கூடிய நல்ல மனிதர்களாகவும் அவர்களை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளிலும் நாம் கூடிய கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகின்றது. இந்த வகையில்

- ஒழுக்கக் கல்வி, சமயக்கல்வி என்பவற்றை வலுவாக்கல்
- தொழிநுட்ப விடயங்களுக்கூடாகவும் அறநெறியை போதித்தல்
- அறநெறிப் பாடசாலைகளை வலுப்படுத்தல்
- முன்மாதிரியாய் நடந்து காட்டல்
- சிறுவரின் செயற்பாடுகள் பெற்றோர் கண்காணித்தல்
- சிறுவர் கலை விழாக்களை நடத்துதல்
- பன்முக ஆற்றலும் நல்மனப்பாங்கும் கொண்டவராக சிறுவரை வளர்த்தெடுத்தல்
- சிறுவர்களுக்கான வன்முறையற்ற சூழலை ஏற்படுத்தல்
- தொழிநுட்பக் கல்வியின் பாதகங்களை அவர்களே உணரச் செய்தல்.
- சிறுவர் உளவியலை விளங்கி அவர்களை கையாளல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தமது பண்பாடு, மொழி, கலை என்பவற்றை மறவாத வகையில் அதற்கான சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்திக் கொடுத்தல்.
- சிறார் கல்வி ஏற்பாடுகளில் பொருத்தமான சீர்திருத்தங்களை காலத்துக்கு காலம் மேற்கொள்ளல்
- முன்பள்ளிக் கல்வியை வலுவூட்டடல்
- பண்பாட்டுணர்வை அனுபவித்து கற்கும் சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்திக் கொடுத்தல்.

போன்றனவற்றைக் குறிப்பிடலாம் எனவே இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் என்று கூறப்படும் நிலையில் அனைவரும் ஒன்றிணைந்து குடும்ப, சமூக, பண்பாட்டுக் கூட்டுப் பொறுப்புணர்வுடன் எமது சிறார்களை நாளைய உலகை வெல்லும் ஆற்றல்மிக்க வல்லவர்களாகவும், எமது சமூக பண்பாட்டு வெளியை காக்கின்ற நல்லவர்களாகவும் உருவாக்க வேண்டியது நம் அனைவரதும் கடமையாகும்.

'நல்லதோர் வீணை செய்து அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ...'

சிந்திப்போம் - செயற்படுவோம்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூநகரியின் பதிவுகள்...



மண்ணித்தலை சோழர்காலச் சிவாலயம்



மண்ணித்தலையில் கண்டுபிடிக்கப்பட்ட தொன்மையான ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரியும் விஷகடி வைத்தியமும்

திரு சு.கணபதிப்பிள்ளை
கறுக்காய்தீவு.

'**நெ**ல் விளையும் பூமி' எனப் போற்றப்படும் பூநகரிப் பிரதேசம் பல கிராமங்களைத் தன்னகத்தே உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இவற்றுள் கறுக்காய்த்தீவு, ஞானிமடம், செட்டியகுறிஞ்சி, சித்தன் குறிஞ்சியும் அடங்கும் இவை ஒரே கிராமம் போல நெருங்கிய தொடர்புடையவை. இக் கிராமங்கள் ஏறக்குறைய முந்நூறு வருடங்களுக்கு முன் வகுக்கப் பட்டிருக்கலாம். இங்கு வாழும் மக்கள் யாழ் குடா நாட்டில் உள்ளவர்களுடன் தொழில் ரீதியாகவும், வியாபார ரீதியாகவும் ஒன்றிணைந்து வாழ்க்கையை வளம்படுத்தியுள்ளனர்.

சைவ மக்கள் வாழும் இக் கிராமங்களில் அக்காலத்தில் தெய்வ வழிபாடு சிறந்து விளங்கியது. தம் வசதிக் கேற்ப குல தெய்வங்களை ஆதரித்து இயற்கை நிலையில் வழிபாடுகளை மேற்கொண்டு வந்தனர். எத் தொழிலை செய்ய முன்னரும் தம் குல தெய்வத்தை வணங்கி தொழிலில் ஈடுபடுவார்கள்.

வேளாண்மைத் தொழிலையே தம் பிரதான தொழிலாக மேற்கொண்டுவரும் கறுக்காய்த்தீவு கிராமம் அன்று தொட்டு இன்று வரை கற்றோர் நிறைந்த கிராமமாகக் காணப்படுகின்றது. இக்கிராமத்திலே வைரமுத்து (நவசிவாயம்) என்பவருக்கு மகளாக ஞானவல்லி **1931.08.12** அன்று பிறந்தார். நாட்டு வைத்தியம், கைவைத்தியம், இயற்கைவைத்தியம் என இன்று அழைக்கப்படும். வைத்திய முறைகளுக்கெல்லாம் ஞான வல்லியின் பரம்பரை வழித்தோன்றல்களே.

இக்கிராம மருத்துவச்சி ஞானவல்லியின் தந்தை வைரமுத்து (நவசிவாயம்) இவ் இயற்கை வைத்தியத்தில் சிறந்து விளங்கினார். இவர் தனது பரம்பரை உறவுக் காரரான இவ்வூரைச் சேர்ந்த விஷகடி வைத்தியர் சதாசிவம் என்பவர் மூலமாக இவ் வைத்தியத்தைக் கற்றுக் கொண்டார். இவருக்கு பின் இவரது மகனும், ஞானவல்லியின் சகோதரருமாகிய V.K என அழைக்கப்படும். வை.கந்தசாமி தந்தையுடன் இணைந்து இவ் வைத்தியத்தை மேற்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையும் தம்பியும் செய்யும் வைத்திய முறைகளை உடன் இருந்து பார்த்த ஞானவல்லிக்கு இவ் வைத்திய முறைகள் இயல்பாகவே பரீட்சயம் ஆனதில் சந்தேகம் இல்லை. ஏனெனில் விஷம் தீண்டல், வயிற்றுவலி, வயிற்றோட்டம், காய்ச்சல், உழுக்கு, நாவீறு என பூநகரியின் பல கிராமங்களில் இருந்து வரும் மக்களுக்கும் தந்தை, தம்பி வீட்டில் இல்லாத வேளைகளில் ஞானவல்லி அவர்கள் உயிரைக் காக்க வேண்டும். என்பதற்காக இவ்வைத்தியத்தை துணிந்து மேற்கொண்டார்.

'அப்பாவும் தம்பியும் வைத்தியம் செய்ய நானும் பாத்துப்பாத்து பழகினனான் அவை இல்லாத வேளையில் வீட்டுக்கு வாறவையை நான்தான் பாக்கிற...'

இவ்வாறுதான் வைத்தியத்தை கற்றுக் கொண்டதாக ஞானவல்லி குறிப்பிட்டார். பெண்களுக்கு இயல்பாகவே உள்ள இளகும் நெஞ்சம் ஞான வல்லியையும் எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி தனது கையாலே மருந்துகளை அரைத்து பய பக்தியுடன் இவ்வைத்தியத்தை மேற்கொள்ள தூண்டியது.

இவரது சகோதரர் கந்தசாமி (V.K) விஷகடி வைத்தியத்தில் மட்டுமன்றி குறிப்பு எழுதுதல், ஜாதகம் பார்த்தல் போன்றவற்றிலும் சிறந்து விளங்கியதுடன் 1989ம் ஆண்டு கொழும்பு சென்று பரீட்சை எழுதி இவ்வைத்தியத்திற்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொண்டார். இவர் பூநகரி பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் முகாமையாளராக கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. கந்தசாமியின் மகள் ரதிதேவியும் ஞானிமடத்திலே இவ்வைத்தியத்தை மேற்கொண்டாா. என ஞானவல்லி குறிப்பிட்டார்.

ஞானவல்லியின் தந்தை பரம்பரையே விஷகடி வைத்தியத்தில் புகழ்பெற்று விழங்கியது. பூதர் - நாகநாதர் - வைரமுத்து (நவசிவாயம்) - கந்தசாமி (V.K) என இப்பரம்பரை விரிந்தது. நவசிவாயம் விஷகடி வைத்தியத்தில் மட்டுமன்றி மாட்டு வைத்தியத்திலும் சிறந்து விளங்கினார். வைத்திய வதிகள் அற்ற அக்காலப் பகுதியிலே அவரே மூலிகைகளைத் தேடி மருந்தாக்கி பல உயிர்களைக் காப்பாற்றினார். சின்னத்துரையை (பக்கீரியர்) திருமணம் முடித்த ஞானவல்லி தனது அனுபவ அறிவு காரணமாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வபக்தியாலும் விஷம் தீண்டிவந்த பலருக்கு உயிரைக் காப்பாற்றினார். தற்போது இவரது வயது 86 வாதம் காரணமாக நோய்வாய்ப்பட்டுக் காணப்படும் நிலையிலும் சிறுவிஷங்களுக்குப் பார்வை பார்த்து மருந்தும் கொடுக்கிறார். தற்போது இவரது மருந்துகள் தயாரிப்பதற்கு இவரது மகள் செல்வராணி (மூத்த முன்பள்ளி ஆசிரியர்) உதவி வருகின்றார்.

ஞானவல்லியின் வைத்தியச் சிறப்பு பூநகரியில் பல இடங்களுக்குப் பரவ வெள்ளாங்குளம், முழங்காவில், வேரவில், கிராஞ்சி, பொன்னாவெளி, நல்லூர், ஆலங்கேணி, ஞானிமடம், சித்தன்குறிச்சி, செட்டியகுறிச்சி, வாடியடி, மட்டுவில்நாடு என பல கிராமமக்கள் இவரை தேடி வந்து உயிர் ஆபத்தான நிலையில் கூட மிகவும் கஸ்ரப்பட்டு தன்குலதெய்வங்களான காளி, பிள்ளையார், முருகன் போன்றோரிடம் மன்றாடி வைத்தியம் செய்து உயிர்களைக் காப்பாற்றியுள்ளார்.

யாழ்ப்பாணம் (தாவடியை) சேர்ந்த பெண்ணொருவர் கடந்த ஆண்டு தனது மகனுடன் வந்து இவருடைய வைத்திய முறைகள் மந்திரங்களை வேண்டிச் சென்றதாகவும், அங்கு வைத்தியம் செய்வதாகவும் ஞானவல்லி கூறினார். அத்துடன் கிளிநொச்சியை சேர்ந்த ஒருவர் இரு தடவையாக தன்னிடம் வந்து வைத்திய முறைகளை கேட்டு எழுதிச் சென்றாக குறிப்பிட்டார். இவை இவரது வைத்திய முறையின் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றது.

நாகம், புடையன், விரியன், சுருட்டை எனப் பல்வேறு பாம்புகளினால் தீண்டப்பட்டவர்கள். இவரது வைத்திய மகிமையால் உயிர் வாழ்கின்றனர். அத்தோடு தேள், கொடுக்கன் குற்றியவர்களுக்கும் வைத்தியம் செய்து வருகின்றார். இவர் பெண்ணாக இருந்தாலும் இத்துறையில் வல்லவராக அன்றைய காலத்தில் வாழ்ந்தார். இவரது வைத்திய முறை பூநகரிப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களுக்கு மிகவும் உதவியுள்ளது.

இவரது வைத்திய முறை தொடங்க முன்னர் காளி தெய்வத்தை வணங்கியே தொடங்குவார். இவர் குறிப்பிட்ட வைத்திய முறைகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விஷக்கல்லு பயன்படுத்துவார் - பாலில் நன்கு ஊற வைத்து கழுவி உலர வைத்த கல்லை கடி இடத்தில் வைத்து திருநீறு கொண்டு மந்திரம் ஓதி விஷத்தைக் கட்டுப்படுத்துவார்.
- கலிங்கம் இடுதல் - மிளகு, உப்பு , வெற்றிலை மூன்றையும் ஒன்றாக சேர்த்து நன்றாக அரைத்து கடி இடத்தை சுற்றி கட்டுதல்.
- குழை அடித்தல் - விஷத்தை இறக்க மந்திரம் ஓதி வேப்பங்குழையால் மேல் இருந்து கீழாக பூமியை நோக்கி அடித்தல்.
- வக்கம் இடல் - ஆமணக்கு, நொச்சி, செவ்வேலம்பட்டை, வேப்பமிலை, பூமத்தம் இலை, கறிமுருக்கமிலை சேர்த்து அரைத்து வீக்கம் உள்ள இடங்களில் வைத்து கட்டுதல்.
- விஷம் தீண்டப்பட்ட இடத்தை அவுரி இலை, காக்கான கொவ்வைக் கிழங்கு சேர்த்து அரைத்து தேசிக்காய்ப் புளி சேர்த்து அரைத்துப் பூசுதல்.
- இரத்தப் புடையன் தீண்டி உடல் பாகத்தில் இருந்து இரத்தம் கவிந்தால் வெல்வேலம்பட்டை தண்ணீரை தயிருடன் சேர்த்து அடித்து மூன்று வேளை பருகக் கொடுத்தல்.
- விஷம் தீண்டியவர்களுக்கான உணவு - மொண்டி - அரிசி - சாமி அரிசி கஞ்சி மட்டும் வழங்குதல்.
- நித்திரை கொள்ளாது வைத்திருத்தல் மிக அவசியம்.
- விஷம் இறங்கி குணமடையும் வரை சீனி, மச்சம் உண்ணக் கூடாது.
- தவுண் போடுறது - சுண்ணாம்பால் விஷம் ஏறாது தடுக்க

மேற்கூறிய முறையிலான வைத்தியத்திற்கான மருந்துகளை தன் கையாளே தயாரித்துக் கொள்வார். காளியை வேண்டிய வண்ணமே வைத்தியம் செய்து கொள்வார். ஞானவல்லியின் தம்பி கந்தசாமி (V.K) விஷம் தீண்டி மயக்க நிலை வந்தால் உதவி செய்வார். வைத்திய வசதி அற்ற காலத்தில் கந்தசாமி (V.K), ஞானவல்லியை தெரியாதவர்களே இல்லை எனலாம். வயது முதிர்ந்த நிலையில் தற்போது காணப்படும் ஞானவல்லியின் பணி இவரது காலத்துடன் முடிந்து விடுமா என ஏக்க நிலையில் உள்ளது. மன வேதனை கொடுக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிப்பத்திரம் இல்லாமலே தற்துணிவும் இறைபக்தியுடனும், தம்பியின் துணையுடனும் அரவம் தீண்டி வந்த அனைவருக்கும் மறுப்பு இன்றி தன் வீட்டில் தங்க வைத்தும், தினசரி சென்று பார்வையிட்டும் 21 நாள் (பெருவிஷம்) 7நாள் என பணம் பெறாது மிகுந்த கஷ்ரப்பட்டு வைத்தியம் செய்த அம்மா மாத்திரமின்றி பல உயிரை காப்பாற்றிய 'உயிர் கொடுத்த உத்தமி' யாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஞானவல்லி பூநகரி மக்கள் நெஞ்சில் வைத்துப் போற்றப்படவேண்டியவர். தற்போது வைத்தியசாலைகள் அதிகரித்த சூழலிலும் முதலுதவி போல இவரது பணியே தொடர்ந்து காணப்படுகின்றது என்றால் மிகையாகாது.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சகிப்பு தன்மை

**பதீன் குனா**
நாச்சிக்குடா,
பூநகரி.

முஸ்லீம் அல்லாதவர்கள் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம் தனித்துவமானதாகும். முதல் மனிதனாகவும், நபியாகவும் தோன்றிய ஆதம் (அலை) அவர்களும் அவர்களைத் தொடர்ந்து வந்த ஏனைய எல்லா நபிமார்களும் போதித்து வந்த மார்க்கம் இஸ்லாம் ஒன்றே தான் எனக் கூறுகிறது. எனவே இஸ்லாம் என்பது குறித்த நபிக்கோ அல்லது சமூகத்திற்கோ அருளப்பட்ட மார்க்கம் ஒன்றின் பெயரல்ல, அது எல்லா நபிமார்களுக்கும் அவர்களது சமூகத்திற்குமான பொதுவான மார்க்கத்தின் பெயராகும். இவ்வுண்மையை பின்வரும் அல்குர்ஆன் வசனங்கள் புலப்படுத்துகின்றன.

நூவற்(அலை) தனது சமூகத்தை நோக்கி 'நான் முஸ்லீமாக இருக்குமாறே ஏவப்பட்டேன்' (யூனிஸ் - 72) யாகூப் (அலை) தனது பிள்ளைகளை நோக்கி 'நீங்கள் முஸ்லீமாகவே இல்லாமல் மரணிக்காதீர்கள்' என போதித்தார்கள் (பகரா -132)

எனவே இஸ்லாம் பரந்து விரிந்த அமைப்பில் மனித சமூகங்களை ஒன்றிணைத்து இருந்ததை இவ்வசனங்கள் உணர்த்துகின்றன. எனினும் ஆரம்பத்தில் இஸ்லாம் என்ற பெரும் நிழலின் கீழிருந்த மானிட வட்டம் காலபோக்கில் இதை நிராகரிப்பாளரால் பிரிந்து சென்று விட்டனர். இக் கண்ணோட்டத்தின் அடிப்படையிலேயே இஸ்லாம் ஏனைய சமூகங்களையும் சமூகத்தவரையும் நோக்குகிறது. அல்குர்ஆன் நபிமார்கள் அனைவரையும் ஒரே அணியிலே சேர்த்து ஒரே இறைவனைக் கொண்ட ஒரு சமூகமாக்கி பின்வருமாறு கூறுகிறது.

'இந்த சமூகம் உங்களது ஒரே சமூகம் நான் உங்களது இராட்சகன் எனக்கே வழிப்படுங்கள்' (அன்பியா -93) ஒரு முஸ்லீம் நபியவர்களை மாத்திரமன்றி முன்னைய எல்லா நபிமார்களையும் அவர்களுக்கு வழங்கப்பட்ட வேதங்களையும் நம்பிக்கை கொள்ளுதல் அவசியமாகும். இது ஈமானின் 3ம்,4ம் அம்சமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதும் குறிப்பிட தக்கதாகும். எனவே வேறெந்த சமயங்களிலும் காணப்படாத சமய சகிப்புத் தன்மை முஸ்லீம்களிடம் காணப்படுவதற்கு இந்நம்பிக்கையே வழிகாட்டுகிறது.

ஒரு கிறிஸ்தவன் அல்குர்ஆனை நம்பாமலே கிறிஸ்தவனாக இருக்க முடியும். ஒரு முஸ்லீம் ஈஸா (அலை) அவர்களை நம்பாமல் முஸ்லீமாக இருக்க முடியாது. இவ்வுண்மையை ஸீரத்துல் பகரா - 136 வசனம் விளக்குகிறது. 'நாம் எல்லாவற்றையும் இஸ்மாயில் இஸ்ஹாக் யஃகூப் (அலை) அவர்களது சந்ததிகளுக்கு இறக்கப்பட்ட வேதங்களையும் இன்னும் இறைவனிடமிருந்து நபிமார்களுக்கு கொடுக்கப் பட்டதையும் ஈமான் கொண்டோய் அவர்களுக்கிடையில் எத்தகைய வேறுபாட்டையும் காட்ட மாட்டோம் நாம் அவனுக்கே பணிந்தோம் என்று கூறுவீர்களாக!

எனவே இங்கு நாம் விளங்கவேண்டிய முக்கிய அம்சம் இஸ்லாம் என்கின்ற பெரும்மார்க்கம் ஆதம் (அலை) அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு ஏனைய நபிமார்களினால் வளர்க்கப்பட்டு நபி (ஸல்) அவர்களினால் பூரணப்படுத்தப்பட்டது. என்பதே ஆகும். இதனால் தான் முன்னைய சமூகங்களில் காணப்பட்ட சில சட்டதிட்டங்கள் தண்டனைகள் என்பவற்றை அல்குர்ஆனும் அங்கீகரித்து நடைமுறைக்குள் கொண்டு வந்து கொள்கை ரீதியில் நோக்கும் போது இஸ்லாத்தின் கண்ணோட்டம் இதுவாகும். இனி நடைமுறைமைப் பொறுத்த வரையில் இஸ்லாத்தின் நிலைபாடு என்னவென அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். இதாவது இஸ்லாம் ஏனைய சமூகங்களை அங்கீகரித்து அவற்றுடன் இணங்கி செல்லுமா? அல்லது அவர்களோடு எவ்வேளையிலும் எதிர்த்து நின்று போராட்டப் போக்கை கையாளுமா? என்பது ஆராயப்படுகின்றது. இஸ்லாத்தைப் பற்றி ஆராய்ந்த கீழைத்தேய ஆய்வாளர்களில் சிலர் இரண்டாவது நிலைப்பாட்டைக் கொண்டவர்கள் என்றும் ஒருவருக்கொருவர் முரண்பட்ட கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

முஸ்லீம்களின் பண்பாடுகளும், பழக்கவழக்கங்களும் என்ற நூலில் 'கொதே'என்ற கீழைத்தேய ஆய்வாளர்கள் பின்வருமாறு எழுதுகின்றார். முஸ்லீம்கள் சுயநலமிக்கவர்கள், சிலர் நரகத்திற்குப் போனாலும், சுவர்க்கத்திற்கு போனாலும் அதை பற்றி அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலைப் படுவதில்லை.அதனால் மேற்கத்தய அறிஞர்கள், முஸ்லீம்களை இரண்டாவது நிலைப்பாட்டைக் கருதுகின்ற வர்களாக உள்ளனர். அதாவது இஸ்லாம் அதுவொரு போராட்ட மார்க்கம், வாளின்மூலம் பரப்பப்பட்டது. காபிரை எங்கு கண்டாலும் கொலை செய்து விடு என்று இவர்கள் கூறுகின்றார்கள். உண்மையில் இவ்விரு சாராரது கருத்துக்களும் உண்மைக்கு புறம்பானவையாகும். இஸ்லாம் வழிக்கேட்டைக் கொண்டு மௌனம் சாதிப்பதுமில்லை. அதே நேரத்தில் அவர்களுடன் போராடுவதை, அலட்சியமாகக் கொண்டிருப்பது மில்லை. வழிக்கேட்டை காணும் போது அதைத் தடுப்பது ஒரு முஸ்லீமின் கடமையாகும். அதை அவன் அங்கீகரித்து மௌனம் சாதிக்கமாட்டான். அதை அவன் அங்கீகரித்து மௌனம் சாதிக்கமாட்டான். இதைப்பற்றி அல் - குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது. 'அல்லாஹ் வின்பால் அழைப்பவனை விட உயர்ந்த வசனம் பேசுபவன் யார்'.

உண்மையின் பால் அழைத்து, நன்மையை ஏவி தீமையை தடுக்க கூடிய பிரிவினர் உங்கள் மத்தியில் இருக்கட்டும் அவர்களே வெற்றியாளர்கள். (அல்குர்ஆன் 1.104)

எனவே காபிர்களுக்கு மத்தியில் சிறந்த பிரச்சாரவாளர்களின் மூலம் இஸ்லாத்தை பரப்புவது முஸ்லீம்களின் கடமையாகும். அதே நேரத்தில் மேற்கத்தைய அறிஞர்கள் கூறுவது போன்று இஸ்லாம் இரத்த வெறிப்பிடித்த மார்க்கமல்ல. மார்கத்தில் எந்த பலாத்தகாரமும் இல்லை என்று கூறிய அல்குவ்ஆன் எவர் மீதும் பலாத்காரமாக இஸ்லாத்தை திணிப்பதை தடை செய்துள்ளது. 'அவர்கள் சமாதானத்திற்கு வந்தால் நீங்கள் சமாதானத்தின் பக்கம் செல்வீராக'. (அன்பியா - 61) 'மார்க்க விடயத்தில் உங்களோடு போராடாத உங்கள் வீடுகளை விட்டு விரட்டாதவரோடு நல்ல முறையிலும் நீதியுடனும் நடந்து கொள்வதை அல்குர்ஆன் தடுக்கவில்லை' (அல்குர்ஆன்).

மேற்கண்ட இரண்டு குர்ஆன் வசனங்களும் பிறசமூகங்களுடன் முஸ்லீம்கள் எவ்வாறு இணங்கி செல்கிறது என்பதை சுட்டிகாட்டுகின்றன. இதனை இஸ்லாமிய அறிஞர்கள் வேற்றுமையில் ஒற்றுமை என்ற கோட்பாட்டின் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கியுள்ளனர். குறைவி காபிர்கள் நபியவர்களிடம் வந்து முஸ்லீம்களும் காபிர்களும் ஒற்றுமைபடுவதற்கு ஒரு வழிமுறையாக ஒவ்வொரு பிரிவினரும் வருடத்தில் அரைபகுதியில் அடுத்தவரின் மார்க்கத்தை பின்பற்றலாம் என ஆலோசனை கூறியவிடத்து, அல்குர்ஆன் இதனை நிராகரித்து ஸீரத்துல் காபீரூனை இறக்கி வைத்தது. முஸ்லீம்களும் எதிர்த்து போராடகாமிர்களுடன் 'யகும்தீனுக்கும் வலியத்தீன்' உங்களுக்கு உங்கள் மார்க்கட் எனக்கு எனது மார்க்கம் எனும் கோட்பாட்டை வலியுறுத்தியது. விக்கிரக ஆராதனையை அடிப்படையாகக் கொண்ட மார்க்கங்கள் இஸ்லாத்தின் சிந்தனைக்கு மிகத்தூரமானவை எனினும் அவர்களுடனும் இணக்கமாக நடந்து கொள்ள வேண்டும் என்று அல்குர்ஆன் கட்டளையிடுகிறது. 'இணைவைத்து வணங்குவோரில் யாரேனும் உம்மிடம் பாதுகாப்பு கேட்டால் **4.11** வின் வார்த்தைகளை அவர்களால் கேட்கமுடியுமானால் அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பீராக அவர்களின் பாதுகாப்பாக வாழத்தக்க இடத்திற்கு கொண்டு சேர்ப்பீராக' தௌபா **(9.6)**

இஸ்லாமிய ஷரீஆ சட்டத்திலும், பிறசமயத்தவரின் உரிமைகள் பேணப்பட்டுள்ளன. சதகா என்ற தானதர்மம் முஸ்லீம்களைப் போன்று காபீர்களுக்கு வழங்க முடியும். அயலார் காபீராக இருந்தால் முஸ்லீம்களைப் போன்று காபீர்களுக்கும் வழங்க முடியும். அயலார் காபீராக இருந்தால் முஸ்லீம்களைப் போன்றே அவர்களது சகல உரிமைகளையும் பேண வேண்டும். பொதுவாக பிற சமயத்தவரை இரண்டு பெரும் பிரிவிற்குள் அடக்கலாம்.

## 01. அஃலுல் கிதாப்கள் - (சேதமுடையோர்)

யூதர்களும், கிறிஸ்தவர்களும் அஃலுல் கிதாபிகளாகும். இவர்களுடன் எவ்வாறு நடக்க வேண்டும் என்பதை அல் - குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது. 'வேதம் கொடுக்கப்பட்டவரோடு அழகிய முறையில் அல்லாமல் விவாதம் புரியாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபியவர்களும், ஸ'ஹாபாக்களும் அஃலுல் கிதாபிகளுடன் இணக்கமான முறையில் நடந்து முன் மாதிரி காட்டியுள்ளார்கள். ஒரு முறை கிறிஸ்தவ மதகுருமார்களைக் கொண்ட குழுவொன்று நபியவர்களைச் சந்திக்க வந்தபோது அல்லா'வின் மஸ்ஜிதில் வைத்து வரவேற்கப்பட்டதுடன் அங்கேயே தங்கவும் வைத்தார்கள். கைபர் யுத்தத்தில் கிறிஸ்தவர்களின் பைபிள்கள் கனீமத்தாகக் கிடைத்த போது இதை மீண்டும் அவர்களிடம் ஒப்படைத்து விடும் படி நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். அஃலுல் கிதாபிகளுடன் சமாதான ஒப்பந்தங்களை மேற்கொண்டு நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கு இஸ்லாம் அனுமதியளித்துள்ளது. நபியவர்கள், யூதர்களுடன் செய்து கொண்ட மதீனா சாசனம் இதற்கான சான்றாகும்.

மேலும் படைகளை அனுப்பும் போது யுத்த வீரர்களுக்கு நபியவர்களும் கலீபாக்களும் செய்த போதனைகள் இஸ்லாத்தின் சமய சகிப்புத்தன்மையை வெளிப்படுத்துகின்றன. மதகுருமார்களைத் தாக்குதல் தேவாலயங்களைத் தகர்த்தல் மத உரிமைகளை மீறல் என்பனவற்றைச் செய்யக் கூடாதெனக் கண்டிப்பான உத்தரவுகள் வழங்கப்பட்டன. உரோமர்களுக்கு எதிராக ஸைது (ரழி) அவர்களின் தலைமையில் படைசென்ற போது ஸைது (ரழி) செய்த பிரசங்கம் இதற்காதாரமாகும். 'ஷரிஆத் சட்டப்படி' சில நிபந்தனையின் அடிப்படையில் யூத கிறிஸ்தவ பெண்களை முஸ்லீம் ஆண்கள் திருமணம் செய்து கொள்வதற்கும் அனுமதியளித்துள்ளது. இது இஸ்லாத்திற்கும் யூத, கிறிஸ்தவ சமயங்களுக்குமான கோட்பாட்டு ரீதியான ஒருமைபாட்டை புலப்படுத்துகிறது.

## 02. காபீர்களை மேலும் இரு வகைப்படுத்தலாம்

**01.** திம்மிகள்

**02.** ஃர்மிகள்

இஸ்லாத்தையும், இஸ்லாமிய அரசையும் அங்கீகரித்து முஸ்லீம்களுடன் நல்லிணகத்துடன் வாழும் காபிர்கள் திம்மிகள் என அழைக்கப்படுகின்றனர். இஸ்லாமிய அரசுக்கு 'ஜிஸ்யா எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிச்செலுத்தும் சிறுபாண்மை மக்களே இவர்களாகும். இவ்வாறு வேற்று மதத்தவருக்கு விஷேட வரி விதிப்பது கொடுமையானது என சில ஐரோப்பிய ஆய்வாளர்கள் கூறுவதுண்டு. உண்மையில் இவ்வரி, குறைந்ததொகை மாத்திரமின்றி அதன் மூலம் அவர்களது பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்படுகின்றது. என்பதும் குறிப்பிடதக்கது. திம்மிக் காபீர்களுக்கு மத சுதந்திரம், செல்வத்திற்கும், உயிருக்குமான பாதுகாப்பு என்பன மாத்திரமின்றி முஸ்லீம்களுக்கு வழங்கப்படும் அதேயளவு உரிமைகளும் வழங்கப்படுகின்றன. அவர்களுடன் சண்டையிடுவதற்கு அனுமதிக்கவில்லை. உங்களோடு போரிடாது உங்களை விட்டு ஒதுங்கி சமாதானத்திற்கு அவர்கள் வருவார்களாயின் அவர்களோடு போராட எத்தகைய வழியையும் குர்ஆன் ஏற்படுத்தவில்லை. (4.1) என்ற அல்குர்ஆன் வசனம் இதை தெளிவுபடுத்துகின்றது. ஹர்பீன் காபீர் எனப்படுவோர் இஸ்லாத்தை எதிர்த்து போராடும் காபீர்களாகும். இவர்களுடன் போராடுவதைத் தவிர வேறெந்த வழியுமில்லை எனினும் முஸ்லீம்கள் வலிந்து சென்று அவர்களை தாக்குவதில்லை. தற்காப்பு முறையிலேயே ஹர்பிகளுடன் யுத்தங்கள் நடந்துள்ளன. பத்ர், அகழி, உஹது போன்ற ஆரம்ப யுத்தங்களை ஆராயும் போது இவ்வுண்மை புலனாகிறது. எதிரிகளின் படைதிரண்டு வந்தது ஹஜ்ரி 05ஆம் ஆண்டு மதினானவர் சுற்றி அகழி தோண்டி தற்காப்பு நடவடிக்கைகளிலேயே ஈடுபடக்கூடிய வண்ணம் முஸ்லீம்களின் யுத்த நடைமுறை அமைந்திருந்தன. எனினும் ஹர்பிக் காபிர்கள் போர் தொடுக்கும் போது அவர்களை எதிர்த்து ஜிஹாத் செய்வது ஒவ்வொரு முஸ்லீம் மீதும் கடமையாகும். எனவே முடிந்தளவு சமாதானம், தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் போராட்டம் என்ற அடிப்படையிலேயே இஸ்லாம் பிறசமயத்துடன் இணங்கி வாழ்கின்றது எனலாம்.

'சந்தோஷத்தில் பெரிய சந்தோஷம் மற்றவர்களை சந்தோஷப்படுத்துவது தான்' (யாரோ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைப்பாட்டு கிராமத் தோற்றமும் கிறிஸ்தவ சமய வழிபாடும்

பெ.பொலிகாப்பியர்
வலைப்பாடு, வேரவில்.

எங்களின் மூதாதையர்கள் எமது கிராமத்தில் 1900 ஆண்டுக்குமுன் வந்துள்ளார்கள் என்று எமது பாட்டன் காலத்தில் இருந்த பிறமத மக்களிடம் நாம் கேட்டறிந்த உண்மைக்கதை

1900 ஆண்டுக்கு முன் இவர்கள் நீர்கொழும்பில் இருந்து புத்தளம், சிலாபம் ஊடாக பேசாலை வந்து சேர்ந்தவர்களின் பிள்ளைகள்தான் பேசாலையில் உள்ளவர்களோடு இழுப்பு வலைத் தொழில் செய்வதற்காக இரணதீவு வந்து தொழில் செய்த போது அங்கே கைமருந்துக்கு பயன்படுத்தக்கூடிய மூலிகைகளை கண்டு அங்கேயே தங்கி தொழிலும் செய்து வாழ்ந்து வந்தார்கள் அவர்களுடைய மருந்து மூலிகைகளையும் அவர்களுடைய தொழில் செய்த கருவாடுகளையும் வாங்குவதற்கு வியாபாரி இல்லாததினால் மிகவும் கஸ்ரப்பட்டார்கள் இரணதீவுதான் தங்கள் சமய வழிபாட்டுக்கும் பயமின்றி வழிபட்டு வாழ்ந்து வந்தார்கள்.

தங்களிடம் இருந்த உணவு முடிந்தவுடன் உணவு வாங்குவதற்காக தங்களின் சின்ன மரவள்ளத்தில் திரும்பவும் பேசாலைக்கு போக வெளிக்கிட்டார்கள் காற்று கடுமையாய் இருந்தபடியால் காற்றின் போருக்கே வந்து பேய்முனை என்னும் இடத்தில் சேர்ந்தார்கள். அப்பொழுது அங்கு இருந்தவர்கள் மண்டதீவில் இருந்து வந்த பொன்னாவெளியில் இருந்தவர்களிடம் மாட்டு எரு வாங்க வந்தவர்கள் அவர்களிடம் தான் தங்களிடம் இருந்த கருவாடுகளை விற்று பணம் வாங்கியது மட்டுமன்றி அவர்களுடன் பொன்னாவெளிக்கிச் சென்று தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களை வேண்டினார்கள். பொன்னாவெளியில் இவர்கள் எல்லாம் வசதியாக இருந்தபடியால் மேற்குப் பக்கத்திலுள்ள கல்லு முத்தலென்னும் இடத்தில் தங்கி வாழ்ந்த காலம்தான் 1900 ஆண்டு அப்பொழுது வெள்ளக்காரன் ஆட்சிக்காலமாய் இருந்தபடியால் தங்களின் வழிபாட்டை இரவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பயத்தில் வழிபட்டு வந்தார்கள். பின்பு பொன்னாவெளிக்கு தெற்கு பக்கம் விச்சுத்தொழில் செய்யப்போன இடத்தில்தான் அப்பெருக்கு மரத்தைகண்டு எதுவித பயமுமின்றி இரவிலும் பகலிலும் தங்கள் சமய வழிபாட்டை நடத்தி வந்தார்கள். **1906** ஆண்டு தான் வலைபாட்டில் குடி ஏறிய குடும்பம் 7 இந்த பெருக்மரத்தில் தான் வழிபட்டார்கள். அவர்கள் தான் ஜேசவாசஸ் அடிகளார் அந்நாட்டிய திருச்சிலுவையை கண்டு அதற்கு சம்மனசு சுவாமி எனும் பெயர் சூட்டி தபசு காலத்தின் 6ம் வாரத்தில் ஒரு அன்னதான விழாவாக கொண்டாடி மகிழ்வார்கள்.

*1908*ம் ஆண்டு *2* ஆலயமாக பனை ஓலையினாலும் களி மண்ணாலும் சின்ன கோவிலை கட்டி வழிபட்டார்கள். **1911**ம் ஆண்டு சின்னப்பள்ளிக்கூடம் கட்டி தங்கள் பிள்ளைகட்கு மறைக்கல்வியும் கல்வி அறிவையும் ஊட்டி வளர்த்தார்கள். ஆதிகிறிஸ்தவர்களின் வழிமரபில் பிறந்தவர்களின் பிள்ளைகள்தான் தாங்கள் எங்களின் பெற்றோரின் காலத்தில் **1938**ம் ஆண்டு முருகக்கல்லு கோயிலை கட்டியவர் மோறோ எங்களின் காலத்தில் சீமெந்துக்கல்லால் **1984** கோயிலை கட்டியவர் வணக்கத்திற்குரிய குரு கொன்சலான். **2004**ம் ஆண்டு தொடங்கி **2013**ம் ஆண்டு புதுக்கோயிலை கட்டி முடித்தவர் பங்குத்தந்தை சில்வேற்றர்.

அழகசும் தானமைத்து
அனுதினமும் காத்து நின்று
அமைதியாக வாழ்ந்து வரும்
அழககத் தொழிலாளி

அழுக்கான முடியுடனே
அலங்கோலத் தாடியுடன்
அழககம் தேடிவந்தால்
அன்புடனே அரவணைப்பாய்

மதுவின் நாற்றம் மூக்கில் மணக்க
மனமகிழ்வாய் முகம் தடவி
மகிழ்வுடனே உரையாடி
அழகு செய்யும் தொழிலாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை முதல் மாலை வரை
கால் கடுக்க நீங்கள் நின்று
காற்றைப்போலே நீர் சுழன்று
காவல் செய்யும் தொழிலாளி

கடவுளைத் தினம் நினைத்து
கஸ்ரத்தினைத் தினம் சுமந்து
கவலையின்றித் தினம் சிரித்து
கடமை செய்யும் தொழிலாளி

எம்மையும் சிரிக்கவைப்பாய்
என்றும்மை நினைக்க வைப்பாய்
எங்கள் நோய்கள் நீ சுமப்பாய்
எம்மை இருத்தி நீரோ நிற்பாய்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரியின் பதிவுகள்...



படைப்பிலக்கிய நிகழ்வுகளின் நிழல்கள் ... (27.01.2015)



ஆடிப்பிறப்பு நிகழ்வுகளின் நிழல்கள் ... (17.07.2015)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரியின் பதிவுகள்...



ஆடிப்பிறப்பு நிகழ்வுகளின் நிழல்கள் ... (17.07.2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலையா விழிக் கணங்கள்

து. அலெக்சனா இளநிலா
உயர்தர பிரிவு மாணவி,
முழங்காவில்

பசுமைநிறை வயல்வெளிகளும் உயிரோட்டம் உள்ள நீர் நிலைகளும் வனப்புமிகு வனங்களும் நிறைந்த வன்னி மண் அழகே அழகுதான். குளங்களும் குன்றுகளும் கண்டு குதூகலிக்கும் மனம் இரணைமடுக்குளமும், தூயமடுமாதாவும், வற்றாப்பளை கண்ணகையும், ஒட்டுசுட்டான் சிவனும் என வணக்கத்துக்குரியன எத்தனைதான் வன்னி அழகைக்காண கண் கோடி வேண்டும்.

உண்மைதான் அடங்காப்பற்று வணங்காமண் வரம் நிலைத்த மண் அல்லவா!

புறநானூற்று வீரம் பொதிந்த மண்ணில் தமிழரின் வாழ்வோடு ஒத்திருந்த அகநானூறும் இல்லாமல் விடவில்லை. புறநானூற்றில் வீரமும் புறநாணூற்று எண்ணமுமே இருந்த என்னுள்ளே? அகநானூற்றின் விதையை விதைத்தால் ஒருத்தி ஆயிரம் அழகுகள் கொட்டிக் கிடந்தாலும் நான் அதில் என்னை மறந்திருந்தாலும் அவ் அழகுகள் என் கண்ணை விட்டு மறைவது அவள் என்னருகே இருக்கையிலேயே

அவள் கண்கள் அகநானூற்றுத் தலைவியின் கண்களை ஒத்திருக்கும் அவளின் மேற்புருவம் வீரனின் வாளை ஒத்திருக்கும் கறுப்புத் திராட்சை கண்களாயினவோ என வியப்பதில் தவறுவதில்லை.

செவ்விதழ் வாய் பிறை ஒத்த நூதலும் முழுமதி முகமும் முந்திரி மூக்கும் என்னை ஈர்த்தது என நீங்கள் நினைக்கலாம் வன்னி போன்ற வனப்புக்கள் பல அவளிடம் இருந்தாலும் என்னை அவளிடம் ஈர்த்தது உயிரில் கோர்த்தது அவளது அந்தக் கண்கள்தான் இரனைமடுவில் துள்ளிய மீன் ஒன்று தாவி வந்து கண்களாகியதோ!

அப்படியே அகநானூற்றுத் தலைவியை என்கண் முன்னே நிறுத்தியது அவள் கண்களே. தன் கண்களுக்கே உரியபெயரையும் வைத்துக் கொண்டாள். என் நடையை சோழன் என்பாள், அன்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரன் என்பாள், பெருமையை பாண்டியன் என்பாள், மனதை பாரி என்பாள். என்னை புறநானூற்றுக்கு அழைத்துச் செல்வாள். மணிக்கணக்கில் தேன்மதுரத் தமிழை பொழிவாள். அவள் என்னுடன் என்ன கதைத்தாலும் நான் கதைப்பது மங்கையவளின் மைவிழிகளுடனேயே அவளைக் காணாத நாட்கள் இருக்கவில்லை என்பதை விட அவள் கண்கள் மீது நான் கொண்ட காதல் தான் அவள் மீது காதல் கொள்ள வைத்தது காலை கதிரவனையும் குளிர் மதியையும் அவள் கண்களில் கண்டேன். அவள் கண்களைக் கண்டே திங்கள் பல கடந்தன. இறைவனை வேண்டினேன் அவள் கண்களை பார்த்து நீண்ட நாள் வாடி அவள் மைவிழியுடன் கதைத்துக் கொண்டே நாட்களும் சென்றன. நட்பில் வளர்ந்த அன்பு மெல்ல மெல்ல காதலாக மலர்ந்தது காதலும் சிறகு விரித்து பறந்தது எல்லை இல்லா அந்தநீல வானில் யார்? யாருக்கு முதலில் சொல்வது என்ற வினாக்குறியுடன் சென்று கொண்டது உயர்தரப் பரீட்சையும் மிக வேகமாக வந்தது அதனால் கடைசியாக பிரியாவிடை ஒன்று ஆயத்தப்படுத்தப்பட்டது. எல்லா மாணவியரும் சாறிகட்டி அழகாக வந்திருந்தனர் என் கண்கள் மட்டும் ஏதோ எங்கும் விழிகளாய் அலைபாய்ந்தது யாரையோ தேடியது. எல்லோரும் அங்கே இருப்பதை உணர்ந்த நான் ஆனால் என் கட்டுப்பாட்டை மீறியே என் கண் யாரையோ தேடியது. அவள் தான் என் காதலி மைதிலியை தேவலோகத்தில் இருந்து வந்த தேவதை போலிருந்தாள் அவளை கண்டதும் என்னை அறியாமலேயே ஒரு விதமாய் என்னை ஈர்த்தது. அது தான் கடைசி சந்திப்பு எங்களுக்கு அதனால் என் காதலை சொல்வதாகவே முடிவெடுத்தேன் அதனால் உடனே சென்று சொன்னன் மைதிலி நான் உங்களை காதலிக்கின்றேன் என்று அவள் எதிர்பார்க்காதவளாய் இருந்தவளுக்கு பெரும் அதிர்ச்சியாய் இருந்தது என்நாளும் என் அன்புக்கு கட்டுப்பட்டவளாய் தன் சம்மதத்தை தெரிவித்தாள்.

இருவருமே எம் காதலுக்கு பச்சை கொடி காட்டினோம் கடைசி பிரியா விடை ஓர் வித இன்பமாகவும் பெரும் துயரத்தையும் தந்தது. உயர்தரப்பரீட்சையும் முடிவுக்கு வந்தது. பரீட்சைக்கு பெறு பேறும் வெளிவந்தது கடைசியாக அவளை பரீட்சை அன்று பார்த்ததற்கு பல கால இடைவெளியின் பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளை றிசல்ஸ் வெளி வந்த பின் நேரில் அவளின் கண்களை பார்த்தேன் எம் இருவருக்கு அளவு கடந்த சந்தோசம் அதற்குள்ளும் ஓர் அதிர்ச்சியான செய்தி மைதிலிக்கு வேறு பல்கலைக்கழகமும் எனக்கு வேறு இடமும் வந்திருந்தது என்ன செய்வது கல்வியால் சேர்ந்த நாங்கள் கல்வியாலே பிரிய வேண்டிய சூழ்நிலை நாம் இருவரும் கண்ணீருடன் பிரிந்தோம் கடைசியாக நாம் நின்று எடுத்த புகைப்படம் ஒன்றுதான் என் காதல் சின்னமாக இருந்தது. அவளும் நிரந்தரமாய் பிரிந்திடுவோம் என்று தெரியாமல் எப்போதாவது சந்திப்போம் இப்பபோய் இரண்டு பேரும் படிப்பம் என்று கூறி கண்ணீருடன் விடை பெற்று சென்றாள். அவள் சென்று சில காலத்தால் வன்னி மண்ணை யுத்தம் என்னும் அரக்கன் முற்றுகையிட்டான் அதனால் அவள் அந்த யுத்தத்தில் மைவிழியையும் பூ போன்ற உடலையும் எங்கிருந்தோ வந்த எறிகணை பதம் பார்த்தது அதனால் அவள் வன்னி மண்ணிலே கடைசி உயிர் மூச்சை விட்டாள். காலங்களும் உருண்டு ஓடியது யுத்தமும் ஓய்ந்தது. நான் எது என்ன நடந்தாலும் என் மைதிலியை பார்க்க வேண்டும் காண வேண்டும் ஒரு தடவை அவளின் மைவிழியுடன் பேச வேண்டும் என்ற ஆசையுடனும் ஆவாவுடனும் சமாதானம் மக்களும் மீள்குடியேற்றத்தில் வந்தவுடன் துடித்து பதைத்து அவளின் வீட்டிற்கு வந்து அவளும் நானும் சேர்ந்து இருந்து கதைத்த வேப்பம் மரத்தையும் எம் பெயர் அடித்த பாலைமரத்தையும் பார்த்தபோது எல்லா மரங்களும் கடைசி கட்டை மட்டும் தான் இருந்தது எனக்கு தெரியுமா மரம் மட்டும் இல்ல என் அன்பு காதலி மைதிலியும் இல்லை என்று, எப்ப நான் என் அவளை பார்ப்பேன் அவள் விழியுடன் பேசுவேன் என்ற ஆர்வத்துடன் இருந்த போது எனக்கு அவளின் தாய் என் அவளை புகைப்படமாக காட்டி உன் நண்பி மைதிலி என்றாள் அவளை பார்க்க சென்ற எனக்கு அவளின் புகைப்படம் மட்டும் தான் சிரிப்புடன் வரவேற்றது. என் மைதிலியின் மைவிழியுடன் பேசிக்கொண்டே என் வாழ்க்கை செல்கின்றது. என்றும் உயிர்வாழ்வேன்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைதீவும் கரையும் இதயத் துடிப்பும்

மே.றோஸ்வேஜினி M.A, B.Ed
பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்.
இரணைதீவு.

இரணைதீவு மிகவும் அழகான ஓர் குட்டித்தீவு. சின்னத்தீவு, பெரியதீவு என்ற இரண்டு தீவுகள் இணைந்து காணப்படுவதால் இதற்கு இரணைதீவு என்று பெயர் வந்தது. பெரியதீவிற்கும் சின்னத்தீவிற்கும் இடையே உள்ள தூரம் 1/2 கிலோ மீற்றர் ஆகும். இந்த இரண்டு தீவுகளிற்கும் இடையில் ஆறு ஒன்று உள்ளது. இந்த ஆற்றை இடையாறு என்று அழைப்பர். பெரிய தீவில் இருந்து சின்னத்தீவிற்குச் செல்ல பாதை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இரணைதீவில் வடக்கே சேமக்காலையும், கிழக்கே இடையாறும், தெற்கே கொக்குப்பிட்டியும், மேற்கே குதிரை முனங்கும் குளமும் உள்ளது. இரணைதீவானது குருதீபம் என்றும் அழைக்கப் படுகின்றது. இங்கு வாழ்ந்த மக்கள் கடற்தொழிலைப் பரம்பரைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். கடலோடும் திறனும், கடற்தொழில் பற்றும், கடல் பற்றிய அறிவும், அனுபவமும், அவர்களிற்கு நிறையவே உள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றன.

கடற்தொழில் செய்பவர்களை மகாபாரதத்திலும் ஏனைய புராணங்களிலும் பரவர்கள் (கடலர்,பரதர்) பெயரானது பல இடங்களில் காணப்படுகின்றது.

தூத்துக்குடி, கன்னியாகுமரி, மணற்பாட்டில் இருந்து ஈழத்தின் கடற்கரை ஓரங்களிலும், இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையிலுள்ள நூற்றுக்கு மேற்பட்ட தீவுகளிலும் வாழும் மக்கள் அனைவரும் ஆதி அரச பரவ பரம்பரையென்று அருட்பணி HENRY HERAS S.J ஆய்வுகளின் ஆதாரங்களோடு, ஆணித்தரமாகக் குறிப்பிடுகின்றார்.

இரணைதீவில் வசித்து வந்த மக்கள் கடற்தொழில் புரிபவர்கள். இவர்களில் ஆண்கள் மட்டும் அல்லாது பெண்களும் கடலைப் பற்றிய அறிவினை நிறையவே பெற்றிருந்தனர். இரணைதீவில் கடலுணவான மட்டியும், அட்டையும் அதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவில் கிடைக்கப் பெற்றுள்ளது. அங்கு வாழ்ந்த பெண்கள் கடலோடும் திறனைப் பெற்றிருந்ததனால் கடலிற்குச் சென்று அட்டை, மற்றும் மட்டியைப் பிடித்து விற்று தங்கள் வறுமையைப் போக்கிக் கொண்டனர்.

இரணைதீவில் தென்னை மற்றும் பூவரசம் மரங்களே அதிக அளவில் காணப்படுகின்றது. மேலும் இரணைதீவில் கீழரிசி என்ற ஓர் வகையான அரிசி காணப்பட்டிருக்கின்றது. இந்த அரிசியானது சோளகக் காற்று வீசும் காலத்தில் அதிகமாகக் கிடைப்பதாகக் கூறப்படுகின்றது. இந்த மக்கள் கீழரிசியை எடுத்து சட்டியில் போட்டு வறுக்கும் போது அரிசி தனியாகவும் உமி தனியாகவும் வந்து விடுமாம். பின்னர் அதனை எடுத்து மாவாக இடித்துப் பிட்டு போன்ற உணவுகள் தயாரித்து உண்பார்களாம்.

இரணைதீவில் கருவாட்டினை சிற்பம் கட்டி (கூடையில்) அதனை யாழ்ப்பாணத்திற்கு ஏற்றுமதி செய்து வந்துள்ளனர். இரணைதீவில் இருந்து மாடு மற்றும் குதிரைகள் கொழும்பிற்கும் நெடுந்தீவிற்கும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. ஆகவே தொழில் ரீதியான போக்குவரத்தும் நடைபெற்றுள்ளது என்பது குறிப்பிடதக்கது.

இரணைதீவின் கடலானது மூன்று வகையாகக் காணப்படுகின்றது. பவளப்பாறை, தாளைச் சேற்றுக்களம், தாளைமணக்களம் இவை மீன் இனப்பெருக்கத்திற்கு பெரிதும் உதவியாக உள்ளன. அத்தோடு அமைதியான கடல் பகுதியாகவும் காணப்படுகின்றது.

கி.பி 13ஆம் நூற்றாண்டளவில் தென்னாசியாவிற்குக் கடல் வாய்க்கால் மூலம் வருகை தந்த ஐரோப்பியர்கள் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள பாம்பன் வாய்க்கால் வழியாக வருகை தரும் வழக்கம் கொண்டவர்கள். அந்த நேரத்தில் யானைத்தந்தம் பெறுவதற்கு உலகளாவிய அளவில் யானைத்தந்த சந்தை யானையிறவில் தான் இருந்தது என்று கூறப்படுகின்றது. இந்த சந்தையில் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கும் ஐரோப்பிய ஆபிரிக்க அரச வணிகர்கள் வரும் போது வழிகாட்டியாக பயன்படுத்திய கோபுரங்கள் எல்லாத் தீவுகளிலும் உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இரணைதீவின் கோபுரம் இலங்கையில் கட்டப்பட்ட எல்லாக் கோபுரங்களையும் விட அதி உயரமானது. இந்தக் கோபுரத்தில் ஒருவர் மட்டுமே நிற்கக் கூடிய அளவு இடைவெளி உள்ளது. போர்த்துக்கேயர் காலத்தில் கட்டி எழுப்பப்பட்ட கலங்கரை விளக்கமான வெளிச்சக்கோபுரம் இரணைதீவில் உள்ள முருகைக் கற்களால் கட்டப்பட்டது என்று கூறப்படுகின்றது.

பெரியதீவிலும், சின்னத்தீவிலும் இரண்டு கத்தோலிக்கத் தேவாலயங்கள் உள்ளது. இதில் சின்னத் தீவில் புனித செபஸ்ரியார் ஆலயமும், பெரியதீவில் புனித செபமாலை மாதா ஆலயமும் காணப்படுகின்றது. இந்த ஆலயங்களிற்கு நீர் கொழும்பில் இருந்தே குருக்கள் வந்து செபவழிபாடுகளை செய்து விட்டுச் செல்வார்கள் என்று கூறப்படுகின்றது. இந்த ஆலயங்கள் முருகைக்கற்களால் கட்டப்பட்டவை.

## முருகைக்கற்தீவு

இரணைதீவில் உள்ள முருகைக்கற்கள் நாச்சிக்குடா இயாகப்பர் ஆலயம், வலைநகர் புனித அன்னாள் ஆலயம், பல்லவராயன்கட்டு சிவன் கோவில், நடுப்பிட்டி அந்தோனியர் ஆலயம், கிழக்குத்தீவு புனித செபஸ்தியார் ஆலயம், மாதாபுர மரியன்னை ஆலயம், தரவையில் அழிந்துகிடக்கும் புராதன கற்கோட்டை நடுப்பிட்டியில் தென்னந்தோப்பு நடுவே இருந்த கற்கோட்டை, கிழக்குப்பக்கத்தில் உள்ள பெரியதீவில் காட்சி தந்து அழிந்த கற்கோட்டை, பாலைதீவு கோபுரம், வலைப்பாட்டுக் கோபுரம் (அழிக்கப்பட்டு விட்டது) போன்றன இரணைதீவில் இருந்து அகழ்ந்து எடுக்கப்பட்ட முருகைக்கற்களால் கட்டப்பட்டவையே.

## குதிரைத்தீவு

பல்லாண்டுகாலமாக தமிழ் நாட்டில் இருந்து போர்த்துக்கேயர் காலத்தில் இருந்து கொண்டுவந்த குதிரைகள் வளர்ந்து வந்தபோது பரவ மக்களாலும் உல்லாசத்துக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருபவர்களாலும், சீனர்களாலும் பாவிக்கப்பட்டு வந்த குதிரைகளின் காட்சிகளினால் இரணைதீவு குதிரைத்தீவு என்று அழைக்கப்படலாயிற்று இன்று ஒரு குதிரை கூட அங்கு இல்லாமல் போய்விட்டது.

படிக்காத மேதைகளையும், படித்த கல்விமான்களையும், இரணைதீவு கல்விக்கூடம் தம் ஆயுட்காலத்தில் கண்டுள்ளது. பேணவேண்டிய அரும்செல்வம் கல்விச்செல்வம் ஆகும். இரணைதீவு மக்களின் வாழ்க்கையில் 1900 ஆம் ஆண்டுகளிற்கு முந்தியே கல்விக் கூடங்கள் மறைபரப்புப் பணியோரம் தொடங்கப்பட்டுள்ளது. அரசபதிவின்படி 112 ஆண்டு கடந்து செயற்படும் பள்ளிக்கூடம் பட்ட துன்ப துயரங்கள் மக்களை இன்னும் வாட்டிய வண்ணமே உள்ளன. பிச்சைபுகினும் கற்கை நன்றே என்று தமிழ் மரபில் அறிந்தாலும், கல்வியா, செல்வமா, வீரமா என்ற முப்பாதையில் முத்தீவார் சிதறும் பக்குவப் போக்கு மக்களது கல்வி உந்தலைத் தடுமாறித் தள்ளாடித் தத்தளிக்க வைத்துள்ளது.

இரணைதீவில் வசித்த மக்களை வணங்கா முடியினர் என்றும் அழைக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. காரணம் அவர்கள் பனை ஓலையினால் செய்யப்பட்ட தொப்பியினை தலையில் எப்பொழுதும் அணிந்திருப்பார்களாம். இவர்களைவிட உயர்ந்த இன மக்களைக் கண்டதும் இடுப்பில் கட்டியிருக்கும் துண்டிணை கால்மறைக்க தட்டிவிட்டு அவர்களிற்கு வணக்கம் கூறுவார்களாம். ஆனால் தலையில் உள்ள தொப்பியைக் கழற்ற மாட்டார்களாம். இதனாலேயே இவர்கள் வணங்கா முடியினர் என்று அழைக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

பெரியதீவில் 190 குடும்பங்களும் சின்னத்தீவில் 50 குடும்பங்களும் வசித்து வந்துள்ளனர். சின்னத்தீவில் மட்டுமே குடிதண்ணீர் கிணறு 06 காணப்பட்டுள்ளது. 1990ஆம் ஆண்டு நடைபெற்ற இனப்பிரச்சனை காரணமாக அங்கு வாழ்ந்து வந்த 240 குடும்பங்களும் முழங்காவில் பகுதியில் கடற்கரை ஓரத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். தற்போது அந்த இடத்தை இரணைமாதா நகர் என்று அழைக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ பெருமைகளுடன் விளங்கி மக்களால் பல புனைப்பெயர்களைக் கொண்டு அழைக்கப்பட்ட இரணைதீவு இன்று மக்கள் இல்லாது இராணுவம் வசிக்கும் இடமாகக் காணப்படுகின்றது.

'கண்கள் தூங்கலாம் ஆனால் கனவுகள்
தூங்கலாகாது விதைத்தவன் உறங்கினாலும்
விதைகள் உறங்காது நமது பிறப்பு ஒரு சம்பவமாக
இருக்கலாம், ஆனால் நமது இறப்பு ஒரு வரலாற்றின்
உயிராக இருக்க வேண்டும்'

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை தெராசாவுக்கு அஞ்சலி

மே.றோஸ்வேஜினி M.A.B.Ed
பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்
இரணைதீவு

கருணை தேவதையே! உன்
முகத்தில் தெரிவது
முதுமைக் கோடுகளா?
கால தேவன் எழுதிய
கவிதைக் கோடுகளா?

கைரேகைகளை விட - உன்
முக ரேகைகள் அழகானவை
அகிலமே உன்னை மட்டும் தான்
அன்னை யென்றது

'அனாதை' என்ற வார்த்தை உன்னால்
ஓசை மறந்து அனாதையானது
உன் கைகள் தொட்டதால்
எங்கள் காயங்கள் ஆறியது

உன் காலடி பட்டதால்
மண்ணில் கருணை ஊறியது.
தன்னம்பிக்கையே வெற்றி
'நம்பிக்கை நார் மட்டும்
நம் கையில் இருந்து விட்டால்

உதிர்ந்த பூக்களெல்லாம்
ஒவ்வொன்றாய் வந்து
ஒட்டிக் கொள்ளும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுத்து மாலையாகவும்
தன்னைத் தானே
கட்டிக் கொள்ளும்!


இளைய வசந்தமே
சோம்பல் சிறையிலும்
துயரத்தின் மடியிலும்
தூங்கிக் கிடந்தது போதும் - தினம்
தேம்பியழுதது போதும்!
விழித்தெழு! விரைந்தெழு!!

தன்னம்பிக்கைச் சூரியனின்
உதயம்
உன் இதயத்தில்
இணைக்கப்பட்டு விட்டது!
இன்னும் நீயேன்
முடிச்சுகளுக்கிடையில்
முடங்கிக் கிடக்கிறாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூநகரியின் பதிவுகள்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூநகரியின் பதிவுகள்...




இரணைதீவு புனித செபமாலை மாதா தேவாலயம்



புராதன ஓடத்துறையாக விளங்கிய நாகதேவன்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைப்பாடு
# புனித அன்னாள் ஆலயத்தின்
# வரலாற்றுக் கட்டுரை

இன்னாசி தீத்தப்பர் (சைமன்) வயது - 74
வலைப்பாடு,
வேரவில்

வலைப்பாட்டின் புனித அன்னால் ஆலயத்தின் திறப்பு நாள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பொன்னான நன் நாளாகும்.

மறுமலர்ச்சியை நாடி நிற்கும் மனித சமுதாயத்திலே புதுமையான திட்டங்கள் நிறைந்த பல முன்னேற்றங்களை நாம் காண்கிறோம்.

நாலாபக்கங்களும் கடலால் சூழப்பட்ட இலங்கைத் தீபகற்பத்தின் வடக்கே! ஈழமண்ணில் பொன்பூச்சொரியும் பூநகர் பகுதியில் தெற்கே சகல கடல் வளங்களும் நிறையப் பெற்ற ஓர் அழகிய கிராமம் வலைப்பாடு.

திரை கடலின் இரைச்சல் தென்றல் காற்றின் வீச்சும் தென்னம் கீற்றின் ஒலியும் ஒருங்கே இணைந்து ஆர்பரிக்க.

பச்சைப்பசேலென்ற பசுமையான பசும்புல் தரையின் முன்றலில் நீண்டு அகழ்ந்து உயர்ந்து நிமிர்ந்து கம்பீரமாகக் காட்சியளிக்கும் புனித அன்னாள் ஆலயம். திரை கடல் ஓடித்திரவியம் தேடும் ஓடிகளுக்கு ஓர் கலங்கரை விளக்காகவும் அல்லல்பட்டு அருள் தேடிவரும் அடியார்களுக்கு சகல அருள் வளங்களையும் அள்ளி வளங்கும் அன்னைக்கு அன்னையாக விளங்கும் புனித அன்னாளுக்கு ஓர் புதிய ஆலயம் அமைப்பதற்கு மாண்பு மிகு யாழ் ஆயர் சவுந்தரநாயகம் அவர்களின் அனுமதியுடன் இறைபணி ஆற்றிய முன்னைய பங்குத் தந்தை வண அன்ரன் எருக் அடிகளாரின் காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு அதைத் தொடர்ந்து வணபங்குத்தந்தை எருட்டிக்கோ வசந்த சீலன் அடிகளாரின் விடா முயற்சியாலும் பங்கு மக்களின் அயராத உழைப்பாலும் கடல் அன்னையின் வளத்தாலும், ஆலயத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்து வேலை முடிவுறும் தருவாயில் துரதிஷ்டவசமாக போரின் அனர்த்தத்தினால் இடம் பெயர்ந்து குடி இருந்த வீடுகள் ஆலயம், பாடசாலை, ஆற்றுப்பகுதியின் கடல் வளம், தொழில் உபகரணங்கள் அனைத்தையும் இழந்து அகதிகளாக ஓடிப்போனோம் குடி இருக்க இடம் இன்றி நாடோடிகளாக அங்கும் இங்குமாக அலைந்து திரிந்தோம். உண்ண உணவின்றி உடல் நலிந்தோம் மெலிந்தோம். உடுக்க உடையின்றி மானபங்கப்பட்டோம் நாணித் தலை குனிந்தோம். வைத்திய வசதியின்றி வியாதியால் வருந்தினோம் வாடினோம். பாடசாலைச்சிறார்களின் கல்விச்செல்வம் மழுங்களிக்கப்பட்டது மறக்கப்பட்டது. போர் முடியும் முடியும் என்று எதிர்பார்த்தோம் ஆனால் போர் முடிந்தபாடில்லை. போர் உக்கிரம் கொண்டது.

ஈரைந்து மாதங்கள் உதரத்தில் சுமந்து பெற்றெடுத்து பாலூட்டி தாலாட்டி பக்குவமாக வளர்த்து படிக்கவைத்து ஆளாக்கிய அன்பு வயோதிபப் பெற்றோர்கள் கதறிப்பதறி அல்லோல கல்லோலப்பட்டு உரத்த குரலில் ஓலமிட்டு கதறி அழ, காது கேளாத செவிடர்களாக இரக்கமற்ற கல் நெஞ்சம் படைத்தவர்களாக! உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வேதனைகள் மேலோங்க பயங்கரங்கள் சூழ்ந்து வர, துன்பங்கள் பின் தொடர, வயோதிபப் பெற்றோர்களை பதுங்குக்குளியில் தன்னம் தனியே விட்டுவிட்டு உயிர்வாழ அடைக்கலம் தேடி ஓடோடிச் சென்றோம். எம்மோடு தொடர்ந்த துன்பங்கள் துயரங்கள் வேதனைகள் இழப்புக்களோ கோடானகோடி! விமானக்குண்டு வீச்சுக்களினாலும் எறிகணைத் தாக்குதலினாலும் உடல்கள் சிதறிப் பல உயிர்க்ளைப் பறி கொடுத்தோம். அவையவங்களை இழந்து ஊனமுற்றவர்கள் ஆனோம். இன்னும் பல உறவுகள் எம்மை விட்டு பிரிந்து காணாமல் தொலைந்தே போனார்கள். இன்று வரை அவர்கள் எம்மோடு இணையவே இல்லை. ஓரிரு தடவைகள் அல்ல ஓராயிரம் ஈராயிரம் தடவைகள் புனித அன்னாளிடம் கண்கள் கலங்கி கண்ணீர் ஆறாக ஓட நெஞ்சுருகி இரக்கமாக வேண்டினோம். புனித அன்னாள் எங்கள் மேல் இரக்கம் கொண்டு எங்கள் மன்றாட்டுக்கு செவிசாய்த்து நாம் வாழ்ந்த பூமியில் மீள்குடியேறி வளமுடன் வாழ அன்புடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்தாள். ஓடோடி வந்தோம் ஆனால் ஏமாற்றம் அடைந்தோம் குடியிருந்த வீடுகளின் கூரைகள் அனைத்தும் களற்றப்பட்டிருந்தன. பயன்தரும் மரங்கள் தறிக்கப்பட்டிருந்தன. வீட்டு முற்றங்கள் பாடசாலை வளாகம் பொதுமண்டபம் விளையாட்டு மைதானம் தெரு வீதிகள் நடைபாதைகள் அனைத்தும் முட்புதர்களினால் மூடப்பட்டு அடையாளம் காணமுடியாத அளவுக்கு அலங்கோலமாகக் காணப்பட்டது.

புனித அன்னாளுக்கு நன்றி கூறி ஆறுதல் அடைய ஆலயம் சென்றோம். இரண்டு ஆலயங்களினதும் கூரைத்தகடுகள் அனைத்தும் களற்றப்பட்டு அண்ட ஆகாச வெளியாக காணப்பட்டது. சுவர்கள் இடிக்கப்பட்டு சின்னாபின்னமாகக் காணப்பட்டது. ஆற்றுப்பகுதியின் கடல் வளங்கள் தொழில் உபகரணங்கள் கள்வரினால் களவாடப்பட்டது. இவைகளை கண்ணுற்ற நாம் மெய்மறந்து நின்றோம் கடன்பட்டோர் நெஞ்சம்போல் கலங்கினோம் இடியேறு பட்ட நாகம் போல் திகைத்தோம்.

வெறும் கையினராக வந்த நாம் வெளிநாட்டு உதவிகள் எதுவும் அற்ற நிலையில் இருக்கும் நாம் கடல் வளத்தைப்பறி கொடுத்த நாம் எப்படி எமது ஆலயத்தைக் கட்டி முடிக்கப்போகிறோம் என்று அங்கலாய்த்தோம். புனித அன்னாளிடம் கண்கலங்கி அழுது மன்றாடினோம். எங்கள் மேல் கருணை கொண்டு எங்களால் தன்னந்தனியாக விட்டுச்சென்ற சென்ற புனிதஅன்னாள் ஆலயத்தின் மேல்முகப்பில் உட்காந்து கொண்டு கடல் அன்னையை உற்று நோக்கி இருகரம் நீட்டி இறைவனை வேண்டினேன். கடல் வளம் பெருகியது. இதைக் கண்ணுற்ற நாம் ஆலயத்தைக்கட்டி முடிக்க வேண்டும் என்று திடசங்கர்ப்பம் கொண்டோம். அவாக்கொண்டோம். பங்குத் தந்தையிடம் விரைந்து சென்றோம் எமது ஆதங்கங்களை எடுத்துக் கூறினோம். பங்குத்தந்தையின் விடா முயற்சியாலும் பங்கு மக்களின் அயராத உழைப்பாலும் கடல் வளத்தாலும் காண்பவர் கண்களுக்கு கண்கவர் காட்சியாகவும் நெஞ்சத்தைக் கொள்ளைகொள்ளும் விருந்தாகவும் அமைந்த அழகான ஆலயத்தைக்கட்டி சிப்பிகளின் சிந்தனையினால் செதுக்கப்பட்ட சித்திரவேலைப்பாடுகள் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காசசிம்மாசனத்தில் ஏற்றி வைத்து அடிபணிந்து வருகின்றோம். அந்த அன்னாள் சகலவரங்களையும் அள்ளி வணங்கி எங்களுக்கு அருள்பாலித்துக் கொண்டு இருக்கின்றான். இத்தனைக்கும் முதற்கண் இறைவனுக்கு நன்றி கூறிக்கொண்டு அன்னாள் ஆலயத்தை அழகாகக் கட்டுவதற்கு உறுதுணையாக இருந்த பங்குத்தந்தைக்கும் பங்கு மக்களுக்கும் கட்டிடக்குழுக்களுக்கும் நிர்வாக உறுப்பினருக்கும் கோடான கோடி நன்றிகள். இன்னும் ஒருவிடயத்தை எழுத விரும்புகின்றேன்.

என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்

உய்வில்லை செய் நன்றி கொன்றவர்க்கு என்பது வள்ளுவனின் குறள். போரின் அனர்த்தத்தினால் எமது கிராமத்தில் அழிந்து போன இருநூற்று ஐம்பதுக்கு மேற்பட்ட வீடுகளை அமைத்து தொலைந்து போன தொழில் உபகரணங்களை மானியமாக வழங்கி இன்னமும் எத்தனை உதவிகளை எம்மக்களுக்கு வழங்கி எமது வலைப்பாட்டு கிராமத்தில் நாம் வளமுடன் வாழ வழி அமைத்து தந்தமைகக்காக கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்திற்கும் வேறு நிறுவனங்களுக்கும் அன்றும் இன்றும் என்றும் எமது கிராம மக்கள் நன்றி உரியவர்களாக இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்து விட முடியாது.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூநகரியின் பதிவுகள்...



கிராஞ்சியில் கண்டுபிடிக்கப்பட்ட பானைக்கிணறு



யாழ்ப்பாணத்திற்கும் பூநகரிக்கும் உறவுப்பாலமாக இருக்கும் சங்குப்பிட்டி பாலத்தின் எழில்மிகு தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய நடைமுறைகளும் உளவளத்துணையும்

திரு M.J. சதீஸ்குமார் (கிராஞ்சி)
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்,
பூநகரி.

உளவளத்துணை எனும் விடயம் இன்று உயிர் வாழும் அனைத்து மனிதர்களுக்கும் தேவையாவுள்ளது. மாறிவரும் இயந்திரமயமான உலகில் ஒருவரோடு ஒருவர் மனம் விட்டுப் பேசுவதற்கு போதிய நேரம் கிடைப்பதரிதாகிவிட்டது. இந்நிலையில் நெருக்கீடு மற்றும் மிதமான உளப்பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வு வழிமுறையாக பாரம்பரிய உளவளத்துணை காணப்படுகிறது. இப் பாரம்பரிய சடங்குகளையும் ஏனைய கலாச்சார பண்பாட்டு விடயங்களையும் ஒழுங்குபடுத்தி எச்சடங்குகள் எப்பிரச்சினைகளுக்கு பொருத்தமானது என்பதனையும் மற்றும் சடங்குகளில் கலை கலாச்சார பண்பாட்டு நிகழ்வுகளில் காணப்படும் உளவளம் தொடர்பான அம்சங்களையும் ஆராய்ந்து பார்ப்போம்.

## முப்பத்தொன்று

குழந்தை பிறந்து 31ம் நாள் செய்யும் சடங்கு முப்பத்தொன்று என அழைக்கப்படுகிறது. குழந்தை பிறந்தவுடன் தாய், தந்தை, சகோதரர்கள் உட்பட இரத்த வழி இரத்த உறவினர்களுள் துடக்குக் காக்க வேண்டும். அதாவது முப்பத்தொன்று வரை இவர்கள் ஆலயத்தினுள்ளும் ஏனைய மங்கல காரியங்களில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும்.

முப்பத்தொன்று வரை உறவினர்கள், அயலவர்கள், தாய், சேயினை பார்த்து வாழ்த்திச் செல்வார்கள். அத்துடன் அவர்கள் சத்துள்ள உணவுப் பண்டங்களை தாய்க்கும் சேய்க்கும் வழங்கிச் செல்வார்கள். மேலும் முப்பத்தொராம் நாள் குருக்கள் / பூசாரியினை அழைத்து வீட்டில் கிரியைகள் செய்து தீட்டு நீங்கிவிடும். அன்றைய தினம் தாய் மாமன் பிள்ளையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டிலில் / ஏனையில் இடுவார். உறவினர்களுக்கும் அயலவர்களுக்கும் உணவு பரிமாறி மகிழ்வார்கள்.

**உளவளத்துணை அம்சங்கள்.**

- சமூக ஆதரவு
- இரத்த உறவினர்களிடையே பிணைப்பு வலுப்படுத்தப்படுகின்றது.

உறவினர்களிடையே விரிசல் ஏற்பட்டு முரண்பாடு ஏற்பட்டாலும் துடக்கு காக்க வேண்டியது விதியாகும். எனவே இதன் மூலம் மீண்டும் நல்லுறவு ஏற்பட வழி ஏற்படுகின்றது.

- தாய் மாமன் உறவு முக்கியப்படுத்தல், தந்தைக்கு அடுத்தபடியாக வகிபங்காற்றக்கூடியவர். (Role Model)
- பிரசவத்தின் போது தாய்க்கு ஏற்படும் மன உளைச்சல்,இறுக்கம் தளர வழிவகுக்கின்றது.

## ஏடு தொடக்குதல்

பிள்ளைகளுக்கு மூன்று வயது பூர்த்தியானதும் அவர்களுக்கு கல்வி கற்பிக்க ஆயத்தமாவது தமிழர் மரபில் காணப்படுகின்றது. விஜயதசமி அன்று ஏடு தொடக்குதல் நடைபெறும். குரு, ஆசிரியர்கள் மற்றும் கல்விமான்களினால் ஏடு தொடக்கி வைக்கப்படும்.

**உளவளத்துணை அம்சங்கள்**

- சமவயதுக் குழந்தைகளுடன் இணைந்து செயற்பட இச்சடங்கு உதவுகிறது. (சமூகமயமாதலுக்கு)
- பிள்ளைகள் கல்வி மூலம் சிறந்த பண்புள்ளவர்களாக வளர வேண்டும் என்ற சமூகப் பொறுப்பை இச்சடங்கு உணர்த்துகின்றது.

## திருநீறு போடுதல்

தமிழர் பிரதேசத்து சைவசமய மக்களால் கடைபிடிக்கும் முறை திருநீறு போடுதல் ஆகும். நெருக்கீடுகளுக்கு ஆளானவர்கள் இம்முறை மூலம் பயனடைகின்றனர். உள்ளூர்களில் திருநீறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடுதல் ஆலய பூசகரினால் மேற்கொள்ளப்படுகின்றது. பூசையின் பின் கலையாடி திருநீறு போடுதல் இடம் பெறுகின்றது. இதைப் பார்வை பார்த்தல் என்றும் கூறுவர்.

## உளவளத்துணை அம்சங்கள்

- மெய்பாட்டு முறைப்பாடுகளைக் கூறும் ஒருவருக்கு திருநீறு போடுதல் மூலம் குணப்படுத்த முடியும்.
- நெருக்கீட்டிற்கு தீர்வு முறையாக இதைக் கொள்ளலாம்.
- கெட்ட ஆவிகளில் நம்பிக்கையுள்ளவர்கள் திருநீறு போடுதல் மூலம் ஆவியை விரட்ட முடியும்.

## நூல் கட்டுதல்

உள நெருக்கீட்டிற்கு உள்ளானவர்களுக்கும் உளசமூகப் பிரச்சனைகளுக்கு உட்பட்டவர்களும் நூல்கட்டுதல் மூலம் தீர்வு காணமுடியும். பொதுவாக எல்லா ஆலயங்களிலும் பூசகர்களால் நூல் கட்டப்படுகின்றது.

## உளவளத்துணை அம்சங்கள்

- மெய்ப்பாட்டு முறைப்பாடு கூறுபவர்களுக்கு நூல் கட்டுதல் மூலம் தீர்வு காணமுடியும்.
- நெருக்கீட்டிற்குள்ளானவர்கள் அதிலிருந்து மீள்வதற்கு நூல் கட்டுதல் துணைபுரிகிறது.
- பதகளிப்பு, அச்சநோய் (Anxiety , Phobia) போன்றவற்றிற்கு நூல் கட்டுதல் தீர்வாக அமையும்.

## பேய் விரட்டுதல்

தமிழர் பாரம்பரியத்தில் பேய்,பிசாசு,முனி என்பவற்றின் மீதான நம்பிக்கை காணப்படுகின்றது. பலர் செய்வினை சூனியம் போன்றவற்றில் நம்பிகை உடையவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் தமக்கு ஏற்படும் உடல், உளப்பிரச்சினைகளுக்கு பேய், பிசாசு போன்றவற்றைக் காரணமாக நினைக்கின்றனர்.

உடல், உள ரீதியான பிரச்சனைகளுக்கும் நோய்களுக்கும் பேய், பிசாசு காரணம் என நம்பும் மக்கள் சில பூசகர்களை நாடி தம்மீதுள்ள பேயினை விரட்டுகின்றனர். இவ்வாறு பேய் விரட்டுவதற்கு எமது பிரதேசங்களில் பலர் காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உளவள நன்மைகள்.

- உளநெருக்கடிக்களைத் தீர்க்க பேய் விரட்டுதல் மூலம் உதவலாம். அதாவது பிரச்சினைக்குட்பட்டவர் தன்மீதுள்ள தீயசக்தி அகன்றுவிட்டது என நினைத்து நெருகீட்டில் இருந்து மீண்டுகொள்வார்.
- மெய்பாட்டு முறைப்பாடுகளைக் கூறுவோருக்கு இம்முறை பலனளிக்கும் (பேய்மீது நம்பிக்கையிருந்தால் மட்டும் இம்முறை பலனளிக்கும்)

## இயத்து

வன்னிப் பிரதேசத்தில் ஒரு தனித்துவமான சடங்காக இயத்துக் கட்டுதல் விளங்குகின்றது. இயத்து என்பது ஒரு பானையில் தெய்வத்தின் மருந்துப் பொருட்களை (திருநீறு, சந்தனம், குங்குமம் மற்றும் பூசைப் பொருட்கள்) இட்டு விசேட பூசைகள் செய்து ஊர் மக்களால் எடுத்துச் சென்று ஊரின் மையப்பகுதியில் கட்டப்படும். இது தெய்வத்தின் (அம்மனின்) புனிதப்பொருளாக மக்கள் நோக்குவர். இயத்துக் கட்டுவதன் நோக்கங்களாக ஊரில் சண்டை, சச்சரவு, முரண்பாடுகள் நீங்கி ஊர் செழிக்க ஊர்காவலுக்கு மற்றும் தீய சக்திகளில் இருந்து ஊரைக் காப்பற்ற இதுபோன்ற காரணங்களுக்காக இச்சடங்கு நடைபெறுகின்றது.

## உளவளத்துணை அம்சங்கள்

- ஊர் மக்களிடையே ஒற்றுமை வலிமையடையும்
- ஊர் மத்தியில் இயத்து காணப்படுவதால் சமாதான எண்ணம் மக்களிடையே நினைவில் இருக்கும்.
- ஊருக்கு தீயது நடைபெறாது என்ற நம்பிக்கையில் மக்கள் முயற்சி யைக் கைவிடமாட்டார்கள்.

வன்னியில் பனங்காமம், சிடாச்சூரி, வன்னிவிளாங்கும் ஆகிய இடங்களில் இது காணப்படுகின்றது.

## காவடி

தமிழர் மரபில் காவடி கலையாக நோக்கப்படுகின்றது. இக்கலையினை ஆலயங்களில் நிகழ்த்தி தமது நேர்த்திக்கடன்களை மக்கள் செலுத்துகின்றனர். காவடி எடுப்பவர்கள் தமது நேர்த்திக்கு ஏற்ப முட்களை குத்தி காவடி எடுப்பார்கள். 108 முட்கள் குத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவடி எடுப்பவர்களையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

காவடியானது தாளத்துடன் ஆடுதலை அனைவரும் விரும்புவர். எனவே தாளத்திற்காக பறை அல்லது உடுக்கு அல்லது நட்டுவ மேளம் இசைக்க காவடி ஆடுதல் நடைமுறையில் காணப்படுகின்றது. இவற்றைவிட பறைவைக்காவடி, தூக்குக் காவடி என்பனவும் நேர்த்திக்காக எடுக்கப்படுகின்றன. இவ்வாறு காவடி எடுப்பவர்கள் பொதுவாக வன்முறைகளில் பாதிக்கப் பட்டோர் சித்திரவதைக் குட்பட்டோர், விபத்துக்களில் இருந்து மீண்டோர் மற்றும் நோய்களில் இருந்து மீண்டோர் இவற்றைவிட பிள்ளை வரம் வேண்டியும் வாழ்வில் வெற்றியடைய வேண்டியும் காவடி எடுக்கப்படுகின்றது. இவற்றைவிட குற்றச்செயலில் ஈடுபட்டோர் பாவமன்னிப்பிற்காகவும் குற்றவுணர்வைப் போக்கவும் காவடி எடுக்கப்படுகின்றது.

## உளவளத்துணை அம்சங்கள்

- நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கு உதவும்
- சித்திரவதை, வன்முறை போன்றவற்றில் பாதிப்படைந்தவர்கள் மனவடுவிற்கு ஆளாவர் அவர்களுக்கான சிகிச்சை முறையாக காவடியினை நோக்கலாம்.
- சமூகக்சடங்காக காவடி காணப்படுகின்றது. சமூக ஒற்றுமை கூட்டுச்செயற்பாடு என்பன இங்கு காணப்படுகின்றது.
- காலால் உதைத்து ஆடுவதால் கோபத்தை குறைக்க உதவும்.

## சிறுவர் அரங்கு

பாடசாலைகளில் பொதுவாக ஆரம்ப, இடைநிலைப்பிரிவு மாணவர்களால் சிறுவர் அரங்கு நிகழ்த்தப்படும். நாடகம், கூத்து, குழுநடனம், நடனம் போன்ற கலை நிகழ்வுகள் சிறுவர் அரங்கினுள் நாம் நோக்கலாம். சிறுவர் அரங்கு சிறுவர்களின் ஆளுமை விருத்தி, பிரச்சனைகளில் இருந்து விடுவிப்பு, சுயதிருப்தி, தன்னம்பிக்கை, எதிர்காலத்தில் நம்பிக்கை போன்றவற்றை ஏற்படுத்த மிகப்பொருத்தமான வழிமுறையாக சிறுவர் அரங்கு காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபரக் கிரியைகள் / அபரச் சடங்குகள்

ஒருவர் இறந்த பின்னர் அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டி உறவினர்களால் செய்யப்படும் சடங்குகள் அபரச் சடங்குகள் எனலாம். அபரச் சடங்குகள் - தகனக்கிரியை, அந்தீசஞ்சயனம், அந்தியேட்டி, ஏகோதிட்டம், சபீண்டீகரணம், மாசியம், சிரார்த்தம் எனப் பல பகுதிகள் உள்ளன.

மனிதன் வாழ்வில் மரணம் தவிர்க்க முடியாதது மரணம் பிரிவுத்துயரை ஏற்படுத்துவதால் இத்துயரை படிப்படியாகக் குறைக்க மேற்படி சடங்குகள் (அபரச் சடங்குகள்) உதவிபுரிகின்றன.

### மரணச்சடங்கு

### மரணச்சடங்கில் உள்ள முக்கிய விடயங்கள்

உடற் சுத்தி :-

இறந்தவரின் உடலை சுத்தம் செய்து புத்தாடை அணிந்து சிவாச்சாரியாரால் கிரியைகள் மேற்கொள்ள வேண்டும்.

சுண்ணம் இடித்தல் :-

பாவம் நீங்க சுண்ணம் இடிக்கப்படுகின்றது. பாவங்கள் அகன்று திருவருள் உண்டாக பந்தம் ஏற்றி பின் திருமுறைகள் ஓதப்படும்.

ஒப்பாரி சொல்லி அழுது கவலையை வடிய விடுவார்கள்.

### உளவளத்துணை அம்சங்கள்

- இழவிரக்கம் / மனச்சோர்வு / நெருக்கீடு ஏற்பட்டால் இவற்றைக் குறைப்பதற்கு சடங்குகள் உதவுகிறது. இறந்தவரின் ஆன்மா இறைவனடி சேர்கிறது., எனச் சடங்குகளின் மூலம் உணரப்படுவதால் மனம் திருப்தி அடையும்.
- சமூகத்தவரின் ஒத்துணர்வு
- இறந்தவரின் நிறைவான வாழ்க்கை வாழ்ந்தார் என மனம் திருப்தியடைகிறது.

## அந்தி சஞ்சயனம் / காடாற்றல்

மயானத்தில் அக்கினியுடன் சங்கமித்த உடலின் சாம்பலை புனித தீர்த்தத்தில் கரைத்தல். இதனால் ஆன்மா புண்ணிய உலகம் செல்லும் என்பது நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி / சபீண்டீகரணம்

இறந்து 31ம் நாளில் செய்யப்படுவது இன்றைய நாளில் துடக்குக் கழிக்கப்படும். இறந்தவரில் குற்றங்களை நீக்கும் கிரியை இதுவாகும். இது புண்ணிய நீர்க்கரையில் நிகழ்த்தப்படும். இறந்தவரின் உடலை மாவினால் செய்து மீண்டும் ஒரு முறை தகனம் செய்யப்படும். இது மீண்டும் நினைவுபடுத்துவதாக அமையும்.

சபீண்டீகரணம் என்பது தேவருக்கு தானம் செய்தலைக் குறிக்கும். உற்றார் உறவினருக்கு உணவளிக்கப்படும். ஆண்டுத்திவசம் இத்தினத்தில் ஆன்மா மோட்சம் பெறும் என்பது ஐதீகம்.

மேற்படி பாரம்பரிய முறைகள் உளவளத்துணைக்கு பெரிதும் உதவுகின்றன. இப்பாரம்பரிய முறைகளை ஊக்குவிப்பதன் மூலம் உளவளத்துணை நாடிகளை மிக இலகுவாக சமநிலை அடையச்செய்ய முடியும். எனவே பாரம்பரிய முறைகளில் பயனில்லை என ஒதுக்காது உளவளத்துணையாளர்கள் பாரம்பரிய முறைகளை அறிந்திருக்க வேண்டியதுடன் அவற்றினை மேற்கொள்ள ஊக்குவிக்க வேண்டும்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கையும் அயல்நாட்டு வணிகத் தொடர்புகளும்

செல்வி ஈ.கௌதமி
யாழ் பல்கலைக்கழகம்

இலங்கையின் அமைவிடமானது தென்னிந்தியாவின் தென் பகுதியில் குறிப்பாக தமிழகத்திற்கு மிக அண்மையில் அமைந்துள்ளது. இலங்கை வரலாறு இந்திய பண்பாட்டுச் செல்வாக்கிற்கு உட்பட்டு வளர்ந்தாலும் அதன் ஆதிகால, இடைக்கால அரசியல், பொருளாதார, பண்பாட்டு வரலாறு பெருமளவிற்கு தமிழகத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டு வளர்ந்ததற்கே அதிக சான்றுகள் காணப்படுகின்றன. அதில் இலங்கை தமிழக உறவின் குறுக்கு நிலமாக வட இலங்கை காணப்படுவதால் தமிழகத்தில் காலத்திற்கு காலம் தோன்றி வளர்ந்த பண்பாட்டை முதலில் உள்வாங்கிக் கொள்ளும் தொடக்க வாயிலாக இப் பிராந்தியம் இருந்துள்ளது எனலாம். ஆதியிலிருந்து வட இலங்கைப் பிரதேசத்திற்கும் தமிழகத்திற்கும் இடையிலுள்ள தீவுகள் ஓர் இணைப்புப் பாலமாக இருப்பதனால் தமிழக செல்வாக்கிற்கு இப் பிராந்தியம் உட்பட்டிருக்கும் என கூறலாம்.

இலங்கையின் ஆதிகால, இடைக்கால வரலாறு கூறும் இலக்கியங்கள் மற்றும் தொல்லியல் சான்றுகள் இலங்கையின் அயல் நாட்டு உறவுகளில் வட இலங்கைத் துறைமுகங்களே அதிக பங்கு வகித்ததை உறுதிப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக பாளி இலக்கியங்களில் வட இலங்கையிலுள்ள மாதோட்ட பட்டின(ம்), ஜம்புகோளப்பட்டின(ம்) ஊடாகவே அயல் நாட்டு உறவுகள் நடைபெற்றதாகக் கூறுகின்றன. இலங்கையின் ஏனைய துறைமுகங்களை தொட்ட எனப் பாளி மொழியில் கூறும் போது இவ்விரு துறைமுகங்களையும் பட்டின(ம்) எனக் கூறியிருப்பது சிறப்பாக நோக்கத்தக்கது. (புஸ்பரட்ணம்.ப 2013.24) இந்த அயல் நாட்டு உறவில் குறிப்பாக வணிக உறவில் வட இலங்கையின் அமைவிடத்திற்கு முக்கிய பங்குண்டு என்பதை சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இதன் அமைவிடம் மேற்கே இந்திய, உரோம், பாரசீக, அராபிய நாடுகளுடனும் கிழக்கே தென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்காசிய, கிழக்காசிய நாடுகளுடனும் நடைபெற்ற கடல் சார் வாணிபத்தில் முக்கிய பரிவர்தனை மையங்களைக் கொண்ட பிரதேசமாக இருந்துள்ளது. இதையே வட இலங்கைப் பிரதேசத்தில் கிடைத்து வரும் தொல்லியல் ஆதாரங்களும் உறுதி செய்கின்றன.

இலங்கையின் அயல் நாட்டு வணிக உறவு பற்றி அறிய இலக்கிய ஆதாரங்கள், தொல்லியல் சான்றுகள் என்பன உதவுகின்றன. இலக்கியங்களிலே இலக்கிய மூலாதாரங்களான பாளி, சிங்கள இலக்கியங்கள் குறிப்பிடதக்கன. இவற்றுள் பௌத்த ஜாதகக் கதைகள், தீபவம்சம், மகாவம்சம், மகாவங்ஸடீகா, ஸமந்தபாஸாதிக, ரஸவாகினி, சகஸவத்துவகரண, சிகளவத்துபகரண, புதுசரண, பூஜாவலிய இந்திய இலக்கியங்களான மகாபாரதம், அர்த்தசாஸ்திரம், மணிமேகலை, பாலராமாயணம், ராஜதரங்கனி என்பன குறிப்பிடதக்கன. வெளிநாட்டார் குறிப்புகளிலிருந்தும் இலங்கை அயல் நாடுகளுடன் கொண்டிருந்த வணிக தொடர்புகள் பற்றி பெருமளவிற்கு அறியமுடிகிறது இவைகளுக்குள்ளே ஸ்ராபோ பெரிப்புளுஸ் ஆசிரியர், தொலமி, பிளினி, பிற கொப்பியஸ், கொஸ்மஸ், பாகியன், யுவான்சுவாங், இத்சிங், சௌயூ - குவா, மார்க்கோபோலோ, இபின்பதூதா போன்றவர்களின் குறிப்புகள் குறிப்பிடதக்கன.

தொல்லியல் மூலகங்களிலே சாசனம் எனும் அடிப்படையில் நோக்கினால் கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளைச் சேர்நத பிராமிக் குகைச்சாசனங்களிலே வர்த்தகம் சம்பந்தமான குறிப்புகள் வருகின்றன. பிற்பட்ட காலத்தை சேர்ந்தவையாக இலங்கையின் பல பாகங்களிலும் கிடைக்கும் சாசனங்களும் எமக்கு வர்த்தகம் பற்றி தகவல் தருகின்றன. முதலாம் பராக்கிரமபாகுவின் நயினாதீவு கல்வெட்டு சிறப்பிடம் பெறுகின்றது. மேலும் காலி மும்மொழிக்கல்வெட்டும் சிறப்பாக குறிப்பிடத்தக்கது. தொல்லியல் மூலங்களிலே பிற தொல்லியல் சான்றுகளான வடஇலங்கைத் துறைமுகங்களிலும் உள்நாட்டு பிரதேசங்களிலும் கிடைக்கும் வெளிநாட்டு நாணயங்கள், உடைந்த பொருட்கள், மட்பாண்ட ஓடுகள், சிறுமணிகள் என்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடதக்கன. நாணயங்களிலே இந்திய, உரோம, அராபிய, சீன நாணயங்கள் குறிப்பிடத்தக்கன.

இந்து சமுத்திரத்திலே நிலவிய வர்த்தகத் தொடர்பின் போது பல்வேறு காலகட்டங்களிலே வட இலங்கையின் முக்கியத்துவம் கூடியும் குறைந்தும் காணப்பட்டது. அந்த பின்னணியிலே தான் வட இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தின் தன்மை, அளவு பற்றி அறிய முடியும். இந்த வகையில் கிறஸ்தவ சகாப்தத்தின் தொடக்க காலத்தில் இருந்து கிறஸ்துவுக்கு பிற்பட்ட ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுவரை கிரேக்க, உரோமர்களின் வர்தக ஆதிக்கம் மோலோங்கி இருந்து. உரோமப் பேரரசு வீழ்ச்சி அடைய பாரசீகர், அராபியர், பல்லவர்களின் வர்த்தக நடவடிக்கைகளும் இடம் பெற்றன. இடைக்காலம் எனப்படும் கி.பி 10ஆம் நூற்றாண்டு தொடக்கம் 17ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதிகளில் அராபிய, சோழ, சீனா, தென்கிழக்காசிய நாடுகள் போன்றன வர்த்தகத்தில் நிலையமாக அமைந்து கொள்ளும் வாய்ப்பேற்பட்டது.

வட இலங்கையின் அமைவிடமும் இங்கு இயற்கையாக கிடைத்த வணிக பொருட்களும் பண்டுதொட்டு அயல் நாடுகளுடன் வணிகத் தொடர்புகளை ஏற்படுத்த காரணமாக அமைந்தது. ஆதியில் வட இலங்கையின் வணிகத் தொடர்புகள் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோற்றம் பெற்றதை மாந்தை, பூநகரி, கந்தரோடை ஆகிய மையங்களில் கிடைத்த சில வகை மட்கலன்கள், கல்மணிகள், உலோகப்பொருட்கள் என்பன உறுதி செய்கின்றன.

இவ் வர்தகத்திலே தென்னிந்தியா சிறப்பாகத் தமிழ் நாடு முக்கிய பங்கு வகித்துள்ளது. வர்த்தகத்திலே தமிழ்நாடு முக்கிய பங்கு வகித்ததை அனுராதபுரம், வவுனியாவில் பெரியபுளியங்குளத்திலிருந்து கிடைத்த மூன்று பிராமிச்சாசனங்கள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் இங்கிருந்த தமிழ் வர்த்தகர்களை 'தமிட வணிஜ' எனக் குறித்துள்ளன. இதே போன்று தமிழ் நாட்டில் கிடைக்கப்பெற்ற சில தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகளில் 'ஈழவாணியர்' பற்றிய குறிப்புகள் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுகின்றன. குறிப்பாக சித்தன்னவாசல், புகலூர், போன்ற இடங்களில் கிடைத்த கல்வெட்டுக்களைக் குறிப்பிடலாம்.

கி.மு 1ஆம் நூற்றாண்டிலிருந்தே இலங்கையுடன் உரோமர் வணிக உறவுகளை பேணியுள்ளனர் என்பதை இலங்கையிலும் கிழக்குத்தமிழகத்திலும் கிடைக்கும் உரோம நாணயங்கள் உறுதி செய்கின்றன. ஆயினும் கிறிஸ்துவுக்கு பிற்பட்ட நூற்றாண்டுகளில் இருந்து வட இலங்கை உரோம நாட்டுடன் நெருக்கமான வணிக தொடர்புகளை கொண்டிருந்தமைக்கு சான்றுகள் கிடைத்துள்ளன. கி.பி 1ஆம் நூற்றாண்டிற்குரிய பெரிப்பிளஸ் என்ற கிரேக்க நூலில் உரோம வணிகர்கள் இலங்கைக்கு வராமலே ஆரம்பத்தில் தென்னிந்திய துறைமுகங்களில் இலங்கைப் பொருட்களைப் பெற்று திருப்தியடைந்தனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (Schoff, W.H, 17.227-230) கிறிஸ்தவ சகாப்தத்தில் உரோம பேரரசில் ஏற்பட்ட அமைதியும் ஹிப்பலஸ் பருவக்காற்றின் உதவியை கண்டு பிடித்தமையும் உரோம அரசின் செல்வமும் அரசியல் அமைதியும் கீழைத்தேய வாசனைப் பொருட்களுக்கு மேற்கு நாடுகளில் மதிப்பை ஏற்படுத்தியது. இதனால் உரோம வர்த்தகர்களின் வருகை தமிழ் நாடு, ஆந்திரம், இலங்கை முதலான பிரதேசங்களில் அதிகரித்தது. உரோமரோடு தமிழ்நாடு கொண்ட வர்த்தக உறவைப் பட்டினப்பாலையும் மதுரைக்காஞ்சியும், சிறப்பித்துக் கூறுகின்றன. இதை அரிக்கமேடு, உறையூர், கரூர், காவரிப்பூம்பட்டினம், காஞ்சிபுரம், கொடுமணல் முதலான இடங்களிற் கிடைத்த உரோம நாட்டுத் தொல்பொருட்சின்னங்கள் உறுதி செய்கின்றன. தொலமி, பிளினி ஆகிய மேற்கு நாட்டவரது குறிப்புகளிலும் இவ் வர்த்தக உறவு பற்றிக் கூறப்பட்டுள்ளது.

தொடக்க காலத்தில் தமிழ்நாட்டு வணிகர்கள் இலங்கை போன்ற நாடுகளில் இருந்து ஏலம், கறுவா, மிளகு போன்ற வாசனைப்பொருட்களையும் முத்து, இரத்தினம், யானை, யானைத்தந்தம், விலையுயர்ந்த கனிமங்கள் முதலான பொருட்களைப் பெற்று தென்னிந்தியத் துறைமுகங்கள் ஊடாக உரோமுக்கும் ஏனைய நாடுகளுக்கும் அனுப்பி வைத்தனர். அதே போல் இலங்கைக்குத் தேவையான குதிரை, சில உணவுப்பொருட்கள், பலதரப்பட்ட மட்பாண்டங்கள், உலோகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்கள், மதுவகைகள் என்பன தென்னிந்திய துறைமுகங்களுக்கு அனுப்பப்பட்டு பின்னர் அங்கிருந்து கொண்டு வரப்பட்டன. இந்நிலை கி.பி 1ம் நூற்றாண்டளவில் மாற்றமடைந்தது. உரோம நாட்டு வர்த்தகரே இலங்கையில் நேரடியாக வணிக நடவடிக்கையில் ஈடுபட்டனர். இவ் நேரடி வர்த்தகத்தின் போது வடஇலங்கைப் பிரதேசங்களும் முக்கிய பங்கு வகித்திருந்தன. இதனை மாந்தை, பூநகரி, கந்தரோடை, கோட்டை, வல்லிபுரம், ஆனைக்கோட்டை, வரணி போன்ற இடங்களிலிருந்து பெறப்பட்ட ரோமமட்கலன்கள், ரோமநாணயங்கள் குறிப்பாக வரணியிலும் கோட்டையிலும் பெறப்பட்ட தங்க உரோம நாணயங்கள், கண்ணாடிப்பொருட்கள் என்பன உறுதிப்படுத்து கின்றன. இச் சான்றுகளைப் பயன்படுத்தி ரோம வணிகர்களது மரக்கலங்கள் மாந்தை - பூநகரிப் பிரதேசத்திற்கும் வல்லிபுரம் - வரணிப் பிரதேசத்திற்கும் கச்சாய் - சாவகச்சேரிப் பிரதேசத்திற்கும் ஆனைக்கோட்டை - கந்தரோடை பிரதேசத்திற்கும் ஊடுருவி வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கலாம் என குறிப்பிடப் படுகின்றது. (கிருஸ்ணராசா.செ 2005.150) இப் பிராந்தியங் களிலிருந்து கடல்முத்துகள், யானைத்தந்தங்கள், இரத்தினக்கற்கள், மெல்லிய நூலாடைகள் என்பன வாணிபப் பொருட்களாக கைமாற்றப்பட்டன என அறிய முடிகிறது. கந்தரோடையிலிருந்து சங்குவளையல்களும் கார்ணேலியன் மணிகளும் மான் கொம்புகளும் ரோம வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப் பட்டிருந்தமையை தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. சம காலத்திலே அனுராதபுரம், பொம்பரிப்பு, பொலநறுவை, திருகோணமலை போன்ற இடங்களிலும் ரோம வர்த்தக தொடர்பு இருந்ததை தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. மேலும் உரோமரின் இவ் வணிக நடவடிக்கை கி.பி 5ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து இருந்தமையும் சான்றுகள் பிரதிபலிக்கின்றன.

உரோமரின் வர்த்தகத் தொடர்புகள் வட இலங்கையில் கி.பி 1ஆம் நூற்றாண்டில் இருந்து ஏற்பட்டிருக்கலாம் என்பதை மாந்தை, பூநகரி, கந்தரோடை, ஆனைக்கோட்டை, வல்லிபுரம், கோட்டை, வரணி போன்ற இடங்களில் மிகச் செறிவாகக் கிடைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரோமமட்கலங்கள், உரோமநாணயங்கள் மற்றும் கண்ணாடிப் பொருட்கள் என்பன உறுதிப்படுத்துகின்றன.

இங்கு கிடைத்த மட்பாண்ட வகைகளில் றௌலெட் மட்பாண்டங்கள் (Rouletteware) அரிட்டைன் மட்கலங்கள் (Arretine Ware) ஆம்போரா சாடி (Amphorae Jar) என்பன சிறப்பாக குறிப்பிடத்தக்கன. உரோம வர்த்தகத்தில் மதுபானம், எண்ணெய் போன்ற திரவப் பொருட்களைப் பாதுகாக்க ஒரு வகைச் சாடி பயன்படுத்தப்பட்டது. இவை 'ஆம்போராச்' சாடிகள் என அழைக்கப்பட்டன. இவை மிருதுவான களிமண்ணால் வனையப்பட்டு பழுப்பு நிறத்தினை உடையனவாக இருக்கும். இவற்றின் அடிப்பகுதி கூராகவும் வாய்ப்பகுதி மூடியதாகவும் கழுத்துப்பகுதியின் இரு புறமும் கைபிடிகள் இருப்பதனால் ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு எடுத்துச் செல்லவும் கூர்மையான அடிப்பகுதி இருப்பதனால் நிலத்தில் ஊன்றி வைப்பதற்கு வசதியாக இருந்தது. இவை தமிழ் நாட்டின் அரிக்கமேடு, வசவசமுத்திரம், கரூர் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. வட இலங்கைப் பிரதேசங்களின் அகழ்வாய்வில் இவ்வகைச் சாடிகள் முழுமையாகவும் உடைந்த பாகங்களாகவும் கிடைத்துள்ளன. இவை உரோம நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டதால் வட இலங்கைப் பிரதேசமும் உரோமரின் நேரடி வர்த்தகம் நடைபெற்ற பிரதேசம் எனக் கொள்ளலாம்.

வட இலங்கை, தென்னிந்திய வர்த்தகத்தில் உரோமரது செல்வாக்கு கி.பி 5ம் நூற்றாண்டிலிருந்து படிப்படியாக வீழ்ச்சியடைய மேற்காசியாவில் ஏற்பட பாரசீக, அராபியரின் வர்த்தக எழுச்சி இப் பிராந்தியங்களில் செல்வாக்குப் பெற காரணமாகியது. சம காலத்தில் அதாவது கி.பி 6ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 9ம் நூற்றாண்டின் இறுதி வரைக்கும் தென்னிந்தியாவில் பேரரசு ஒன்றை அமைத்த பல்லவ வம்சத்தினரின் செல்வாக்கு இலங்கையிலும் காணப்பட்டது. தென் இலங்கையிலுள்ள தொந்திரா எனப்படும் தெய்வேந்திரமுனையில் காணப்படும் உபுல்வன் கோயிலும் மணிக்கிராமத்தார் பல்லவர்களது அரச ஆணையைப் பெற்ற வர்த்தக நடவடிக்கைக் குரிய மையங்களாக காணப்படுகின்றன என்பது இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடதக்கது. வட இலங்கையில் யாழ்ப்பாண தீபகற்பத்தின் கண் வியாபாரிமூலை, தம்பசெட்டிப் பகுதிகளில் பல்லவர் கால வர்த்தகச் செழிப்பினை வெளிப்படுத்தும் பண்பாட்டு கோலங்கள் இற்றை வரைக்கும் காணப்படுவது குறிப்பிடதக்கது. இதே காலப்பரப்பில் முன்பு போல தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்கும் மிக நெருங்கிய வர்த்தக உறவு இருந்ததை தென்னிந்திய வணிகக்குழுக்கள் இலங்கை வருகை தந்து இங்குள்ள வர்த்தகத் தளங்களில் தங்கியிருந்து வாணிப நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர் என்பதை உறுதிப்படுத்தும் சாசனங்கள் சான்று பகர்கின்றன. இக் காலப்பரப்பிலே மேலைத்தேய , கீழைத்தேய வர்த்தகத்தில் பாரசீகர்களும் அராபியர்களும் இடை நிலை வர்த்தகர்களாக பங்கு பெற்றிருந்தனர்.

வெளிநாட்டு வணிகர்கள் மற்றும் அவர்களின் முகவர்கள் பண்டைய காலத்திலிருந்தே இலங்கையில் இருந்துள்ளனர். வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு இலங்கையில் குடியுரிமை இருந்ததாக வரலாற்றுப் பதிவுகள் குறிப்பிடுகின்றன. எடுத்துக் காட்டாக கி.பி 6ம் நூற்றாண்டில் கொஸ்மஸ் தனது நூலை எழுதும் போது இலங்கையில் பாரசீகத்தவரின் குடியேற்றம் காணப்பட்டதாக எழுதியுள்ளார். (Comas – *364-372)* அவ்வாறன பாரசீகத்தவரின் குடியேற்றம் ஒன்று அனுராதபுரத்தில் இருந்தமைக்கான தொல்லியல் சான்றாக நெஸ்ரோறியன் சிலுவைச் சின்னம் பொறிக்கப்பட்ட கற்சிற்பமாகும். (H.W.Codrington - *1924)* இதன் காலம் கி.பி 4ஆம் நூற்றாண்டு என கருதப்படுகின்றது. இதே சிலுவைச் சின்னத்தை தாங்கிய அச்சுக்குத்தப்பட்ட முறையிலான வெள்ளி நாணயம் ஒன்று வாசகம் பொறிக்கப்பட்ட நிலையில் அண்மைக் காலத்தில் பேராசிரியர் கிருஸ்ணராசாவினால் வட இலங்கையிலுள்ள கந்தரோடையின் மண்படைகளிலிருந்து மீட்கப்பட்டு ஆராயப்பட்டது. நீள் சதுரமான இவ் வெள்ளி நாணயத்தின் முற்பக்கத்தில் நெஸ்ரோறியச் சிலுவைச் சின்னமும் அதன் கீழ்ப் பிராமி வரிவடிவமும் சமஸ்கிருத வரிவடிவமும் கலந்த நிலையில் பொறிக்கப்பட்ட 'மாதிரேக்க காஸீஸ' என்ற வாசகமும் பொறிக்கப்பட்டு காணப்படுகின்றது. வரிவடிவ அமைதியில் கி.பி 4ம் நூற்றாண்டுக்குரிய பண்பினைக் கொண்ட இந் நாணயமானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தரோடையை மையமாகக் கொண்டு நெஸ்ரோறிய கிறிஸ்தவர்களால் மேற் கொள்ளப்பட்ட வாணிப நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதாக உள்ளது. (கிருஸ்ணராசா.செ 2005.156) கி.பி 7ஆம் நூற்றாண்டு சீனா நோக்கிப் பயணம் செய்த இந்திய புத்ததுறவியான வஜ்ரபோதி பொ-த்சி-லீ (Po-tchi-li) என்ற துறைமுகத்தில் முப்பத்தைந்து பாரசீக கப்பல்கள் கண்டதாகவும் அவை விலையுயர்ந்த கற்களைப் பெறுவதற்காக வந்திருந்தன எனவும் குறிப்பிடுகின்றார். சான்றாதாரங்களின் படி மகாதீர்த்தமே இதுவாக இருக்க முடியும் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

இக்காலப்பரப்பில் எதியோப்பியர்களும் பாரசீகர்களும் இலங்கையில் இந்தியர்கள் கொண்டு வரும் சீனப்பட்டுகளை வாங்கினார் என பிறோகொப்பியஸின் நூல் குறிப்பிடுகிறது. இதிலிருந்து இலங்கை முக்கிய பரிவர்த்தனை நிலையமாக விளங்கியது என்பது தெளிவாகிறது. சீனா, இந்தியா, எதியோப்பியா, பாரசீக நாடுகளின் கப்பல்கள் தமது பண்டங்களை இலங்கைக்கு கொண்டு வந்து வேறு துறைகளுக்கு அனுப்பி யுள்ளனர். இத்துடன் பாரசீகக்கப்பல்கள், இந்தியக் கப்பல்கள், சீனக்கப்பல்கள், தென்கிழக்காசியநாட்டுக்கப்பல்கள் வட இலங்கைத் துறையான மகாதீர்த்தத்திலே சந்தித்துக் கொண்டன. இக் காலத்தில் மகாதீர்த்த துறைமுகம் கடல் வர்த்தகத்தின் நடு நிலையமாகவும் வர்த்தகப் பரிவர்த்தனை நிலையமாகவும் உன்னதமான ஓர் இடத்தைப் பெற்றதெனலாம். இதனை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் தீபெஸ் என்ற அறிஞர் இலங்கையின் சந்தைகள் எதியோப்பிய, பாரசீக வணிகர்களால் நிறைந்திருப்பதாகக் கேள்விப்பட்ட குறிப்பு விளங்குகிறது.

இது வரை வர்த்தகத் துறையிலே பாரசீகர் வகித்து வந்த முக்கியமான இடத்தினை அராபியர் பெருமளவில் பறித்துக் கொண்டனர். இதனால் ஆறாம் நூற்றாண்டிற்கும் பத்தாம், பதினொராம் நூற்றாண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் மேற்காசியா, இலங்கையிடையே அராபிய வர்த்தக உறவுகள் கூடுதலாக ஏற்பட்டு அரபுக் குடியேற்றங்களும் கரையோரத் துறைகளிலே ஏற்பட்டன. அராபியரின் வணிக உறவிலே வட இலங்கையும் முக்கிய பங்குவகித்ததை உறுதிப்படுத்தும் சான்றுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாந்தை, கந்தரோடை, பூநகரி, கோட்டை போன்ற இடங்களிலும் தமிழகத்தில் அரிக்கமேடு, மாளிகைமேடு போன்ற இடங்களிலும் கிடைத்துள்ளன. இவ்வராபியரின் வர்த்தக எழுச்சியில் மாதோட்டம் முக்கிய துறையாக விளங்கியதை அங்கு கண்டு பிடிக்கப்பட்ட செறிவான மட்கலன்கள் உறுதிசெய்கின்றன. இவ்வாறு வட இலங்கையுடனான அராபியரின் வணிக உறவை இலங்கை மையங்களில் கிடைத்த சில வகை அராபிய மட்பாண்டங்கள் உறுதிசெய்கின்றன.

கி.பி 10 ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி 13ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட கால இலங்கை வரலாற்றின் அயல் நாட்டு வணிக உறவுகளில் வட இலங்கைப் பிரதேசம் அதிக முக்கியத்துவத்தை பெற்றிருக்கலாம் என்பதை இங்கு கிடைத்த நாணயங்கள், மட்பாண்டங்கள், கல்வெட்டுக்கள் என்பன உறுதிசெய்கின்றன. மாந்தை, பூநகரி, கந்தரோடை, கோட்டை போன்ற இடங்களில் கிடைத்த அயல் நாட்டு நாணயங்களில் சோழ நாணயங்களும் எண்ணிக்கையில் அதிகமாகும். இங்கு சோழ நாணயங்களுடன் சோழரைத் தொடர்ந்து ஆட்சிபுரிந்த சேர, பாண்டிய அரசு கால நாணயங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் களஆய்விலும் அகழ்வாய்விலும் கிடைத்த சிலவகை மட்பாண்டங்கள் சோழர் கால மரபைச் சார்ந்தவையாக உள்ளன. இம் மட்பாண்டங்கள் தமிழகத்தில் தஞ்சாவூர், கும்பகோணம் போன்ற இடங்களில் கிடைத்த சோழர்கால மட்பாண்டங்களை நினைவுபடுத்துவனவாக உள்ளன. மாந்தை, ஊர்காவற்றுறை, கோட்டை போன்ற இடங்களில் கிடைத்த இராஜராஜன், இராஜேந்திரசோழன் போன்றோரது கல்வெட்டு ஆலயங்களுக்கு வழங்கப்பட்ட தானங்களையும் சோழப் படையெடுப்பு கூறுகிறது.

அத்துடன் சோழர் காலத்து பூநகரியிலுள்ள மண்ணித்தலை சிவாலயம், மாதோட்ட ஆலயங்கள் போன்றன இலங்கைப் பிரதேசங்கள் சோழரின் வணிக மையங்களாக மட்டுமன்றி குடியிருப்பு மையங்களாகவும் விளங்கியிருக்கலாம் என உணர்த்துகிறது. சோழரின் தலைநகராகப் பொலநறுவை விளங்கியபோதும் இவர்களின் அரசியல், இராணுவ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார, பண்பாட்டு செல்வாக்கு பெருமளவிற்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே காணப்பட்டன. பேராசிரியர் இந்திரபாலா கி.பி 993இல் முதலாம் இராஜராஜன் அனுராதபுர அரசை வெற்றி கொள்ள முன்னர் அவர்களின் ஆதிக்க மையம் யாழ்ப்பாணத்தில் அல்லது திருகோணமலையில் இருந்துள்ள தெனக் கூறுகின்றார். இக்கூற்றை யாழ்ப்பாணக் கோட்டையில் கிடைத்துவரும் சோழர்கால ஆதாரங்களும் தொடர்புபடுத்திப் பார்க்க இடமளிக்கிறது. (புஸ்பரட்ணம்.ப 2013.29) இக் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருமையங்களில் இருவேறு வணிக கணங்கள் குடியிருப்புகளை ஏற்படுத்தி செயற்படுத்தியிருந் தமைக்கான சான்றுகள் அண்மைக்காலத்தில் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் வடமராட்சி வதிரியிலுள்ள கோட்டைத்தெரு என்ற மையத்தில் கிடைக்கப்பெற்ற காளி தெய்வத்துடனான நீள் சதுரமான ஐம்பொன் நாணயமாகும். மத்திய கால மட்பாண்டக் குவியல்களுக்குள்ளிருந்து மீட்கப்பட்ட அந்நாணயம் நானாதேசிகனது வாணிப நடவடிக்கைளுக்குரியது என்பதனை அம்பாந்தோட்டை யிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சான்று உறுதிப்படுத்துகிறது. அடுத்து யாழ்ப்பாணக் கோட்டைக்கு அண்மையிலுள்ள ஐநூற்றுவன் வளவு என தற்காலம் வரை குறிப்பிடப்படுவதிலிருந்து ஐந்நூற்றுவர் வணிக கணங்கள் செயற்பட்டதை அறியமுடிகிறது. மேலும் இக்காலத்தில் அராபியர், சோழர், சீனர், தென்கிழக்காசியர் போன்ற வர்த்தகர்களின் மும்முரமான வணிக உறவால் வர்த்தக கொந்தளிப்பு உண்டாக்கியதால் வட இலங்கைத் துறைமுகங்கள் மிக முக்கியத்துவம் பெறத் தொடங்கின.

இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் கி.பி 5ஆம் நூற்றாண்டிலிருந்து ஏற்பட்ட வணிக, கலாச்சார உறவுகள் பற்றிச் சீன இலக்கியங்கள் கூறுகின்றன. அவற்றில் வட இலங்கையுடனான உறவுகள் பற்றிய குறிப்புகள் தெளிவற்றதாக இருப்பினும் வட இலங்கை முக்கிய பங்கு வகித்ததை மாந்தை, பூநகரி, கந்தரோடை, கோட்டை, அல்லைப்பிட்டி, சாட்டி முதலான இடங்களில் கிடைத்த சீன நாணயங்கள், மட்பாண்டங்கள், கண்ணாடிப் பொருட்கள், மரக்கலசிதைவுகள் என்பன உறுதி செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனப் பேரரசின் டாங் வம்ச மற்றும் சாங் வம்ச காலப் பகுதிகளிலேதான் வட இலங்கையுடனான வணிக உறவு நெருக்கமாக இருந்துள்ளதை அவதானிக்கலாம் ஏனெனில் இவ்விரு வம்ச கால ஆதாரங்களே வட இலங்கையில் அதிகம் கிடைக்கப் பெற்றுள்ளன. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட சீன நாணயங்களின் காலம் கி.பி 7ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலமாக கணிப்பிடப்படுவதால் இக்காலப் பகுதியில் சீன நாட்டவர் வட இலங்கைப் பிரதேசத்துடன் நெருங்கிய தொடர்பை கொண்டிருந்தனர் எனக் கூறலாம்.

சம காலத்தில் பொலநறுவை அரசு வட இலங்கையிலுள்ள ஊர்காவற்துறைமுகம் ஊடாக தென்னிந்தியா மற்றும் தென் கிழக்காசியா போன்ற நாடுகளுடன் அரசியல், பொருளாதார தொடர்புகளைப் பேணியதாக பாளி இலக்கியமான சூளவம்சம் கூறுகின்றது. இது உண்மையென்பதை நயினாதீவில் கண்டு பிடிக்கப்பட்ட கி.பி 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாம் பராக்கிரமபாகுவின் தமிழ்க் கல்வெட்டும் உறுதிசெய்கின்றது. இக்கல்வெட்டு ஊர்காவற்துறைமுக நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருந்த அதிகாரிகள் வெளிநாட்டு வணிகருக்கு செய்ய வேண்டிய ஏற்பாடுகளையும், அவர்களிடம் இருந்து பெற வேண்டிய வரி முறைகளையும் குறிப்பிடுகின்றது. இந் நிலையில் கோட்டைப் பகுதியில் பொலநறுவை அரசுகால நாணயங்கள் பல கிடைத்திருப்பது பொலநறுவை அரசு கால வெளிநாட்டு வர்த்தகத்தில் வட இலங்கைப் பிரதேசமே முக்கிய பங்கு வகித்திருக்கலாம் என்பதை கோடிட்டுக்காட்டுகின்றன.

மத்திய காலத்திலே யாழ்ப்பாண இராச்சியத்தின் பகுதிகள் கணிசமான முக்கியத்துவத்தைப் பெற்றன. தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்புகள் பெரும்பாண்மையும் அவற்றினூடாகவே நடைபெற்றன. ஆதிகாலம் முதலாக இலங்கையும் தென்னிந்தியாவும் ஒரு வர்த்தக வலயமாக இணைந்திருந்தன. அந்த வலயத்திலே உள்ள கடல்வழி வாணிபத்திலே இலங்கையின் வட பகுதியிலுள்ள துறைமுகங்கள் முக்கியத்துவத்தை பெற்றன. மாதோட்டம், ஊர்காவற்றுறை, காங்கேசன் துறை, கொழுப்புத்துறை, பருத்தித்துறை ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைமுகங்கள் பெருவளர்ச்சி பெற்றன. யாழ்ப்பாண இராச்சியத்திற் கிடைத்த யானைகளும் முத்து, சங்கு, சாயவேர் என்பன தென்னிந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. கி.பி 13ம் நூற்றாண்டிலிருந்து சர்வதேச வர்த்தகத்தில் கறுவாவும் முக்கிய இடம்பெற்றது. பாரசீகம், சீனா, இந்தியா போன்ற நாடுகளின் சந்தைகளுக்கு கணிசமானளவு விற்பனையாக்கப்பட்டது.

கி.பி 1284இல் வெனிஸ் நகரத்து பிரயாணியாகிய மார்க்கோபோலோ என்பவன் சீன தேசத்திலிருந்து மேலைத் தேசத்திற்கு போகும் மார்க்கத்தில் யாழ்ப்பாணத் துறைமுகம் ஒன்றில் இறங்கியதாகவும் யாழ்ப்பாணத்தைப் பற்றியும் தனது பிரயாண நூலில் விபரமாக குறிபிட்டுள்ளான். அக்காலத்தில் இலங்கை முழுவதும் 'சந்தமேன்' எனும் வட இலங்கை அரசனுடைய ஆட்சியில் இருந்தது என்றும் குடிகள் அரிசியும் எள்ளும் மாமிசமும் பாலும் உணவாக உண்டார்கள் என்றும் கள்ளும் அகிலும் மலிந்து விளங்கியிருந்தது என்றும் அகில் வேறிடங்களிலிருந்து கொண்டு வரப்பட்டு கோளமென்னுந் துறையிலிருந்து வேறுபிரதேசங்களுக்கு ஏற்பட்டது என்றும் இக்கோளம் என்னும் துறைமுகத்திற்கே சீனாவிலிருந்தும் அராபிய முதலிய மேலைத்தேசங்களிலிருந்தும் கப்பல்கள் வியாபாரம் காரணமாக வருவது வழக்கம் என்று கூறியிருக்கின்றார். முஸ்லீம் பிரயாணிகள் 'கலா' என்றதும் மார்க்கோபோலோ 'கோளம்' என்றதும் ஊராத்துறையே ஆகும். (இராசநாயகம் 1992) சந்தமேன் என்னும் பெயரால் அழைக்கப்பட்டவன் ஆரியச்சக்கரவர்த்திகளில் ஒருவனே என கருதப்படுகின்றது.

கி.பி 1292 காலப் பகுதியில் மொன்றிக்கொர்வீனோ எனுமிடத்திலுள்ள யோவான் என்னுங் கிறீஸ்தவ குரு யாழ்ப்பாணக் கடல் வழியாக பிரயாணம் செய்த போது அக்கடற்கரைகளில் ஆண்டுகள் தோறும் அறுபது மரக்கலங்களுக்கு மேல் மோதுண்டு உடைந்து கிடக்குமெனக் கூறியிருக்கிறார். அக்கூற்றிலிருந்து அக் கடல்வழியாக எவ்வளவோ ஏராளமான மரக்கலங்கள் போக்குவரத்துச் செய்தன என்பதும் முதலாம் பராக்கிரமபாகுவினால் நயினாதீவில் வரைந்து வைக்கப்பட்ட மரக்கல சேதம் பற்றியும் குறிப்பிடும் சாசனம் நினைவுகொள்ளத்தக்க சிறப்புடையது. கி.பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1344** அளவில் ஆபிரிக்க தேசத்து முகமதிய பிரயாணியான இபின்பதூதா என்பவன் அங்கிருந்து வந்து யாழ்ப்பாணத் துறைமுகப் பட்டினத்தை அடைந்த போது அங்கே ஆரியச் சக்கரவர்த்திகளின் திரண்ட கடற்படையையும் கடற்கரையில் பிறதேச ஏற்றுமதிக்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்த வியாபாரப் பொருட்களாகிய அகில், கறுவா முதலியவற்றை கண்டு அதிசயத்தான் எனவும் கூறுகின்றார்.

யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதிக்காலப் பகுதிகளில் குறிப்பாக கி.பி 5ஆம் நூற்றாண்டின் பின்னர் உள்நாட்டில் குழப்பங்கள் ஏற்பட்டதால் இந்து சமுத்திர வர்த்தகத்திலே இக்காலத்தில் ஆதிக்கம் செலுத்திய முகமதியர்களின் கைகளுக்கு இலங்கையின் வியாபாரம் மாறியது. அரேபிய தேசத்தில் தொடங்கி சீனதேசம் வரையும் அவர்களே வியாபாரம் நடத்தினார்கள். கீழைத்தேச நாடுகளான மலாய்நாடு, சீனா போன்ற பிரதேசங்களிலிருந்து வாசனைத்திரவியங்களை ஏற்றி வட இலங்கை கடல் வழியாக பாரசீகக்குடாக்கடலுக்கு சென்றது. இதனை போர்த்துக்கீச கப்பல்கள் சூறையாட முற்பட்டன. இதனால் போக்குவரத்துப் பாதை இலங்கையின் தென்பாகமாய் சுற்றி செல்வதாயின. இதனைத் தொடர்ந்து போர்த்துக்கீசரும் ஒல்லாந்தரும் இலங்கையைக் கைப்பற்றி வர்த்தக நடவடிக்கைகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இவர்கள் யானை, சாயவேர், புகையிலை, மிளகு, முத்துப் போன்றவை வட இலங்கைத் துறைமுகங்களூடாகவே பெரும்பாலும் ஏற்றுமதி செய்தனர். பின்னர் கொழும்புத் துறைமுகம் முக்கியத்துவம் பெற்றது.

தொகுத்து நோக்கும் போது வட இலங்கையின் அயல் நாட்டுத் தொடர்புகளை வெளிப்படுத்தும் இலக்கிய ஆதாரங்கள் மிக குறைவாகவே காணப்படுகின்றன. ஆனால் தொல்லியல் சான்றுகள் இதனைத் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. அந்த வகையில் வட இலங்கையுடன் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் மறைமுகமாகவும் கிறிஸ்தவ சகாப்தத்திலிருந்து நேரடி வர்த்தகத்திலும் உரோம் பங்கு கொண்டது. உரோமரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து பாரசீகர், அராபியர் போன்றோர் எழுச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றனர். பல்லவ, சேர, சோழ, பாண்டியரின் வணிக உறவும் நடைபெற்றிருக்கிறது. மேலும் தென்கிழக்காசிய, சீனா போன்ற நாடுகளுடன் இடைக்காலத்தில் சிறப்பாக வணிகம் நடைபெற்றுள்ளது. ஆரியச்சக்கரவர்திகள் மற்றும் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்திலும் வணிக உறவுகள் நடைபெற்றன. வணிக நடவடிக்கைகள் விதிகளுக்கமைவாக நடைபெற்றதற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. இவ்வாறு வட இலங்கை அயல் நாடுகளுடன் வணிக தொடர்பினை மேற்கொள்ள அதன் நிலையமும் பாதுகாப்பான இயற்கையான பல துறைமுகங்களை கொண்டு விளங்கியதும் பண்டப்பரிவர்த்தனையின் மையமாக விளங்கியமையுமே காரணமாகும் எனில் மிகையாகாது.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் ஆயுளுடன் நோய் இன்றி வாழும் இயல்பான முறைமைகள்

**Dr.சி.ஹரிகரன்**
**சித்தமருத்துவர்.**
**லங்கா சித்த ஆயுர்வேத கல்லூரி**
**உபஅதிபர்.**

**ஆ**று அறிவு படைத்த மனிதன் மட்டுமே உணவின் வெகுமதி தெரியாது அங்கும் இங்குமாக அலைகின்றான். வானத்தின் உச்சத்தில் பறக்கும் மிகச் சிறிய குருவிகளைப் பாருங்கள் அவர்கள் எவ்வளவு பௌத்திரமாக தானியங்களை பூச்சி புழுக்களை நேரமுகாமைத்துவத் துடன் உட்கொண்டு தைரியபலமாக வாழுகின்றன.

'மனிதனாகிய நாமும் இயல்பான முயற்சிகளுடன் வாழுவோமா !............'

இறைவனால் படைக்கப்பட்ட (நச்சு என்ற தெரிந்தவற்றை தவிர) அனைத்து தாவர, விலங்குகள் மனிதனுக்கு இயல்பாக உட்கொண்டு வாழமுடியும்.

1. அறுகம்புல் - சாதாரண பச்சை அறுகம்புல் இலைகளை கத்தரித்து அவற்றை கறியுப்பில் சிறிது கழுவி பின் அவற்றை இயல்பான (பச்சை மிளகாய் அல்லது செத்தல் மிளகாய்) சம்பலாக அம்மியில் அரைத்தோ அல்லது மிக்ஸியில் அரைத்தோ தேசிப்புளி இட்டு உட்கொண்டு வர எவ்வித நோய்களும் அணுகாது, ஏற்பட்டு இருக்கும் உக்கிரம் அடையாது மாறாக மனிதன் நிலைத்து வாழமுடியும் கண்பார்வை, சரீரபெலம், ஞாபகசக்தி நிலைக்கும்.
2. வேப்பம் விரியாத மொட்டுக்களை ஆய்ந்து அதனை துப்புரவு செய்து அதனை இயல்பான ஓர் பால்கறியாக சமைத்து உட்கொள்ள தேவையற்ற பூச்சி நோய்கள், கடி, சொறி நோய்கள் அணுகாது. சரீரத்தை காக்கும் ஓர் சர்வலோக நிவாரண சரீரமாக நிலைத்து வைத்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கறிமுருங்கை மிகவும் புழுப்போன்ற நூல் போன்ற மிக மெல்லிய பிஞ்சினை இடுங்கி (தோல் சீவாது) சிறு துண்டுகளாக நறுக்கி அதனை இயல்பான பால்கறி சமைத்து உட்கொண்டு வர சரீரம் இளைக்காது வன்மை பெறும் சரீர உள் உறுப்புக்களை அது பாதுகாக்கின்றது.

4. கொவ்வை இலையில் மூவிரல் (மூன்று வெட்டு போன்ற) கொவ்வை இலையை கீரை போலவும், பருப்புடனும், சொதியுடனும் அல்லது சிறுது வதக்கி (இலையை) நிறைய வெங்காயம் உள்ளி போட்டுப் குழம்பாகவும் உட்கொண்டு வர தேகத்துக்கான தாமிரம் எனும் சத்துப் இரும்புச்சத்தும் கிடைக்கின்றது. (நீரிழிவுக்கு சிறந்த உணவாகும்)

5. கறிவேப்பம் இலையையும் இயல்பான சம்பலாகவும் (பச்சை மிளகாய் அல்லது செத்தல் மிளகாய், பச்சை மிளகாயில் செய்வதுதான் சுவையாக இருக்கும்) அம்மியில் அல்லது கிரெயின்டரினுள் இட்டு எடுத்து உணவு உட்கொள்ளும் போது தேசிப்புளி இட்டு உட்கொண்டு வர என்றும் இளமையாகவும், கண்களுக்கு நன்கு ஒளியும், ஞாபகசக்தியும், அதிகம் கோவம் ஏற்படாத உள்ளமாகவும் காக்கும் தன்மை கொண்டது.

கறிவேப்பிலை, வல்லாரை இலை, பொன்னாங்காணி இலை நன்கு துப்பரவு செய்து (நன்றாக தண்ணீர் வடிந்ததும்) சிறிது வெயிலில் வைத்து பின் அதனை சூரணம் செய்து இதற்கு சிறிது நற்சீரகம், சிறிது துவரம்பருப்பும் மெதுவாக வறுத்து பொடி செய்து மேற்கூறிய இலைத்தாறுகளுடன் கலந்து உணவுடன் பொடி சாம்பலாக சிறிது தேங்காய்ப்பூ போட்டு வெங்காயம், பச்சைமிளகாய் இட்டு இயல்பான சம்பலாக உட்கொள்ளலாம். தலைமுடி, கண்கள், ஞாபகசக்திக்கு மிகவும் உகந்ததாகும். (வேலைக்குப் போகிறவர்கள் இதனை இவ்வாறு செய்து உட்கொள்ள முடியும்)

6. வாதநாரயணி இலை மிகவும் உகந்தது. இதனை பருப்புடனும் போடலாம். துவையல் கறியாகவும், இளம் வெதுவெதுப்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறையாகவும் உட்கொள்ளலாம். சரீரத்தில் ஏற்படும் சகல உழைவும் தணியும். வாதநோய் ஏற்படாது வாழமுடியும்.

7. செவ்வரத்தம்துளிர் இலை, முல்முருக்கம் துளிர் இலைகளை பருப்புடனும் போட்டுப் உட்கொண்டுவர சரீரதோல் வறலாது அழகாக இருக்கும்.

மேற்கூறிய இலைகளை ஏனைய முருக்கங்கீரை இலையிடனும், சண்டி இலை, ஏனைய பச்சை இலைகளுடனும் போட்டு வறையாக உட்கொள்ளலாம்.

8. செவ்வரத்தம் விரியாத மொட்டினை வாரத்தில் 2முறை வாயில் மென்று வரவும். (ஓரிரு துளி தேசிப்புளி எடுக்கவும்) விரிந்த பூ, மொட்டு இவற்றை சம்பலாகவும், கறியாகவும் எடுக்கலாம். (அடுப்பில் இட்டு கறியாக சமைக்கும் போது சில உயிர்ச்சத்துக்கள் அழிவன ஆதலால் பச்சையாக எடுப்பது சிறந்தது) கரட்சம்பலுடனும், வல்லாரை, ஏனைய ஏதாவது சம்பலுடனும் இதனை அரிந்தும் உட்கொள்ள சரீர உள்ளூறுப்புகள் பெலம் பெறும் கிரந்தி சரீரத்தில் ஏற்படாது வாழமுடியும்.

9. வாழத்தண்டு குலை வெட்டியதும் உடனடியாக வாழை மரத்துள் வெட்ட வெட்ட நடுவினுள் ஓர் நீட்டமான மிகவும் வெண்மையான தண்டு (சீரம்) இதனை மிகச் சிறிதாக வெட்டி இயல்பான சம்பலாகவும், வெள்ளைக்கறியாகவும், பருப்பினுள் இட்டும், ஓர் வறையாகவும் (ஏனைய கூட்டு மரக்கறிகளுடனும்) போஞ்சி இலைகள் முருங்கை கீரையுடனும், கோவா, புடலங்காயுடனும் வறையாகவும், பால்கறியாகவும், அல்லது சிறிது வதக்கி (கூட்டு மரக்கறிகள் உருளைக்கிழங்கு சிறிதளவு கறிமிளகாய், தக்காளிபழம் சேர்க்கலாம்) குழம்பாகவும் (சிறிது வெந்தயம் உள்ளி போடவும் வதக்கும் போது) உட்கொண்டு வர சரீரத்தின் தொப்பை வயிறு ஊழை உடம்புகள் தணியும் சிறுநீர் கடுக்காது இலகுவாக வெளியேறும். சலப்பையுடன் கூடிய நன்மைகள் கிடைக்கும். சலப்பையுடன் கூடிய நோய்கள் உதாரணமாக கற்கள் சம்பந்தமான அடல்சல் தீரும். சருமம் மெலிந்து அழகாக காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. மஞ்சல் நிற லாவுட் காயினை இடுங்கி அதனை பூசணிக்காய கறிபோல் (சிறிது எண்ணெய் இட்டு வதக்கி) சமைத்து உட்கொள்ள கண்களுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் தாரளமாக கிடைக்கும் (இதனை பழமாக உட்கொள்ள இன்னும் சிறந்தது.)

11. கொவ்வை மரத்துக்காய், விலும்பிலிக்காய் (கடுமையாக புளிக்கும்) அம்பிறலங்காய், சாதாரண மாங்காய் இவற்றை தனிக் கறியாகவோ, சொதியினுள், அல்லது ஏனைய கூட்டுக்கறியாகவோ உட்கொள்ளலாம். மலச்சிக்கல் இருக்காது. விற்றமின்-C, எனும் உயிர்சத்து கிடைக்கிறது. பற்களுக்கு, நாவிற்கு பயன்படுகிறது.

12. மணத் தக்காளி இலை (இது ஓர் சிறிய குத்துச்செடி மரம் கொப்புக்களில் கறுப்பு நிற மிளகு போன்ற பழங்கள், சிவப்பாகவும் காய்க்கும்) முல்லைச்செடி இலை, முசுட்டைஇலை இவற்றை சொதியாகவும், பருப்பினுள்ளும் போடலாம். தனித்த கீரை போன்ற தனித்த கறியாகவும், சம்பலாகவும், வதக்கிய குழம்பாகவும் தயாரித்து வெந்தயம் கூட்டியும், உள்ளி கூட்டியும் குழம்பாகவும் எடுக்கலாம். இயல்பாக இது சுவாசப்பையைப் பெலப்படுத்தும் இயல்பாக உட்கொண்டுவர சளித்தொல்லைகள், வயிற்றுப்புண் பாதுகாக்கப்படும்.

13. அகத்திப்பூ இதனை பூச்சி புழுக்கள் துப்புரவு பார்த்து இவற்றை கூட்டுமரக்கறிகள் சேர்த்தும் சமைத்தும் உட்கொள்ளலாம். இப்பூவை கடலை மாவில் பொரித்து உட்கொள்ளலாம். வாயிற்கு தேவையான போஷனைகள் இதனுள் உண்டு.

14. விளாங்காய் இவற்றில் சம்பலாக தயாரிக்கலாம். இதில் போதிய உயிர்ச்சத்துக்கள் உண்டு. இலகுவாக மலம் கழிக்க இது உதவுகின்றது.

15. பப்பாக்காய் - இளம் பிஞ்சுக்காய் அல்லது செங்காய் இதனை மிகச்சிறுக வெட்டி சுண்டலாகவும் செய்யலாம். பூசணிக்காய் போல் இயல்பாக கறி சமைத்துப் உட்கொள்ள தொப்பை வற்று குறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய உணவு வகைகளுக்கு நற்சீரகம், பெருஞ்சீரகம், மிளகு, உள்ளி, கூட்டுச்சரக்காகவும், தனிச்சரக்காகவும் மேற்கூறிய உணவுவகைகளை மெருகூட்டியும் தயாரிக்கலாம்.

பொதுவாக உணவு வகைகளை நீண்டநேரம் நெருப்பில் விடாது சமைத்து எடுக்கவும்.

பொதுவாக நற்சீரகம், பெருஞ்சீரகம், கொத்தமல்லி, கருஞ்சீரகம், மிளகு, வெந்தயம் இவற்றை துப்புரவு செய்து வெயிலில் காயவைத்து பின் சிறுக மண் சட்டியில் வறுத்து பின் தூளாக்கி (சூரணித்து) அத்தூளினை இளவயது தொடக்கம் ஓர் தூதுவழப் பழஅளவு தேனில் அல்லது வெந்நீரில் எடுத்து வர சரீரம் வன்மை பெறும் எவ்வித நோய் இன்றியும் வாழமுடியும்.

## அளவுமுறைகள்

இதற்கு உதாரணமாக கொத்தமல்லி - 2 மேசைக்கரண்டி என்றால் நற்சீரகம் - 1 மேசைக்கரண்டி, பெருஞ்சீரகம் - 1 தேக்கரண்டி, மிளகு - 25, வெந்தயம் - 1 தேக்கரண்டி, கருஞ்சீரகம் - 1 மேசைக்கரண்டி, வேர்க்கொம்பும் சிறிது சேர்க்கவும்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி சித்தன் குறிஞ்சிக் கிராமத்துக் கலைஞர்கள்

திரு கா.குலசேகரம்

பூநகரி.

பூநகரியிலுள்ள சித்தன் குறிஞ்சிக் கிராமம் நீண்ட வரலாற்றைக் கொண்டது. இங்கு வாழ்ந்து வந்த மக்கள் தமது கலை,கலாசார நிகழ்வுகளூடாக இன்று நன்கறியப்படாதவர்கள். இவர்கள் தாம் வாழ்ந்த காலத்து வழக்கங்கள், மரபுகள், நியமங்கள், விழுமியங்கள் என்பவற்றுக்கேற்ப கைக்கொண்டு வந்த கலையம்சங்களை பரம்பரையாக்கி கேள்வியுற்ற விடயங்களைத் தர முயல்கிறேன். விவசாயத்தின் பின் கிடைத்த நீண்ட ஓய்வு காலத்தில் தத்தமக்கு ஏற்ற கலையம்சங்களை ஒவ்வொருவருக்கும் எடுத்தியம்பப் பின்னிற்கவில்லை. ஒட்டு மொத்த கிராமமுமே கலாசாரத்தோடு ஒத்த கலையம்சங்களை காலாகாலமாக செயற்படுத்தி வந்திருக்கின்றார்கள். அவர்கள் தமது ஆற்றலூடாக வழங்கியவற்றை அமரராகிய கலைஞர்கள், வெளிநாட்டில் வாழும் கலைஞர்கள், பூநகரி தவிர்த்து இலங்கையில் வாழும் கலைஞர்கள் இன்று கிராமத்தில் வாழும் கலைஞர்கள், இன்று கிராமத்தில் வாழும் கலைஞர்கள் இளைய கலைஞர்கள் எனும் விடயமாக தர முயல்கின்றேன்.

மேலும் கிராமத்து கலைஞர்கள் பற்றிய இக்கட்டுரை மறக்கப்படும் கலையை மீளக்கொணரும் என்ற நோக்கிலும், கட்டுரையாளர்களின் தகவல்களுக்காகவும், குறிப்பாக கிளிநொச்சி மாவட்ட 'தொன்மை மூலங்கள்' என்ற புத்தகத்தில் கிளிநொச்சி மாவட்ட அழகியற்கலை வளர்ச்சியில் இசை, நடன, பின்னனி வாத்தியக் கலைஞர்களின் பங்களிப்பு என்ற கட்டுரையில் பூநகரி கலைஞர்களின் பதிவுகள் ஒப்புரவின்றி உண்மையும், பெரும்பாலான கிராமமக்கள் கலைக்கான சேவையை வளங்கியுள்ளார்கள். என்ற நடைமுறையை இளையோருக்கு கற்றுக்கொடுப்பதற்காகவும், எதிர்காலத்தில் எமது பண்பாட்டுக்காலம் வளர்க்கப்பட்டு வளம்படுத்தப்படும் என்பதினாலும் நான் இக்கட்டுரையை வரைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரராகிய கலைஞர்கள்

சித்தன் குறிஞ்சிக் கிராமத்தில் பிறந்து வாழ்ந்து மடிந்த மூத்த கலைஞர்களில் ஒருவர் அமரர் சின்னப்பு சின்னத்தம்பி இவர் கந்தபுராணம், திருவாதவூரர்புராணம் ஆகியவற்றை இசையோடு மனனம் செய்து பாடியவர். மேற்கூறிய பாடல்களுக்கு உரைநடை விளக்கத்தையும் ஆற்றக்கூடிய ஆற்றலுள்ளவராகத் திகழ்ந்தார். சித்தன்குறிஞ்சி முருகமூர்த்தி கோவில் சித்தன் குறிஞ்சி கொட்டாவடிப் பிள்ளையார் ஆகிய கோவில்களில் இவற்றை ஆற்றியதாகக் கேள்விப்பட்டுள்ளேன்.

சின்னத்தம்பியின் மகனான சங்கரப்பிள்ளை (மாவடி அப்பா), சித்தன் குறிஞ்சியில் பிறந்து நாலாம் கட்டை, செக்காலை கிராமத்தில் வாழ்ந்து செக்காலைக் கிராமத்தில் இறைவனடி சேர்ந்தார். இவர் புராணங்கள், பஞ்சபுராணங்களை சித்தன் குறிஞ்சி முருகமூர்த்தி கோவிலிலும், சித்தன்குறிஞ்சி கொட்டாவடிப் பிள்ளையார் கோவிலிலும், கம்பளி வைரவர் கோவிலிலும் இசையோடு பாடியவர்.

சங்கரப்பிள்ளையின் மனைவி இராசம்மா கொழும்புத் துறையில் பிறந்து சித்தன் குறிச்சியில் வாழ்ந்து இறந்தவர். இவர் தலாட்டு ஒப்பாரிப் பாடல்களை பாடும் ஆற்றலுள்ளவர்.

அமரர் சண்முகம் பூரணம் வெட்டுக்காட்டில் பிறந்து சித்தன் குறிச்சியில் வாழ்ந்து மடிந்தவர். இவர் தாலாட்டுப் பாடல்கள், அருவிவெட்டுப்பாடல்கள், ஒப்பாரிப் பாடல்களைப் பாடும் ஆற்றலுள்ளவராகத் திகழ்ந்தார். அமரர் மூத்ததம்பி தம்பு ஞானிமடத்தில் பிறந்து சித்தன்குறிச்சியில் வாழ்ந்து இறந்தவர். இசையோடு பாடும் வல்லவர். திருவார்ப்புராணப் பாடல்கள், பொற்சுண்ணப் பாடல்கள், ஊஞ்சற்பாடல்கள், பஞ்சபுராணங்கள் ஆகியவற்றை இசையோடு ஓதுவார். சித்தன்குறிஞ்சி முருகமூர்த்தி கோவிலில் திருவாதவூரர் புராணத்தை மனனம் செய்து பிழையின்றிப் பாடுவதோடு பொழிப்புரை வழங்கியதையும் பார்த்திருக்கின்றேன். மேலும் நுட்பமான கலைப்பொருட்களை ஆக்குவதிலும் வல்லவராகத் திகழ்ந்தார். பூநகரி சித்தன்குறிஞ்சி முருகமூர்த்தி ஆலய ஊஞ்சல் பாடல்களை இயற்றிப்பாடியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் தம்புவின் மூத்த மகனான இரத்தினசிங்கம் சித்தன்குறிஞ்சிக் கிராமத்தில் பிறந்து வளர்ந்து 1991ஆம் ஆண்டு இடப்பெயர்வினால் ஜெயபுரம் கிராமத்தில் இறந்தார். 'ஆர்மோனியம் இசைத்து கர்நாடக இசைப்பாடல்களைப் பாடக்கூடியவர். கூத்து நாடகங்களில் 'ஆர்மோனிய இசைக் கலைஞராகவும் பிற்பாட்டுக் கலைஞராகவும் திகழ்ந்தார். இவர் ஓர் நாடக எழுத்தாளர், இயக்குநர் 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற சமூகநாடக மொன்றை எழுதி இயக்கி, இசையமைத்து வில்லாடி கிராமத்தவர்களையும், சித்தனகுறிஞ்சிக் கிராமத்தவர்களையும் இணைத்து வில்லடிக் கிராமத்தில் மேடையேற்றியவர். 'ஆர்மோனியம் வாசிப்பதோடு அவ்வாறான கருவிகளை திருத்தக்கூடிய ஆற்றலுமுள்ளவர். 1992இல் பூநகரி மகாவித்தியால 'பல்வியம்' குழுவின் பயிற்சியாளராக இருந்து புத்தாக்க கருவியொன்றை ஆக்கி பல்லியம் குழ வாத்தியமாக்கியவர். 'ஆர்மோனியம் வாசிக்க ஆர்வமுடையவர்களுக்கு குருவாகத் திகழ்ந்து கற்றுக்கொடுத்தார்.

அமரர் முருகேசு காசிப்பிள்ளை சித்தன்குறிஞ்சிக் கிராமத்தில் பிறந்து வளர்ந்து நெற்புலவு கிராமத்தில் வாழ்ந்து இடப்பெயர்வினால் மன்னாரில் வாழ்ந்து இறந்தார். இவர் உடுக்குவாத்தியக்கலைஞர், நாடகநடிகர் (வாழ்க்கை வாழ்வதற்கே) இசைநாடகக் கலைஞர் (பூலோகரம்மை) கதைப்பாடகர் பொம்மலாட்டக் கலைஞர், பொம்மை, உடுக்கு ஆகியவற்றை ஆக்கம் செய்பவர், மாரிமழை பெய்யும் போது வேடமணிந்து கொடும்பாவி இழுத்து ஒப்பாரிப் பாடல்களைப் பாடும் ஆற்றலுள்ளவர்.

அமரர் வேலுப்பிள்ளை சதாசிவம் கள்ளிப்பிட்டிக் கிராமத்தில் பிறந்து வளர்ந்து சித்தன்குறிஞ்சிக் கிராமத்தில் வாழ்ந்து இறந்தவர். உடுக்கு வாசிக்கும் கலைஞர். மாலைகட்டுதல், சாத்துப்படி சாத்துதல் வேலைகள் செய்யக்கூடியவர். வாயால் உடுக்கு ஒலி எழுப்பக்கூடியவர். (Mimicry Artist) அருவிப் வெட்டுப்பாடல்களை அருவி வெட்டும் போது கிராமிய இசையில் பாடக்கூடியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் கந்தையா கிருஸ்ணசாமி சித்தன்குறிஞ்சிக் கிராமத்தில் பிறந்து வாழ்ந்து இறந்தவர். பனை ஓலையால் வீடு வேய்பவர். சாதாரண வேய்ச்சல், பாண்டி வேய்ச்சல் என்பவற்றில் சிறந்தவர். சிறந்த தச்சுத் தொழிலாளி. அமரர் பொன்னையா கந்தையா சித்தனகுறிஞ்சிக் கிராமத்தில் பிறந்து வாழ்ந்து செக்காலைக் கிராமத்தில் மடிந்தவர். இசை நாடகமொன்றில் (கலைவரிசை) பெண் பாத்திரமேற்று நடித்தவர்.

அமரர் சங்கரப்பிள்ளை தில்லையம்பலம் ஞானிமடம் கிராமத்தில் பிறந்து சித்தன்குறிஞ்சியில் வாழ்ந்து இடப்பெயர்வினால் கிளிநொச்சியில் இறந்தவர். காலவரிசை இசைநாடகத்தில் பெண்பாத்திரமேற்று நடித்தவர். பூநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உத்தியோகத்தராகக் கடமையாற்றியவர்.

அமரர் சபாபதி பொன்னுத்துரை சித்தன்குறிஞ்சிக் கிராமத்தில் பிறந்து வாழ்ந்து இறந்தவர். உடுக்கு வாத்தியக் கலைஞர். கதைப்பாடகர் (கோவலன், காத்தவராயன் கதை)

அமரர் கணபதிப்பிள்ளை சிவபாதம் சித்தன்குறிஞ்ச்சியில் பிறந்து கிளிநொச்சியில் இறந்தவர். இவர் ஓர் வேடம் புனையும் கலைஞர்.

## பிறநாட்டில் வாழும் கலைஞர்கள்

சித்தன்குறிச்சியில் பிறந்து தற்போது ஜேர்மனியில் வாழ்ந்து கொண்டிருப்பவர் திரு தம்பு தியாகராசா அவர்கள். இவர் ஓர் கலைக்குடும்ப வாரிசு. நல்ல மெல்லிசைப்பாடகர். உள்ளூர் மேடைப்பாடகராகத் திகழ்ந்தவர்.

சித்தன்குறிச்சியில் பிறந்து கனடாவில் வாழ்பவர் திரு தில்லையம்பலம் நரேந்திரன். இவர் ஓர் மிருதங்க வித்துவான். சாஸ்திர முறைப்படி மிருதங்கம் வாசிக்கக் கற்றுக்கொண்டவர் கனடாவில் மிருதங்கக் கலைஞராக உள்ளார்.

சித்தன்குறிச்சியில் பிறந்து பிரான்சில் வாழ்ந்து கொண்டிருப்பவர் திருமதி கிருபாதேவி ஸ்ரீவிமலன் தந்தை தம்பு இரத்தினசிங்கத்திடம் 'ஆர்மோனியம் வாசிக்கக் கற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர். கிளி / பூநகரி மகா வித்தியாலய 'பல்லியம்' குழுவில் 'ஆர்மோனியம் வாசித்தவர் (1993) பாடசாலை காலங்களில் நாடக நடிகையாக இருந்தவர். நாட்டிய நாடகமான வள்ளிதிருமணத்தில் திருமதி சுந்தரமூர்த்தி அவர்களின் நெறியாள்க்கையில் நடித்தவர்.

சித்தன்குறிச்சியில் பிறந்து மலேசியாவில் வாழ்பவர் திருமதி ரேணுகாதேவி வித்தியாகரன் கர்நாடக சங்கீதத்தை முறைப்படி கற்றவர்.

சித்தன் குறிச்சியில் பிறந்து பெரிய பிருத்தானியாவில் வாழ்பவர் திருமதி சித்திராதேவி கிருஸ்ணாகரன். பாடசாலை நாடகங்களில் நடித்தவர். வள்ளி திருமணம் நாட்டிய நாடகத்தில் (1993) திருமதி சுந்தரமூர்த்தி சரஸ்வதி அவர்களின் நெறியாள்க்கையில் நடித்தவர். கிளி / பூநகரி மகாவித்தியாலய 'பல்லியம்' குழுவின் அங்கத்தவர்.

சித்தன்குறிச்சியில் பிறந்து சுவிசில் வாழ்பவர் திரு பொன்னம்பலம் முருகவேல். இவர் ஓர் நாடக நடிகர் பாடசாலைகளில் மாணவனாக, ஆசிரியராக நாடகங்களில் பங்கேற்றுள்ளார்.

**பிறதேசங்களில் வாழும் கலைஞர்கள்**

சித்தன்குறிச்சியில் பிறந்து நெற்புலவில் வாழ்ந்து யாழ்ப்பாணத்தில் வாழ்பவர். திரு காசிப்பிள்ளை குலசேகரம் பேராதனைப்பல்கலைக்கழகத்தில் கற்கும் போதும் கொழும்பு தொழிற்திணைக்களத்தில் எழுதுவிளைஞராகவிருந்தபோது மேடைநாடக நடிகராகவிருந்தார். ' சாபக்கேடு' எனும் முதல் சிறுகதை தொழிற்றினைக்களச் தமிழ்சங்க சஞ்சிகையில் (1979) எழுதியுள்ளார்.

திரு பொன்னம்பலம் ஸ்ரீஸ்கந்தராசா சித்தன்குறிச்சியில் பிறந்து யாழ்ப்பாணத்தில் வாழ்பவர். இவரும் ஓர் மேடைநாடக நடிகராக அறிந்திருக்கின்றேன்.

சித்தன்குறிச்சியில் பிறந்து கொக்குவில் யாழ்ப்பாணத்தில் வாழ்பவர். திரு இரத்தினசிங்கம் நாகேஸ்வரன் இவர் சித்திர வடிவமைப்பும் கலைஞர் கிளி / கறுக்காய்த்தீவு மகாவித்தியாலத்தில் ஆசிரியராகத் கடமையாற்றுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தன்குறிச்சியில் பிறந்து கந்தமடம் யாழ்ப்பாணத்தில் வாழ்பவர் திரு இரத்தினசிங்கம் அமரகுமார் கிளி / பூநகரி நல்லூர் மகாவித்தியால சித்தரமும் வடிவமைபும் ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். இவர் கிளி பூநகரி மகாவித்தியாலய (1993) பல்லியகுழு அங்கத்தவராகச் செயற்பட்டவர். மிருதங்கம் வாசிக்கும் ஆற்றலுள்ளவர்.

சித்தன்குறிச்சியில் பிறந்து நெற்புலவு மன்னாரில் வாழ்பவர் திருமதி வள்ளிப்பிள்ளை காசிப்பிள்ளை இவர் சிறந்த பன்னவேலைக் கலைஞர்.

## பூநகரி சித்தன்குறிச்சி மற்றும் இடங்களில் வாழும் கலைஞர்கள்

திரு நடுவிலார் சுப்பிரமணியம் ஓர் சாத்துப்படிக்கலைஞர் 'கலைநகர்' விருது பெற்றவர். சித்தன்குறிச்சியில் பிறந்து அங்கேயே வாழ்பவர். கிராமத்து 'மிருகவைத்தியர்' ஆவார்.

அறுகுவெளி சாவகச்சேரியில் பிறந்து பூநகரி சித்தன்குறிச்சியில் வாழ்பவர் திருமதி சுப்பிரமணியம் பராசக்தி இவர் அருவிவெட்டுப் பாடல்கள், தாலாட்டுப்பாடல்கள், ஒப்பாரிப்பாடல்களைப்பாடும் ஆற்றலுள்ளவர்.

திருமதி மகேஸ்வரி கணபதிப்பிள்ளை சித்தன்குறிச்சியில் பிறந்து அரசபுரத்தில் வாழ்பவர். இவர் ஓர் சிறந்த பன்னவேலைக்கலைஞர்.

திருமதி கனகசபை தவமலர் கிளி / ஞானிமடம் அ.த.க பாடசாலையின் அதிபர் ஞானிமடத்தில் பிறந்து சித்தன்குறிச்சியில் வாழ்பவர். ஓர் நாடக எழுத்தாளர் நெறியாள்கையாளர். நடிகை பாடசாலைகளில் சிறந்த நாடக நெறியாள்கையாளராக இருந்துள்ளார்.

சித்தன்குறிச்சியில் பிறந்து தற்போது நாலாம்கட்டை பூநகரியில் வசித்து வருபவர் திரு பொன்னையா கோபாலபிள்ளை தெங்குறுப்பிட்டி பெரும்படையம்பன் பொங்கலின் போது தெய்வங்களை உருவேற்று பாடல்களை பாடுபவர். இதனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'காவியம்' கூறல் என அழைக்கின்றனர். உண்மையான விளக்கமாவது தெய்வ உருவேற்றத் துக்கான பாடல்களை உருவேற்றும் வகையிலான இசைமொழியில் பாடலாகும்.

கடந்த முப்பது வருட யுத்தகாலத்தில் இளம் கலைஞர்களை உருவாக்குவதில் தடங்கல் ஏற்பட்டுவிட்டது. இதனை வளர்த்தெடுத்து வளம்படுத்த வாழும் கலைஞர்கள் ஒன்றுசேர்ந்து உதவுவார்கள். கிராமத்தில் வாழாது விட்டாலும் கிராமத்து வளர்ச்சிக்காக ஒன்றுசேர்வார்கள் என்பதில் ஐயமில்லை. வாழும் கிராமமக்களும் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

தற்போது உருவாகிவரும் கலைஞர்களின் பதிவுகளில் இளம் சந்ததியினருக்காக விடப்படுகிறது. எனினும் அவர்களை உரிய முறையில் வளர்த்தெடுக்கும் பொறுப்பை ஏற்கவேண்டியுள்ளது.

## அமரத்துவமான கலைஞர்கள்

அமரர் பொன்னம்பலம் குகதாசன்

சித்தன்குறிஞ்சிக் கிராமத்தில் பிறந்து யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களிலும் இறுதியாக கனடாவில் வாழ்ந்து மடிந்தார். இவர் பூநகரியில் அமரர் நடராசா குகராசா (மட்டுவில்நாடு கிழக்கு) கிராமத்து கலைஞருடன் பெண் பாத்திரமேற்று பலநாடகங்களில் நடித்துள்ளார். கனடாவில் அரசியல், சமூகவியல் கட்டுரைகளை எழுதியுள்ளார். அவரது குடும்பத்தினர் ஓர் ஊடகவியலாளர் எனவும் அறிமுகப்படுத்தியுள்ளனர். தானாகவே ஓர் புத்தகத்தையும் ஆக்கி வெளியிட்டுள்ளதாக அறிகின்றேன்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்கால நிதர்சனம்

திருமதி. ரேணுகா சக்திதாஸ்,
(முழங்காவில்)
பிரதேச செயலகம், பூநகரி

**அ**திகாலையிலேயே வெய்யில் உக்கிரமாக இருந்தது. வழமையைவிடவும் மாலாவுக்கு இன்று மனதில் இனம்புரியாத ஏதோவோர் சஞ்சலம் மனதில் குடிகொண்டிருந்தது. "ஏனென்று தெரியவில்லை. எனக்கு மனதுக்கு ஏதோ சரியாகப்படவில்லை. அப்பனே பிள்ளையாரப்பா ஒருத்தருக்கும் ஒன்றுமில்லாமல் பார்த்துக்கொள்" மனதுக்குள் இறைவனை வேண்டிக்கொண்டாள். பாத்திரங்களை கைதேய்துக்கொண்டிருந்தாலும் மனம் அலை பாய்ந்து கொண்டிருந்தது.

பிள்ளைகள் அனுவும் கீதனும் எழுந்து "அம்மா, அம்மா" என்று கத்திகொண்டிருந்தார்கள். "இதோ வாறன்" என்று சொல்லிக்கொண்டு போனாள். " அப்பா இன்னும் எழும்பேல்ல. சத்தம் போடாதேங்கோ" என்று சொன்னதும் " என்னம்மா காலை எட்டுமணியாப்போச்சு இன்னும் அப்பா எழும்பேல்ல. நான் போய் எழுப்பட்டே" கீதன் கேட்டான். "பெரிய மனுசன் மாதிரி கதை கதைக்கவேண்டாம். போய்வேலையர்பார்" தனது மனக்குமுறலை பிள்ளைகள் மேல் திணித்தாள் மாலா. எதுவும் புரியாத அந்த பிஞ்சு முகம்வாடியபடி சென்றது.

போன் அடித்தது.. ஒரு சத்தத்திலேயே போய் எடுத்து விட்டாள். தங்கை ரேகாதான் போன் பண்ணியிருந்தாள். "ஹலோ .. சொல்லு ரேகா." " என்னமாதிரியக்கா அத்தான் எங்க பிரச்சினை என்னமாதிரி" "ரேகா கேட்டதும் மாலாவுக்கு கண்கலங்கியது." என்னெண்டு சொல்ல எதுவுமே குறையேல்ல இன்னும் கூடிக் கொண்டு தான் போகுது. வீட்ட ஒருநாளைக்கு பத்து பேராவது கடன்காரங்கள் வாறாங்கள். அவர் இல்ல இல்ல என்று சொல்லச் சொல்ல எனக்கு பேசிப்போட்டு போறாங்கள். அதொரு பக்கமெண்டா இதை இவருக்கு சொன்னா என்னை பேசி அடிக்கிறார். செத்திரலாம் போல இருக்கடி என்செய்யிறது இந்தப் பிள்ளையளுக்கு என்ன விளங்கப் போகுது. அதுகள நினைச்சாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பாவமா இருக்கு" "உனக்கு விசரே அக்கா இப்படி கதைக்காத" ரேகா சொன்னதும் "வர வர இவற்ற போக்கு சரியில்ல. என்ர சொல்லு கேக்காம என்ன வெருட்டி வெருட்டி எல்லாத்தையும் செய்து போட்டு இப்ப எல்லாம் முடிஞ்சு என்ன அடிக்கிறதும் வீட்டுக்கு காசு தராம பிள்ளையள் பட்டினியா கிடக்கிறதும் எவ்வளவு காலம் சொல்லு? "உள்ள கம்பனியளெல்லாம் கிழமைக்கு கிழமை காசு கட்டிறனெண்டு லோண். சனியும் ஞாயிறும் விட மற்ற நாளெல்லாம் வீட்ட லோண் காசுக்கு ஆக்கள் வாறாங்கள். லோண் எடுத்து ஏதாவது தொழில் செய்தா பறுவாயில்லை. ஒரு கடன் கட்ட இன்னொரு லோண். வீண் செலவுக்கு லோண். இப்படி அறாவட்டிக்கு கடனெடுத்து தூத்தரிச்சுப் போட்டு என்னப் போட்டடிச்சா நான் என்னடி செய்யிறது." மாலா அழுதாள்.

"மாலா.. மாலா...ஆ" சங்கர் ஆக்ரோசமா கத்தினான். அழைப்பை நிறுத்திவிட்டு ஓடிவந்தாள். "விடியக்காத்தால என்னடி போனோட. மனுசன் எழும்பினா ஒரு தண்ணிதரக்கூட நேரமில்லாம போன் கதைப்பு" கத்தினவனைப்பார்க்க மாலாவுக்கு கோபத்தைவிட வேதனைதான் அதிகமாக இருந்தது. "இப்ப கொண்டு வாறனுங்க" "நீயும் உன்ர தேத்தண்ணியும். நீயே வச்சுக்குடி. பெடியள் எங்க.? அங்கபோயிற்றுதுகளோ? எப்ப பார்தத்தாலும் அம்மம்மா வீட்டதான். உனக்கு என்னடி வேல. இந்த பிள்ளையளைக் கூட பார்க்க முடியேல்லயே" கத்திவிட்டு போனவனை பார்க்க ஆத்திரம் வந்தது. ஆனால் எதுவும் கதைக்க முடியவில்லை. இங்க நிண்டு தகப்பன் போடும் சண்டையைப் பார்க்கக் கூடாதென்று அவள்தான் பிள்ளையளை அங்கு அனுப்பினாள். இந்தச் சண்டையள பிள்ளையள் பார்த்தா தகப்பன மதிக்க மாட்டுதுகள். பிறகு தகப்பன் சொல் கேட்காத பிள்ளையளா திசைமாறி போகக்கூடாது என்று மாலா நினைத்தாள். மாலா கொடுத்த தேத்தண்ணியையும் குடிக்காமல் சங்கர் எங்கோ போய்விட்டான்.

மாலா பிரமை பிடித்துப்போய் அமர்ந்திருந்தாள். அவளால் எதுவும் சிந்திக்க முடியவில்லை. மனமும் அலைபாய்ந்து கொண்டிருந்தது. ஏதோ நடக்கக்கூடாத ஒன்று நடக்கபோவது போல அவள் நினைத்தாள். கடன்காறர் ஆராவது அறிவிச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ் இவரை பிடிக்கப்போகுதோ? அவள் பலவாறு யோசித்தாள்.

" இப்படியே போனா என்ன செய்யிறது. தோட்டங்களும் சரியா வரேல்ல. இப்ப இவர் தோட்டங்களையும் சரியா கவனிக்கிறதுமில்ல. நான் இப்படியே இருந்தா சரிவராது. நான்தான் இநத் கம்பனியளோட கதைச்சு கால அவகாசம் கேட்டு தோட்டத்தையும் கவனமா பார்க்கவேணும். நடந்தது நடந்து போச்சு இனி என்ன செய்யிறது. எல்லாத்துக்கும் இவற்ற குடிய மறப்பிக்கவேணும். எவ்வளவு பிரச்சினையளுக்கையும் அம்மா எங்கள கஸ்ரப்பட்டு வளர்த்தவ எண்டு எனக்கு தான் தெரியும். நான் சோர்ந்து போகக்கூடாது" தனக்கு தானே ஆற்றுப் படுத்திக் கொண்டாள் மாலா.

பொழுது நகர்ந்தது. சங்கர் வீட்டுக்கு வரவில்லை. "இவர் வராம நிக்கமாட்டாரே. என்னதான் இருந்தாலும் வீட்டுக்கு வராம ஒருடமும் நிக்கிறவரில்லையே. என்ன நடந்திற்றோ. நான் நினைச்சமாதிரித்தான் பொலிஸ் பிடிச்சிற்றோ?" பலவாறு எண்ணி கலங்கினாள் மாலா. இரவு கண்விழித்துப்பார்த்திருந்தாள். சங்கர் வரவேயில்லை. எப்போது தூங்கினாளோ தெரியாது. பொழுது விடிந்திருந்தது. சங்கர் இல்லை. மாலா தனது அண்ணாவுக்கு போன் செய்தாள். எல்லா இடமும் தேடத் தொடங்கினார்கள். சங்கர் இல்லை. "தென்னங்காணிப் பக்கமும் ஒருக்கா பாருங்கண்ணா. ஏதாவது பிரச்சினை யெண்டா அங்க போய் மாமரத்துக்கு கீழ படுத்திருக்கிறவர்" மாலா சொன்னதும் அங்கு போய் பார்த்தார்கள்.

மாலா தகவலுக்காக காத்திருந்தாள். சிறிது நேரத்தில் தமையனிடம் இருந்து போன் வந்தது. "மாலா நீ உடன இங்க வா" "என்னண்ணா ஏதாவது பிரச்சினையா?" "இல்ல. கடிதம் ஒன்று கிடக்கு நீ வா" மாலா விழுந்தடிச்சுக்கொண்டு ஒடினாள். மாமரத்தை சுற்றி ஒரு கூட்டமே கூடிநின்றது. ஒன்றும் தெரியவில்லை. அவளை கண்டதும் அண்ணன் ஓடி வந்தான். "மாலா..." அவன் அழுது கொண்டு அழைத்தபோது அவள் கண்ட காட்சி... சிலையாக நின்றாள். அழவில்லை. கத்தவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியே உறைந்துபோய் நின்றாள். "மாலா... மாலா" அழைத்தார்கள். அசைவில்லை.

ஊரே திரண்டது. யார் யாரோ ஏதேதோ பேசினார்கள். பொலிசுக்கு அறிவிக்கப்பட்டது. " இவன் கண்ணமூடிக்கொண்டு கடனுகள எடுத்துபோட்டு இப்ப இப்படிச் செய்து போட்டானே. இனி அந்த குடும்பத்தின்ர கதியென்ன?" கந்தையாப்பு அங்கலாய்த்தார். "கடன் குடுக்கிறவங்கள் என்னெண்டு குடுக்கிறவங்கள். மூண்டுபேர் சேருங்கோ. அஞ்சு பேர் சேருங்கோ. என்று சொல்லுவினம். மாறி மாறி ஒருத்தருக் கொருத்தர் சைன் பண்ணுங்கோ என்பினம். மாசம் , மாசம் கட்டுற ஒருமுறை. கிழமைக்கு கிழமை கட்டுற இன்னொரு முறை. கடன் குடுத்தா எடுக்கிறவன் கட்டுவானா. எப்படி கட்டுவான் என்று விசாரிக்கிறதில்ல. வேறு கடனுகள் இருக்குதா என்று விசாரிக்கிறதில்ல. எல்லா கம்பனியளும் ஊரில வந்து கடன் குடுப்பினம். பிறகு ஒருநாளைக்கு ஒருகம்பனி வீட்ட போனா என்ன செய்யிறது." ஒருவர் பேச இன்னொருவர் " சும்மா போங்கண்ணை. குடுக்கிறவன் கொடுத்தா வாங்கிறவனுக்கு என்ன மதி? கடன் எடுத்தா கட்டவேணும் எண்டு தெரியாதோ? எப்படி கட்டுறது என்று யோசிக்கிறதில்லை. சும்மா தாறமாதிரி போய் எடுக்கிறது. குடுக்கிறவனும் யோசிக்கோணும். வாங்கிறவனும் யோசிக் கோணும். முந்தி நாங்களெல்லாம் எங்க லோண் வாங்கினாங்கள். தன்னிறைவா உழைச்சு வாழேல்லையா? இப்ப இந்த வசதியளாலதான் ஊர் இப்படிக் கெட்டு கிடக்கு. யாரு தருவினம் வாங்கலாம் என்று பாக்கினமே தவிர தாங்க முயற்சி எடுத்து தேட வழிபார்கிறதில்ல" ஆக்ரோசமாக விமர்சித்தார்.

விசாரணைக்கு பொலிஸ் வந்தது. எல்லோரும் அமைதியானார்கள். மாலா சிலையாகவே இருந்தாள். அவள் தனக்கு தானே கூறிக்கொண்ட ஆறுதல் கரைந்து போயிற்று. அவள் தன்னம்பிக்கை தளர்ந்து பிரமை பிடித்தவளானாள். எல்லாம் நடந்து முடிந்து விட்டது. இந்தக் கூட்டம் நாளை கலைந்து விடும். ஆனால் மாலா ..... குழந்தைகள்........ எதிர்காலம் ...........???????

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயபுரக் குடியேற்றமும் வாழ்க்கைப் படிமுறையும்

செல்வி மகேந்திரன் தர்சிகா
(ஜெயபுரம்)
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

அழகிய திருநாடாகிய இலங்கைத்தீவிலே உள்ள மாவட்டங்களுள் வளம்மிக்க மாவட்டமாக கிளிநொச்சி விளங்குகின்றது. அதில் தனித்துவச் சிறப்புமிக்க வரலாற்றுப் புகழ்மிக்க ஒரு இடமாக விளங்குவதே பூநகரியாகும். இப்பூநகரிப் பிரதேசமானது கடல் வளம், நிலவளம், நீர்வளம் ஆகிய பல்துறைவளங்களைக் கொண்ட பல பிரதேசங்களைக் கொண்டுள்ளது. அப்பிரதேசங்களுள் ஒன்றாக சிறப்புமிக்க ஓர் இடமாக விளங்குவதே ஜெயபுரம் ஆகும்.

சுமார் 1983 ம் ஆண்டு நாடளாவிய ரீதியில் நடைபெற்ற யூலை இனக்கலவரம் காரணமாக மலையகம் உட்பட பல பிரதேசங்களில் வாழ்ந்த இந்தியவம்சாவளி மக்கள் பாதுகாப்புக் கருதி தத்தம் வாழ்விடங்களை விட்டு வெளியேறிவந்து வவுனியா மாவட்டத்தில் பெரியகட்டு என்னும் இடத்திலும் கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கராயன், கோணாவில் போன்ற இடங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவிஎன்னும் இடத்திலும் முகாம்கள் அமைக்கப் பட்டு குடியமர்த்தப்பட்டு வாழ்ந்து வந்தனர். அவ்வேளையில் அனைவரும் அடிப்படை வசதிகளின்றி தொழில்கள் இன்றி பெரிதும் துன்பப்பட்டவேளையில் அனைவரும் தமக்கென ஒரு கிராமத்தை அமைத்து அதிலே குடியேற்றம் செய்யுமாறு கோரிக்கை விடுத்தனர்.

அக்கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அரசாங்கத்தினர் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த வேளையில் அக்கராயன் கோணாவில் போன்ற இடங்களில் முகாம்களில் வாழ்ந்த மக்களை சர்வோதய நிறுவனமும் மல்லாவி முகாம்களில் வாழ்ந்த மக்களை உலக இந்து மகா சபை என்ற நிறுவனமும் வவுனியா மாவட்டத்தில் உள்ள பெரியகட்டு முகாம்களில் வாழ்ந்த மக்களை மனித முன்னேற்ற நடு நிலையம் (Hudec) என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனமும் தென்னிந்திய திருச்சபை என்ற நிறுவனமும் பொறுப் பேற்றுக் கொண்டனர்.

மனித சஞ்சாரமே அற்றவனாந்தரமாக விளங்கிய ஜெயபுரப் பிரதேசத்தில் மக்கள் கொண்டுவரப்பட்டு குடியமர்த்தப்பட்டனர். ஒவ்வொரு முகாம்களிலும் வாழ்ந்தமக்களை இவ்விடத்தில் ஒவ்வொருஒழுங்கைகளிலும் குடியமர்த்தப்பட்டதனாலேயே அவ்வீதிகளிற்கு பெரியகட்டுவீதி, கோணாவில் வீதி, குருகுலவீதி, மல்லாவிவீதி, அக்கராயன் வீதி போன்ற பெயர்கள் வீதிகளிற்கு வரக் காரணமாகியது. இத்தகைய வனப்பிரதேசத்தில் சுமார் 444 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டு காணிகள் வழங்கப்பட்டது. அம்மக்கள் தத்தமது காணிகளை வெட்டித் துப்பரவு செய்து கொண்டனர். அவர்கள் பத்துபத்துபேராகசேர்ந்துஒருவீட்டிற்குக் கிணறுவெட்டித்தண்ணீர் கண்ட பின்பு அடுத்த வீட்டிற்குக் கிணறுகளை சேர்ந்து வெட்டுவார்கள். இப்படியே தமக்குத் தேவையான கிணறுகளினை வெட்டிக் கொண்டனர். இக் காலப்பகுதியிலேயே இக்கிராமத்திற்கு ஜெயபுரம் என்ற பெயரையும் உருவாக்கிக் கொண்டனர்.

அக்காலத்தில் நிவாரணம் வழங்கப்பட்டமையால் அந் நிவாரணத்தை நம்பியே மக்கள் வாழ்ந்தனர். அத்துடன் தொழில்கள் எதுவும் நிரந்தரமாக அற்றநிலையில் கூலிவேலையில் ஈடுபட்டு மானாவாரிப்பயிர்ச் செய்கையை மேற்கொண்டு தமது உணவுத் தேவையை பூர்த்தி செய்து கொண்டனர். இவ்வாறு வாழ்ந்த வேளையில் 1989, 1990 ம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் இங்குவாழ்ந்தமக்கள் பய பீதியினாலும் எல்லாப் பக்கங்களிலும் சூழ்நிலை அசாதாரணமாகக் காணப்பட்டமையால் தொழில்களுக்குக் கூட எங்கும் செல்ல முடியாமல் அவதிப்பட்ட மக்க்ள் உண்ண உணவின்றி பசி பட்டினியால் வாடியதனாலும் இங்கிருந்து கடல் வழியாக ஒருசில குடும்பத்தினர் இந்தியாவிற்கு இடம்பெயர்ந்து சென்றனர். 1991 ம் ஆண்டுகாலத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பூநகரியில் வாழ்ந்தமக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து ஜெயபுரப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்தனர். பின்பு 1992 , 1993 ல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவிலிருந்து மக்கள் மீண்டும் ஜெயபுரப் பிரதேசத்தில் வாழ்ந்து வந்தனர்.

இவ்வாறு இந்தியாவில் இருந்து புகைப்படப்பிடிப்பு பெயின்டிங் வரைதல் கலை போன்ற பலதொழில்களைக் கற்றுக் கொண்டுவந்து தற்போது இப்பிரதேசத்தில் இருந்து கொழும்பு யாழ்ப்பாணம் மாத்தளை போன்ற நாட்டின் பல பிரதேசங்களிலும் சென்று சிறப்பான முறையில் தங்கள் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மக்கள் இந்தியாவிலிருந்து வந்தபின் இப்பிரதேசத்திற்குரிய தபால் கந்தோர் ஆயுள்வேத வைத்தியம் வாசிகசாலை போன்ற நிலையங்கள் கொண்டுவரப்பட்டன.

கல்வி நடவடிக்கைகளைப் பொறுத்தளவில் கல்விக் கூடங்களுக்கான கட்டடங்கள் கட்டப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் கட்டடப்பணி நிறைவுபெறாதநிலையில் கல்வியற்றிருக்கும் மாணவர்களை ஒன்று திரட்டி சர்வோதயக் காரியாலயம் அமைந்திருந்த இடத்தில் பெரியமரங்களின் நிழல்களிலே அமர்த்தப்பட்டு பாடசாலைக் கல்வி புகட்டப்பட்டு வந்தது. இந்நடவடிக்கையில் இ.முத்து லெட்சுமிஞா. சாந்தி பொ. சித்திரவேலுஅ. அரியலெட்சுமி சீத்தா லெட்சுமி சாந்தா போன்ற ஆசிரியர்கள் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்ததார்கள். இதுவே அக்காலத்திலான கல்வி முறையாகும்.

இவ்வாறு வாழ்ந்து வருகையில் 2008 ம் ஆண்டு நடைபெற்ற யுத்தத்தின் காரணமாக இப்பிரதேசமக்கள் தமது உடமைகள் அனைத்தையும் இழந்துபின் மீண்டும் வவுனியா முகாம்களில் வாழ்ந்து 2010 ம் ஆண்டுமீள் குடியேற்றம் செய்யப்பட்டனர்.

பல உதவிநிறுவனங்கள் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக பல்வேறு வகைப்பட்ட உதவித்திட்டங்களை வழங்னினர். தற்போது மக்கள் ஓரளவு தமதுவாழ்க்கையில் முன்னேறி அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களின் மூலம் வீடுகளும் கிடைக்கப்பெற்று அரச உதவிகளையும் பெற்று தமதுவாழ்வில் முன்னைய நிலையிலும் பார்க்க தற்போது முன்னேற்றமடைந்து வாழ்ந்துவருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது பாடசாலைகளிலும் பலபுதிய கட்டடங்கள் கட்டப்பட்டும் தபால் நிலையம் ஆயுள்வேத வைத்தியசாலை நூல் நிலையம் சமுர்த்திக்கட்டிடம் கால்நடை அலுவலகம் பால் சபை புதியசந்தைக் கட்டிடம் உருவாக்கப்பட்டு நல்லவளம் மிக்க இடமாக விளங்கி வருகின்றது.

## எதிர்நோக்கும் சவால்களும்அபிவிருத்திக்கானதீர்வுகளும்

இப்பிரதேச வாழ் மக்களின் வாழ்வாதாரமானது விவசாயமாகும். இவ் விவசாயமானது மழையை நம்பியே மேற் கொள்ளப்படுகின்றது. மழை இல்லாதகாலத்தில் இழப்புக்களை சந்திக்க வேண்டி நேரிடுவதால் நெற் செய்கையை மட்டும் வாழ்வது மிகவும் கடினமே. எனவே நெற்செய்கையை மட்டும் நம்பி இருக்காமல் கௌப்பி பயறு கச்சான் உழுந்து போன்ற தானியங்களைப் பயிரிடுவதன் மூலம் பயனைப் பெற்றுக் கொள்ளலாம்.

பெரும்பாலும் இங்குவாழும் குடும்பங்கள் வறுமைப்பட்ட குடும்பங்களே. ஓரிரு குடும்பங்களைத் தவிர அனைத்து வீடுகளிலும் கிணறுகளும் குழாய் கிணறுகளும் காணப்படு வதனால் நீர் வசதி காணப்படுகின்றது. எனவேஅனைத்து மக்களுக்களிற்கும் ½ஏக்கர் திட்டமொன்றினை உருவாக்கி அவற்றில் பயன் தரும் மரங்களான பப்பாசி மரவள்ளி போன்றவற்றை நட்டுஅவற்றிற்கு தூறல் முறை நீர்ப்பாசனத்தை அமைப்பதன் மூலம் நீரையும் சிக்கனமாகப் பயன்படுத்தி கூடியபயனைப் பெறக்கூடிய வினைத்திறனான செயற்பாட்டை மேற்கொள்ளலாம்.

இங்கு மாடுவளர்ப்பினை அதிகரிப்பதன் மூலம் அதுசார்பான உற்பத்திகளையும் அதிகரித்து வருமானத்தை பெறுவதை அதிகரிக்கலாம். சில குடும்பங்களிற்கு பசுக்கள் வழங்கப்பட்ட போதிலும் தற்போது பால் சபையும் கால் நடை அலுவலகமும் காணப்படுவதனால் கால் நடைகளுக்கு நோய் வராமல் தடுக்ககால் நடை அலுவலகம் உதவுவதோடு குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட அளவிலேயே பாலும் கொள்வனவுக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கின்றன. எனவே மேலும் பசுக்களை வழங்குவதன் மூலம் அப்பசுக்களுக்கான புல் வளர்ப்பு சம்மந்தமாகவும் மக்களுக்கு விழிப்புணர்வூட்டி தூறல் முறை நீர்ப்பாசனம் மூலமாகவே புற்களையும் வளர்த்தால் பசுக்களுக்கான உணவுத் தேவையைப் பூர்த்திசெய்து கொள்வதோடு வீணான செலவுகளையும் குறைக்கலாம். மற்றும் பாலின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பாற்கட்டி தயிர் யோகட் மோர் பால் டொபி போன்ற பாலுற்பத்தி உணவுகளைத் தயாரிப்பதன் மூலம் விற்பனையை அதிகரிக்கலாம்.

நிலப்பரப்பு அதிகளவு காணப்படுவதனாலும் நீர்வசதியும் உள்ளதனாலும் காளான் உற்பத்தியை அதிகரித்து அதனைப் பொதி செய்து ஏற்றுமதி செய்வதுடன் வருமானம் பெறக்கூடியதாக இருப்பதுடன் இச்செய்கையில் மக்களைபயன்படுத்துவதன் மூலமும் அவர்களுக்கான வேலைவாய்ப்பினையும் வழங்கக் கூடியதாகவும் இருக்கும்.

கல்வி நடவடிக்கைகளைப் பொறுத்தளவில் பலபுதிய கட்டடங்கள் கட்டப்பட்டு உயர்தரம் வரை மாணவர்கள் கற்கின்ற வேளையிலும் ஆசிரியர்கள் போதியளவு பற்றாக்குறையாக இருக்கின்றனர். எனினும் எமதுபிரதேசத்திலிருந்து தற்போது 10 ற்கு மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகி கல்வி கற்றுக் கொண்டிருப்பது பெருமைக்குரிய விடயமே. எனினும் அவர்கள் இப்பிரதேசங்களில் இருந்து பல்கலைக்கழகங்களிற்குத் தெரிவாகி இருப்பினும் அவர்களில் பெரும்பாலானோர் தமது உயர்கல்விக்காக கிளிநொச்சி யாழ்ப்பாணம் போன்ற வெளியிடங்களுக்குச் சென்றே தமது உயர்கல்வி கற்றுபரீட்சைக்குத் தோற்றுகின்றனர். எனவே உரிய பாடங்களிற்குரிய பாட ஆசிரியர்களை பாடசாலைக்குள் உள்வாங்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் எமது பிரதேச மாணவர்கள் எமது பாடசாலை யிலேயே கல்வி கற்கக்கூடியதாக இருக்கும்.

எமது பிரதேசமானது நன்னீர் வளத்தினைக் கொண்டிருப்ப தனால் அவர்களிற்கான உதவிகள் வழங்குவதன் மூலம் நன்னீர் மீன் பிடியை மேம்படுத்துவதன் மூலமாகமக்களின் வாழ்க்கைத் தரத்தினையும் உயர்த்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பிரதேசத்தில் பெண்களின் பங்குஅதிகளவில் காணப்படுகின்றது. கிராமமாதர் அபிவிருத்திச் சங்கங்களின் ஊடாக சிறுசிறுகுழுக்களாக சேர்ந்து பணம் சேமிப்பது மட்டுமல்லாமல் சிறு கைத்தொழில்களையும் மேற்கொண்டு வருகின்றனர். (கடலைகச்சான் மிளகாய்த்தூள் வறுத்தஅரிசிமா போன்றன பொதியிடல் உணவு சமைத்து ஓடரிற்குக் கொடுத்தல் பழமரக்கன்றுகள் உற்பத்தி செய்து விற்றல் தையல் போன்றன).

எனவே இவ்வார்வமுள்ள பெண்கள் காணப்படுமிடத்து இவர்களுக்கான தையல் உபகரணங்கள் வழங்குவதுடன் ஏனைய உதவிகளையும் வழங்கி ஏனைய உதவிகளையும் வழங்கி அவர்களை ஊக்கப்படுத்துவதன் மூலம்அவர்களின் வாழ்க்கைத்தரத்தினையும் மேம்படுத்த முடியும். மற்றும் வயல் காணிகள் அதிகளவில் வழங்கப் படக்கூடியதாக காணப்படுவதனால் வயல் காணிகள் அற்ற குடும்பத்தினருக்கு வயல் காணிகளை விரைவாக வழங்குவதன் மூலம் அவர்களின் விவசாயத்தை மேம்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளும் பெரியோர் கடமைகளும்

திரு. செ. பன்னீர்ச்செல்வம்
ஆசிரியர்
கிளி /முக்கொம்பன் அ.த.க.பாடசாலை

மனித வாழ்க்கைச் சக்கரத்தில் பிள்ளைப்பராயம் என்பது மிகவும் முக்கியமானதொரு கட்டமாகும். அத்திபாரமும் ஏனைய திட்டங்களும் சரியாக இருக்கின்றபோதே ஒரு கட்டடம் முழுமையானதாக அமைகின்றது. அது போலவே பிள்ளைகள் மீது நாம் காட்டுகின்ற கரிசனையும் தீட்டுகின்ற திட்டங்களும் வழங்குகின்ற ஊக்கல்களும் அப் பிள்ளைகளின் வருங்காலத்தைத் தீர்மானிக்கின்றன. இப்பிள்ளைப் பருவத்தைச் சரியாகக் கையாண்டு அவர்களுக்கு நல்லதொரு எதிர்காலத்தைக் கொடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு பெரியோர்களுக்கே உள்ளது. மனிதகுலப் படைப்பில் இது ஒரு நியதியாகவும் இருக்கின்றது.

ஆரம்பகாலங்களிலே எமது முன்னோர் தமது அறிவு நுட்பத்தால் பிள்ளைகளின் வளர்ச்சியைப் பாதிக்காத வகையிலான பல்வேறு வாழ்க்கை முறைகளையும் கொண்டிருந்தனர். பெரிதும் கூட்டுக்குடும்பமாகவே வாழ்ந்தனர். பெற்றோரும் ஏனைய வளர்ந்தவர்களும் பிள்ளைகள் விடயத்திலே நேரத்தைச் செலவு செய்யக்கூடிய சூழல் அன்று காணப்பட்டது. பாட்டன், பாட்டி, தாத்தா, அம்மா, அப்பா, மாமா, மாமி என எல்லோருடைய அன்பையும் பிள்ளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு இருந்தது. நிலா முற்றத்தில் கூடியிருந்து கதைகள் சொல்லுதல் , கூடிக்கதைத்தல் , சாப்பிடுதல் , பாடம் கற்றல், விளையாட்டுக்களில் ஈடுபடுதல் என்பன அன்று இருந்தன இதனால் பிள்ளைகள் குடும்ப பாசத்திற்குக் கட்டுப்பட்டு கட்டுக்கோப்புடையவர்களாகவும் பாதுகாப்பாகவும் விழுமிய உணர்வுகளோடு வளர்ந்தனர். ஆனால் இன்றைய நாகரிக சமுதாயத்தில் இவையெல்லாம் அற்றுப் போய்விட்டன. பல்வேறு காரணங்களால் ஏற்பட்ட குடும்ப உறவுகளின் சிதறல், நாகரிக வளர்ச்சி, பொருளாதாரத்தின் மீதான மோகம், விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி, விழுமியப் புரள்வுகள் எனப் பல்வேறுபட்ட காரணிகளால் பிள்ளைகளின் முறையான வளர்ச்சிக்குரிய சூழல் இன்று அற்றுப் போய்விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் கருவறையில் இருக்கும் போதே பிள்ளை கற்றுக்கொள்ள ஆரம்பிக்கின்றது என்பதால் அப்பொழுதிலிருந்தே அப்பிள்ளை விடயத்திலே பெரியோர் அக்கறையாக இருந்து கொள்ள வேண்டும் கருவிலே பிள்ளையைச் சுமக்கின்ற தாய் தான் இருக்கும் சூழலைப் பிள்ளையின் வளர்ச்சிக்கேற்ற சூழலாக ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். போசாக்கான உணவுகளை உட்கொள்ள வேண்டும். நோய்த்தொற்று, குடும்பப் பிரச்சினைகள், ஏனைய உடல், உள நெருக்கடிகள் என்பவற்றிலிருந்து தாய் பாதுகாப்பாக இருந்து கொள்ள வேண்டும். ஏனையவர்களும் இதற்கு உறுதுணையாக இருந்து கொள்ள வேண்டும். இவ்வாறு இல்லாத பட்சத்தில் சூழலாலும் தாயாலும் ஏனைய அங்கத்தவர் களாலும் ஏற்படுத்தப்படுகின்ற எதிர்மறையான விளைவுகள், வளரும் பிள்ளையை மிகவும் பாதிக்கின்றன.

கருவிலிருந்து தாயின் தொப்புள்கொடி உறவாலும் உணர்வுகளாலும் ஓசைகள் மூலமும் அறிவைப் பெற்றுக்கொண்ட பிள்ளை கருவிலிருந்து வெளியே வந்த பின் பரவசத்துடன் வெளியுலகத்தைக் காண்கின்றது. தான் கண்களால் காணும் சூழல் , தன்னைச் சுற்றியுள்ள நபர்கள் , ஏனைய நடவடிக்கைகள் என்பவற்றின் மூலம் பிள்ளை அறிவைப் பெறுகின்றது. இங்கும் பிள்ளை வாழும் சூழலின் தட்ப வெப்ப நிலைகளும் சுகாதார, போசாக்கு நிலைமைகளும் வளர்ந்தோரின் நடவடிக்கைகளுமே பிள்ளையின் வளர்ச்சியிலே செல்வாக்குச் செலுத்துகின்றன. பிள்ளைகளின் மனம், விதை விதைப்பதற்காக பண்படுத்தப்பட்டு தயார் நிலையில் உள்ள வளமான நிலம் போன்றது. அம்மனத்திலே நாம் நல்ல எண்ணங்கள் , செயல்களையே விதைக்க வேண்டும். அப்போது தான் எதிர்பார்த்த விளைச்சலைப் பெறமுடியும்.

பெற்றோருக்கிடையில் ஏனைய குடும்ப அங்கத்தவர் களுக்கிடையில் காணப்படுகின்ற பிரச்சினைகள், தகாத பழக்க வழக்கங்கள் பிள்ளைகளை வெகுவாகப் பாதிக்கின்றன. மது அருந்துதல், புகைத்தல், தீய வார்த்தைப் பிரயோகங்கள் ஏனைய முறையற்ற நடவடிக்கைகள் என்பவற்றை பிள்ளைகளின் முன்னால் வைத்துக் கொள்ளுகின்ற போது அவை பிள்ளைகளை இலகுவாகச் சென்றடைந்து விடுகின்றன. பிள்ளைகள் அவதானித்தல், பின்பற்றல்,

என்பவற்றின் ஊடாகவே தமக்கான அறிவின் பெரும்பகுதியைப் பெற்றுக் கொள்கிறார்கள். அத்தோடு கள்ளங்கபடமில்லாத நல்லது கெட்டதைப் பிரித்தறியும் தன்மை இல்லாத மனத்தை உடையவர்கள் என்பதால் வளர்ந்தோரின் அந்தச் செயற்பாட்டையும் வார்த்தையையும் அவர்கள் பின்பற்றவே செய்வர். இதனால் வளர்ந்தோரின் நடவடிக்கைகள் அதற்கேற்பவே இருக்க வேண்டும்.

பெரியோர் என்போர், பிள்ளைகளுக்குப் பாதுகாவலர்கள். பிள்ளைகளைத் தீய வழியிலே செல்லவிடாது தடுப்பதும் நல்ல வழிகளைச் சொல்லிக் கொடுப்பதும் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பை ஏற்படுத்துவதும் பெரியோரின் கடமையாகும். வேலியே பயிரை மேய்ந்தது போல் பிள்ளைகளின் வாழ்க்கையை பெரியோர் சின்னா பின்னமாக்கக்கூடாது. நகர்ந்து போன யுத்தகாலங்களும் அதனுடன் இணைந்த மாறுதல்களும் அதிகளவான பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கேள்விக்குறி யாக்கியுள்ளன. யுத்தம் நிகழ்ந்த பிரதேசங்களில் பல பிள்ளைகள் பெற்றோரை , பாதுகாவலரை இழந்து இன்று சிறுவர் இல்லங்களிலும், உறவினர்களோடும் பல்வேறு மன அழுத்தங்களுடன் வாழ்கின்றனர். பல பெற்றோர் தமது சுதந்திரத்திற்காகவும் அறியாமை காரணமாகவும் தமது பிள்ளை களைக் கைவிட்டுச் சென்றுள்ளனர். இத்தகைய பிள்ளைகளின் ஏக்கங்கள, சஞ்சலங்களுக்கேற்ப அவர்களின் எதிர்காலம் சூனியமாகவே மலரும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

பிள்ளைகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப் படுதல் போதைப் பொருள் பாவனைக்கு உட்படுத்தப்படுதல் போன்ற பல்வேறுபட்ட முறையற்ற செயற்பாடுகள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றன. வளர்ந்து வருகின்ற இன்றைய இளம் சமுதாயத்தினர் (இளைஞர், யுவதிகள்) பிள்ளைகளை வழிப்படுத்துவதாக தமது நடைமுறைகளை வைத்துக் கொள்ளவில்லை. மதுப்பாவனை, புகைத்தல், விபசாரம் முறையற்ற தொலைபேசிப்பாவனை, குழு மோதல்கள், சினிமா உள்ளடங்கலாக இவர்களின் முறையற்ற நடவடிக்கைகள், வளர்ந்து வரும் பிள்ளைகளை வெகுவாகப் பாதிக்கின்றன. இளைஞர் யுவதிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கலாசாரத்தை சிறு பிள்ளைகள் அப்படியே பின்பற்ற முயற்சிக்கும் துன்பகரமான நிலை இன்று ஏற்பட்டுள்ளது. இதனால் பிள்ளைகளின் கல்வி விழுமியங்கள் சீரழிக்கப்படுகின்றன.

என்ன காரணமோ! இந்தச் சீர்கேடுகளை இன்று யாருமே கண்டு கொள்ளாது மௌனித்துப் போயுள்ளோம். வீட்டிலே பெற்றோர் பிள்ளைகளின் முறையற்ற செயற்பாடுகளைத் தட்டிக் கேட்பதில்லை. முன்பு போல் சமூகதத்தில் சீர்கேடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு சமூகசேவை அமைப்புக்களின் செயற்பாடுகள் இல்லை. நீதியை நிலைநாட்டுகின்ற துறைகள் இலஞ்சத்திற்கு அடிபணிந்து விட்டன. பொறுப்பான எத்துறை சார்ந்தவர்களும் இன்று ஸ்திரமாக இல்லை. தந்தை மகளையும் அண்ணன் தங்கையையும் ஆசிரியர் மாணவியையும் பாலியற் கொடுமைக்கு உட்படுத்தும் இழிவான நிலையில் இன்று சமுதாயம் உள்ளது. எல்லோருமே இன்று முறையற்ற பணத்திற்கும், நாகரிக மோகத்திற்கும் உட்பட்டு அதனைச் சரியென ஏற்றுக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். ஏனோ உண்மையான வாழ்வு எம் கண்களுக்குத் தெரிய மறுக்கிறது.

இந்த நிலை தொடருமாக இருந்தால் எமது சிறு பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியே. பெரியோர்களே ! நாம் ஒவ்வொருவரும் எமது பிள்ளைகளை நாளை சாக்கடையிலே தள்ளுவதற்கு இப்பொழுதே தயாராகிவிட்டோம் என்பதை நிகழ்காலம் தெளிவாகச் சொல்லுகின்றது அதனால் விழிப்படையுங்கள். பிள்ளைகள் விடயத்திலே ஒவ்வொருவருக்கும் கடமை உண்டு என்பதை உணருங்கள். வீதியோரங்களிலே பிச்சையேந்தல், குழந்தைத் தொழிலாளர்களாய் அல்லற்பட்டும், சிறுவர் இல்லங்களில் மன அழுத்தங்களுக்கு உட்பட்டும் கலாசார சீரழிவுகளால் ஈர்க்கப்பட்டும் நாளாந்தம் அழிந்து போகும் எம் பிள்ளைகளை அரவணைப்போம். கடமையுணர்வு உள்ளவர்களாக நின்று எம் எதிர்காலத் தூண்களுக்கு உரமூட்டுவோம்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படவரைகலையியலின் பரிணாம வளர்ச்சியில் புவியியல் தகவல் தொழில்நுட்பத்தின் (GIS) முக்கியத்துவமும் பிரயோகமும்

செல்வி கேதாஜினி நவரத்தினசிங்கம்
4ம் வருடம், யாழ் பல்கலைக்கழகம்
முழங்காவில.

## 1.0 படவரைகலையியல் ஓர் அறிமுகம்

படவரைகலையியல் ஆனது மனிதன் பயன்படுத்திய முதலாவது "மொழி" என்றே கூறலாம். ஆதி மனிதன் இயற்கையையும், மிருகங்களையும் தான் கூற முற்படும் விடயங்களையும் வரைபடங்களாக வெளிப்படுத்தியமைக்கு சான்றுகள் காணப்படுகின்றது. மனிதனால் உணர்ந்து கொள்ள கூடியதும் செயற்பாட்டிற்கு பயன்படுத்தக் கூடியதுமான படங்கள் அனைத்தும் படவரைகலையின் அமசங்களாகும்.

ஆரம்ப காலங்களில் இருந்து தோன்றிய படவரைகலை யானது காலத்திற்கு காலம் பலவகை தொழில்நுட்பங்களை உள்வாங்கி முழுமை பெற்றுள்ளது. படிப்படியான வளர்ச்சி கட்டங்களினூடாக நகர்ந்து தரவு சேகரித்தல், படம் தயாரித்தல், வடிவமைத்தல், உருவாக்குதல், காட்சிப்படுத்தல் போன்றவற்றை மேற்கொண்டு தொழில்நுட்பத்தின் இணைந்த படவரைகலையின் வளர்ச்சி கட்டத்தை அடைந்துள்ளது. இன்று படங்களின் தேவையும் இதற்கான கேள்வியும் அதிகரித்த நிலையில் பல்வேறு துறையினரும் படவரைகலையின் அவசியத்தை உணர்ந்திருக்கின்றனர்.

இவ்வாறு பல்வேறுபட்ட தேவைகளுக்கு படங்களை உருவாக்கும் தொழில்நுட்பமானது தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. அத்தொழில்நுட்ப முன்னேற்றங்கள் எவ்வாறான பரிணாம வளர்ச்சியூடாக மாற்றங்கள் அடைந்தது பற்றியும் இவ் மாற்றங்களின் சிறந்த வெளிப்பாடான தகவல் தொழில்நுட்பத்தின் படமாகடகல் முறை மற்றும் பயன்பாடு என்பது பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.0 படவரைகலையின் வரலாறும் வளர்ச்சி கட்டமும்

புராதன காலம்தொட்டு மனிதன் தான் வாழுகின்ற புவி பற்றிய தகவலை அறிவதில் ஆவல் உடையவர்களரக இருந்தான் இதன் காரணமாகவே வரைபட கலை ஆரம்பமானது இவ்வாறான ஆரம்பத்தைக் கொண்ட பட வரைகலையானது முக்கியமாக நான்கு வளர்ச்சிக்கட்டங்களைக் கொண்டு காணப்படுகின்றது மனித முயற்சி மூலம் (Manual Techligy) ஒளியினைப்பயன்படுத்தி (Optical-Mechanical Technology) புகைப்பட இரசாயன முறை மூலம் (Photo chemical Technology) மின்னியல் முறை மூலம் (Electronic Technology) இக்கால கட்டங்களின் வழியே படவரை கலையானது வளர்ந்து செல்கின்றது.

## 2.1 முதலாவது பரிணாம வளர்ச்சிக் கட்டம் (First Revolution)

மனித முயற்சியினால் இக்காலத்தில் படங்கள் வரையப்பட்டன. ஆரம்ப காலத்தில் நைல் நதிப்பள்ளத்தாக்கில் வாழ்ந்து புராதன எகிப்தியர் வருடாவருடம் தமது காணிகளை அளந்து வைத்தனர் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு. ஆண்டு தோறும் நைல்நதி பெருக்கெடுத்து ஓடியதால் காணிகளின் எல்லை அழிக்கப்பட்டன. இதனால் எல்லைப் பிணக்குகள் ஏற்படுவதை தடுப்பதற்காக அவர்கள் தமக்குரிய காணி தொடர்பான படங்களை வரைந்து வைத்தனர். அந்த வகையில் கி.மு 2800ம் ஆண்டளவில் மொசப்பத்தேமியாவில் பபிலோனியா வாழ்ந்த ஒருவர் தனது காணி அமைந்துள்ள இடத்தை களிமண் தட்டில் வரைந்ததே தேசப்படத்தின் ஆரம்ப முயற்சிக்கு சான்றாக அமைகிறது. கிபி 150 இல் கிரேக்க நாட்டை சேர்ந்த தொலமி முதன் முதலில் உலகப் படத்தை வரைந்தார் அதன் பின்னர் கிபி 3ம் நூற்றாண்டில் வாழ்ந்த இராற்றோ தேனிசு என்பவர் புவியின் பருமனைக் கணித்து உலகப்படம் ஒன்றை வரைந்தார் தொடர்ந்து மனித முயற்சியின் பயனாக கிடைக்கப் பெற்ற தேசப்படமானது படவரைக்கலை வளர்ச்சியின் அடித்தளமாக காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.1.1 தேசப்படம்

புவி மேற்பரப்பில் காணப்படுகின்ற இயற்கையான பௌதீக அம்சங்களையும் மனிதனால் உருவாக்கிக் கொள்ளப்பட்ட பண்பாட்டு அம்சங்களையும் பொருத்தமான குறியீடுகள், நிறங்கள் போன்றவற்றை பயன்படுத்தி பொருத்தமானதோர் அளவுத்திட்டத்தின் பிரகாரம் தட்டையான தளத்தில் வரைந்து கொள்ளப்படும் பட வரை கலையியல் நுட்ப முறையே தேசப்படம் ஆகும்.


தேசப்படங்கள் இரு முறைகளில் வரையப்படுகின்றன.

I. ஓரங்குல தேசப்படம்
II. மெற்றிக் தேசப்படம்

I. ஓரங்குல தேசப்படம்

நிலத்தின் ஒரு மைல் தூரம் தேசப்படத்தில் ஓர் அங்குலமாகக் காட்டப்படுதல். முதலாவது ஓரங்குல படமானது கி.பி 1746ம் ஆண்டில் பிரித்தானியாவில் வரையப்பட்டது. இலங்கையில் நில அளவைத்திணைக்களம் கி.பி 1800ம்ஆண்டில் நிறுவப்பட்டது. எனினும் கி.பி 1924ம் ஆண்டளவிலேயே அது நிறைவேறியது ஓரங்குல உலகப்படத்தில் இலங்கை 92துணை பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

II. மெற்றிக் தேசப்படம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தில் ஒரு கிலோமீற்றர் தூரம் தேசப்படத்தில் 2 சென்றிமீற்றராக காட்டப்படுகின்றது. 1964ம் ஆண்டளவில் மெற்றிக் அளவு முறை கொண்டுவரப்பட்டது. எனினும் இலங்கையில் 1980ஐ அடுத்து தசாப்பத்தின் முன்பகுதியிலேயே 1:50000 தேசப்பட தயாரிப்பக்கள் ஆரம்பமாகின. இலங்கை அமற்றிக் அளவு முறையில் 92 துணைபிரிவுகளாக பிரிக்கப் பட்டுள்ளது. இதில் ஒரு பிரிவு 40Km நீளத்தையும் 25Km அகலத்தையும் கொண்டுள்ளது.

இவ்வாறு இன்றில் இருந்து பல ஆண்டுகளுக்கு முன் மனிதனால் வரையப்பட்ட வரைபடங்கள் புதிய கருவிகள், ஆயுதங்கள், தொழில்நுட்பங்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்ட பின்னரும் இம் முறையானது இன்றும் படவரைகலையின் ஒரு அங்கமாக முக்கியம் பெற்றுக்காணப்படுகின்றது. எனினும் இன்று தொழில்நுட்ப வளர்ச்சியுடன் கூடிய படவரைகலையுடன் ஒப்பிடும் போது பாதகமான தன்மையாகவே காணப்படுகின்றது.

## 2.2 இரண்டாவது பரிணாம வளர்ச்சிக் கட்டம் Secound Revolution

இக் கட்டத்தில் படவரைகலையில் ஒளியிசைப் பயன்படுத்தி படங்கள் வரையப்பட்டன. வில்லைகள் ஊடாக ஒளியினை புகுத்தி அதன்மூலம் பெறப்படும் விம்பங்களை பயன்படுத்தும்முறை அறிமுகப்படுத்தப்பட்தன் பின்னர் படவரைகலையில் ஓர் பாரிய முன்னேற்றம் எற்பட்டது வில்லைகளை பயன்படுத்தி ஒளியினை தெறிக்கச் செய்து {Projection} பெறப்படும் விம்பங்களை இயந்திரங்களின் உதவி கொண்டு படமாக்கினர். இவ் தொழில் நுட்பமானது தொழில் புரிவோரின் அளவினை மட்டுப்படுத்தியதுடன் ஓரளவு சரியான தெளிவான படங்களை பெறக்கூடியதாகவும் காணப்பட்டது.

## 2.3 மூன்றாவது பரிணாம வளர்ச்சிக் கட்டம் Third revolution

19ம் நூற்றாண்டில் ஏற்பட்ட இரசாயனப்பதிப்பு புகைப்பட துறையின் வளர்ச்சி என்பன படவரை கலையில் மூன்றாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டத்தை ஏற்படுத்தியது. முதலில் இரசாயன முறையில் படங்களை பதிப்பிக்கும் {Chemical Printing} லிதோகிராபி {Lithography} முறையானது 19ம் நூற்றாண்டில் முதன்முதலில் படவரைகலையில் அறிமுகப்படுத்தப் பட்டது. இதில் இருந்து படவரைகலையில் புதிய முன்னேற்றம் ஏற்பட்டது. சூழலியல் தொலையுணர்வு செயற்கை கோள் {environmental Remte sencing} கான அடித்தளம் இத்தொழில் நுட்பம் மூலம் அறிமுகப்படுத்தப் பட்டது. இதன் மூலம் பட்ஙகளை தொகுத்தல், தயாரித்தல் மீள் தயாரித்தல் போன்ற செயன்முறை இலகுவானதுடன் படங்கள் தேவைக்கேற்ப பெருப்பித்தல் சிறுப்பித்தல் போன்ற செயன் முறைகளும் இலகுபடுத்தப்பட்டன.

## 2.4 நான்காவது பரிணாம வளர்ச்சி கட்டம் Forth Revolution

இதுவே மின்னியல் சாதனங்களைப் பயன்னடுத்தி படங்களை தயாரிக்கும் முறையாகும். 1950களில் ஏற்பட்ட உயர் தொழில்நுட்ப வளர்ச்சி மூலம் கணனியைப் பயன்படுத்தி இலகுவாக வரைபடங்களை தரவு சேகரித்தல், வடிவமைத்தல், தயாரித்தல், மீளத்தயாரித்தல், காட்சிப்படுத்துதல் போன்ற செயன்முறைகள் மேற்கொள்ளப்பட்டது. இவ் நான்காவது வளர்ச்சிக் கட்டமானது படவரைகலையில் தாக்கத்தினை ஏற்படுத்தியது போல முன்னர் எந்தவொரு வளர்ச்சிக் கட்டமும் ஏற்படுத்தவில்லை. இங்கு அட்டவணைகள் புள்ளிவிபரத் தரவுகள் வெளிக்கள ஆய்வுகள் விமானப்படங்கள் செய்மதிப்படங்கள் இடவிளக்கப்படங்கள் போன்ற பல்வேறு வகைப்பட்ட தரவுகளை புவியியல் தகவல்தொழில்நுட்ப முறையூடாக (GIS) கணனி மூலம் மேற்கொண்டு படங்களை உருவாக்கி பெற்றுக்கொள்ள முடிகின்றது. இது படவரை கலையின் விருத்தியின் மைக்கல்லாக காணப்படுகின்றது.

## 2.0 புவியியல் தகவல் ஒழுங்கு முறைமையின் தோற்றம் பிரயோகங்கள்

GIS என்பது படவரைகலையின்நான்காவது கால கட்டத்தின் உயர்தொழில்நுட்பத்துடன் கூடிய முறையாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படங்களை ஒப்பீட்டு பார்ப்பதில் உள்ள பிரச்சினையை தீர்க்கவே இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டது. 1960களில் புதிய புவியியல் தரவு வடிவம் மற்றும் படமாக்கும் மென்பொருள் (New forms of geograbhy data and mapping Software) உருவாக்கப்பட்டது. அதாவது Computer இல் (Cartography) அபிவிருத்தி செய்யப்பட்டது. 1960களுக்கு பின்னர் odyssey என்ற தொகுதி புதிய தரவு கட்டமைப்பு [New data Structure] ஒன்றினை அறிமுகப்படுத்தியது. 1990களில் GIS மென்பொருள் பாவனைக்கு இலகுவாக அபிவிருத்தி செய்யப்பட்டது. Geographic- Earthis features in real world location. புவி மேற்பரப்பின் யதார்த்த தோற்றப்பாடுகளைக் குறிக்கின்றது. Information- Consists of data-Information. System – The Computer technology and support infrastruture [ input –processing –output] GIS என்பது இடங்கள் அல்லது புவியியல் தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்காக கணனி மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு ஆய்வுத்துறையாகும். வளங்கள் தொடர்பான திட்டமிடல் முகாமைத்துவம் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட இடம்சார் தகவல்களை முகாமைத்துவம் செய்ய, கையாள்வதற்கு பகுப்பாய்வு செய்வதற்கு மாதிரிகளாக உருவாக்குவதற்கு பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு அனுசரனை வழங்கக்கூடிய கணனி வன்பொருள் மென்பொருள் மற்றும் ஒழுங்கு முறைகளைக் கொண்டிருக்கின்ற ஒரு முறையே தகவல் தொழில்நுட்ப முறையாகும். GIS இன் தோற்றம் என்பது Geography, Cartography, ComputerScience, Mathematic என்பவற்றின் அறிவில் இருந்து வந்தது. GIS பலதுறைகள் Multy displinery சேர்ந்த ஒரு துறையாக காணப்படுகின்றது.

## 2.1GIS மூலம் படமாக்கல்

GIS இன் கூறுகள் அல்லது உறுப்புக்கள்




1. வன் பொருள் Hard ware
2. மென்பொருள் Soft ware
3. தரவு Date
4. மனிதர்கள் People
5. முறைகள் Methods



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.2 GIS இன் பிரதான செயன்முறைகளான

I. உள்ளீடு செய்தல் Input

II. கையாளுதல் Mainpulation

III. வரைபடம் தயாரித்தல் Map Making

IV. முகாமை செய்தல் Management

V. பகுப்பாய்வு செய்தல் Query Analysis

VI. காட்சிப்படுத்தல் Visulization




I. உள்ளீடு செய்தலில் குறித்ததோர் இடம் சார்ந்த தரவுகளை கணனியில் உட்செலுத்தும் செயன்முறை இதுவாகும். குறித்து தரவுகள் பொருத்தமான ஒரு எண்ணிலக்க வடிவத்திற்கு (Digital format) மாற்றப்பட்டு கணணியில் உட்செலுத்தப்படும். கையாளுதல் உள்ளீடு செய்யப்பட்ட தரவுகளை வெவ்வேறு அளவுத்திட்ட பரிமாணங்களில் தேவைக்கு ஏற்ப திறனுடையதாக மாற்றுதல் போன்ற செயன்முறை வரைபடம் தயாரித்தல்GIS இல் வரைபடம் முக்கிய இடத்தை கொண்டுள்ளது கைகளால் வரையப்படுகின்ற வரைபட முறையை விட GIS இல் இலகுவான முறையில் தயாரிக்கலாம். இற்கு வரைபடத்திற்கான தரவுகள் முதலில் பொருத்தமான எண்ணிக்கை Digital Format வடிவத்திற்கு மாற்றியமைக்கப்படும் இது தரவுத்தளத்தின் உருவாக்கத்துடன் தொடங்குகிறது. இங்கு டிஜிட்டைசிங் முக்கிய இடத்தை பெறுகின்றது, முகாமை செய்தல்

கணனியில் கிடைக்கப்பெற்ற தரவுகளை தகவல்களாகி களஞ்சியப்படுத்தல் ஒழுங்குபடுத்தல் போன்ற நெறிப்படுத்தல் ஒப்பீடு செய்தல் எனப்படும் காட்சிப்படுத்துதல்

கணனியில் உட்செலுத்தப்பட்ட தரவுகள் பல்வேறு செயன்முறைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் வரைபுகளாகவோ படங்களாகவோ வெளியீடு செய்கின்ற இறுதி வடிவம் காட்சிப்படுத்தலாகும்.

## 2.3 படமாக்கலின் போது தரவை உள்ளீடு செய்ய பயன்படுத்தும் தரவு மூலங்கள்

பூகோள இடநிர்ணயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமான ஒளிப்படம்

செய்திப்படங்கள்

கள ஆய்வுத்தரவுகள்

நிர்வாகத்தரவு அட்டவணைகள்

Scanning

இறுவட்டு

## 2.4 தரவுகள்

உண்மைகள் மற்றும் இலக்கங்கள்
பிரதிநிதித்துவப்படுத்தப் படும் விடயங்களை தரவு என்பர்.

தரவு(Data) ⟹ தகவல்(Information)

GIS இல் தரவுகள் பிரதானமாக பின்வருமாறு வகைப்படுத்தப்படும்.

**இடம் சார் தரவுகள் (Spatial Datas)**

**இடம் சார தரவுகள் (Non -Spatial Datas)**

— **GIS** இல் பயன்படுத்தப்படுகின்ற மிகப் பிரதானமான தரவுகள் இவையாகும். புவியின் பௌதீகப் பண்பாட்டின் அம்சங்களின் வடிவம், உருவவியல், அளவு என்பவற்றின் மூலம் ஒரு இடத்தினைப் பிரதிபலிக்கும் தரவுகளே இடம்சார் தரவுகள் ஆகும். எந்தவொரு தரவு அகலாங்கு நெட்டாங்கால் அடையாளப்படுத்தப்படுமோ அது Spatial data எனப்படும். ஒரு இடத்தை அல்லது நிலையத்தை மிக நுட்பமாக வரையறுத்து படமாகக் காட்டும் தரவுகளாக இவை காணப்படுகின்றது.

— புள்ளி வடிவம் - பாடசாலை,வீடு(School, House....)

— கோட்டு வடிவம் - வீதி,ஆறு (Road, River....)

— மூடிய வடிவம் - வயல் நிலம் (Paddy land....)

**Hard copy maps ( வன்பிரதி வரைபடத் தரவுகள்)**

இது தாள்களில் வரையப்பட்டிருக்கும் தரவுகளைக் குறிக்கும். அதாவது தரைத் தோற்றப்படங்கள் (Topographical maps), விமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிப்படங்கள் (Aerial photographs), செய்மதிப்படங்கள் (Satellite maps), புவிமைய ஒழுங்கு படங்கள் ( GPS maps) போன்றவற்றினைக் குறிக்கும்.

**Soft copy maps ( மென்பிரதி வரைபடத் தரவுகள்)**


கணணி மொழியாகிய எண்ணியல் அமைப்பினை (Digital Format) கொண்டமைந்த இடம்சார் தரவுகளே மென்பிரதி வரைபடத் தரவுகள் எனப்படும். GIS இருவகையான தரவு மாதிரிகளைக் கொண்டுள்ளது.

- காவித்தரவு மாதிரி (Vector Data Model)
- நெய்யரித்தரவு மாதிரி (Raster Data Modal)

களைக் கொண்ட X,Y ஆகிய இரு புள்ளிகளுக்கு இடையில் உள்ள ஆள்கூறுகளை (Coordinates) நேர் பெறுமானங்களை அடிப்படையாகக் கொண்ட தரவுகள் காவித்தரவுகள் (Vector Data) எனப்படும். காவித்தரவுகளிற் கேத்திர (Geometries) முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை புள்ளி, கோடு, மூடியவுரு (Point, Line, Polygon) என்ற 3 வகையான இடம்சார் தோற்றப்பாடுகளைப் பிரதிபலிக்கின்றன. நெய்யரி கலங்களில் (Raster cell) காட்டப்படும். ஒவ்வொரு கலங்களுக்கும் பெறுமானம் (Code Number) உண்டு. நெய்யரி கலங்களின் அளவு படத்தின் தெளிதிறனைத் தீர்மானிக்கும்.

**காவித்தரவு மாதிரி மற்றும் நெய்யரித்தரவு மாதிரி**

**Vector data model and Raster data model**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.5 தகவல் தொழில்நுட்பத்தினுடைய பயன்பாடு

### 2.5.1 புவிச்சரிதவியல் படமாக்கல்

GIS ஆனது நில மேற்பரப்பின் அமைப்பு மற்றும் பாறைகள் பற்றியும் தகவல்களை உட்செலுத்தி படமாக்கல் மூலம் பல்வேறு தகவல்களை தருவதாக காணப்படுகின்றது. குறிப்பாக

- தரை மேற்பரப்பு மற்றும் தரை உட்பகுதிகளைப் படமாக்கல்
- மட்கட்டமைப்பை படமாக்கல்
- கனிய ஆய்வு நடவடிக்கை
- வண்டல் படிவுகளை கண்காணித்து படமாக்கல்
- சுற்று சூழல் நிலவியல்
- நிலப்பண்பாட்டு திட்டமிடல்

### 2.5.2 விவசாயம்

பயிர்ச் செய்கையுடன் தொடர்புடைய அனைத்து விதமான செயற்பாடுகளுக்கும் GIS ஆனது பயன்படுகிறது. செய்மதி மற்றும் வான்வழி கருவிகள் மூலம் பெறப்பட்ட தரவுகளைக் கொண்டு படமாக்கம் செய்யப்பட்டது விவசாய நடவடிக்கைகளக்கு பெரிதும் பயன்படுகின்றது.

- மண்ணின் பண்புகளை மதிப்பிடல்
- பயிர் விளைச்சலை கணிப்பிடல்
- பயிர் நிலைமைகளை மதிப்பிடல்
- மண்முகாமைத்துவ செயன்முறையை படமாக்கல்
- பயிர் வளர்ச்சியை கண்காணித்தல்

### 2.5.3 சுற்றுச் சூழல் கண்காணிப்பு

சூழலில் ஏற்படுகின்ற தாக்கங்கள், மாற்றங்கள் என்பவற்றை கண்டறிய பயன்படுகிறது.

- கரையோரப் பாதுகாப்பு /கண்டல் தாவரம், சதுப்பு நிலம், மண் அகழ்தல்
- நீரேந்து பிரதேசத்தை பாதுகாத்தல்
- காடழிப்பு பிரதேசங்களை கண்டறிதல்
- உயிர் பல்வகைமையை பாதுகாத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இனங்களின் இருப்பு நிலையை மதிப்பிடல்

### 2.5.4 இராணுவ நடவடிக்கை

- போர்க்கால விழிப்புணர்வு
- இலக்குகளை தீர்மானித்தல்.
- போர்த்திட்டமிடல்.
- புலனாய்வு நடவடிக்கை மேற்கொள்ளல்.
- எதிரிகளிடமிருந்து அச்சுறுத்தல்களில் பாதுகாத்தல்

### 2.5.5 அனர்த்த நடவடிக்கை

புவியில் ஏற்படும் இயற்கை அனர்த்ங்களை கண்டறிதல், இழப்பை குறைத்தல், அனர்த்தத்தை முன்னறிவித்தல் போன்ற பல செயன்முறைகளுக்கு பயன்படுகிறது. குறிப்பாக

- கடல்சார் பேரழிவுகள்
- நிலநடுக்கம், எரிமலைச் செயற்பாடு
- பனி உருகுதல்.
- அனர்த்த முகாமை நடவடிக்கை
- காட்டுத்தீ

### 2.5.6 நீரியல் நடவடிக்கை

இதில் புவியில் காளப்படும் நீரின் நகர்ச்சி பரவல், தரம், நீர்சுழற்சி, பயன்பாடு என்பன தொடர்பான படமாக்கலை குறிக்கின்றது. மேலும் நீர் தொடர்பான ஆய்வுகளுக்கும் GIS பயன்பாடு முக்கியம் பெறுகின்றது.

- பனியின் தடிப்பை அளவிடல்
- நீர்ப்பாசன திட்டமிடல்
- நீர்ப்பாசன கால்வாய்கள் மற்றும் கால்வாய்கள் சேதமடைந்திருப்பின் கண்டறிதல்.
- ஈரநிலங்களை படமாக்கல்.
- நீரோட்டங்கள் மற்றும் நீர் சுழற்சியை படமாக்கல்.
- கடலின் ஆழம்.
- கடல் வழி மார்க்கங்கள்.
- மீன்பிடி முறைமை.

போன்ற பல்வேறு துறைகளுக்கு GIS ஆனது பயன்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.6 GIS இன் அண்மைக்காலப் போக்கு

தகவல் தொழில்நுட்ப முறையானது சிறந்த ஒரு படமாக்கல் முறையாகக் காணப்படுவதுடன் இன்றும் பல்வேறு வசதிகளுடன் கூடிய மென்பொருட்களை அறிமுகப்படுத்திக் கொண்டே இருக்கின்றது. பல்வேறு துறைகள் ரீதியான படமாக்கலுக்கு GIS ஆனது பயன்படுகின்றது. இன்று படங்களில் உள்ள பிழைகளை நீக்கவும் இறுதிப்படமாக்கலின் பின் மேலதிக் தரவுகளை இணைக்கவும் இலகுவாக இருப்பதுடன் தேவையற்ற நேரவிரயமும் தவிர்க்கப் படுகின்றது. GIS இன் மென்பொருட்கள் எனும் போது ArcGIS, Arc view, Arc Info, GRASS IDRISI, ILWIS, MapInfo, Geo media, Spans, Mf works QGIS என்பவற்றை குறிப்பிடலாம்.

உண்மைத்தன்மையுடன் உடனடித்தரவு மூலங்களை பயன்படுத்தி படமாக்க முடிவதுடன் முப்பரிமானப் படங்கள் பெறமுடிகின்றமை வழுக்களையும், தரவுகளையும் இலகுவாக சரிப்படுத்த முடிவதுடன் மாற்றங்களை உடனுக்குடன் அறிந்து படமாக்கலை மேற்கொள்ளவும் பயன்படுகின்றது. இவ்வாறு இன்றும் GIS இனது வசதிகள் அதிகரிப்பதுடன் தேவையும் உயர்ந்து செல்கின்றது.

## 3.0 முடிவுரை

படவரைகலையானது மிகப்பழைய காலத்திலிருந்தே பின்பற்றப்பட்டு வந்த போதிலும் அவை காலத்தின் சுழற்சிக் கேற்ப தொழில்நுட்ப வளர்ச்சி மாற்றங்களுக்கு உட்பட்டு விருத்தி அடைந்து வந்துள்ளது. எனினும் இன்றைய நவீன புவியியல் தொழில்நுட்ப வளர்ச்சி என்பது படவரை கலையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே இவ் புதிய தொழில்நுட்பமானது காலத்திற்குகாலம் வளர்ச்சி அடைந்து படவரைகலையில் ஏற்படும் தடைகளை நீக்கி முழுமையான தொழில்நுட்ப பாதையில் விருத்தியுற்று செல்கின்றது.

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதிரும் போது

நடராசா கமலதேவி
முழங்காவில்.

துயரங்கள் மீறி
இயங்க பழகுங்கள்
இறகுகள் விடை பெற்றாலும்
நடக்க தொடங்குங்கள்
நீரின் போக்கை போல
வாழ்க்கை போகிறது
கடல்தேடி அல்ல...
அணை தேடி தேங்கி
போனாலும் அணை திறக்க
காத்திருங்கள்
வெளிவரும் போது
சீறிப்பாய...
ஓடையாய் சென்றாலும்
பயிர்கள் தேங்க வளப்படுத்துங்கள்
நிழல்தரும் குடை
வெயில் காய்ந்தே
நிழல் தருகிறது...
பழம் தரும்
மரங்கள் அடிப்பட்டே
முதிர்கிறது...
உன் வாழ்க்கையும்
உணரப்படும் நீ
முதிரும் போது
நீராய், நிழலாய், கனியாய், குடையாய்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூநகரியின் பதிவுகள்...



கல்முனை வெளிச்ச வீடு




செல்விபுரம் கண்ணகி அம்மன் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரியின் பதிவுகள்...



இயற்கை அரணாய் அமைந்திருக்கும் மணற்குன்றுகளின்
எழில்மிகு தோற்றம் – கௌதாரி முனை



உயிர்ப் பல்வகைமையைப் பாதுகாக்கும் கண்டல் காடுகளின்
எழில்மிகு தோற்றம் – கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சேவைகள் கிளையின் கீழ் பிரதேச செயலகங்களினால் ஆற்றப்படும் சமூக சேவை உதவிகள்

செல்லத்தம்பி சுரேந்திரா
சமூகசேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், பூநகரி.

பிரதேச செயலகமானது 1992ம் ஆண்டின் 58ம் இலக்க சட்டத்தின் பிரகாரம் நிர்வாகத்தை மக்கள் இடத்திற்கு எடுத்துச் செல்வதற்காகவும் பிரதேசமட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளில் மக்கள் பங்களிப்பை பலப்படுத்துவதற்காகவும் அதிகாரப் பரவாக்கல் மூலம் தாபிக்கப்பட்ட அமைப்பாகும். பிரதேச மட்டத்தில் மக்கள் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக மாவட்ட செயலகத்திலிருந்தும், மாகாண சபை யிலிருந்தும் பல வகையான அதிகாரங்கள் பிரதேச செயலகங்களிற்கு மாற்றப்பட்டுள்ளது. இதிலிருந்து பார்க்கும் போது பிரதேச செயலகமானது ஒரு மைய அதிகார கட்டமைப்பாக விளங்குகின்றது.

பிரதேச செயலகங்களில் தாபனக்கிளை, நிதிக்கிளை, திட்டமிடல் கிளை, சமூகசேவைகள் கிளை, பதிவாளர்கிளை காணி பயன்னபட்டுக்கிளை, வாழ்வின் எழுச்சிகிளை, கிராம அபிவிருத்திகிளை, சிறுவர் பெண்கள் அபிவிருத்தி கிளை, வெளிக்கள உத்தியோகத்தர்கள் கிளை (விளையாட்டு, கலாசாரம், அனர்த்த நிவாரணம், தொழிற்துறை, விவசாயம்) என பல்வேறுபட்ட கிளைகள் சேவைகளை ஆற்றுகின்றது. இக்கட்டுரை மூலம் சமூக சேவைகள் கிளையின் மூலம் பிரதேச செயலகங்களினால் நலிவுற்ற மக்களுக்கு வழங்கப்படும் சமூக சேவை உதவிகளை அனைவரும் அறிவதே ஆகும்.

சமூக சேவைகள் கிளையின் இலக்கு யாதெனில் சமுதாயத்தில் மிகவும் வறுமையான நிலையில் காணப்படும் ஆட்களான வறியோர்கள், மூத்த பிரஜைகள், மாற்றுவலுவுடையோர்கள், கணவனை இழந்த பெண்கள், கணவனை பிரிந்து வாழும் பெண்கள், பாரிய நோயினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினாறு வயதிற்கு குறைந்த பெற்றோரை இழந்த பிள்ளைகள், மிகவும் வறுமையான குடும்பம், மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் போன்றோர்களுக்கு முழுமையான பங்களிப்பை சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு பெற்றுக் கொடுத்தலாகும்.

இந்த வகையில் சமூக சேவைகள் கிளையின் கீழ் பிரதேச செயலகங்களினால் ஆற்றப்படும் சமூக சேவை உதவிகளாவன.

1. பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்குதல்

விண்ணப்பதாரியின் கோரிக்கை கடிதத்துடன் விண்ணப்ப படிவத்தை பூரணப்படுத்தி கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலுடன் ஒப்படைக்க வேண்டும். ரூபா 250 முதல் ரூபா 500 வரை மாதாந்தம் வழங்கப்படுகின்றது.

2. விசேட நோய்க் கொடுப்பனவு வழங்குதல்

புற்றுநோய், காசநோய், தொழுநோய், தலசீமியா, சிறுநீரகப்பாதிப்பு, முள்ளந்தண்டுவடம் பாதிப்பு போன்ற நோய்களிற்கு மாதாந்தம் இக்கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. விண்ணப்பதாரியின் கோரிக்கை கடிதத்துடன் விண்ணப்பபடிவம், மருத்துவ அறிக்கை இணைத்து ஒப்படைக்க வேண்டும். புற்று நோய் கொடுப்பனவிற்கு ரூபா 500 முதல் 750 ரூபா வரையும் சிறுநீரகப்பாதிப்புக்கு ரூபா 500உம் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு 1500 முதல் 3000 ரூபா வரையும் ஏனைய நோய்களுக்கு ரூபா 250 முதல் ரூபா 500 வரை வழங்கப்படுகின்றது.

3. எழுபது வயதிற்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு மாதாந்தம் ரூபா 2000 வழங்குதல்.

விண்ணப்ப படிவத்துடன் அடையாள அட்டை பிரதி, குடும்ப அட்டைபிரதி என சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. மாற்றுவலுவுடையோர்களுக்கு மாதாந்தம் கொடுப்பனவாக ரூபா 3000 வழங்குதல்.

விண்ணப்பதாரியின் கோரிக்கை கடிதத்துடன் விண்ணப்பப்படிவம், மருத்துவ அறிக்கை இணைக்கப்பட வேண்டும். எனினும் இது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வழங்கப்பட்டு வருகின்றது. எமது பிரதேச செயலகத்தில் 125 பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. சுயதொழில் கொடுப்பனவு வழங்குதல்.

விண்ணப்பதாரியின் கோரிக்கை கடிதத்துடன் விண்ணப்பப்படிவம், செலவு மதிப்பீடு, பொது 35 படிவம் இணைக்கப்பட வேண்டும். சமூக சேவைகள் திணைக்களத்தினரால் 15000 ரூபாவும் சமூக சேவைகள் அமைச்சினூடாக ரூபா 25000 ரூபாவும் வழங்கப்படுகின்றது.

6. தற்செயல் நிவாரணக் கொடுப்பனவு வழங்குதல்.

விண்ணப்பதாரியின் கோரிக்கை கடிதத்துடன் விண்ணப்படிவம், பொலிஸ்அறிக்கை, கொடுப்பனவு உறுதிச்சீட்டு பொது 35படிவம் இணைக்கப்பட வேண்டும். சமூக சேவைகள் திணைக்களத்தினரால் வீட்டினை புணரமைப்பதற்கு உச்ச தொகையாக ரூபா 10000வும் போதிய வருமானம் இல்லாத குடும்பத்தில் ஏற்படும் மரணச்சடங்கு செலவிற்காக ரூபா 15000வும் வழங்கப்படுகின்றது.

7. விசேட தேவையுடையோருக்கான நடமாடும் உபகரணங்களை வழங்குதல்.

விண்ணப்பதாரியின் கோரிக்கை கடிதத்துடன் விண்ணப்பபடிவம், மருத்துவ அத்தாட்சிபத்திரம் இணைக்கப்பட வேண்டும். முச்சக்கரவண்டி, சக்கரநாற்காலி, ஊன்றுகோல், கபிலர் காலணி, வெள்ளைப்பிரம்பு, காது கேட்கும் கருவி, மூக்குக்கண்ணாடி, கண்வில்லை, செயற்கைக்கால், கை, பாதம் இலவசமாக வழங்கப்படுகின்றது.

8. விசேட தேவையுடையோருக்கான வீடமைப்பு உதவிகளை வழங்குதல்.

விண்ணப்பதாரியின் கோரிக்கை கடிதத்துடன் விண்ணப்ப படிவம், தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மதிப்பீடும் வீட்டின் வரைபடம், காணிஉறுதி, அமைவிட வரைபடம், மருத்துவ அத்தாட்சிப்பத்திரம், தேசிய அடையாள அட்டை பிரதி, வருமான உறுதிப்படுத்தல் கடிதம் என்பன இணைக்கப்படவேண்டும். புதிய வீட்டினை புணரமைப்பதற்கு இரண்டரை இலட்சம் ரூபாவும் (ரூபா 250, 000) வீடு திருத்துவதற்கு ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவும் (ரூபா 150,000) வழங்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் இது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வழங்கப் படுகின்றது.

9. அங்கவீனமுற்ற நபர்களுக்கான விசேட தொழிற்பயிற்சிகள் மற்றும் விசேட கல்வி அலகில் இணைக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

10. அங்கவீனமுற்ற நபர்களை CBR புனர்வாழ்வுத் திட்டத்தினூடாக குடும்பச் சூழலில் பராமரிக்கும் வாய்ப்பை வழங்குதல்.

11. அங்கவீனமுற்ற நபர்கள் சுயமாக நடந்து தங்களுடைய வேலைகளை தாங்களே செய்து கொள்வதற்கு அணுகும் வசதிகளை செய்து கொள்ளுதல்.

12. விசேட தேவையுடையவர்கள் அனைவருக்கும் விசேட அடைகள் வழங்குதல்.

13. கிராம அலுவலர் பிரிவு ரீதியாக மாற்று வலுவுடையோர் களுக்கான சுய உதவிக்குழு அமைத்து அவர்களுடைய நலன்களை பேணுதல்.

14. கிராம பிரதேசமட்டத்தில் முதியோர் சங்கங்களை உருவாக்கி பதிவினை மேற்கொண்டு அதன் மூலம் முதியோர் நலன்களை பேணுதல்.

15. ஆதரவற்ற மூத்த பிரஜைகளை அரசமுதியோர் இல்லத்தில் அனுமதித்து பராமரிக்க வழிசெய்தல்.

16. வலிந்துதவு சமூக சேவை அமைப்புக்களை பதிவு செய்தலும், மேற்பார்வை செய்தலும்

17. பாரிய நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ போக்குவரத்து உதவி, நோயின் மருந்துக்கான செலவு போன்றவற்றை பெற்றுக்கொடுத்தல்.

18. குறைந்த வருமானம் பெறும் விசேட தேவையுடைய கல்வி கற்கும் சிறுவர்களுக்கு கல்வி உதவிகள் வழங்குதல்.

19. வருடாந்தம் முதியோர்தினம், மாற்றுவலுவுடையோர்தினம் நிகழ்வுகளை நடாத்தி முதியோர்களையும் மாற்று ஆற்றலுள்ளவர்களையும் கௌரவித்தல்.

20. இலங்கை சமூக பாதுகாப்பு ஓய்வூதியத்திட்டத்தில் பயனாளிகளை இணைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2014ம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் மிகக் கூடுதலான பயனாளிகளை இணைத்து முதலாம் இடத்தினை பெற்றுக் கொண்டது. எனவே சமூக சேவைகள் கிளையின் நோக்கம் சமுதாயத்திலுள்ள வசதிகுறைந்த மூத்த பிரஜைகள், மாற்றுத் திறனாளிகள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள், பாரியநோயால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், மிகவும் வறுமையான குடும்பங்கள் ஆகியோரின் துன்பங்களையும் துயர்களையும் களைந்து ஓரளவிற்கேனும் அடிப்படை வாழ்வாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தலாகும். இதனால் இதன் செயற்பாடாக சமூக சேவை உத்தியோகத்தர்கள் சமூகசேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர்களின் மூலம் வினைத்திறன் மிக்கவல்ல நிகழ்வுகளை முன்னெடுத்து சமூக நலன்புரி திணைக்கள சேவைகள் மக்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்தலாகும்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் தமிழ்க்குலம் வாழ!

செல்வி.ந.ஷர்மினி
கரடிப்போக்கு, கிளிநொச்சி.

களங்கமில்லா காதலும்
சரித்திரம் படைத்து
தமிழ்க்காவலன் இருக்கையிலே - இன்று
காமப்பசி... தீர்க்க
காதல் வலை வீசி,
மோகப்பேய் அடங்க,
மோகினி அவள் வயிற்றில்
காதலின் சாபமாய் சிசுவும்,
கலைத்திட போராட்டம் - ஆனால்
கரைந்திடுது நாட்களும்.

காமத்தின் தலைக்கிறுக்கில்
செய்திட்ட தவறால்
வருந்திட்ட வஞ்சியும் - கெஞ்சிட
மூன்று நாள் மோகத்தால்
நாம் செய்த தவறிற்கு
நான் மட்டுமா பொறுப்பு?
வஞ்சகன் அவன் உரைத்த
வார்த்தை கேட்கையில்
மஞ்சத்தில் தஞ்சம் புகுந்தது
மதியில் உறைத்திட
கிலிகொண்டு பாவையும்
சிலையென ஆனாள்

கலியுகத்தில் இந்த காதலிற்கு
இறுதிவிடை தேடையில்
வாழ்வா? சாவா? - இந்த
விடையிரண்டுமே எஞ்சும்.
வாழ்வாயின்...
பாவத்தின் சுமையதை
சிறுவர் இல்ல கரமேந்திரம்,
காமத்தின் களியாட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை நாமம் தெரியாது
ஆயுள் காலம் வரை... அந்த மகவும்
அனலிட்ட மெழுகாய் துடிப்பது தான்
அறியாத மகவிற்கு
கலியுக காதலிட்ட சாபமா?...

இல்லை!...
சாவதில் கால் பதித்திட்டால்
வஞ்சியை கர்ப்பத்தில் சுமந்திட்ட தாய்க்கு
களங்கம் மட்டுமே மிஞ்சும்.
பால் தந்த தாய்க்கு, சேய்தந்த சாபம்
பாரிலே இவளுக்கு வாழ்நாள்வரை சோகம்
பிறப்பில் சாதனையும், - தேடிடும்
இந்தசோதனைமிகு கலியுககாதலும்.

நம்மவன் ஆள்கையிலே...
காதலுக்கு வேலியிட்ட
கனவிலும் கற்பிளக்கா மங்கையும்,
வஞ்சியின் கழுத்தில் மஞ்சள் நாண் இடும்வரை
மஞ்சத்தை துறந்த தூயவனும்...
இந்தக் காதல் அன்று
சரித்திரம் படைத்தது
தூய்மை உணர்வினூடே!
இன்று காமத்தெரோட்டத்தில்
காதல் சீரழிவு!
எம்மவனே!
மறந்தழிழர் நாம்
அறந்தைத் துறந்து... வாழக்கைத்தரத்தை
நடத்துவதைக் காண்கையில்
நம்மவர் குலம் காத்திட
எம்மவன் நீயும்
மீண்டும் வா!
ஈழமக்கள் அறம்
வேரோடு சாயாமல்
தோள் கொண்டு நேராக்கு
எம் தழிழ்க்குலம் வாழ!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொன்மைமிகு பூநகரியும் இன்றுவரை வெளிச்சத்திற்குவராத கறுக்காய்த்தீவு ஆனைகட்டிமுனை

செல்வன் ப.ஸ்ரீவனஜன்
கறுக்காய்தீவு,
பூநகரி.

1. இயற்கை வனப்புக்களும் இயற்கை வளங்களும் தொன்மைகளும் பொதிந்து கிடக்கும் பூநகரியில் இன்றுவரை வெளிச்சத்திற்குவராத தொன்மைகளுடன் கறுக்காய்த் தீவிலிருந்து கிழக்குத் திசைநோக்கி நீண்டமைந்து கிடக்கும் இயற்கை வனப்பு மிக்கதும் தொன்மைமிகுந்ததுமான ஒரு இடமே இந்த கறுக்காய்த்தீவு ஆனைகட்டிமுனையாகும்.
2. இவ்முனையின் வடபாகம் முழுவதும் யாழ்ப்பாணக் கடல் நீரேரி காணப்படுகின்ற வேளை இதன் தெற்குப் பாகமாக இராமங்களப்பு, கட்டையடிவான் மற்றும் இவ்முனையுடன் இணைந்த தீவுகளான இயற்கை வனப்புள்ள தீவுகளும் காணப் படுகின்றது.
3. ஆனையிறவிற்கு காரணப்பெயர் வந்ததுபோல வன்னிக் காடுகளில் பிடிக்கப்பட்ட யானைகளை ஆனைகட்டியில் வைத்து கட்டி ஏற்றி அடுத்த கரையில் உள்ள ஆனையிறவிற்கு கொண்டு சென்று இறக்கியதாலேயே இவ்இடத்திற்கு ஆனைகட்டி என்ற பெயர் வந்துள்ளதாகச் சொல்லப் படுகின்றது.
4. ஆனைகட்டி முனையின் உச்சிப்பகுதிக்கு சற்றுத் தெற்குப்பாகமாக இவ் ஆனைகட்டி முனைக்குரிய 1ம் துண்டி, 2ம்துண்டி, 3ம் துண்டியெனும் மூன்று சிறுசிறு தீவுகளான பாலைதீவெனும் மணல்த் திட்டுக்களிலானதும் கண்டல் தொடக்கம் பாலைமரம் வரையான மரங்கள் நிறைந்ததும் பறவைகள் விலங்குகள் நிறைந்ததும் மாரி காலங்களில் நீர் தேங்கக்கூடிய நீர் தேங்கு பிரதேசங்களைக் கொண்டதும் உல்லாசப் பயணிகளைக் கவரக்கூடியதுமான இயற்கை வனப்புள்ள ஒரு அழகிய தீவு காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பூநகரி கௌதாரி முனையில் அமைந்துள்ளது போன்ற ஒல்லாந்தர்காலக் கோரிகை ஒன்று ஆனைகட்டி முனையின் அன்றைய கேந்திர முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு அமைக்கப்பட்டு பூரணமடையாத நிலையில் இன்றும் ஆனைகட்டிமுனைக்கு அழகு சேர்த்தவாறு நிமிர்ந்து நிற்கின்றது.

6. ஆனைகட்டி முனையைக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் கொண்டு கடல்மார்க்க வர்த்தக நடவடிக்கைகளும் போக்குவரத்து நடவடிக்கைகளும் இடம்பெற்றிருப்பதற்கான நிறைய ஆதாரங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது. குறித்த முனைக்கு ஆனைகட்டிமுனை என்ற காரணப்பெயர் வைக்கப்பட்டுள்ளமை இவ்முனையில் ஒல்லாந்தர் காலத்தில் கோரிகை அமைக்கப்பட்டமை மற்றும் ஆனைகட்டி முனைக்கு சமாந்தரமாக ஆனைகட்டி முனைக்கு தெற்குத்திசையில் பூநகரி ஆலங்கேணிக்கு வடக்குப் பகுதியில் அமைந்துள்ள சூரைமுனங்கு முனைக்கு நேரே கிழக்குப் பாகமாக கடல் நடுவில் அமைந்திருக்கும் நெல்வைத்ததீவு, நெல்வைத்ததீவிற்கு கிழக்கே அமைந்திருக்கும் பல காவல்த்தீவு மற்றும் பல காவல்த் தீவிற்கு கிழக்கே அமைந்திருக்கும் கொண்டலியான் தீவு போன்ற தீவுகள் எல்லாம் இந்த கடல்ப் போக்குவரத்திற்கான ஆதாரங்களாக உள்ளன.

7. வன்னிக் காடுகளில் பிடிக்கப்பட்ட யானைகளை ஆனைகட்டியில் வைத்து கட்டி ஏற்றுவார்கள் என்று சொல்லப்படுவது போல ஆழமற்ற ஆழமற்ற கடற்கரைக்கு கடல்ப் போக்குவரத்து சாதனங்களைக் கொண்டுவர முடியாதிருந்தமையால் வன்னிப்பகுதிக்கு நெல்மூடைகளை தலையில் சுமந்து சென்று நெல்வைத்த தீவில் வைத்துவிட்டு அதன் பின்னரே கடல்போக்குவரத்துச் சாதனங்களில் ஏற்றியிருக்கலாம் என்றும் ஊகிக்க முடிகின்றது.

8. பூநகரியிலும் ஆனையிறவிலும் யுத்த நடவடிக்கைக்காக இலங்கை இராணுவத்தினர் நிலை கொண்டிருந்ததன் காரணமாக ஜெயசிக்குறு எனும் பெயரிலான யுத்தம் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து கிளாலி வழியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிப்பகுதிக்கு தப்பி வந்த பெருந் தொகையானவர் களிற்கானதும் வைத்திய மற்றும் கல்வித் தேவைகளிற்காக யாழ்ப்பாணம் சென்ற வன்னி மக்களிற்கானதுமான ஒரு பாதுகாப்பான கடல்வழிப் போக்குவரத்துப் பாதையாக ஆனைகட்டி முனை மற்றும் சூரை முணங்கு முனைக்கு கிழக்குப் பக்கமாக உள்ள கடல் பகுதியே சில சோக நிகழ்வுகளுடன் இருந்ததென்பதும் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

9. அதே போன்று ஆனைகட்டி முனையின் பாலைத்தீவிற்கு மேற்குப்பக்கமாக அமைந்துள்ள கட்டையடிவான் என்ற இடத்தில் கடல் போக்குவரத்து சாதனங்கள் தரித்து சென்றிருக்கின்றன. கடல் போக்குவரத்து சாதனங்கள் வந்து தரிப்பதற்குதந்த இயற்கைத் துறைமுக அமைப்பிற்கு ஒத்ததான இந்த கட்டையடிவான் என்ற பகுதிக்கு தங்கள் காலத்திலேயே வெட்டுமரங்கள், விறகுகள் மற்றும் வர்த்தகப் பொருட்கள் போன்றவற்றை ஏற்றுவதற்காக வத்தைகள் என்று சொல்லப்படும் அன்றைய கடல் போக்குவரத்து சாதனங்கள் வந்து தரித்துச் சென்றுள்ளதாகச் கறுக்காய்த்தீவைச் சேர்ந்த இன்றைய இன்றைய முதியவர்கள் கூறுகின்றார்கள். உள்ளூர் உற்பத்திப் பொருட்களை வெளியே கொண்டு செல்லத்தடை போடப்பட்டிருந்த காலமொன்றில் யாழ்ப்பாணத்திலிருந்து இரகசியமாக வெங்காயச் சுமையுடன் வந்து இக் கட்டையடிவான் பகுதியில் மறைந்து நின்ற வத்தை ஒன்று அக்கால விதானையாரால் பிடிக்கப்பட்டதாகவும் வத்தைக்காரர் வெங்காயச் சுமையினைப் பாலைத்தீவில் பறித்துவிட்டு வத்தையுடன் தப்பியோடியதாகவும் அதன் பின்னர் அந்த வெங்காயச்சுமை மாட்டு வண்டிகள் மூலம் அன்றைய பிரதேச செயலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் சுவாரஸ்சியமான ஓர் உண்மைக் கதையையும் உதாரணமாகக் கூறுகின்றனர்.

10. கறுக்காய்த்தீவின் கிழக்கே அமைந்துள்ள "தீவு" என்று சொல்லப்படும் விவசாய நிலம்வரைக்குமே நெல் செய்கையில் ஈடுபட்டிருந்த கறுக்காய்த்தீவுக் கிராமத்தவர்கள் "தீவு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயத்திற்கு கிழக்கே அமைந்துள்ள ஆனைகட்டியை மந்தை மேய்ப்பு முயல் போபன்ற மிருகங்களை வேட்டையாடல் போன்றவற்றிற்கே பயன்படுத்தினர். ஆனைகட்டிப் பகுதியிலும் விவசாயம் செய்வதற்கான சாத்தியக் கூறுகளைக் கண்டுகொண்ட கிராமத்தவர்கள் 1952ம் ஆண்டின் பின்னரே அப்பகுதியையும் விவசாய நிலமாகப் பயன்படுத்தத் தொடங்கினார். நெற்செய்கைக்குப் மட்டுமன்றி மரக்கறி மற்றும் தானியப் பயிற்செய்கைக்குப் சாதகமாக அமைந்துள்ள இவ்விடத்தில் இயற்கையாக அமைந்திருந்த கேணிகளைப் பயன்படுத்தியும் காவல் கொட்டைகைகளை அமைத்தும் பயிற்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினர். கறுக்காய்த்தீவில் அதிக நெல்விளைச்சல் கொண்ட காணிகளில் இவ் ஆனைகட்டியும் ஒன்றாக இன்று கருதப்படுகின்றது.

11. 1960களில் கோரிகை அமைந்துள்ள இடத்திற்கு வடக்குப் பாகமாக பெற்றோலியம் இருப்பதாகக் கூறி குண்டுகளை வெடிக்கவைத்து குழி ஒன்றை ஏற்படுத்தி ஆய்வுகள் நடாத்தப்பட்டிருக்கின்றது. ஆய்விற்கு தேவையான ஆழம் வரும் வரை தொடர்ச்சியாக பல குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டு 50-60 அடி வரையான ஆழமான குழி ஏற்படுத்தப்பட்டதாகவும் ஆய்வு நடவடிக்கைகளிற்கு குழியில் நீர் நிரப்பவேண்டியிருந்தமையினால் ஏற்படுத்தப்பட்ட அக்குழியில் இருந்து கடல்நீர் நிற்கும் இடம்வரை வரிசையாக குண்டுகளை வைத்து வெடிக்கச்செய்து கால்வாய் ஒன்றினை ஏற்படுத்தி அந்த கால்வாய்மூலம் அக்குழிக்கு நீர் பெறப்பட்டதாகவும் குழியைச் சுற்றி மிக உயரமாக மண் குவிந்து கிடந்ததாகவும் காலப்போக்கிலேயே அக்குழி தூர்வாந்து போயுள்ளதாகவும் கிராம முதியவர்கள் கூறுகின்றனர். அக்குழியை அன்றிலிருந்து இன்றுவரை மண்ணெண்ணைக் கிடங்கு என்றே கூறிவருகின்றனர். இங்கு ஆய்வு நடந்த அதேவேளையில் கௌதாரி முனையிலும் ஆய்வு நடவடிக்கை நடந்ததாகவும் இரு இடத்திலும் வெடிக்க வைக்கப்பட்ட குண்டுகள் ஒரே கட்டளைக்கு ஒரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்திலேயே வெடிக்க வைக்கப்பட்டதாகவும் வெடி ஓசையை வைத்து தங்களால் ஊகிக்க முடிந்ததாகவும் முதியவர்கள் கூறுகின்றனர்.

12. ஆய்வில் பெற்றோலியம் கண்டுபிடிக்கப்பட்டால் தம் குடியிருப்புக்களையும் வயல் நிலங்களையும் கட்டாயத்தின் பேரில் கைவிட வேண்டிய நிலை ஏற்படும் என்ற பயத்துடன் கிராமமக்கள் இருந்ததாகவும் பெற்றோலியம் குறைந்த அளவிலேயே இருந்ததாக கண்டுபிடிக்கப்பட்டதால் உற்பத்திச் செலவிற்கேற்ற வருமானம் கிடைக்காதென்று அடுத்தகட்ட நடவடிக்கைகளை ஆய்வாளர்கள் கைவிட்டு விட்டனர் என்றும் கிராமத்தவர்கள் கூறுகின்றனர். வெளிநாட்டு ஆய்வாளர்களே ஆய்வு நடவடிக்கையில் ஈடுபட்டதாக குறிப்பிடத்தக்கது.

13. தற்போது குடியிருப்புக்களை அண்மித்ததாக கறுக்காய்த்தீவின் கிழக்குப்பகுதியில் கோயில் கொண்டிருக்கும் கொண்டலியான் பிள்ளையாரின் கோயில் ஆரம்பத்தில் கொண்டலியான் தீவிலேயே இருந்ததாகவும் இன்றைய அக்கோயிலினது பூசகரது பேரனும் அன்றைய அக் கோயிலினது பூசகருமான பொன்னம்பலம் என்பவரால் அக்கோயில் தற்போதுள்ள இடத்திற்கு மாற்றப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

14. ஒல்லாந்நர் வருகையால் பதற்றமடைந்த ஊர் மக்கள் மறைவான இடங்களை நோக்கித் தப்பியோடியபோது தற்போது "கிளவன்பிறிவு" என்ற பெயருடன் கறுக்காய்த்தீவின் கிழக்கே உள்ள இடத்தில் வசித்த முதியவர் ஒருவர் மட்டும் அவ்விடத்திலேயே நின்றதாகவும் அவ்விடத்தில் வசித்த முதியவரை அண்மித்த ஒல்லாந்தரிற்கு அவ்விடத்திலுள்ள குறிப்பிட்ட அளவு காணிகளைக் காட்டி "இவ்வளவும் என்னுடைய காணி" என்று அடையாளம் காட்டினாராம் என்றும் அதனாலேயே அந்த இடத்திற்கு கிளவன் பிறிவு என்ற பெயர் வந்ததாகவும் என்று கூறும் வகையிலான ஒரு ஐதீகக் கதையினையும் முதியவர்கள் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. அழகியதும் தொன்மையானதுமான ஆனைகட்டி முனையும் அதனுடன் இணைந்த இயற்கை வனப்புமிக்க பாலைதீவு என்ற இடமும் உல்லாசப் பிரயாணத்திற்கு மிகச்சிறந்த இடமாக இருக்கக்கூடிய போதிலும் சம்பந்தப்பட்ட துறையினரால் கவனத்தில் எடுக்கப்பட்டு போக்குவரத்து வீதிகளை அமைத்துக்கொடுத்தல் போன்ற வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்காமையினால் ஒரு இயற்கை வனப்புள்ள தொன்மையான இடம் கவனிப்பாரற்று காத்துக்கிடக்கிறது.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03.12.2015 அன்று நடைபெற்ற கலாசாரவிழாவின் அங்க உரையின் ஆவணம்

## சுப்பிரமணியம் தம்பையா அண்ணாவியார் அரங்கு

## நினைவுரை

திரு காசிப்பிள்ளை குலசேகரம்
பூநகரி.

பூநகரி பிரதேச செயலக கலாசார பேரவையின் 2015 ஆம் வருடத்திற்கான கலாசார விழாவிற்கான அரங்கிற்கு "அமரர் சுப்பிரமணியம் தம்பையா அண்ணாவியார் அரங்கு" ஆகும் பூநகரியிலும் வேறு பிரதேசங்களிலும் மேற்கொண்ட கலைச் சேவையைக் கௌரவிக்கும் முகமாக பெயரிடப்படுகிறது.

கலாசார பேரவையின் உபதலைவர் என்ற வகையில் அரங்க உரையை ஆற்றுவதற்கு எனக்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளது. இவ்வுரையை ஆற்றுவதற்கு நான் முன்வந்தமைக்குரிய காரணங்கள் பல உள. அவர் எனது உறவினராக இருந்தமையும் தற்போது அவருடைய மகள் பத்மாவதியின் மகள் நற்குணவதி எனது தம்பியின் மனைவி என்ற நெருங்கிய உறவும், அந்த அரங்கிற்கான முன் மொழிவை முன்வைத்தவன் என்ற வகையிலும் அவரது இறுதிக் கிரிகைகள் எனது பிறப்புக் கிராமமான சித்தன் குறிச்சி "ஆவரசம்பிட்டி" மயானத்தில் நடத்தப்பட்டன, என்ற வகையிலும் எமது நாடக ஆசானாக இருந்தவர் என்ற வகையிலுமாகும்.

அமரர் சுப்பிரமணியம் தம்பையா அண்ணாவியார் யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தாலும் பூநகரி கறுக்காய்த்தீவைச் சேர்ந்த கார்த்திகேசு தங்கம் என்பவரைத் திருமணம் செய்தவகையால் கறுக்காய்த்தீவு கிராமத்தில் வாழ்ந்து கலைச் சேவையை மேற்கொண்டார்.

கறுக்காய்த்தீவு கிராமத்திலுள்ள வாம்பிட்டிக் குளக்கரையின்' வீதியோரமாகவுள்ள நிலத்தில் குடியிருந்தே கலைச்சேவையை ஆற்றினார். இவருக்கு பிள்ளைகளாக

அமரர் தம்பையா துரைச்சாமி அண்ணாவியார்

அமரர் தம்பையா சுப்பிரமணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் தம்பையா மயில்வாகனம்

திருமதி நடராசா பூபதி (தம்பையா பூபதி)

திரு தம்பையா பொன்னம்பலம் (சிவசம்பு)

திருமதி திருநாவுக்கரசு பத்மாவதி (தம்பையா பத்மாவதி) பிறந்தார்கள்.

சிறுவயது முதலே கலையார்வம் கொண்ட தம்பையா ஆர்மோனியம் வாசித்துப் பாடுவதில் வல்லவர். இவர் பலத்த சாரீரம் கொண்டவர்.

இவர் பூநகரிப் பிரதேசத்திற்கு ஏற்ற வகையில் மூலக் கதையை மையமாக்கி வசனங்கள், பாடல்களை ஆக்கி இயக்கிய நாடகங்கள் பல. அவையாவன வெடியரசன், பூலோகரம்பை, ஸ்ரீவள்ளி, காலவரிசை, மார்க்கண்டேயர், சத்தியவான் சாவித்திரி, நல்லதங்காள், கிருஸ்ணலீலா, பாதுகாபட்டாபிஷேகம். இவர் அக்காலத்து வழக்கப்படி அண்ணாவியாராக இருந்ததோடு ஆர்மோனியம் வாசித்துப் பிற்பாட்டுக்காரராயும் செயற்பட்டுள்ளார்.

இவர் கூத்து நாடகங்களை கறுக்காய்த்தீவு, ஞானிமடம், சித்தன்குறிச்சி, தனங்களப்பு, கச்சாய்கெற்பெலி ஆகிய கிராம மக்களுக்கு பழக்கி மேடையேற்றியுள்ளார். இவர் திரு கிட்டப்பா, சுந்தரம்பாள் போன்ற இந்திய நாடக நடிகர்களுடன் இணைந்து இந்தியா இலங்கை ஆகிய நாடுகளில் நடித்துப் புகழ்பெற்றவர். இவர் சங்கீதத்திலும் பாடக்கூடிய ஆற்றலுள்ளவராக இருந்துள்ளார். இவர் இந்திய பாடகியான பட்டம்மாளுடன் இணைந்து செயற்பட்ட மைக்கான ஆதாரமாக இருந்த புகைப்படங்கள் இடப் பெயர்வினால் தொலைக்கப்பட்டு விட்டதாக வருந்தினார் தகவல் தந்த பொன்னம்பலம் என்றும் மகனான சிவசம்பு. தம்பையா அண்ணாவியார் மகன் துரைச்சாமியையும், உறவினரான விஸ்வலிங்கத்தையும் (வியாபாரி செல்லத்துரை) செட்டிய குறிச்சியைச் சேர்ந்த சின்னத்தம்பியையும் அண்ணாவியாராக்கினார். செட்டியகுறிச்சி அ.த.க பாடசாலையில் பெரிய பொன்னம்பலம் என்பவர் அதிபராக இருந்த போது வருடாந்தம் ஒரு நாடகமாவது தம்பையா அண்ணாவியரால் இயக்கப்பட்டு மேடையேற்றப்படும். இவர் கலைத்துறையில் ஈடுபட்டாலும் குடும்ப ஜீவனத்திற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயம், தச்சவேலை, கம்மாலைவேலை, மேசன் வேலை ஆகியவற்றை மேற்கொண்டார்.

இவர் **1995**ம் ஆம் ஆண்டில் கறுக்காய்த்தீவு கிராமத்தில் இயற்கை எய்தினார்.

தகவல் :- மகள் சிவசம்பு
திருமதி சரஸ்வதி சுந்தரமூர்த்தி
திரு. கா. கார்த்திகேசு
திருமதி தி. பத்மாவதி (மகள்)

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூநகரி பிரதேச "கலைநகரி விருது 2015"
## திரு.தம்பையா சிவசம்பு (பொன்னம்பலம்)

பூநகரி கறுக்காய்த்தீவு கிராமத்தில் 15.10.1936ஆம் ஆண்டு தம்பையா அண்ணாவியாரின் ஐந்தாவது பிள்ளையாகப் பிறந்தார். தந்தையார் போன்று இளவயதில் கலையார்வமுள்ளவர். தரம் ஐந்தில் செட்டியகுறிச்சி அ.த.க பாடசாலையில் கல்விகற்கும்போது நெல்,பணம்,ஈர்க்கு,பசை என்பவற்றைப் பயன்படுத்தி "சப்பற" மாதிரி ஒன்றை உருவாக்கியமையால் யாழ்ப்பாண பாடசாலை ஒன்றில் நடைபெற்ற (பூநகரி யாழ் மாவட்டத்துடன் இணைந்திருந்த காலத்தில்) பொருட்காட்சிப் போட்டியில் முதல் பரிசைப் பெற்றார். தற்போது சீமெந்திலான வார்ப்புச் சிற்ப வேலைகளை கோவில்களில் ஆக்கி வருகின்றார்.

இவர் பத்தினிப்பாய் பிள்ளையார் கோவில், கறுக்காய்த்தீவு கல்வெட்டித்திடல் கந்தசாமி கோவில் பிள்ளையார் ஆலயம், சித்தன்குறிச்சி முருகமூர்த்தி கோவில் நவக்கிரக மண்டப சிற்பம், அத்தாய் பிள்ளையார் ஆலயம், கறுக்காய்த்தீவு நாச்சிமார் கோவில், ஆரியம்பொந்து பிள்ளையார் கோவில் மணிக்கூட்டுக்கோபுர சிற்பம், ஆகியவற்றை சீமெந்து வார்ப்புச் செய்து ஆக்கியுள்ளார். தொடர்ந்தும் கைவினைக்கலைஞராக சேவை செய்கின்றார். தகப்பனார் தம்பையா அண்ணாவியாரின் நெறிப்படுத்தலில் சிறுவயதிலிருந்து நாடகங்களும் நடித்துள்ளார்.

தற்போது இவர் மட்டுவில்நாடு கிழக்கு பரந்தன்வீதி, பூநகரி எனும் முகவரியில் வசித்து வருகின்றனர்.

இவரது கலைச்சேவையை பாராட்டி பூநகரி கலாசாரப் பேரவையானது இவருக்கு 'கலைநகரி' விருது வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூநகரி பிரதேச "கலைநகரி விருது 2015"
# திருமதி சுந்தரமூர்த்தி சரஸ்வதி

பூநகரி கறுக்காய்தீவில் **1936.09.23**ம் திகதி பிறந்த இவர் ஒரு சிறந்த ஆசிரியர் ஆவார். இவர் யாழ்ப்பாணப் முத்துதம்பி வித்தியாலத்தில் படித்து S.S.C பரீட்சையில் சித்தி பெற்றார். பூநகரியில் பல்வேறு பாடசாலைகளிலும் கற்பித்த இவர் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையிலும் பயின்றுள்ளார். பின்னர். அதிபராக பதவி உயர்வினை அடைந்துள்ளார்.

இவர் ஆலயங்களிலே திருமுறை ஓதுதல் பணியை தொடர்ந்து செய்து வருகின்றார். மாணவர்களுக்கு நாடகம், நாட்டியநாடகம், முதலியவற்றினை பழக்கி போட்டிகளுக்கு ஈடுபடுத்தியுள்ளார். அத்துடன் ஊஞ்சல் பாட்டுக்கள் இயற்றுதல், பாடுதல், ஆலயபஜனை செயற்பாடுகளை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றார். மாணவர்களுக்கான அறக்கருத்துக்கள் போதித்தல் இசையால் நல்வழிப்படுத்தல் பணியை நன்கு முன்னெடுத்து வருகின்றார். இவரது இப்பணிகளை சிறப்பித்து பூநகரி கலாசாப் பேரவையானது இவருக்கு "கலைநகரி" விருது வழங்கி சிறப்பிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூநகரி பிரதேச "கலைநகரி விருது 2015"
## திரு K.G கண்ணதாசன்

பிறந்தஇடம் : பொன்னாலை
பிறந்த திகதி : *1965.06.27*
கல்வி கற்றது : சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி
கலைத்துறை ஆரம்பம் : *1980*ஆம் ஆண்டு

முதல் விருது *1994* சிறந்த நடிகருக்கான விருது (நாடகம் காணிநிலம் வேண்டும்)

**வன்னி** சிறந்த நெறியாழ்கைகான விருதுகள்
*1997* -"தாகம்" நவீன நாடகம்
"கடமைகள்" இயல்பு நெறிநாடகம்
*1998* -"வாழ்அலிமை" குறியீட்டு நாடகம்
"மாறாமல் மாறாது" இயல்பு நெறிநாடகம்
*1999* -"ஊமையான உண்மைகள்" நவீன நாடகம்

2000ம் ஆண்டின் பின் சிறந்த நாடகங்களாக தெரிவு செய்யப்பட்டவை:

அன்னைநிலம், நிகழ்காலம், கண்ணிவயல், பார்வைகள், பொய்முகங்கள், தர்மத்தின்கொடி, அகலாதஅடிமைகள், விடியும் திசையில் உயிர், காவலரண்

*2010* பின் பூநகரி பிரதேச செயலக கலாசார பிரிவுடன் இணைந்து குறும்திரைப்படங்கள் -பள்ளிக்காதல், உயிரெழுத்து, அப்பு முதலியவற்றை இயக்கியுள்ளார்.

ஆளுநர் விருது - அப்பு, குறும்திரைப்படம்
நாடகங்கள் - ஆசைஅலை, தாயுமானவள், சமாதானம், தண்ணீர்

பெரும் பாராட்டை பெற்றவை -"இனிநீதி செய்வோம்"

இவரது கலைச்சேவையை பாராட்டி பூநகரி கலாசாரப்பேரவையானது இவருக்கு 'கலைநகரி' விருது வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைபெறும் தருணம் உங்களுடன்...

பூநகரி பிரதேசத்தின் நறவத் துளிகளாக பல துளிகள் இணைந்து பூந்துணர் சஞ்சிகை 5 வயதில் நடைபோடுவதற்கு ஆசி வழங்கி நிற்கும் இறைவனை மனதார நினைத்து இச்சஞ்சிகை பல கருத்தோவியங்களை காலத்தின் தேவையறிந்து பல்சுவையாக வெளிவருவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய எமது பெருமதிப்பிற்குரிய பிரதேச செயலரும் பிரதேச கலாசாரப் பேரவையின் தலைவருமாகிய திரு.சி.ச.கிருஸ்ணேந்திரன் அவர்களுக்கு மலர்க்குழு சார்பாக நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

மேலும் மலரிற்கு இதழ்களாக மிளிரும் ஆக்கங்களை நல்கிய ஆக்ககர்தாக்கள் நன்றிக்குரியவர்கள்.

மலரினை தொகுத்து சிறந்த முறையிலே உருவமைத்த திரு.G.போல் அன்ரன், திரு K.கோகிலரதன் ஆகிய இரு இணை ஆசிரியர்களும் போற்றுதற்குரியவர்கள். மலரிற்குரிய அட்டைப் படத்தினை தொடர்ச்சியாக கலையும், வரலாறும் பிணையும் வண்ணம் வடிவமைத்து வழங்கிவரும் எமது செயலக உத்தியோகத்தர் திரு.பா.முகுந்தன் அவர்களுக்கு கோடி நன்றிகள்.

மலரினை அச்சிடுவதற்கு நிதியினை வழங்கியுதவிய வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும் சமூக மட்ட அமைப்புக்களுக்கும் பணிவான நன்றிகள்.

மலரினை அழகுற அச்சிட்டு வழங்கிய நல்லூர் கஜமுகன் பதிப்பகத்தினர் நன்றிக்குரியவர்கள்.

காலத்தின் கண்ணாடியாக விளங்கும் இலக்கியப் படைப்புக்கள் சிரஞ்சீவியாக வையகத்தில் வாழும் என்ற நம்பிக்கையில் விடைபெறும் வேளை இச்சஞ்சிகை தொடர்பான ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் கருத்துக்களையும் எதிர்பார்த்து நிற்கின்றோம். தங்களின் கருத்துக்கள் சிந்தனைகள் பூந்துணரின் கனதியை காத்திரப்படுத்தும் என நம்புகின்றோம்.

மலர்க்குழு,
பூநகரி பிரதேச கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# படகு கட்டுமானம்
# மீன் தீவனம்

## பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம்

தொலைபேசி இல: 0774659877

ஜெயபுரம்
பூநகரி



கஜமுகன் பதிப்பகம், நல்லூர். 0770347190

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org